ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ தத்வஸர்வஸ்வம்

[பெரிய பிராட்டியாருக்குப் பரப்ரஹ்மத்வமும், எம்பெருமானோடு துல்யமான ஈச்வரத்வமும் சொல்லும் சில வித்வான்களுடைய கருத்து ப்ரமாணங்களுக்கும் உபய ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் அடியோடு பொருந்தாது என்று அசைக்க முடியாதபடி நிலைநாட்டும் நூல்; பல அறிஞர்களின் தீர்ப்புகளோடு கூடியது]

ஆசிரியர் & கிடைக்குமிடம்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்.

[ஆசிரியர் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"]

3-B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 620 017.

ஸ்ரீ ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

டிரஸ்டிகள்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M A, B.L, அட்வகேட்,

S. ராம அய்யங்கார், B.Sc, B L., அட்வகேட்.

விலை ரூ. 30] 1998 [தபாற்கூலி தனி

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

acharya.org

விஷயஸூசிகை

பக்கங்கள்

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமியின் மங்களாசாஸனம் 4

ஸுதர்சனம் ஆசிரியரின் முன்னுரை 4

ஸுதர்சனம் 552 ஸ்ரீமுக கார்த்திகை

1. விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம் 12

ஸுதர்சனம் 595 ஈச்வர ஆனி

2. நடுநிலையாளர்களுக்கு வேண்டுகோள் 2

ஸுதர்சனம் 595 ஈச்வர ஆனி

3. விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா? 30

4. தீர்ப்புகள் (ஸுதர்சனம் 596 முதல் 600 ஈருக) 76

ஸுதர்சனம் 596 ஈச்வர ஆடி

(i) கி. ஜகந்நாதன், சென்னை 28 (1-13)

(ii) திருப்புல்லாணி ஸுந்தரராஜய்யங்கார், சென்னை 24. 14-16

ஸுதர்சனம் 597 ஈச்வர ஆவணி

(iii) பராசர ஸுதர்சன பட்டர் ஸ்வாமி 17-20

ஸுதர்சனம் 598 ஈச்வர புரட்டாசி

(iv) ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி 21-22

(v) Dr, V. V. ராமாநுஜன், ஆசிரியர், 'யதிராஜ பாதுகா' சென்னை 5. 23-28

acharya.org

(vi) Dr. M. வரதராஜன், தமிழ்ப் பேராசிரியர்,
திருப்பதி. 29-32.

ஸுதர்சனம் 599 ஈஸ்வர ஐப்பசி

(vii) K. வரததேசிகாசாரியர், விழுப்புரம். 33-38

(viii) Dr. E. S. V. நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீரங்கம்
39-46

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு 46-53

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா விளக்கவேண்டிய
விஷயங்கள் 54-60

ஸுதர்சனம் 599, 600 ஈஸ்வர ஐப்பசி. கார்த்திகை
(ix) ஸ்ரீரங்கம் நரஸிம்ஹாசார்யர் 61-68

ஸுதர்சனம் 600 ஈஸ்வர கார்த்திகை

(x K கோதண்டராமன், கோவை 69-75
அன்பர்களின் கடிதங்கள் 76

ஸுதர்சனம் 601 ஈஸ்வர மார்கழி

5. ப்ரியா ஸுதர்சன ஸாத்விகஸம்வாதம் 77-102 26
ஸுதர்சனம் 602 ஈஸ்வர தை

ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம் 103-142 40
மொத்த பக்கங்கள் 194

acharya.org

ஸ்ரீவானமாமலை மடம் (நான்குநேரி-627108

ஸ்ரீமத்பரமஹம்ஸ

ஸ்ரீகலியன் வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

மங்களாசாஸனம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவிலும், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்திலும் தொடர்ந்து சிலமாதங்களாக வெளியாகிவரும் ஸ்ரீதத்வ விஷயமான வாத விவாதங்கள் இந்தத் தைத்திங்களிதழுடன் ஸமாப்தியடைந்தனவென்றே நாம் எண்ணுகிறோம். எவரோ ஓரிரு ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீதத்வவிஷயத்தில் முதற்கண் எழுதிவெளியிட்டதே நிதானமாக இத்தனை வாத விவாதங்கள் வளர்ந்து விட்டன. ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் ஸ்ரீமதழகிய சிங்கர் தாமே இது விஷயத்தில் சர்ச்சை செய்யும் நிலையும் ஏற்பட்டுவிட்டதை நாம் நடுநிலையாளராக இருந்துகொண்டு பார்த்து வருகிறோம். நாம் நமது யாத்ராக்ரமத்தில் டில்லி மாநகரிலிருந்து ஸம்ஸ்க்ருதமொழியில் சுருக்கமாக எழுதியனுப்பிய நம் கருத்தினை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பிரசுரித்திருந்தது. வடமொழியின் தமிழாக்கத்தையும் வெளியிட்டிருந்தது. நம் வைணவத்தின் இருகலைகளையும் சார்ந்த பல அறிஞர்களும், நடுநிலையாளராக நிஷ்பக்ஷபாதர்களாக ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தின் கருத்தையே ஆதரித்து எழுதியிருந்தனர். இந்த ஸ்ரீதத்வ விசாரத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தின் கருத்தே — நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைச் சார்ந்த ஸ்ரீபகவத் ராமானுஜ — ஸ்ரீகூரேச — ஸ்ரீபராசர பட்ட — ஸ்ரீவேதாந்த தேசிகாதிகளின் நிர்ணயாத்மகமான கருத்து — என்பதையும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு முக்கியவிஷயத்தை இந்த ஸந்தர்ப்பத்தில் யாவர்க்கும் நாம் நினைவூட்ட விரும்புகின்றோம். நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ரதாநாசார்ய ச்ரேஷ்டர்கள் இதர வேதாந்திகளின் கொள்கைகளைக் கண்டிக்கும்போது

acharya.org

பேதச்ருதிகளையும், அபேதச்ருதிகளையும், கடகச்ருதிவாக்யங்கள் பற்பலவற்றின் துணைகொண்டு மிகவும் ந்யாய ஸங்கதமான முறையில் பொருத்தம் காட்டி "ஒத்தாரும் மிக்காருமில்லாத நாராயணன் ஒருவனே பரப்₃ரஹ்மம" முதலான நம் ஸித்தாந்தக் கருத்துக்களை ஸ்தாபித்துள்ளனர் என்பதை நாம் அறிவோம். இதுவே சரியான மார்க்கம். இது ஏனைய பற்பல விஷயங்களிலும் நமக்கு நல்ல நிர்ணய ஞானத்தை ஏற்படுத்தித்தர வல்லது.

லக்ஷ்மீநாத ஸமாரம்பமான நமது சீரிய ஆசார்ய பரம்பரையில் புருஷகார பூதையான ஸ்ரீதே₃வி, ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஆகியோரது உண்மையான மஹிமையை யார் புலப்படுத்த வல்லுநர்? இருவரது மஹிமையும் அளவற்றது. ஒப்புயர்வற்றது என்றே போற்றப்பட்டுள்ளது. ஸ்ரீகூரத்தாழ்வான் சொல்லும்போது "தே₃வி த்வந்மஹிமாவதி₄ர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே" எனப் பகர்ந்துள்ளார். ஸ்ரீ ஸ்வாமி ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில்—"தத்த்வேந யஸ்ய மஹிமார்ணவ சீகராணு: சக்யோ ந மாதுமபி சர்வபிதாமஹாத்₃யை:" என்றும், "உபர்யுபர்யப்₃ஜ பு₄வோऽபி பூருஷாந் ப்ரகல்ப்ய தே யே சதமித்யநுக்ரமாத் । கி₃ரஸ்த்வதே₃கைக கு₃ணாவதி₄ப்ஸயா ஸதா₃ ஸ்தி₂தா நோத்யமதோऽதிசேரதே" என்றும் கூறியுள்ளார். அவரே— "க: ஸ்ரீ: ஸ்ரிய: பரமஸத்வஸமாச்ரய: க: க: புண்ட₃ரீகநயந: புருஷோத்தம: க:" என்றும கூறுகின்றார். ஓரிரு உதாரணங்கள் இவை. இவ்வாறே ஸ்ரீபராசரபட்ட ஸ்ரீவேதாந்ததேசிகாதி தேசிகவரர்களும் விளப்பியுள்ளனர். இப்படியெல்லாம் இந்த மஹாசார்யர்கள் கூறியுள்ள திவ்யதப்பதிகளின் மஹிமாதிசயத்தின் அத்யத்புத வர்ணனம் இதில் ஆழங்காற்படும் நம்போலியரது உள்ளங்களையும் நெகிழவைக்கிறது.

ஆசார்யஹ்ருதய திவ்ய க்ரந்தத்தில் ஆழ்வார் பெருமை அழகியமணவாளப்பெருமாள் நாயனாரை— "அத்ரி ஜமதக்நி

acharya.org

பங்க்திரத வஸாநந்தஸூநுவானவனுடைய யுகவர்ண க்ரமாவதாரமோ, வ்யாஸாதிவதாவேசமோ, மூதுவர் கரை கண்டோர் சீரியரிலே ஒருவரோ, முன்னம் நோற்ற அனந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவரோ என்றுசங்கிப்பர்கள்'' என்று பேசவைக்கின்றது. பகவத்விஷயத்தின் அரும்பத வ்யாக்யானத்தில் ''புரா ஸூத்ரைர் வ்யாஸ:'' என்றுதுவங்கும் ஒரு ச்லோகம் விளங்குகின்றது, இதில் நம்மாழ்வார் வ்யாஸாபராவதாரரென்றும், அவர்க்கும் அபராவதாரபூதர் ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் என்றும் போற்றப்பட்டுள்ளது. ப்ரபந்நகாயத்ரியாம் இராமாநுசநூற்றந்தாதி திவ்யப்ரபந்தத்தில்திருவரங்கத்தமுதனார்—''அடையார் கமலத்தலர் மகள் கேள்வன்'' பாசுரத்தில் ஸ்ரீ ஸ்வாமி இராமாநுசரைப் பஞ்சாயுதாழ்வார்களது ஒட்டுமொத்தமான அவதார பூதராகப் பேசுகின்றார். ''சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ'' என்ற பாடலில் வகுளாபரண முனிவரை ஸாக்ஷாத் எம்பெருமானுடைய அவதாரமாகவே விஞவெழுப்பி அவர் பெருமை வருணிக்கப்படுகின்றது. இவையெல்லாம் அவ்வவர்களது அளப்பரிய பெருமையின் சிறப்பு. ஆனால்; இவ்விஷயங்கள் யாவற்றிலும் நமது பூர்வாசார்யர்கள் கடகப்ரமாணங்கள் பலவற்றையும் கொண்டே தத்வ நிர்ணயம் சாஸ்த்ர ந்யாயரீத்யா செய்துள்ளனர்.

ஒரு விலக்ஷணமான, ப்ரஸித்தமான ஸித்தாந்தம் என்ற நோக்கிலே, இப்படி தத்வ நிர்ணயம் அத்யந்த ஆவஶ்யகமும் ஆகும். ஆனாலும், காலக்ரமேண பிற்பட்ட சில ஆசார்யர்கள், பண்டிதமணிகள் சில தத்வ விஷயங்களில் அவர்க்குக் கிடைத்துள்ள ப்ரமாணங்களை அவர்கள் க்ரஹித்துள்ளமைக்கு ஏற்ப நயிப்பித்து, பரஸ்பரம் வேறுபட்ட கருத்துக்களைப் புலப்படுத்தி வெளியிட்டார்கள். இம்மாதிரியான விஷயங்களில் தத்வ நிர்ணயபோதம் வேண்டியதுதான். இந்த ஸந்தர்ப்பங்களில்தான் நடுநிலைமை பிறழாமல் நன்குநுணுகி ஆராய்ந்து பக்ஷபாதவாஸனையே

acharya.org

சிறிதுமின்றி நாம் பேசியும், எழுதியும் தத்வ ஞானத்தை யாவர்க்கும் ஏற்படுத்த வேணும். "கோஷம் கோபேந பூரயேத்" என்ற நிலையோ, வேண்டாத வார்த்தைகளை —வசைமொழிகளை உபயோகிக்கும் நிலையோ அவசியம் தவிர்க்கப்படவேணும்.

அந்ததஃ ஸாரரூபேண ஸ்ரீதத்வவிஷயே வயம்।
ப்₃ரூம: ப்ரேம்ணா ஸயூத்₂யேஷு கலஹோ மாஸ்மபூ₄தி₃தி ॥
பே₄த₃பு₃த்₃தி₄: பரித்யாஜ்யா வர்ஜ்யா வாத₃பரம்பரா:।
மஹீயாம்ஸ்யத்ர கார்யாணி ஸந்த்யஸ்மாகம் மஹீதலே ॥
ஸாமரஸ்யம் ஸௌமநஸ்யம் ஸத்₃பா₄வ: ப்ரேமபா₄வநா।
ஸமிந்த₄ாம் ஸர்வதா₃ஸ்மாஸு ஸர்வேஷு ஹிதகாரிணீ ॥
ஸ்ரீராமாநுஜ ஸித்₃தா₄ந்த விஸ்ராந்தா: ஸ்மோ வயம் ஸமே /
அநேகதாயாம் ஸத்யாமப்யேகதாலக்ஷ்யவாதி₃ந: //
ஸ்ரீவைஷ்ணவாநாம் அஸ்மாகம் த₃ர்ஸந ஸ்ரீர்தி₃நே தி₃நே /
வர்த்த₄தாம் தி₃வ்யத₃ம்பத்யோ: க்ருபயா பரயா பு₄வி //

/நித்ய ஸ்ரீர் நித்ய மங்க₃ளம்/

[இறுதியில் ஸ்ரீதத்வ விஷயத்தில் அன்புடன் ஸாரமாக ஒரு வார்த்தை சொல்லுகிறோம். ஸ்ரீவைஷ்ணவர்களிடையே கலஹம் விளையவேண்டாம்' என்பதே அது. வேற்றுமைகளை விளைக்கும் அறிவு கைவிடத்தக்கது வாதங்களை முடிவில்லாமல் வளர்த்துக்கொண்டு போகக்கூடாது- இவ்வுலகில் நாம் செய்யவேண்டிய பல காரியங்கள் உள்ளன: நம் அனைவரிடமும் நமக்கு நன்மை செய்யும் ஒற்றுமையுணர்ச்சியும், ஒருமனப்பட்டிருக்கையும், நற்குணங்களும், அன்பின் வெளிப்பாடும் வளரட்டும். ஸ்ரீராமாநுஜரின் விஸிஷ்டாத்₃வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை நாம் அனைவரும் பரப்புவோமாக. நம்மிடம் ஸம்ப்ரதாய வேற்றுமையிருந்தபோதிலும் வைணவத்தை வளர்ப்பதாகிற ஒரே குறிக்கோளைக் கொள்வோம். இவ்வுலகில் தி₃வ்யத₃ம்பதிகளின் கருணையால் நம்முடைய ஸ்ரீவைஷ்ணவத₃ர்ஸநச் செல்வம் தினந்தோறும் வளர்வதாக, நித்ய ஸ்ரீர் நித்ய மங்க₃ளம்]

acharya.org

முன்னுரை

[ஸுதர்சனம் ஆசிரியர்]

நம் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹம் தென்கலை வடகலை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நிற்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. ஸ்ரீவைஷ்ணவர்களில் பெரும்பாலானவர்கள் திருமண் காப்பு அமைப்பிலுள்ள பேதத்தையும், சில ஆசாரவேற்றுமைகளையும் மட்டுமே அறிவார்கள். பூர்வாசார்யர்கள் காலத்திலிருந்து ஏற்பட்ட மதக் கொள்கைகளில் கருத்து வேற்றுமைகளைப்பற்றிப் பெரும்பாலும் அறியமாட்டார்கள் இரண்டு ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த வித்வான்களே இவற்றை நன்கு அறிவார்கள், ஐம்பது வருடங்களுக்கு முன் ஸுதர்சனம் தோன்றிய காலத்தில் இரு பிரிவைச் சேர்ந்த வித்வான்களிடையே மதக் கொள்கைகளைப்பற்றிய வாத விவாத நூல்கள் மிகுதியாக விளைந்திருந்தன ஒரு ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஆசார்யர்களையும் கண்டிக்கும் வழக்கம் சில வித்வான்களிடையே இருந்தது. சில வித்வான்கள் 'மற்ற ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்தை ஆதரித்தே ஸ்ரீஸூக்திகள் அருளிச் செய்துள்ளனர்' என்று வாதம் செய்யும் வழக்கமும் இருந்து வந்தது. இந் நிலையில் அந்தந்த ஸம்ப்ரதாயக் கொள்கைகளை நிஷ்கர்ஷித்து வெளியிட்டு, இரு ஸம்ப்ரதாயஸ்தர்களும் இதர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஆசார்யர்களை தூஷிக்காமலும், "இதர ஸம்ப்ரதாய ஆசார்யர்களும் எங்கள் ஸம்ப்ரதாயத்தையே ஆதரிக்கிறார்கள்' என்றுகூறிக் குழப்பத்தை விளைக்காமலும் பரஸ்பர சகிப்புத்தன்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டுமென்று வலியுறுத்தும் கடமையை ஸுதர்சனம் தொடக்கம் முதலே செய்து வந்தது,

கீர்த்தி மூர்த்தியான D. T. தாதாசார்ய ஸ்வாமி என்னும் தேசிகஸம்ப்ரதாயஸ்த வித்வான் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைப் பலவாறு தூஷித்து 'ஸத்ஸம்ப்ரதாயம்' என்னும் ஒரு நூலை நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டார். அவரது வாதங்களை ஏற்கமுடியாது என்று நிரூபித்து, 'தூஷண நிராஸம்'

என்னும் நூல் நந்தன ஸ்ரீ சித்திரை மாதத்தில் (1952) ஸுதர்சனம 53 வது இதழில் எந்தையாரால் வெளியிடப் பட்டது. அப்போது ஸ்ரீநருஸிம்ஹப்ரியா வலுவில் வம்புக்கு வந்து எந்தையாரையும் ஸுதர்சனத்தையும் பல வாறாக நிந்திக்கும் ஓர் வியாஸத்தை வெளியிட்டது. அதற்கு எந்தையார் தக்க பதிலளித்து. ''அபய்யப்ரதராஜ விஜயம்'' என்னும் நூலைவெளியிட்டு ப்ரியாவின் வாயைத் தம திருபணங்களாலே அடக்கினார். ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமத்தின் சார்பில் வெளிவரும் ஸ்ரீரங்கநாதபாதுகா பத்ரிகையின் ப்லவங்க ஆடி ஸ்ரீ இதழில் ''பிராட்டி ஜீவ கோடியே என்று கூறும் தென்னசார்யர்கள் கலிபுருஷனின் அவதாரமே'' என்னும் கடும துவேஷ விஷத்தைக் கக்கும் கட்டுரை வெளிவந்தது. இவ்வடாத செயலைக் கண்டித்து ஸுதர்சனம் பிலவங்க ஆடி [238] இதழில் ஓர் கட்டுரை வெளியிடப்பெற்றது. அதில் ''பிராட்டி ஜீவகோடியைச் சேர்ந்தவள் என்று பேரறிஞர்களான பல பூர்வாசார்யர்கள் கூறியுள்ளார்கள்'' என்பதை ஸ்ரீதேசிகனே தம்முடைய சதுঃச்லோகீ பாஷ்யத்தில் எடுத்துக்காட்டியுள்ளதை விளக்கி, அவர்களைக் கலிபுருஷனின் அவதாரம் என்று எழுதியது அக்கிரமச்செயல் என்றும், இவ்வாறு எழுதியது தேசிகனின் திருவுள்ளத்திற்கு உகப்பாகாது என்றும் பதிலுரைத்தோம். திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியின் அப்போதைய ஸ்ரீகார்யமான சித்ரகூடம் விஜயராகவாசார்ய ஸ்வாமி ''பாதுகைக் கட்டுரையில் வெளிவந்தது தகாதது இனி இப்படி வெளிவராமல் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி கவனித்துக் கொள்வார்'' என்று நம்மிடம் கூறினர்.

நம்முடைய இந்தக் கட்டுரையைக் கண்டு மிகவும் கடுப்புற்ற கீர்த்தி மூர்த்தியான மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி ''ஸம்ப்ரதாய ஸுதா'' என்னும் சிறு சுவடியொன்றை வெளியிட்டு அதில் தென்னசார்ய ஸ்ரீஸூக்திகளை இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்து, ''இவை

acharya.org

யெல்லாம் தேசிக ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டுகின்ற வையே'' என்று எழுதியிருந்தார். இதன்மேல் ஸ்ரீ உ.வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியும் அடியேனும் ஒருபுற மாகவும், D T. தாதாசார்ய ஸ்வாமியும், மதுராந்தகம் ஸ்வாமியும் ஒருபுறமாகவும் நின்று வாத விவாதங்கள் வளர்ந்தன. அவையனைத்தையும் தொகுத்து 'ஸித்தோபாய விஜயம்'' என்னும் நூல்17-10-1972ல் நம்மால்வெளியிடப்பட் டது. ''தேசிகனுடைய சில ஸ்ரீஸூக்திகளைக் காட்டி அவர் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் என்று வாதிடுவதும், தென் னாசார்யர்களின் சில ஸ்ரீஸூக்திகளைக் காட்டி அவர்கள் தேசிக ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டியவர்கள் என்று வாதி டுவதும் சரியல்ல. இரண்டு ஸம்ப்ரதாயங்களும் இரு வேறு அடிப்படைகளில் அமைந்துள்ளவை என்பதே உண்மை'' என்னும் விஷயம் இந்த ஸித்தோப யவிஜயத் திலிருந்து அனைவர்க்கும் தெளிவாக விளங்கிற்று. எந்த அடிப்படையில் இவ்விரு ஸம்ப்ரதாயங்களும் அமைந்திருக் கின்றன என்பதை நாம நம்முடைய கீதா வியாக் யானத்திலும், அதில் இணைக்கப்பட்டுள்ள கைவல்ய ஸித் தாஞ்ஜனத்திலும், ஸ்ரீஸூக்த வ்யாக்யானம் முதலானவற் றிலும் விரிவாகக் காட்டியிருக்கிறோம்.

இந்நிலையில் சென்னை 113. தரமணியிலிருந்து வெளி வரும் ''காஞ்சிப் பேரருளாளன்'' என்னும் மாதப்பத்திரி கையில் 'ஸ்ரீதத்வஸித்தாந்தாஞ்ஜன ஸங்க்ரஹம்' என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு அன்பர் ஒருவரால் நடுநிலைநின்று விமர்சிப்பதற்காக நமக்கு அனுப்பப்பட்டது. அதில் ''எம்பெருமானுக்குள்ள ஜகத் காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஸர்வ ஜகச்சரீரித்வம், ஸர்வஜகந்நியந்த்ருத்வம் முதலான ஈச்வரலக்ஷணங்க ளெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. பகவான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவா னுக்கு சரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்கமுடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே;

acharya.org

ஸ்வரூபத்தில் கிடையாது எம்பெருமான் பிராட்டியைக் குறித்து ஶேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவ ளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததே யாகும். பிராட்டிக்கு பகவானைத் பாரதந்த்ர்யம் செயற்கை யானது. ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும், எம்பெருமானார், பட் டர், நஞ்ஜீயர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக் திகளும் கூறுகின்றன'' என்று எழுதப்பட்டிருந்தது. இவை யனைத்தும் ஸ்ரீவேதாந்ததேசிகருடையவும், மற்ற பூர்வா சார்யர்களுடையவும் ஸ்ரீஸூக்திகளோடு மிகவும் முரண் பட்டவையாகையால், நாம் ''விசிஷ்டாத்வைதஸம்ரக்ஷணம்'' என்னும் கட்டுரையை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் 46-12 [552] இதழில் வெளியிட்டு, அதில் பல வேதாந்த தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி, ''அவர் பிராட்டிக்கு எம்பெருமா னோடு துல்யமான ஈஶ்வரத்வத்தையோ ப்ரஹ்மத்வத் தையோ கூறவில்லை'' என்றும் ''பிராட்டியை எம்பெருமா னுக்கு ஶரீரமாய், அவனால் நியமிக்கப்படுபவளாய், தரிக் கப்படுபவளாய், அவனுக்குஶேஷபூதையான தத்வமாகவும், உபயவிபூதி ஶேஷியாயிருக்கையாலே ஈஶ்வர வகுப்பைச் சேர்ந்தவளாகவுமே அருளிச்செய்திருக்கிறார்'' என்றும் நிலை நாட்டி ''காஞ்சிப்பேரருளாளன்'' கட்டுரையை ஆதரிக்கும் வித்வான்களின் மனஸ்ஸாக்ஷியைக்குறித்து எட்டு கேள்வி களையும் வெளியிட்டிருந்தோம். இதைப் பேரருளாளன் பத்திரிகைக்கும் மற்றும் பிரபலமான தேசிக ஸம்ப்ரதாய ஸ்தர வித்வான்களுக்கும் அப்போதே அனுப்பியிருந்தோம். இந்த விஷயத்தை ஸமாதான முறையில் நிஷ்கர்ஷம் செய்விக்கவேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலே, ஸ்ரீரங் கத்தில் அஹோபிலமடம் 44வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் நூற்றாண்டுவிழா ஸதஸ்ஸிலும், மதுராந்தகத்தில் 16.1-96 முதல் நடைபெற்ற மாலோல வித்வத்ஸதஸ்ஸிலும் கலந்து கொண்டு வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கரை இவ்விஷயத் தில் ஒரு நிஷ்கர்ஷம் செய்விக்கவேண்டும் என்று பிரார்த்

acharya.org

தித்தோம். ஸ்ரீரங்கம் ஸதஸ்ஸில் வித்வான்களே நிர்ணயிக்குப்படி நியமித்த ஸ்ரீமதழகியசிங்கர் மதுராந்தகம் ஸதஸ்ஸில் "இவருக்கு ஶாஸ்த்ர ஜ்ஞாநம் கிடையாதாகையாலே இவருக்கு யாரும் பதிலெழுதாதீர்கள்" என்று கடுஞ்சொற்களைப்பேசி இவ்விஷயத்தில் ஒரு நிர்ணயம் ஏற்படுவதைத்தடுத்தார். ஆயினும் விசிஷ்டாத்வைதத்தை ரக்ஷிப்பதற்கு இதில் ஒரு நிர்ணயம் அவசியமாகையாலே ஸுதர்சனர் பதில் 12 வது சதகத்தின் முன்னுரையில் இது பற்றி விளக்கிக் குறிப்பிட்டோம். அதற்குமேல் நா. வரதாசார்யர், "யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தாஞ்ஜனம்" என்னும் நூலை வெளியிட்டு, அதை நமக்கும் அனுப்பினர். அதன் மேல் நாம் 26 விஷயங்களைக் குறிப்பிட்டு நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரியிருந்தோம். தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் உள்ளிட்ட பலர் தீர்ப்புகளை வழங்கினர். இந்நிலையில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இவ்விவாதத்தில் நுழைந்தது. நூற்றுக்குமேலான பக்கங்களில் நாமும் மற்றும் பல அறிஞர்களும் காட்டிவந்த பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் மற்ற பல ப்ரமாணங்களுக்கும் எந்த பதிலையும் எழுதாமல் ப்ரியா விதண்டாவாதத்திலும் வசவுமாரியிலும் இறங்கிற்று. தொடர்ந்து ஸ்ரீதத்வ தீபிகை என்னும் நூலை ஸ்ரீமதழகிய சிங்கரே பல மாதங்களுக்கு எழுதப்போவதாகவும் ப்ரியாவில் வெளிவந்துள்ளது.

இந்த விவாதத்தைப் பலமாதங்களுக்கு இழுத்தடித்துக் கொண்டு போவதற்கு எதுவுமில்லை. தென்னாசார்யர்கள் தேசிகன் காட்டியுள்ள முதல் பக்ஷத்தைத் தழுவியவர்கள் என்றும், தேசிகன் நாலாவது பக்ஷத்தைத் தழுவியவர் என்றும் நாம் கூறுகிறோம். தேசிகன் மட்டுமல்லாமல் எம்பெருமானார், பட்டர், நஞ்ஜீயர் முதலான மற்ற எல்லா ஆசார்யர்களும் ஸ்ரீதேசிகன் காட்டிய ஐந்தாவது பக்ஷத்தையே தழுவியவர்கள் என்று ஸ்ரீமதழகிய சிங்கர் கூறுகிறார். தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தில் பின்வரும் இரண்டு விஷயங்களையே காட்டியிருக்கிறார்:— 1. "ஈஶ்வர: ஸர்வ

பூ₄தாநாம்'' என்று எம்பெருமானைக் கூறுவதுபோலே ''ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்'' என்று பிராட்டியையும் ஸ்ரீ ஸூக்தம் கூறுகையாலே இருவரும் துல்யமான ஈஶ்வரர்களே. 2. பிராட்டி எம்பெருமானுக்கு ஶேஷபூ₄தையாயிருப்பது உப₄ய இச்சா₂ஸித்₃த₄மாகையாலே இயற்கையானதன்று. (பிராட்டி ஶேஷபூ₄தையாக வேஷம் போடுகிறாள். ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம் என்று நா. வரதாசார்யர் இதை விளக்குகிறார்.) இந்த இரண்டு விஷயங்களையும் தேசிகன் உள்ளிட்ட எந்தப் பூர்வாசார்யர்களும் தம் நூல்களில் ஸாதிக்கவில்லை. அப்படியிருந்தால் அதைக்காட்டி உடனே இந்த விவாதத்தை முடித்துவிடலாம். எந்தப் பூர்வாசார்யர்களும் இப்படி அருளாமையாலேயே கோமடம் ரங்கநாதர் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு ஸ்ரீஸூக்த பா₄ஷ்யத்தில் இந்த இரண்டு விஷயங்களையும் ப்ரக்ஷேபம் செய்து அது நஞ்ஜீயருடையது என்று இவர்களில் சிலர் 1937 ல் வெளியிட்டனர். நஞ்ஜீயர் ஸ்ரீஸூக்தத்திற்கு ஒரு பா₄ஷ்யம் அருளிச்செய்யவே இல்லை என்பதை எந்தையார் அப₄யப்ரத₃ராஜ விஜயத்திலேயே (1952ம் ஆண்டில்) அசைக்கமுடியாதபடி நிர்ணயித்தார். இந்த நிர்ணயத்தை D. T. தாதாசார்ய ஸ்வாமியும் ஒப்புக்கொண்டார். அந்த ஸ்ரீஸூக்த பா₄ஷ்யம் கூரத்தாழ்வானுக்கும், ப₄ட்டருக்கும் வங்கிபுரத்து நம்பிக்கும் சிஷ்யரான (ஸுதர்சன சதக கர்த்தாவான) கூரநாராயண ஜீயருடையதே என்று தேசிக ஸ்ரீஸூக்திகளிலிருந்தே விளங்குவதால் இவர்களால் அச்சிடப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்தபா₄ஷ்யம் கோமடம் ரங்கநாதருடையதேயொழிய கூரநாராயணஜீயருடையதுமல்ல என்பது அபயப்ரதராஜவிஜயத்திலேயே எந்தையாரால் அசைக்கவொண்ணாதபடி நிலைநாட்டப்பெற்றுள்ளது. நாமும் பல நூல்களில் இதை எடுத்துக்காட்டியிருக்கிறோம். முற்கூறிய இரண்டு விஷயங்களையும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளிலிருந்து காட்டமுடியாமையாலேயே இருநூறு வருடங்களுக்குள்ளிருந்த ஸாக்ஷாத் ஸ்வாமி, திருப்புட்குழி அப்பா

acharya.org

ஸ்வாமி, இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகிய சிங்கர் முதலான வித்வான்களுடைய வாக்கியங்களையும் வாதங்களையும் எழுதிச் சென்று விவாதத்தை இழுத்தடித்து வாசகர்களைக் குழப்பி ஒற்றுமையை விளைக்கும் ஒரு நியாயமான நிர்ணயத்தை விளையவிடாமல் செய்கிறது ப்ரியா என்று விளங்குகிறது. "ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்யஸம்ப்ரதாயங்கள் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லை. வாக்யயோஜநா பேதமேயுள்ளது" என்று தேசிகன் தம் "ஸம்ப்ரதாயபரிசுத்தி" என்னும் ரஹஸ்யத்தில் அருளியுள்ளார். அப்படியிருக்கும் போது "விசிஷ்டாத்வைத மதத்தில் இரண்டு ப்ரஹ்மங்கள் (அல்லது துல்யமான ஈச்வரர்கள்) உண்டு" என்னும் கருத்தை தேசிகன் ஒருபோதும் ஆதரித்திருக்கமாட்டார் என்பது ஸாமான்யர்களுக்கும் விளங்கும். பூர்வாசார்யர்கள் காலத்திற்கு மிகவும் பிற்பட்டசிலரே இப்படி வாதம் செய்திருக்கிறார்கள். இப்படி வாதம் செய்த 44 வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கர் அப்போதே ஸதஸ்ஸில் நம்முடைய பதிலைப்பெற்று மௌனமாயிருந்தார் என்பது ஸ்ரீவைஷ்ணவவுலகமனைத்தும் அறிந்ததே. அதே அழகியசிங்கர் "ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள் உண்டு, சப்தஸ்வரூபம் நித்யமானது" என்னும் வாதங்களைச் செய்து நம்மிடம் தக்க பதிலைப் பெற்றார் என்பதும், இந்த அவருடைய வாதத்தை தேசிக ஸம்ப்ரதாயஸ்த வித்வான்கள் எவருமே ஒப்புக்கொள்ளவில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. பூர்வாசார்யர்களுக்குப் பிற்பட்ட வித்வான்கள் இருள், துயக்கு, மயக்கு, மறப்புக்கு ஆட்பட்டவராகையாலே அவர்கள் கூறுவதனைத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்னும் நிர்பந்தம் இல்லை. இக்காலத்திலிருக்கும் நம்மைப்போன்ற அனைவர்க்கும் இது ஒக்கும். பிற்பட்டவர்களுடைய நூல்களில் பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு முரண்படாதவற்றையே ஒப்புக்கொள்ள முடியும். மற்றவற்றைத் தள்ளிவிடவேண்டும். கைவல்ய விஷ-

யத்தில், யதீந்த்ரமததீபிகாகாரர், புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி முதலான பலபல தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மஹாவித்வான்கள் ''பஞ்சாக்னிவித்யா நிஷ்டனே கைவல்ய நிஷ்டன்'' என்று கூறியது பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு விருத்தமானது என்று கைவல்ய ஸித்தாஞ்ஜனத்தில் நாம் நிலைநாட்டியபின்பு ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ப்ர. ப. ஸ்வாமி முதலான தென்னாசார்ய ஸம்ப்ரதாய வித்வான்கள் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டார்கள். இவ்விஷயத்திலும் இரண்டு ப்ரஹ்மங்களை அல்லது துல்ய ஈஸ்வரர்களைக் கொள்வது நூற்றுக்கணக்கான பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளோடு முரண்படும் என்பதை தேசிக ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த விவேகிகளான சென்னை ஆடிட்டர் ஸ்ரீ K, ஜகந்நாதன். விழுப்புரம் வழக்கறிஞர் ஸ்ரீ வரததேசிகாசாரியர் முதலான பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். தேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் கட்டுப்பாடாக விதண்டாவாதங்களைத் தொடர்ந்து செய்துகொண்டு இவ்வுண்மையை மறைக்கப்பார்க்கிறார்கள்.

சது:ச்லோகிக்கு—பெரியவாச்சான்பிள்ளை, நாயனாராச்சான்பிள்ளை, ஸ்ரீவேதாந்ததேசிகன் ஆகிய மூன்று ஆசார்ய ரத்னங்கள் அருளியுள்ள வ்யாக்யானங்களை விளக்கி, எளிய தமிழ் நடையில் விவரணத்தை நாம் விரைவில் ஸுதர்சனத்தில் தொடங்கவுள்ளோம். இந்த ஸ்ரீதத்வஸர்வஸ்வம் நூலையும், அந்தசது:ச்லோகீ உரையையும்காணும் விவேகிகளான வருங்கால அறிஞர்கள் உண்மையை உணர்ந்து தீர்ப்பளிப்பார்கள். ஸத்யமேவ ஜயதே—உண்மையே வெல்லும் என்பது வேதவாக்கு. இந்நூலுக்கு மங்களாசாஸனம் அருளியுள்ள ஸ்ரீமத்பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமிக்கும், தீர்ப்புகளை வழங்கியுள்ள வித்வான்களுக்கும் அறிஞர்களுக்கும் நம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருச்சி-17 **ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,**

18-2-1998 ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்.

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்

[ஸ்ரீமுக (1993) கார்த்திகை (552) ஸுதர்சனம் இதழில் ஆசிரியரால் எழுதப்பெற்ற கட்டுரை]

1. நம்முடைய எம்பெருமானார் தரிசனத்திற்கு விசிஷ்டாத்வைதமதம் என்று பெயர் "ஸகல சேதநாசேதநங்களையும் சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் ஒன்றே" என்று கொள்ளும்மதம் என்பது இதற்குப் பொருள். இத்தகைய ஈச்வரன் ஒருவனேயாகையாலே "ந்யாய ஸித்தாஞ்ஜனம்" முதலான க்ரந்தங்களில் "ஸ்வஜ்ஞாந ஸ்வேதரஸமஸ்தத்₃ரவ்ய சரீரகத்வம்" [தன்னுடைய ஜ்ஞாநமும் தானும் தவிர்ந்த மற்ற எல்லா த்ரவ்யங்களையும் சரீரமாகக் கொண்டிருக்கை,] என்று ஈச்வர லக்ஷணம் சொல்லப்பட்டது. இத்தகைய 'ஈச்வரத்வம்' தேசிகனையுள்ளிட்ட நம்முடைய பூர்வாசார்யர்கள் எவராலும் பெரியபிராட்டியாருக்குக் கூட இசையப்படவில்லை. "யாநி ச ப்₃ராஹ்மே புராணே 'ஸர்வாதிசாயிநீ ப்ரீதி:' 'ஸர்வோத்க்ருஷ்டா ஸர்வமயீ' 'அநிந்த்யபய்யா நிர்விகல்பா' இத்யாதீநி லக்ஷ்மீநாமாநி, தாந்யபி 'ந தத்ஸமச்சாப்₄யதி₄கச்ச த்₃ருச்யதே, 'யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்' 'தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்' 'க்ஷராத்மா நாவீசதே தே₃வ ஏக:' 'ஏக இத்₃ராஜா ஜகதோ₃ ப₃பூ₄வ', 'சாஸ்தா சராசரஸ்யைக:' 'ஏக: சாஸ்தா ந த்₃விதீயோऽஸ்தி சாஸ்தா' 'சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய' இத்யாதி₃ ப்ரமாணகூ₃ணாநுஸாரேண ப₄க₃வத்₃வ்யதிரிக்த ஸர்வாபேக்ஷயா தந்மஹிஷ்யா: ப்ரகர்ஷம் விவக்ஷந்தி |" [ப்₃ரஹ்மபுராணத்தில் லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் "அனைவரிலும் மேம்பட்டவள்" "அனைவரிலும் உயர்ந்தவள், அனைவருமாய் இருப்பவள்," "உபமானமற்றவள்" என்னும் நாமங்கள் படிக்கப்படுகின்றன. "பரமாத்மாவுக்கு ஸமமானதோ அல்லது மேம்பட்டதோ ஒன்றும் இல்லை" "எவனைக்காட்டிலும் மேலானது எதுவும் இல்லையோ", "ஈச்வரர்க்கெல்லாம் மேலான மஹேச்வரனாய் இருக்கும் அவனை", "அசேதனப் பொருள்களையும் ஜீவர்களையும் நியமிக்கும் தேவன் ஒருவனே", "இவ்வுலகிற்கு ஒருவனே அரசன்" "அசைவனவும் அசையாதனவுமான எல்லாப் பொருள்களையும் நியமிப்பவன் ஒருவனே", "ஒருவனே நியமிப்பவன், நியமிக்கும் இரண்டாவது பொருள் கிடையாது", அனைத்தையும் நியமிப்பவன் விஷ்ணுவே" முதலான ச்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களையொட்டி எம்பெருமானைத் தவிர . மற்றவர்களைக் காட்டிலும் பிராட்டியின் பரத்வத்தை அந்த நாமங்கள்

acharya.org

கூறுவன என்றே கொள்ளவேண்டும்.] என்று ஸ்ரீவேதாந்த தேசிகர் சதுஃச்லோகீ இரண்டாவது ச்லோகபாஷ்யத்தில் அருளியிருப்பதைக் காணலாம்.

2. 'ஜகத்காரணமாய் ஸர்வாத்மாவாய் ஸர்வேச்வரனுயிருப்பவன் ஒருவனே' என்று எண்ணிறந்த வேதசாஸ்த்ர வாக்யங்கள் முழங்குவதாலேயே, உபயவிபூதியைக் குறித்துப் பிராட்டிக்கு சேஷித்வமும், ஈச்வரத்வமும் இருந்தபோதிலும், பெரும்பாலான நம்முடைய பூர்வாசார்யர்கள் இரண்டு ஈச்வரர்களைக் கொள்வது விசிஷ்டாத்வைதத்திற்கு முரண்படும் என்பதாலே, பிராட்டியை ஜீவகோடியிலேயே கொண்டு, அவளுடைய ஈச்வரத்வம் முதலான பெருமைகள் எம்பெருமானுடைய நித்யேச்சையால் ஏற்பட்டவை என்று திருவுள்ளம் பற்றினார்கள், ஈச்வரனுக்கு அஸாதாரண லக்ஷணமான ஜகத்காரணத்வத்திலும், மோக்ஷப்ரதத்வத்திலும ப்ரதானமான அந்வயம பிராட்டிக்கு இல்லை என்று நிர்ணயித்தார்கள்,

3. பெரிய பிராட்டியார் விஷயமாகப் பேரறிவாளர்களான பூர்வாசார்யர்களிடையே ஐந்துவிதமான கருத்துக்கள் நிலவிவந்தன என்று ஸ்ரீவேதாந்ததேசிகர் சதுஃச்லோகீ நாலாவது ச்லோக பாஷ்யத்தில் விளக்குகிறார். அவையாவன:—

(1) பிராட்டி ஜீவகோடியைச் சேர்ந்தவளே. அதனால் அணு ஸ்வரூபத்தை உடையவளே. ஆயினும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை நிரூபிக்குமவளாய் இருக்கையாலே, அகடிதகடனா சக்தியினாலே எம்பெருமான் விபுவாயிருந்தபோதிலும் அணுப்பொருள்களிலும் ஸ்வரூபம் முழுவதும் வியாபித்திருப்பதுபோலே, இவளும் அணுஸ்வரூபையாய் இருந்தபோதிலும் அந்த சக்தியாலே எம்பெருமானுடைய விபுஸ்வரூபம் முழுவதும் வியாபித்திருக்கிறாள். ['யதா ஸர்வகத:' (விபு 1-8-17) என்னும் ச்லோகவ்யாக்யானத்தில் எங்களாழ்வானாகிற விஷ்ணுசித்தரும்; பரந்த ரஹஸ்யத்தில் பெரியவாச்சான் பிள்ளையும், சதுஃச்லோகீ வ்யாக்யானத்தில் நாயனாராச்சான்பிள்ளையும் இந்தப்பக்ஷத்தை ஆதரித்தனர்.]

(2) இவள் ஜீவகோடியைச் சேர்ந்தவளானாலும் இயல்பாகவே விபுஸ்வரூபத்தையும் உடையவள். 'ஈச்வரபரதந்த்ர சேதனனாயிருக்கை' என்று ஜீவலக்ஷணத்தைக் கொண்டுவிடலாம்.

(3) இவள் சேதனையாகையாலே அசித்தைக்காட்டிலும் வேறுபட்டவள்; ஸ்வரூபத்தில் விபுவாகையாலே ஜீவர்களைக் காட்டிலும் வேறுபட்டவள்; பாரதந்த்ர்யமுடையளாகையாலே ஈச்வரனைக்

acharya.org

காட்டிலும் வேறுபட்டவள். ஆக, இவள் மூன்று வகுப்பிலும் சேராதவள். இவளுடைய ஸத்தை எம்பெருமானுக்கு அதீநமானது; எம்பெருமானுடைய பெருமை இதனால் ஏற்படுவது! [இவ்விஷயம் முதல் நான்கு பக்ஷங்களுக்கும் பொதுவானது.]

(4) இவளுடைய ஸத்தை எம்பெருமானுக்கு அதீநமாயிருந்த போதிலும் இவள் உபயவிபூதிக்கும் சேஷியாயிருக்கையாலும், அணுத்தையும் வியாபித்திருக்கையாலும் இவளை ஈச்வரகோடியிலேயே சேர்க்கவேண்டும். அனைவருக்கும் சேஷியாய் இருக்கை முதலானவை ப்ரஹ்மமான ஸர்வேச்வரனுக்கு லக்ஷணம். அவனை யொழிந்தமற்றவர்களுக்கு சேஷியாயிருக்கைஈச்வரியான இவளுக்கு லக்ஷணம். ஜகத்காரணத்வம் முதலான ப்ரஹ்மலக்ஷணம, ப்ரஹ்மமான எம்பெருமான் ஒருவனுக்கே உரியது. ஆகையால் அவனே ஸர்வேச்வரனாகவும் ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாகவும் ஆகிறான். இந்த நான்கு பக்ஷங்களையும் இப்படி வர்ணித்துவிட்டு முதல் பக்ஷத்தில் அகடிதகடனா சக்தியாலே பிராட்டிக்கு விபுத்வம் என்று கூறியிருப்பதைக் கண்டித்துவிட்டு "2, 3, 4 பக்ஷங்கள் ஒன்றுக்கொன்று மிகநெருங்கியவை, ஜீவன், ஈச்வரன் முதலான பெயர்களிலேயே கருத்து வேற்றுமை" என்று ஸாதித்துவிட்டு. "ப்ராகுக்தேந ஸஹைதேஷு பக்ஷேஷ்வத்ர சதுர்ஷ்வபி| ஸ்வதந்த்ரபதி நித்யேச்சாஸித்தம் ஸர்வமிதம் ச்ரிய: || அபி சைவம் ந தஸ்யேசே கச்சநேத்யாதிதர்சநாத்| அதஸ் சதுர்பி: அப்யேதை: பத்யாவைச்வர்யவிச்ரம:||" [முதல் பக்ஷத்தோடு கூடிய இந்த நாலு பக்ஷங்களிலும் பிராட்டிக்கு இந்தப் பெருமையெல்லாம் ஸ்வதந்த்ரனான பர்த்தாவின் நித்ய இச்சையால் விளைவது; "அந்த எம்பெருமானை நியமிப்பவன் எவனுமில்லை" முதலான வேதவாக்யங்களைக் கொண்டு இப்படி நிர்வஹிக்கப்படுகிறது. ஆகையால் இந்த நாலு பக்ஷங்களிலுமே எம்பெருமானிடமே முக்யமான ஈச்வரத்தன்மை தேறி நிற்கிறது] என்று கூறி, இவள் நாரசப்தார்த்தமாயிருந்தபோதிலும் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே ஈச்வரவகுப்பில் சேர்ந்த இவளுக்கு ப்ரதாந ப்ராப்யத்வம் முதலானவற்றைக் கொள்ளத்தடையில்லை. உலகைப் படைப்பது முதலானது இவளுடைய ப்ரீதிக்காகவே ஆகையாலே ஜகத்காரணத்வத்திலும் இவளுக்கு அந்வயம் கூறுவதிலும் முரணில்லை", என்று தொடங்கி நாலாவது பக்ஷத்தை விரிவாக விளக்குகிறார் ஸ்ரீதேசிகன்.

(5) இறுதியாக ஐந்தாவது பக்ஷத்தைச் சுருக்கமாகப் பின்வருமாறு விளக்குகிறார் ஸ்ரீதேசிகன்:— "அத்ர ஸர்வபூதேச்வரத்

acharya.org

வாதிவசந ஸாம்யாத் அஸ்யாகுணபூர்வ: உபயேச்சார்ப்ரயுக்த இதி கேசிதாஹு:— அந்யோந்யேச்சாவிகாததோ் திநிவ்ருத்தௌ தத்பரத்வத:|| ஐககண்ட்யமசேஷாணாம் ஆகமாநாம் பவத் விதி||" ['ஈஶ்வர: ஸர்வபூதாநாம்' 'ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்' என்று முறையே எம்பெருமானையும் பிராட்டியையும் ஏகரீதியாக வேதவாக்யங்கள் எல்லா ஜீவர்களுக்கும் ஈஶ்வரர்களாகக் கூறுகிற படியால், இவள் எம்பெருமானைவிட அமுக்யமாய் இருப்பது இருவருடைய விருப்பத்தாலும் ஏற்பட்டது. 'ஒருவர் விருப்பத்தை ஒருவர் மறுப்பதில்லை' என்று கருத்துரைத்தால் இந்த இரண்டு வேதவாக்யங்களும் ஒரே பொருளைத் தருபவையாகும் என்று சிலர் கூறுகிறார்கள்,] ஐந்தாவது பக்ஷத்தைப்பற்றி ஸ்ரீதேசிகன் ஸாதித்திருப்பது இவ்வளவே. முந்திய நாலு பக்ஷங்களிலும் எம்பெருமானுக்கே முக்யமான ஈஶ்வரத்வம் என்று கூறிவிட்டு, இந்தப்பக்ஷத்தை ப்ரஸ்தாபிக்கையாலும், ஸர்வபூதேஶ்வரஶப்தம் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸமமாகச் சொல்லப்படிருப்பதாகக் கூறுகையாலும் பிராட்டிக்குப் முக்யமான ஈஶ்வரத்வத்தை இந்தப் பக்ஷத்தைச் சேர்ந்தவர்கள் கருதியிருக்கிறார்கள் என்று விளங்குகிறது, முதல் பக்ஷத்தைக் கண்டித்திருப்பதால் அது தேசிகன் உகந்ததல்ல என்பது தெளிவு. மற்ற நாலு பக்ஷங்களில் எது தாம் உகந்தது என்பதை இந்த ப்ரகரணத்தில் அவர் தெளிவு படுத்தவில்லை; சது:ச்லோகீ பாஷ்யத்தில் மற்றவிடங்களிலுள்ள ஸ்ரீஸூக்திகளையும், அவருடைய மற்ற க்ரந்தங்களிலுள்ள ஸ்ரீஸூக்திகளையும் கொண்டே அதை நாம் அறியவேண்டியுள்ளது, அப்படி அவருடைய க்ரந்தங்களை ஆராயும்போது 'அவர் ஐந்தாவதான கடைசிப்பக்ஷத்தைத் திருவுள்ளம் பற்றவில்லை' என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்தே விளங்குகிறது, அவருடைய எல்லா ஸ்ரீஸூக்திகளையும் நடுநிலைநின்று ஆராய்ந்தால் அவர் 'பிராட்டிக்கு உபயவிபூதி சேஷித்வம் முதலானவை இருப்பதை யிட்டு அவளை ஈஶ்வரகோடியிலேயே சேர்க்கவேண்டும்' என்னும் நாலாவது பக்ஷத்தையே ஆதரித்திருக்கிறார் என்பது தெளிவாகவே விளங்குகிறது. இதை நிலைநிறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்,

4. இப்படி இருக்கும்போது, சென்னை–118, தரமணியிலிருந்து ஸ்ரீஹயக்ரீவவித்யாபீடத்தின் மூலம் வெளிவரும் "ஸ்ரீகாஞ்சீபேரருளாளன்" என்னும் ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகையில் தொடர்ச்சியாக வந்த "ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜன ஸங்க்ரஹம்" என்னும் நூலின் தொகுப்பை நமது அன்பர் ஒருவர் நமக்கு அனுப்பி, அதை ஸதஸ்ஸில் நடுநிலைநின்று விமர்சிக்கவேண்டுமென்றும், அப்படி

acharya.org

விமர்சிப்பதால் ஸம்ப்ரதாயச் சண்டைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்.

5. என்றும் ஸம்ப்ரதாயச் சண்டைகள் நம்மால் ஏற்பட்டதோ அல்லது வளர்ந்ததோ இல்லை. ஸம்ப்ரதாயபேதங்கள் விஷயங்களை நம்முடைய க்ரந்தங்களில் ஆங்காங்கு குறிப்பிட நேர்ந்தபோதும் இரண்டு ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் திருவுள்ளங்களையும் அவரவர் கூறும் காரணங்களோடு விளக்கி, எந்த ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளையும் கண்டிக்காமல் எடுத்துக்காட்டுவதே நம் வழக்கம். இப்போது நம் பார்வைக்கு வந்திருக்கும் ஸங்க்ரஹ நூலில் "எம்பெருமானுக்குள்ள ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஸர்வ ஜகச்சரீரித்வம், ஸர்வஜகந்நியந்த்ருத்வம் முதலான ஈச்வரலக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. பகவான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு சரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்க முடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து சேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல அவளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு [illegible]த்பாரதந்த்ரியம் செயற்கையானது. ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானார், பட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன" என்று எழுதப்பட்டுள்ளன.

6. உண்மையில் இவையனைத்தும் தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கும் எம்பெருமானார், பட்டர் முதலான மற்ற பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் மிகவும் முரண்பட்டவையாய், விசிஷ்டாத்வைதமதத்தின் அடிப்படையையே தகர்ப்பவையாய் உள்ளன. ஆனாலும் நாம் இதை எவ்வளவு விளக்கினாலும் அபிநிவேசமுடையவர்களுக்கு, வித்வான்களாயிருந்தபோதிலும் இதை இசையும் மனப்பான்மை விளையாது. ஆகையால் அத்தகைய வித்வான்களுடைய மனஸ்ஸாக்ஷியைக் குறித்து நாம் சில கேள்விகளை அடுத்தபடியாகத் தருகிறோம். அவர்கள் தம் நெஞ்சறிய அவற்றுக்குப் பதிலுரைத்துத் தங்களுடைய மனஸ்ஸாக்ஷியைத் திருப்தி செய்துகொண்டால் போதுமானது. நம் எழுதியிருப்பதில் ஸாரம் இருக்கிறதென்று இந்த வித்வான்கள் எவருக்கேனும் தோன்றினால் அவர்கள் நமக்கு எழுதலாம். அவர்கள் விருப்பிருந்தாலொழிய அவர்களுடைய கடிதங்கள் நம்மால் வெளியிடப்படாது. இனி கேள்விகளைத் தருகிறோம்.

acharya.org

வித்வான்களின் மனஸாக்ஷியைக் குறித்துச் சில கேள்விகள்

1 "ஸர்வபூதேச்வரீ" என்று ஸமஸ்தபதமாயிராமல், "ஸர்வபூதாநாம் ஈச்வரீ" என்று வ்யஸ்த பதமாயிருப்பதால் ஸர்வபூதேச்வரனுடைய பத்னி என்ற பொருள் கொள்ளமுடியாது; ஆகையால் "ஸர்வபூதாநாம் ஈச்வர:" என்று படிக்கப்பட்ட எம்பெருமானைப்போலே, "ஸர்வபூதாநாம் ஈச்வரீ" என்று ஸ்ரீஸூக்தத்தில் படிக்கப்பட்டிருப்பதால், ஈச்வரனுக்குப்போலே இவளுக்கும் முக்யமான ஈச்வரத்வம் கொள்ளவேண்டும் என்கிறது ஐந்தாவது பக்ஷம். இந்தப் பக்ஷத்தைத் தாத்பர்யசந்த்ரிகையில் கண்டித்துள்ளார் தேசிகன். எங்கே? எனில்: கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் பிராட்டியைப்பற்றிய "அநவதிகாதிசய-அஸங்க்யேய கல்யாண குணகண-ஸ்ரீவல்லப:" என்னும் தொடரில் "அநவதிகாதிசய" என்னும் பதத்தை விவரிக்கும்போது "அநவதிகாதிசயத்வவசநாத் ஈச்வரவ்யதிரிக்த அசேஷகோசரஸ்யாபி ஐச்வர்யஸ்ய ஈச்வராபிமதத்வாத் ந த்வைராஜ்யாதி தோஷ: | 'அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' இதி விஷ்ணுபத்நீத்வவேஷேணைவ ஹி ஸர்வஸ்ய ஜகத இயமீஷ்டே | 'ஈச்வரீம் ஸர்வபூதாநாம்' இத்யத்ர து, யத்யபி ஸர்வபூதாநாம் இதி ப்ரதிஸம்பந்தி நிர்தேசாத் ஸ்த்ரீப்ரத்யயாநுஸாரேண ஈச்வரபத்நீதி விவக்ஷா ந சக்யா, ததாऽபி வாக்யாந்தரபலாத் அர்த்தஸ்ய தத்த்வஸித்தி: |" [(பிராட்டியின் கல்யாண குணங்கள்) எல்லையற்ற மேன்மையை உடையவை என்று கூறியதால், "ஈச்வரனைத் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல இவளுடைய நியமனஸாமர்த்யம் ஈச்வரனுக்கு இஷ்டமாகையால் 'இரண்டு ஈச்வரர்கள்' முதலான தோஷம் இல்லை; 'விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈச்வரியாயிருக்கிறாள்' என்னும் வேதவாக்யத்தின்படி விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பதனாலன்றோ இவள் அனைத்துலகையும் நியமிக்கிறாள். 'ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரி' என்னும் ஸ்ரீஸூக்த வாக்யத்தில், (யாருக்கு ஈச்வரி என்னும் கேள்வியெழ) 'ஸர்வ பூதங்களுக்கும்' என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச் சொல்லியிருப்பதால், ஈச்வரபத்னியென்று பொருள்கொள்ள முடியாது என்பது உண்மையானாலும், முன் எடுத்த ('அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' எனும்) வாக்யத்தின் பலத்தாலே இவ்வாக்யத்திலும் விஷ்ணுபத்னியாயிருப்பதாலேயே இவள் ஈச்வரியாகிறாள்.

acharya.org

என்று கொள்ளவேண்டும்] என்று ஸர்வஜ்ஞேஶ்வரத்வைசத ஸாம்யத்தைக்கொண்டு பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஸமமான முக்யைஶ்வர்யத்தைச் சொல்லும் ஐந்தாவது பக்ஷத்தை மிகத் தெளிவாகக் கண்டித்திருக்கிறார் தேசிகன். இவர் ஐந்தாவது பக்ஷத்தையே தழுவினார் என்று நீங்கள் கூறுவது இந்த ஸ்ரீஸூக்திக்கு முரண்பட்டதல்லவா?

2. ஶரணாகதி கத்யத்தில் பிராட்டியைப்பற்றிய முதல் சூர்ணையில் 'அநவதிகாதிஶய' என்னும் பதத்தை விவரிக்கும் போது பிராட்டிக்கு எம்பெருமானோடுள்ள பலவகையான ஸாம்யத்தை விவரித்துவிட்டு 'ந ச ஏதாவதா ப்ரஹ்மவதோ நிஸ்ஸமாப்யதிகத்வவிரோத: ப்ரத்யுத தத்ப்ரதிஷ்டாபநமேவ। 'ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ' இதி ஶ்ருதே:। ந ஹ்யேவம்விதபத்நீவிஶிஷ்டத்வம் கஸ்யசிதந்யஸ்யாஸ்தி. யேந தத்ஸாம்யாதிஶங்கா ஸ்யாத்। உபப்ரும்ஹிதம் ச — 'அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா' இதி। ஏவம் அஸ்யா: ஶீலாதீநாம் அநவதிகாதிஶயத்வேऽபி அவிரோத:।'' [பிராட்டிக்கு எம்பெருமானோடு பலவகையில் ஸாம்யம் கூறுவது, எம்பெருமான் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதோடு முரண்படாது; நேர்மாறாக, அவன் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதையே உறுதிப்படுத்தும்; எப்படியெனில்: இவ்வண்ணமாகப் பல பெருமைகளில் தன்னோடு ஒத்த பத்னியோடு கூடியிருக்கை (பிராட்டியையுள்ளிட்ட) வேறு எவர்க்கும் இல்லையே; அப்படியிருந்தால்தானே 'இவனுக்கு ஒத்தாரோ மிக்காரோ உண்டோ' என்று ஐயமுறமுடியும். ஸ்ரீராமாயணத்திலும் ''ஜனகராஜன் திருமகளைத் தன்னுடையவளென்று இட்டுப்பிறந்த (ஸ்ரீராமபிரானென்கிற) தத்துவத்தின் பெருமை அளவிடவொண்ணாததன்றோ'' என்று இவ்விஷயம் விளக்கப்பட்டதன்றோ; இவ்வண்ணமாகப் பிராட்டியின் ஶீலாதி குணங்கள் எல்லையற்ற மேன்மையை உடையவையானாலும் 'ஒத்தாரும் மிக்காருமில்லாதவன் எம்பெருமான்' என முழங்கும் ஶ்ருதி விரோதம் வாராது.] என்று ஸாதித்திருக்கிறார் ஸ்ரீதேசிகன், அவர் ஐந்தாவது பக்ஷத்தைத் தழுவியிருந்தால், ஆக்ஷேப ஸமாதானங்கள் இப்படி அமைய இடமேயில்லையென்பதை மறுக்கமுடியுமா?

3. ஸங்க்ரஹ நூலில் ஜகத்வ்யாபாரமாகிற ப்ரஹ்ம லக்ஷணம் எம்பெருமானுக்கேயிருந்தபோதிலும், முக்தர்களுக்கில்லாத ஜகத்வ்யாபார ஶக்தி இவளுக்கும் இருக்கையால், இவள் ப்ரஹ்மமில்லாவிடினும் முக்யையாகிறாள் என்று வாதம் செய்யப்படுகிறது. சதுஶ்லோகி 2-வது ஶ்லோகத்தின்

acharya.org

புராஷ்யத்தில் "ஸாத்வதோக்தம் தேவ்யாஸ் தாத்ருக்த்வமபி ஸ்ருதிஸ்ம்ருதி பூர்வாபராதிப்ரஸித்த பத்நீத்யாத்யநுகுலாம் யோஜ்யம் | கிஞ்ச யதா முக்தஸ்ய பஹுதா பரமஸாம்யே ஸ்ருதிஸ்ம்ருத்யாதிஸித்தேபி 'ஜகத்வ்யாபாரவர்ஜம்' இதி லக்ஷணபூதைராகாரை: வைஷம்ய ஸ்தாப்யதே ததேஹாபி பவதி; 'பிந்நலக்ஷணாம்' இதி ச தத்ரைவோக்தம் |" [ஸாத்வத ஸம்ஹிதையில் பிராட்டி பெருமானோடு ஒத்தவள் என்று கூறியிருப்பது ஶ்ருதி ஸ்ம்ருதிகள், (ஸம்ஹிதையின்) முன் பின் பகுதிகள் முதலானவற்றில் பிரசித்தமான பத்நீத்வம், (பாரதந்த்ர்யம்) முதலானவற்றுக்கு அனுகுணமாகவே நயனம் செய்யத்தக்கது. மேலும், முக்தாத்மாவுக்கு ஶ்ருதி, ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்தபோதிலும், 'ஜகத்வ்யாபார வர்ஜம்' என்று ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணமாயிருக்கும் தன்மைகளில் வேறுபாடு எப்படி நிலைநிறுத்தப்படுகிறதோ, அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு 'பெருமானும் பிராட்டியும் வேறு லக்ஷணமுடையவர்' என்று (ஸாம்யத்தைக் கூறும்) அந்த ஸாத்வதஸம்ஹிதா வாக்யத்திலேயே சொல்லப்பட்டதன்றோ] என்னும் ஸ்ரீஸூக்தியோடு உங்கள் வாதம் முரண்படவில்லையா?

4. ஸ்ரீராமமிஶ்ரர் என்னும் ஸோமாசியாண்டான் ஷடர்த்த ஸங்க்ஷேபம் எனும் நூலில் "உபயாதிஷ்டானஞ் ச ஏகம் ஶேஷித்வம்" [பெருமானும் பிராட்டியுமான மிதுனத்திற்கு, சேதனரைக் குறித்து உள்ள ஶேஷித்வம் ஒன்றே] என்று ஸாதித்துள்ளதை ஸ்ரீதேஶிகன் அடிக்கடி எடுத்துக் காட்டுகிறார். 'சேதனர் அனைவரும் இருவருமான சேர்த்தியிலேயே அடிமை செய்யவேண்டும். பிரித்து அடிமைசெய்யலாகாது' என்று இதிலிருந்துதேறுகிறது. இதை ஸ்ரீவைஷ்ணவபூர்வாசார்யர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏக ஶேஷித்வ ந்யாயத்தைஎடுத்துக்காட்டாகக்கொண்டு 'இருவரிடமுள்ள ஈஶ்வரத்வம் ஜகத்காரணத்வம் முதலான பெருமைகள் எல்லாம் ஒன்றேயாகையால் ஈஶ்வரர் இருவரல்லர்' என்று ஸங்க்ரஹ நூலில் வாதம் செய்யப்பட்டுள்ளது. இது எப்படிப் பொருந்தும்? ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஈஶ்வர பரிச்சேதத்தில் இந்த ஷடர்த்த ஸங்க்ஷேபபங்க்திகள் முழுவதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. [இந்நூலில் அடுத்தபடியுள்ள "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா? என்னும் கட்டுரையில் 11-வது பாராவில் பக்கம் 12, 13, 14) இது பொருளுடன் அச்சிடப்பட்டுள்ளது] அதில் "பத்யு: பத்ந்யா அபீதி லோக

ஸித்₃து₄ம் | உபாயாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் ஶேஷித்வம் | [கணவனுடைய உடைமை மனைவிக்கும் உடைமை என்பது உலகில் காணப்படும் நியாயம். ஆகையால், பிராட்டியிடமும் பெருமானிடமும் (உலகைக் குறித்து) உள்ள ஶேஷித்வம் ஒன்றே என்று கொள்ளவேண்டும்] என்பது ஸாரமான பகுதி. இந்த நியாயத்தைக்கொண்டு இருவரிடமுமுள்ள ஈஶ்வரத்வம், ஜக₃த்காரணத்வம் முதலானவையெல்லாம் ஒன்றே என்று எப்படித்தேறும்? மேலும், அந்தப் பங்க்திகளில் சோமாசியாரண்டான் "உலகில் ஶரீரம் பத்னியாயிருப்பதில்லையே; இங்கு ஶரீரமான பிராட்டி எப்படிப் பத்னியாயிருக்கமுடியும்?" என்னும் கேள்வியைக் கேட்டுக்கொண்டு "அசித்தாகையாலே, நம் ஶரீரம நமக்குப் பத்னியாயில்லை; வேத₃த்தால் பத்னியாக ஸித்₃தி₄க்கும பிராட்டி விஷயத்தில் இந்தக் கேள்வி பொருந்தாது" என்று பதிலுரைத்திருக்கிறார், "ஆனந்த₃ாதி₃ கு₃ணங்களைப்போல் பிராட்டி ஸ்வரூபத்தினால் மட்டும் த₄ரிக்கப்படுபவளாயிராமல் மற்ற ஶரீரங்களைப்போல் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலும் த₄ரிக்கப்படுபவளாயிருக்கிறாள்" என்றும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்தப் பங்க்திகளை மேற்கோளாகக் காட்டுகையாலே தே₃சிகனும் பிராட்டி பெருமானுக்கு ஶரீரம் என்றும், நியமிக்கப்படுபவள் என்றும் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என விளங்குகிறது "பிராட்டி பெருமானுக்கு ஶரீரமல்ல; நியாம்யையல்ல" என்று நீங்கள் கூறுவது ஸ்ரீதே₃சிகன் திருவுள்ளத்துக்கு முரணானதல்லவா?

5. "எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம்" என்று எம்பெருமானார் அருளியிருக்கையாலும், "தத₃ந்தர்ப₄ாவாத் த்வாம் ந ப்ருத₂க₃பி₄த₄த்தே ஶ்ருதிரபி" [ஸ்ரீகு₃ண-28] [எம்பெருமானோடு சேர்ந்திருக்கையால் வேதம் பிராட்டியாகிற உம்மைத் தனியாகச் சொல்லவில்லை] என்று பட்டர் அருளியிருக்கையாலும், எம்பெருமானுக்கு ஶ்ருதியில் சொன்ன ஈஶ்வரத்வம், ஜக₃த்காரணத்வம் முதலான எல்லாத் தன்மைகளும் பிராட்டிக்கும் உண்டு என்பதே எம்பெருமானாருக்கும் பட்டருக்கும் ஸித்₃த₄ாந்தம் என்று ஸங்க்₃ரஹ நூல் கூறுகிறது. எம்பெருமானாருடைய வார்த்தையை விளக்கும் பட்டருடைய அந்த ஶ்லோகத்தின் இறுதிப் பாத₃த்தின் முன்பாத₃ம் "த்வமாஸீர்மாத: ஸ்ரீ கமிதுரித₃மித்த₂ம்த்வ விப₄வ:" [தாயே! நீரே எம்பெருமானின் ஸ்வரூபஸ்வப₄ாவங்களை நிருபித்துத் தருபவளாயிருக்கிறீர்] என்று உள்ளது. இதோடு சேர்த்துப் பார்க்கும்போது "இப்படி நிருபகபூ₄தையாயிருந்துகொண்டு அவனோடு

acharya.org

சேர்ந்திருக்கையால் வேதம் உம்மைத் தனியாகச் சொல்ல வில்லை'' என்றே உத்தரார்த்தத்தின் பொருள் தேறும். இதற்கு மூலமான எம்பெருமானார் வார்த்தையும் "ச்ருதிவாக்யங்களில் நிரூப்யனான எம்பெருமானைச் சொன்னவிடத்திலெல்லாம் நிரூபகையான பிராட்டியையும் சொன்னதாக ஆகும்'' என்றே பொருள்படும். இதனால் நிரூப்யனான எம்பெருமானிடமுள்ள எல்லாத் தன்மைகளும் நிரூபகையான பிராட்டிக்கும் உண்டு என்று சொன்னதாக ஆகிவிடுமா? 'நிரூப்யமான குடத்தைச் சொன்னவிடமெல்லாம் நிரூபகமான குடத்வத்தையும் சொன்னதாக ஆகும்' என்பது உண்மையே: இதுகொண்டு அந்த குடத்திலுள்ள பொன்மயமாயிருக்கை, மஞ்சள் நிறமுடையதாயிருக்கை முதலானவை நிரூபகமான குடத்வத்திற்கும் உண்டு என்று தேறிவிடுமா?

6. "யுவயோ: ஸ்வாதந்த்ர்யமத்யங்குசம்'' [ஸ்ரீகுண-53] என்று பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்று பட்டர் ஸாதித்திருப்பதால் இருவரும் ஸ்வதந்த்ரர்களே என்றும், "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி'' [ஸ்ரீகுண-31] என்று பட்டரால் பிராட்டிக்குச் சொல்லப்படும் பாரதந்த்ர்யம் முன் சொன்ன ஸ்வாதந்த்ர்யத்துக்கு அநுகுணமாக, பிராட்டியின் விருப்பத்தால் செயற்கையாய் உண்டானது என்று கொள்ளவேண்டும் என்றும் வாதம் செய்கிறது ஸங்க்ரஹ நூல். இருவருக்கும் ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லும் ச்லோகத்தின் முன்பகுதியையும் முன்பின் ச்லோகங்களையும் காணும்போது, "ஸ்வத: விஷ்ணோ: ஸ்வமஸி'' (31) என்று பிராட்டிக்கு இயற்கையானதாகச் சொன்ன பாரதந்த்ரியத்திற்கு முரணில்லாமலே பட்டர் ஸ்வாதந்த்ரியத்தைக் கூறியிருக்கிறார் என விளங்கும். "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம்'' என்னும் இருபத்தெட்டாவது ச்லோகம் பெருமானுக்கு ஸ்வாதந்த்ரியத்தை ஸ்வரூபமாக (இயல்பானதாக)ச் சொல்லுகிறது. "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி'' என்னும் முப்பத்தொன்றாம் ச்லோகம் ரத்னத்திற்கு ஒளிபோலே பெருமானுக்குப் பிராட்டி இயல்பான உடைமையாயிருக்கிறாள் என்று கூறுகிறது. "மாதர் மைதிலி'' என்று தொடங்கும் ஐம்பதாவது ச்லோகம் பிராட்டியின் பெருமை, கருணை முதலான குணங்கள், பெருமானுடைய அக்குணங்களைக் காட்டிலும் மிகமிக விஞ்சி நிற்கின்றன என்று நிலைநாட்டுகிறது. "நேதுர் நித்ய ஸஹாயிநீ'' என்னும் ஐம்பத்துமூன்றாவது ச்லோகத்தில்—எம்பெருமான் ஸ்ரீராமனாக அவதரித்தபோது, மைதிலியான பிராட்டி காட்டில் கல்லிலும் முள்ளிலும் மெல்லடிகள் குருதியோட நடந்தது, பெருமானைப் பிரிந்து பத்துமாதம் அசோகவனத்தில் வாழ்ந்தது முதலான துன்பங்களை ஏற்றுக்கொண்டதைக் கூறி 'திக் கருணாம் திகஸ்து யுவயோஸ்

acharya.org

ஸ்வாதந்த்ர்யம் அத்யங்குரம்" [உங்களுடைய கருணைக்கு ஒரு 'திக்'காரம்; உங்களுடைய தடுக்கமுடியாத ஸ்வாதந்த்ர்யத்துக்கு ஒரு 'திக்'காரம்] என்று சேதநர்களை ரக்ஷிப்பதற்காக திவ்யதம்பதி துன்பங்களை ஏற்றுக்கொண்டதற்குக் காரணமான அவர்களுடைய கருணையையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் திக்கரிக்கிறார் பட்டர். இங்கு 'ஜனனி' என்று பிராட்டியை விளித்து ஶ்லோகத்தைத் தொடங்கியபோதிலும் முடிவில் திக்கரிக்கும்போது 'யுவயோ:' என்று பெருமானையும் சேர்த்துக்கொள்கிறார். 'நித்ய ஸஹாயிநீ' என்று பெருமானுக்கு ஆஶ்ரித ரக்ஷணகாரியங்களில் துணை புரிபவள் பிராட்டி என்று உணர்த்துகிறார். முன் ஶ்லோகங்களில் ஸ்வாதந்த்ரியத்தைப் பெருமானுக்கு ஸ்வரூபமாகவும், பிராட்டி கருணையில் விஞ்சியவளாகவும் கூறியதற்கும், பிராட்டிக்குப் பாரதந்த்ரியமே ஸ்வரூபம் என்று கூறியதற்கும் சேர, கருணாதிக்காரம் பிராட்டியின் கருணைக்கும், ஸ்வாதந்த்ர்ய திக்காரம் பகவத் ஸ்வாதந்த்ரியத்துக்குமே அந்வயிக்கும் என்பது தெளிவாகிறது. இரண்டுமே இருவருக்கும் அந்வயிக்குமானாலும், சேதநரை ரக்ஷிப்பதற்குத் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் ஸ்வாதந்த்ரியம் இங்கு சொல்லப்படுகிறதேயொழிய, பரமாத்மாவுக்குரிய ஸ்வாதந்த்ரியம் இங்கு சொல்லப்படவில்லை. 'நித்ய ஸஹாயிநீ' என்று பிராட்டியைக் குறிப்பிடுகையாலே இந்த ஸ்வாதந்த்ரியத்தையும் பிராட்டி எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் பின்பற்றி ஏற்றுக்கொள்கிறாள் என்பது விளங்கும். இங்ஙனமிருக்க, 'யுவயோ: ஸ்வாதந்த்ர்யம்' என்றதால் பெருமானுக்குத் துல்யமான ஸ்வாதந்த்ர்யம், பிராட்டிக்கும் உண்டு என்று எப்படிப் பொருள்படும்?

7. ஸங்க்ரஹநூல் 'முக்கியமான ஈஶ்வரத்வமே பெருமானுக்குப் போலே பிராட்டிக்கும் உண்டு' என்று கூறுகிறது. இந்தக் கருத்தை ஸ்ரீதேஶிகன் மேல் ஏற்றுவதற்காக, நாம் இதுவரை எடுத்துக் காட்டியிருக்கும் அவருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு முரணாக 'ஐந்தாவது பக்ஷமே ஸ்ரீதேஶிகனின் பக்ஷம்' என்று கூறுகிறது. இப்படிக் கொள்வதற்காக "தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்" என்று தன்னை ரக்ஷித்துக்கொள்ளவும் தனக்கு ஸ்வாதந்த்ரியம் இல்லை என்று கூறியவளும், தன் பதிபாரதந்த்ர்யத்தை நிலைநாட்டுவதற்காக வால்மீகியின் ஆஶ்ரமத்தில் பல வருடங்கள் பிரிந்து வாழ்ந்தவளுமான பிராட்டிக்கு ஸ்வாதந்த்ரியத்தை ஏற்றும் ஸாஹஸகாரியத்தைச் செய்கிறது ஸங்க்ரஹநூல். இச்செயல் இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கும், அதற்குப் பிராட்டியின் பாரதந்த்ரிய பரமாகவே கருத்துரைத்திருக்கும் பட்டர், தேஶிகன் முதலான ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டதல்லவா?

acharya.org

8. "ஸகலசேதநாசேதந விசிஷ்டமான தத்வம் ஒன்றே" என்று கூறுவதினாலேயே "விசிஷ்டாத்வைதர்" என்று பெயர் பெற்றிருக்கும் நம் மதத்தை, "ஸகல சேதநாசேதந விசிஷ்டமான தத்வம் ஒரு மிதுநம்" என்று கூறுவதன் மூலம் விசிஷ்டத்வைத மாக்க முற்படுகிறது ஸங்க்ரஹ நூல். இப்படி நம்முடைய மதத்தின் அடிப்படைக்கே முரணான பக்ஷத்தை ஏற்றுக்கொண்டும் ஸங்க்ரஹகாரரால் பிராட்டிக்கு ப்ரஹ்மத்வத்தைச் சொல்ல முடியவில்லை. இவ்வாறு ஐந்தாவது பக்ஷத்தை ஏற்றுக்கொள்வதைவிட, விசிஷ்டாத்வைத மதத்தின் அடிப்படைக்கு எந்தத் தீங்கும் செய்யாததாய், பிராட்டியை ஈச்வரகோடியில் சேர்ப்பதான நாலாவது பக்ஷத்தை ஏற்றுக்கொண்டு அதையே ஸ்ரீதேசிக பக்ஷம் என்று இசைவதற்கு என்ன தடை?

முடிவுரை

ஸாராஸார விவேகம் அறிந்தவர்களாய், நடுநிலை நிற்கும் நல்லோர்களாய், மாத்ஸர்யமற்றவர்களாய், ப்ரமாண பரதந்த்ரர்களான பல பெரியவர்கள் உபய ஸம்ப்ரதாயத்திலும் இன்றும் பலர் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தாலேயே நாம் இக் கட்டுரையை எழுதினோம். அத்தகைய பெரியவர்கள் ஒரு சிலராவது நம் கருத்தை ஏற்பார்கள் என்று நம்புகிறோம்.

[இக்கட்டுரை நமது ஸுதர்சனர் பதில் பனிரண்டாவது மதகத்திற்கு அனுபந்தமாக இணைக்கப்படுகிறது]



acharya.org

நடுநிலையாளர்களுக்கு வேண்டுகோள்

நம்முடைய ஸுதர்சனத்தில் 552 (46-12)வது (ஸ்ரீமுக கார்த்திகை இதழில் 'விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்' என்னும் கட்டுரையும், வித்வான்களின் மனஸ்ஸாக்ஷியைக் குறித்து சில கேள்விகளும் வெளியிடப்பட்டன. ஸகல சேதநாசேதந விசிஷ்டமாய், உலகுக்கு நிமித்தம் உபாதாநம் ஸஹகாரி என்னும் மூவகைக் காரணமாய் விளங்கும் பரப்ரஹ்மம் நாராயணன் ஒருவனே அவனுக்குப் பரதந்த்ரையான பிராட்டிக்கு அவனைத் தவிர்ந்த மற்றவர்கள் விஷயத்திலேயே சேஷித்வமும், அவன் விஷயத்தில் அத்யந்த பாரதந்த்ர்யமுமே உள்ளது என்பது ஸகல ப்ரமாணங்களிலிருந்தும் தேறும் விஷயம். பிராட்டியை ஜீவ வகுப்பில் சேர்ப்பதா ஈச்வர வகுப்பில் சேர்ப்பதா என்பது பற்றிப் பூர்வாசார்யர்கள் காலத்திலேயே கருத்து வேற்றுமைகள் இருந்திருக்கின்றன. "பிராட்டி ஈச்வர வகுப்பில் சேர்ந்தவளானாலும் எம்பெருமானுக்கு சரீரமாகவும் சேஷமாகவும் இருப்பதால் ஸர்வேச்வரன் ஒருவனே என்னும் விசிஷ்டாத்வைதத்திற்குக் குறைவில்லை" என்று வேதாந்த தேசிகன் தம் க்ரந்தங்களில் பலவிடங்களில் அருளிச்செய்திருக்கிறார். பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் இவ்விஷயமாகச் சர்ச்சைகள் ஏற்பட்டதனால் அதில் எப்படியாவது வெற்றி கொள்ளவேண்டும் என்னும் மனப்பான்மை விளைந்து, தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சில பெரியவர்கள் "பிராட்டிக்கு எம்பெருமானோடு துல்யமான ஈச்வரத்வமே உண்டு; அவள் எம்பெருமானுக்கு சரீரமல்ல. ஆனாலும் ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றை அவள் நேரே செய்யாததால் அவள் ப்ரஹ்மமல்ல" என்று சிலரும், "அவள் எம்பெருமானுக்கு சரீரந்தான்; ஆனாலும் அவள் ப்ரஹ்மமே" என்று சிலரும் தம் நூல்களில் எழுதி வைத்தனர். சென்னையிலிருந்து வெளிவரும் காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகையில் இவ்வசனங்கள் வெளியிடப்பட்டன. அதன்மேல் இது தேசிகன் முதலான ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் ச்ருதி முதலான ப்ரமாணங்களுக்கும் விரோதமாயுள்ளது என்று நிரூபித்து நாம் விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணத்தை வெளியிட்டோம். ஸ்ரீரங்கம் மதுராந்தகம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அஹோபிலமட ஸதஸ்ஸுகளிலும், நேரிலும், கடித மூலமாகவும் தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களை, இவ்விஷயம் குறித்து நடுநிலைநின்று ஆராய்ந்து நிர்ணயிக்குமாறு ப்ரார்த்தித்தோம். ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான நம்முடைய வாசகர்கள் பலரும் நாம் எழுதியிருப்பதை ஆதரித்தபோதிலும், வித்வான்கள் எவரும் நடுநிலை நின்று ஆராய ஸித்தமாக இல்லை. "மோஹம் கோபேந பூரயேத்" என்னும

விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?
நடுநிலையாளர்கள் தீர்ப்புக்கூறட்டும்.

எழுதியவர்:
ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், [ஸுதர்சனர்]
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம், 3 B, புத்தூர் அக்ரஹாரம்,
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620017.

முன்னுரை

நம்முடைய தரிசனத்திற்கு விசிஷ்டாத்3வைதம் என்று பூர்வாசார்யர்கள் திருநாமம் இட்டிருக்கிறார்கள், "விசிஷ்டஸ்ய ப்3ரஹ்மண: அத்3வைதம்-விசிஷ்டாத்3வைதம்" என்னும் வ்யுத்பத்தியாலே சேதநாசேதநங்களை ப்ரகாரமாகக்கொண்ட ப்3ரஹ்மம் ஒன்றே எனக்கொள்ளுகையாலே இம்மதம் விசிஷ்டாத்3வைதம் எனப்படுகிறது.

இந்நிலையில் மூன்று வருடங்களுக்கு முன் சென்னை 113 தரமணியிலிருந்து வெளிவரும் ஸ்ரீகாஞ்சிப் பேரருளாளன் என்னும் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய மாதப்பத்திரிகையில் 'ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜன ஸங்க்ரஹம்' என்னும் தலைப்பில் வெளிவந்த தொடர்கட்டுரைகளின் தொகுப்பு அன்பர் ஒருவரால் நடுநிலை நின்று விமர்சிப்பதற்காக நமக்கு அனுப்பப்பட்டது. அதில், "எம்பெருமானுக்குள்ள ஜக3த்காரணத்வம், மோக்ஷப்ரத3த்வம், ஸர்வஜக3ச்சரீரித்வம், ஸர்வஜக3ந்நியந்த்ருத்வம் முதலான ஈச்வரலக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. ப4க3வான் பிராட்டிக்கு ஶரீரமல்ல. அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு ஶரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்கமுடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து ஶேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல; அவளுடைய அனுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு பகவத் பாரதந்த்ர்யம் செயற்கையானது, ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும், எம்பெருமானார் பட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன" என்று எழுதப்பட்டிருந்தது. இவையனைத்தும் ஸ்ரீவேதா3ந்த தேசிகருடையவும், மற்ற பூர்வாசார்யர்களுடையவும் ஸ்ரீ ஸூக்திகளோடு மிகவும் முரண்பட்டவையாகையாலே நாம் "விசிஷ்டாத்3வைத ஸம்ரக்ஷணம்" என்னும் கட்டுரையை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் 46—12[552] இதழில் வெளியிட்டு அதில் பலபல வேதாந்த தேசிக ஸ்ரீஸூக்திகளைக்காட்டி,

ரீதியில் சிலர் நம்மைக் குறித்துக் கடுஞ்சொற்களைப் பேசினர் இருந்தபோதிலும் மனம் தளராமல் ஸுதர்சனத்தில் இவ்விஷயத்தைப்பற்றி அவ்வப்போது வற்புறுத்தி வந்தோம். மூன்று வருடங்களுக்குப்பிறகு நா. வரதாசார்யர் என்பவர் "யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாஞ்ஜனம்" என்னும் ஒருநூலை அண்மையில் வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தில் அவருடைய விலாசமே நம்முடைய விலாசமோ கொடுக்கப்படவில்லை. நம்முடைய கேள்விகளை அரைகுறையாக அநுவதித்து எவருக்கும் எதுவும் புரியாதபடி பதிலளிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் கிடைத்தவுடன், இதற்கு வடமொழியில் முகவுரையெழுதிய ஸ்ரீ உ. வே. என். எஸ். ராமாநுஜ தாதாசாரியர் (121 பெருமாள்கோயில் தெரு, பாண்டிச்சேரி 1) என்னும் ஸ்வாமிக்கு, புத்தகம் எழுதியவரின் விலாசம், புத்தகத்தின் விலை முதலானவற்றைத் தெரிவிக்குமாறு கடிதம் எழுதியிருந்தோம். இன்று (20-6-97) வரை அவரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. ஸ்ரீரங்கத்தில் இப்புத்தகத்தைப் பெற்றிருப்பவர்களை விசாரித்ததில் இதை எழுதியவர் பரமபதவாஸியான பதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமியின் ஜாமாதாவான நா. வரதாசாரியரே என்றும், அவர் 'தேரடித்தெரு, திருவஹிந்த்ரபுரம் வழி கடலூர் NT'' என்னும் விலாசத்திலிருப்பதாகவும் கூறினார்கள். இவர் இப்புத்தகத்தில் காஞ்சிப்பேரருளாளன் பத்திரிகையில் மூன்றுண்டுகளுக்கு முன் எழுதியவர் தாமே என்று வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இவ்விதழில் விசிஷ்டாத்வைதத்திற்கு மிக முக்கியமான இவ்விஷயம்பற்றி 26 விஷயங்களைப் குறிப்பிட்டு அவைபற்றி நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுகொண்டு 'அவிசிஷ்டாத்வைதமா-விசிஷ்டத்வைதமா'' என்னும் 30 பக்கங்கள் கொண்ட கட்டுரையை வெளியிட்டிருக்கிறோம். இது ஸுதர்சனர் பதில் 13வது சதகத்திலும் இணைக்கப்படும். விஷயங்களைப் பகுத்தறியும் திறமை படைத்த நடுநிலையாளர்கள் நா. வரதாசாரியருக்கு எழுதி அவரது நூலைப் பெற்று நடுநிலை நின்று கோபதாபமில்லாமல் ப்ரமாணங்களைக் காட்டி இவ்விஷயங்களைப் பற்றிய தமது தீர்ப்புகளை எழுதியனுப்பினால் அவற்றில் ஸாரமானவற்றை ஸுதர்சனத்திலும் வெளியிட்டு ஸுதர்சனர் பதிலிலும் (13 வது சதகம்) இணைக்கவிருக்கிறோம். இது ஸம்ப்ரதாயச் சர்ச்சையல்ல என்பதையும் இதில் நிர்ணயம் செய்யவேண்டியது உபய ஸம்ப்ரதாயத்திலும் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களனைவருக்கும் கடமை என்பதையும் கருத்தில்கொண்டு ஸாமான்ய மக்களுக்கும் புரியும்படியாக எழுதவல்ல அனைவரையும் தங்களுடைய நிர்ணயங்களை அவ்வண்ணம் எழுதியனுப்பக் கோருகிறேன்.

—ஸுதர்சனம் ஆசிரியர்,

acharya.org

"அவர் பிராட்டிக்கு எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்வத்தையோ, ப்ரஹ்மத்வத்தையோ கூறவில்லை" என்றும், "பிராட்டியை எம்பெருமானுக்கு ஶரீரமாய் அவனால் நியமிக்கப்படுபவளாய் தரிக்கப்படுபவளாய் அவனுக்கு ஶேஷபூதையான தத்வமாகவும் உபயவிபூதி ஶேஷியாயிருக்கையாலே ஈஶ்வரவகுப்பைச்சேர்ந்தவளாகவுமே அருளிச்செய்திருக்கிறார்" என்றும் நிலைநாட்டி "காஞ்சி பேரருளாளன்" கட்டுரையை ஆதரிக்கும் வித்வான்களின் மனஸ்ஸாக்ஷியைக் குறித்து எட்டுக்கேள்வியையும் வெளியிட்டிருந்தோம். இது ஸுதர்சனர் பதில்— பன்னிரண்டாவது சதகத்தின் அநுபந்தமாகவும் இணைக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டாவது சதகத்தின் முன்னுரையில் இவ்விஷயத்தைப் பற்றி நாம் அஹோபில மடம் ஸதஸ்ஸுகளில் கலந்துகொண்டும் தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களில் பலரிடம் நேரிலும் கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டும் வித்வான்களின் கருத்தைக் கேட்ட விஷயமும், அவர்கள் எவரும் பதிலளிக்க மறுத்த விஷயமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மூன்று வருடங்களுக்குப் பிறகு இப்போது "நா. வரதாசார்யர்" என்பவருடைய பெயரில் "யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ரஞ்ஜனம்" என்னும் தலைப்போடு 27 பக்கங்கள் கொண்ட தமிழ் நூலும், அதற்கு, தற்போது பாண்டிச்சேரியில் வாழும் N S ராமானுஜதாதாசாரிய ஸ்வாமியின் 14 பக்கங்கள் கொண்ட வடமொழி முகவுரையும் கூடிய புத்தகம் நமக்கு அனுப்பப்பட்டுக் கிடைத்தது. ஆனால் புத்தகத்தில் நூலாசிரியரின் முகவரியோ, முகவுரைஎழுதியவரின் முகவரியோ, புத்தகம் கிடைக்குமிடமோ விலையோ குறிப்பிடவில்லை. முகவுரை எழுதியிருக்கும் ஸ்வாமி நம்முடைய கீதா வ்யாக்யானத்தின் நிறைவு பாகத்திற்கு மதிப்புரை எழுதியிருக்கிறார். அவரது முகவரி "121 பெருமாள் கோயில் தெரு, பாண்டிச்சேரி". புத்தகம் எழுதியவரின் முகவரியை எழுதும்படி இவருக்கு எழுதியிருக்கிறோம். ஸ்ரீரங்கத்தில் இப்புத்தகத்தைப் பெற்றுள்ள சில தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களை விசாரித்ததில் இவர் பரமபதவாசியான மதுராந்தகம் வீரராகவாசாரியரின் ஜாமாதாவான நாவல்பாக்கம் வரதாசாரியரே என்றும், இவர் தற்போது திருவஹீந்திரபுரம் தேரடித்தெருவில் வசிக்கிறார் என்றும் சொன்னார்கள். வாதக்ரந்தங்களை எழுதும்போது எழுதுகின்றவர் தம்முடைய விலாசத்தையும், எந்த நூலுக்கு மறுப்புரை எழுதப்படுகின்றதோ அந்த நூல் எழுதியவரின் விலாசத்தையும் கொடுக்க வேண்டியது அவர்

acharya.org

களது கடமையாகும். இந்நூலாசிரியர் தம் விலாஸத்தைக் குறிப்பிட வில்லை. நாமோ "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் என்னும் தென்னாசார்ய பத்திரிகையின் ஆசிரியர்" என்று குறிப்பிட்டிருக்கிறாரே யொழிய நம்முடைய விலாசத்தைக் குறிப்பிடவில்லை. கேள்விகளில் நாம் தேசிகன் முதலான ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டும்போது அதற்கு எளிய தமிழ் நடையில் பொருள் எழுதியிருக்கிறோம். இக்காலத்தில் வாசகர்களுக்கு ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநம் மிகுதியாக இல்லாமையால், நம்முடைய நூல்களில் இவ்வாறு நியமேந செய்து வருகிறோம். இவர் நம்முடைய கேள்விகளை அநுவதிக்கும்போது நாம் எழுதியிருக்கும் பொருளை அடியோடு விட்டு விட்டு, கேள்வியையும் இவர் மனம் போனபடி சுருக்கியிருக்கிறார். இதனால் 41 வரிகளுள்ள முதல் கேள்வி 11 வரிகளிலும், 26 வரிகளுள்ள இரண்டாவது கேள்வி 8 வரிகளிலும், 24 வரிகள் உள்ள மூன்றாவது கேள்வி 21 வரிகளிலும், 40 வரிகளுள்ள நாலாவது கேள்வி 5 வரிகளிலும், 27 வரிகளுள்ள ஐந்தாவது கேள்வி 19 வரிகளிலும், 51 வரிகளுள்ள ஆறாவது கேள்வி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மிகக்குறைந்த வரிகளிலும், 14 வரிகளுள்ள ஏழாவது கேள்வி 2 வரிகளிலும், 12 வரிகளுள்ள 8 வது கேள்வி 3 வரிகளிலும் தாறுமாறாகச் சிதைத்துச் சுருக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. விடைகளில் இவர் எடுக்கும் பிரமாணங்களுக்குத் தமிழில் பொருள் எழுதப்படவில்லை. பலவிடங்களில் இன்னவிடத்தில் உள்ளது என்று ஆகரமும் கொடுக்கப்படவில்லை இவருடைய விடைகளும் பெரும்பாலும் விதண்டாவாத மயமாய் அமைந்துள்ளன, இவற்றிலிருந்து "ஏதோ நாமும் பதிலெழுதிவிட்டோம்" என்று பெயர் பண்ணுவதற்காக இச்சுவடியை எழுதியிருக்கிறாரேயொழிய, மநஸ்ஸாக்ஷிக்குக் கட்டுப்பட்டு வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தில் இதை எழுதவில்லை என்று தெளிவாகிறது. "நாவல்பாக்கம் வரதாசாரியர், தேரடித்தெரு, திருவஹீந்த்ரபுரம், Via. கடலூர் N T" என்னும் விலாசத்திற்கு எழுதி இவருடைய புத்தகத்தைப் பெற்றுப் பார்த்தால் இவ்வுண்மைகள் நன்கு விளங்கும்.

இனி ஶ்ருதி முதலான ப்ரமாணங்களிலிருந்தும் எம்பெருமானார் பட்டர், தேசிகர் முதலான பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும், இவர்களுடைய வாதங்களெல்லாம் விசிஷ்ட த்வைத மதத்திற்குப் பொருந்துமேயொழிய விசிஷ்டாத்வைத மதத்திற்கு அடியோடு பொருந்தாது என்பதை நிலைநாட்டி இவ்விஷயத்தை நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விட்டு இந்தச் சர்ச்சையை நிறைவு படுத்திக்கொள்ளுகிறோம்.

acharya.org

தீர்ப்பளிக்கவேண்டிய விஷயங்கள்

1 'ந தத்ஸமஶ் சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே' [பரமாத்மாவுக்கு ஒத்தவரும் மிக்கவரும் இல்லை] 'யஸ்மாத் பரம் நாபரம் அஸ்தி கிஞ்சித்' [எந்தப் பரமாத்மாவைக் காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லையோ] 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' [ஈஶ்வரர்கள் அனைவர்க்கும் மேலான ஸர்வேஶ்வரனை அவனை] 'க்ஷராத்மாநா விஶதே தே₃வ ஏக:' [அசேதநப் பொருள்களையும் ஜீவர்களையும் ஒரே தேவன் நியமிக்கிறான்] 'ஏக இத்₃ ராஜா ஜக₃தோ ப₃பூ₄வ' [இவ்வுலகிற்கு அரசன் ஒருவனேயாவான்] 'ஏஷ ஸர்வபூதாந்தராத்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:' [பரமபதத்திலிருக்கும் அந்த நாராயணன் ஒருவனே எல்லா ஜீவராசிகளுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன்] 'நாராயண பரம் ப்₃ரஹ்ம... அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:' [நாராயணனே பரப்₃ரஹ்மம். நாராயணனே பரதத்வம். நாராயணனே பரஞ்சோதி; நாராயணனே பரமாத்மா; இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்தின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்] 'ந தஸ்யேஶே கஶ்சந' [இந்தப் பரமாத்மாவை எவரும் நியமிப்பதில்லை] முதலான நூற்றுக்கணக்கான வேத₃வாக்யங்கள் நாராயணன் ஒருவனே அனைத்துலகையும் வியாபித்து நியமிப்பவன் என்றும், அவனுக்கு ஒத்தவரோ மிக்கவரோ கிடையாது என்றும் முழங்குகின்றன, இவர் (நா. வரதாசார்யர்) 'பெருமானும் பிராட்டியுமான இருவருமே அனைத்துலகையும் வியாபித்து நியமிக்கும் ஈஶ்வரர்கள்' என்று கூறுவது விசிஷ்டாத்₃வைதத்திற்குப் பொருந்துமேயொழிய முற்கூறிய ஶ்ருதிவாக்யங்களால் நிலைநாட்டப் பெற்ற விசிஷ்டாத்₃வைதத்திற்குப் பொருந்தாது, நடுநிலையாளர் தீர்ப்புக் கூறட்டும்

2 'ஸதே₃வ ஸோம்யேத₃மக்₃ர ஆஸீத் ஏகமேவ அத்₃விதீயம்' 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:' [நாராயணன் ஒருவனே ப்ரளயகாலத்தில் ஜகத்காரணனாயிருந்தான்; பிரமனும் இல்லை; சிவனும் இல்லை] முதலான காரணவாக்யங்களில் நாராயணன் ஒருவனே உலகிற்கு நிமித்தம் உபாதானம் ஸஹகாரி என்னும் மூவகைக் காரணமாகவும் உள்ளவன் என்று முழங்கப்படுகிறான். இது விசிஷ்டாத்₃வைதம். இவர் மூவகைக் காரணமாகவும் இருப்பது ஒரு மிதுனம் என்கிறார். இது விசிஷ்டத்₃வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்,

acharya.org

3. பல வேத வாக்கியங்கள் "ஏக விஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்" [பிரம்மம் ஒன்றையறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும்] என்று முழங்குகின்றன. இதுவே விசிஷ்டாத்வைதமாகும். மிதுநத்தை அறிந்தால்தான் அனைத்தையும் அறிந்ததாகும் என்னும் இவருடைய வாதம் விசிஷ்டத்வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்.

4. ஸ்ம்ருதிகளில் தலைமை பெற்ற மநு ஸ்ம்ருதியின்தொடக்கத்தில், "ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தம்" என்று ப்ரளயகாலத்தில் இவ்வுலகனைத்தும் பரமாத்மாவிடம் ஒடுங்கியிருந்ததைக்கூறி "ஸோऽபி₄த்₄யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவித₄ா: ப்ரஜா:|" என்று அந்தப் பரமாத்மா ஸங்கல்பம் செய்து தன் ஶரீரத்திலிருந்து உலகைப் படைத்ததைக் கூறி, 'அப்பரமாத்மாவின் திருநாமம் நாராயணன் என்பதே' என்று பத்தாவது ஶ்லோகத்தில் நிலைநாட்டப்பட்டது. "தன் ஶரீரத்திலிருந்து தானே ஸங்கல்பித்து உலகைப் படைத்தான்" என்று கூறுவது விசிஷ்டாத்₃வைதம். ஒரு மிது₂நம் தங்கள் இருவருக்கும் பொதுவான சரீரத்திலிருந்து உலகைப் படைத்தது என்னும் இவருடையவாதம் விசிஷ்டத்₃வைதமே. நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்.

5. ஸ்ரீராமாயணத்தில் ராவண வதம் நிகழ்ந்தவுடன் பிரம்மா ராமனைப் பார்த்து "ப₄வாந் நாராயணோ தே₃வ:" [ரா-யு 121-13] [நீயே நாராயணனாகிற தேவன்] என்று தொடங்கி "ஜக₃த் ஸர்வம் ஶரீரம் தே" [ரா-யு 121-26] [உலகனைத்தும் உனக்கு ஶரீரம்] என்று கூறினார். இப்படி உலகனைத்தும் ஒருவனுக்கு சரீரமாயிருப்பதே விசிஷ்டாத்வைதம். உலகனைத்தும இருவருக்கு சரீரம் என்னும் இவருடைய கூற்று விசிஷ்டத்₃வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்.

6. ஸ்ரீராமாயணத்தில் தி₃வ்ய தம்பதிகள் இருவருமே "ப₄ாஸ்கரேண ப்ரப₄ா யதா₂" என்று ராமனை சூரியனைப் போன்று விசேஷ்யமானவன் என்றும், சீதையை அவனது ஒளிபோலே விசேஷணமானவள் என்றும் கூறுவது விசிஷ்டாத்வைதத்திற்கு மிகப் பொருத்தமானது. இவர் விதண்டாவாதம் செய்து இருவருமே விசேஷ்யம் என்று சொல்லுவது விசிஷ்டத்₃வைதமேயாகும். இது பற்றியும் "தத்தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்" என்று பிராட்டி தன் பாரதந்த்ரியத்தைப் பேசியது "ப₃த்₃த₄ ஜீவனாகப் பாவித்துக் கூறியது என்று இவர் கற்பிப்பது நியாயமா" என்பது பற்றியும் நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்.

acharya.org

7. மஹாபாரதத்திலும்

"தவாந்தராத்மா மமச யேசாந்யே தேஹஸம்ஜ்ஞிதா: |
ஸர்வேஷாம் ஸாக்ஷிபூதோஸௌ ந க்3ராஹ்ய: கேநசித்
க்வசித்||" [பா-மோக்ஷதர்மம் 169-4]

[உனக்கும் எனக்கும் உடல் படைத்த மற்றெல்லா ஜீவர்க்கும் அந்தராத்மாவாய் இருப்பவன் இந்த நாராயணன், அவன் அனைவருக்கும் ஸாக்ஷியாய் இருக்கிறான், எவராலும் எப்போதும் அவன் அறிய இயலாதவன்] என்று பிரமன் சிவனைப் பார்த்துக் கூறுகிறான், கீதையிலும் எம்பெருமான் "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய | மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ || [7-7] [அர்ஜுனா! என்னைக்காட்டிலும் வேறுபட்டிருப்பவற்றில் ஒன்றுகூட மிகவும் மேலானதாயில்லை, இந்த எல்லாப் பொருள்களும் நூலில் ரத்தினங்கள் கோர்க்கப்பட்டிருப்பது போலே என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன] முதலான பலவிடங்களில் எம்பெருமான் அனைத்துலகையும் சரீரமாகக் கொண்டவன் என்றும் அவனுக்கு ஒத்தாரும் மிக்காரும் இல்லை என்றும் முழங்கப்பட்டது. இதுவே விசிஷ்டாத்வைதம், பிராட்டியும் பெருமானுமான இருவருமே உலகனைத்தையும், சரீரமாகக் கொண்டவர்கள் என்றும், இருவரும் ஒத்தவர்களே என்றும் இவர் கூறுவது விசிஷ்டத்வைதமேயாகும், நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்,

8 பாஞ்சராத்ர ஆகமங்களில் ஒன்றான லக்ஷ்மீதந்த்ரத்தில்

அஹந்தா ப்ரஹ்மணஸ் தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ |
ஆத்மா ஸ ஸர்வபூதாநாமஹம்பூதோ ஹரி: ஸ்ம்ருத:||
அஹந்தயா விநாஹம் ஹி நிருபாக்யோ ந ஸித்யதி|
அஹமர்த்தம் விநாஹந்தா நிராதாரா ந ஸித்யதி||
[ல—த 17—80, 81]

[பழமையானவளான நான் ப்ரஹ்மமாகிற அந்த பகவானுக்கு அஹந்தை (நானென்னும் தன்மையாயிருக்கிறேன்); ஸர்வ பூதங்கட்கும் ஆத்மாவான ஹரியானவர் அஹம்பூதராயிருக்கின்றார். அஹந்தையை விட்டு அஹமர்த்தமானது பெயரற்றதாய் ஸித்திக்காது. அஹமர்த்தத்தைவிட்டு அஹந்தையானது ஆதாரமற்றதாய் ஸித்திக்காது] என்றுபிராட்டிதானே தன் சோதிவாய்திறந்து "எல்லா பூதங்களுக்கும் ஆத்மாவாய், ப்ரஹ்மமான ஹரியானவர் அஹமர்த்தமான தர்மியாயிருக்கிறார்" என்றும், தான் அவருக்கு

acharya.org

அஹந்தையாக-ஸ்வரூபத்தை நிருபிப்பவளாக—ப்ரகாரமாயிருப்பவளாகவும், எம்பெருமான் தனக்கு ஆதாரமாக இருப்பதாகவும் அருளிச்செய்கிருள். இப்படி விசேஷ்யப்பொருள் பகவான் ஒருவனே என்றும், பிராட்டி உள்ளிட்ட மற்ற அனைத்தும் அவனுக்கு விசேஷணமே என்றும் கொள்ளுவதே விசிஷ்டாத்வைதம். இவளும் ஸ்வதந்த்ரமான விசேஷ்யமே என்றும், ஒருவர்க்கொருவர் சரீரமோ ஆதாரமோ அல்லர் என்றும் இவர் எழுதுவது விசிஷ்டாத்வைதமேயாகும், நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்,

9 ஆளவந்தார் சது:ஶ்லோகீ நாலாவது ஶ்லோகத்தில்

'ஶாந்தாநந்த மஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே:'

[ஷட்ஊர்மிகளற்றதாய் ஆநந்தமயமாய், பெரிய விபூதிகளை உடையதாய், தனக்கு மேலானதற்றதாய், பெரியதாயிருப்பதாலும் (பிறரைப்) பெரிதாகச்செய்வதாலும் ப்ரஹ்மஶப்தத்தாலே சொல்லப்படுவதாயிருக்கும் ஹரியினுடையயாதொருஸ்வரூபமுண்டோ] என்று ஹரியின் ஸ்வரூபத்தை மிகப்பெரியதாகையாலே ப்ரஹ்மஶப்தத்தால் சொல்லி, இந்த ஶ்லோகத்தின் இறுதியில், 'காடோபகூடாநி தே' [உன்னால் நன்ருக ஆலிங்கனம் செய்யப்பட்டவை (யென்று ப்ரமாணங்கள் சொல்லுகின்றன)] என்று ப்ரஹ்மத்தைத் தழுவியிருப்பவளாகப் பிராட்டியைப் பேசுகிருரேயொழிய, ப்ரஹ்மமாகப்பேசவில்லை, எம்பெருமானுரும் ஸ்ரீபாஷ்யத்தில் முதல் ஸூத்ரத்தில், ப்ரஹ்ம ஶப்தத்திற்குப் பொருள் அருளும்போது 'ப்ரஹ்ம ஶப்தேந ச ஸ்வபாவதோ நிரஸ்த நிகில தோஷ:அநவதிகாதிஶய அஸங்க்யேய கல்யாண குணகண: புருஷோத்தமோऽபிதீயதே | ஸர்வத்ர ப்ருஹத்வ குணயோகேந ஹி ப்ரஹ்மஶப்த:; ப்ருஹத்வம் ச ஸ்வரூபேண குணைஶ்ச யத்ராநவதிகாதிஶயம், ஸோऽஸ்ய முக்யோऽர்த்த:| ஸ ச ஸர்வேஶ்வர ஏவ| அதோ ப்ரஹ்மஶப்த: தத்ரைவ முக்யவ்ருத்த:; தஸ்மாதந்யத்ர தத்குணலேஶ யோகாதௌபசாரிக:|.' [பிரம்மசப்தத்தாலே இயல்பாகவே எந்த தோஷமும் அற்றவனும், எல்லையற்ற பெருமையையுடைய கணக்கற்ற கல்யாண குணங்களையுடையவனான புருஷோத்தமன் சொல்லப்படுகிருன். எல்லாவிடங்களிலும் பெரியதாயிருக்கை என்னும் குணம் இருக்கையாலேயே ப்ரஹ்ம ஶப்தம் வழங்கப்படுகிறது. ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் இந்தப் பெரிதாயிருக்கையாகிற குணம் எந்த இடத்தில் தனக்குமேல் இல்லாததாயிருக்கிறதோ அவ்விடத்திலேயே ப்ரஹ்ம ஶப்தம் முக்கியமான பொருளை உடையதாக ஆகிறது,

அவன் ஸர்வேஸ்வரன் ஒருவனே ஆகையால் ப்ரஹ்ம ஸப்தார்த் அவனிடமே முக்கியமான பொருளையுடையதாக ஆகிறது. அவனை த் தவிர மற்றவர்கள் விஷயத்தில் இந்தப் பெரிதாயிருக்கையாகிற குணம் ஒரு சிறிது இருக்கையாலே ப்ரஹ்ம ஸப்தமும் உபசாரமாக வழங்கப்படுகிறது.] என்று ப்ரஹ்ம ஸப்தத்திற்குப் பொருள் புருஷோத்தமனாகவும் ஸர்வேஸ்வரனாகவும் இருக்கும் எம்பெருமான் ஒருவனே என்றும், அவனிடமே அது முக்யார்த்தமென்றும் அருளினார். பிராட்டிக்குச் சிறிதும் பொருந்தாத "புருஷோத்தம" ஸப்தத்தையும் "ஸர்வேஸ்வர" ஸப்தத்தையும் ஏவகாரத்தோடு இங்கு இட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. ஸரணாகதி கத்யத்திலும் ஐந்தாவது சூர்ணையில் எம்பெருமானை விளிக்கும்போது 'பரப்ரஹ்மபூத! புருஷோத்தம!' என்றே அழைத்தார் எம்பெருமானார். வேதார்த்த ஸங்க்ரஹத்திலும், "ஸர்வேஸ்வரேஸ்வர: பரப்ரஹ்மபூத: புருஷோத்தமோ நாராயண: நிரதிஸய ஆஸ்சர்யபூத: நீலதோயத ஸங்காஸ:, புண்டரீகதலாமலாயதேக்ஷண: ஸஹஸ்ராம்ஸு: ஸஹஸ்ரகிரண: பரமே வ்யோம்நி........ ஏக ஏவ அவதிஷ்டதே। ப்ரஹ்ம வ்யதிரிக்தஸ்ய கஸ்யசிதபி வஸ்துந: ஏகஸ்வபாவஸ்ய ஏககார்ய ஸக்தியுக்தஸ்ய, ஏகரூபஸ்ய ரூபாந்தரயோக: ஸ்வபாவாந்தரயோக: ஸக்த்யந்த்ர யோகஸ்ச ந கடதே; தஸ்யைகஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண: ஸர்வவஸ்துவிஸஜாதீயதயா ஸர்வஸ்வபாவத்வம் ஸர்வஸக்தியோகஸ்ச—இதி..." [எல்லா ஈஸ்வரர்களுக்கும் ஈஸ்வரனாய், பரப்ரஹ்மமாய் இருப்பவனாய், புருஷோத்தமனாய், ஒப்பற்ற ஆச்சர்யமாய் இருப்பவனாய், நீலமேகம் போன்றவனாய், தாமரை இதழ் போன்று அழகிய நீண்ட திருக்கண்களையுடையவனாய், சோதிமயமானவனுமான நாராயணன் ஒருவனே பரமபதத்தில் விளங்கா நிற்கிறான். ப்ரஹ்மமாகிற அவனைக்காட்டிலும் வேறுபட்ட எந்த வஸ்துவும் ஒவ்வொரு தன்மையை உடையதாய் ஒவ்வொரு காரியத்திலேயே சக்தியை உடையதாய், ஒவ்வொரு விதமாகவே இருப்பதாய் உள்ளதாகையாலே, பரப்ரஹ்மமான அவன் ஒருவனுக்கே எல்லாப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டிருக்கையால் எல்லாப் பொருள்களின் ஸ்வபாவமும் எல்லா சக்தி யோகமும் இருப்பது போலே, மற்ற பொருள்களுக்கு இருப்பதில்லை] என்று புருஷோத்தமனான எம்பெருமான் ஒருவனே பரப்ரஹ்மம் என்றும், அவன் ஒருவனுக்கே எல்லாப் பொருள்களுமாவதாகிற ஜகதுபாதாந ஸக்தி உண்டென்றும் முழங்கினார்.

தேசிகன் உள்ளிட்ட மற்ற எந்த ஆசாரியரும் பிராட்டியை ப்ரஹ்ம ஶப்3த3த்தால் குறித்ததில்லை. பிராட்டி ஜகத்துக்கு உபாத3ாந காரணமாகவும் நிமித்தமாகவும் இருப்பதாகவும் பேசியதில்லை. இப்படி ஒருவனே ப்3ரஹ்மமாகவும் உலகிற்கு உபாத3ாந நிமித்த ஸஹகாரிகாரணமாகவும் இருப்பதே விசிஷ்டாத்3வைதம். இப்படியிருக்க "பிராட்டி ப்3ரஹ்ம ஶப்3த3த்திற்குப் பொருள் என்று கரூர் ஸ்வாமி சொன்னதும் தவறல்ல" என்று சமீபகாலத்திலிருந்த கரூர் ஸ்வாமி என்பவரை ப்ரமாணமாக இவர் காட்டுவதும், எம்பெருமானைப் போலே பிராட்டியும் உலகிற்கு மூலகைக் காரணமாகவும் ஆகிறாள் என்று கூறுவதும் விசிஷ்டத்3வைதமேயாகும். நடுநிலையாளர் தீர்ப்பளிக்கட்டும்.

10 கூரத்தாழ்வான் தமது ஸ்ரீஸ்தவத்தின் முதல் ஶ்லோகத்தில் "அஶேஷ ஜக3தாம் ஸர்க்கோ3ப ஸர்க்க3ஸ்தி2தீ: ... குர்வந் ஹரி:" என்று எல்லா உலகங்களுக்கும் ஸ்ருஷ்டி ஸ்தி2தி ஸம்ஹாரங்களை ஹரியே செய்கிறான் என்று மிகத்தெளிவாக எடுத்து, "யஸ்யா விக்ஷ்ய முக2ம் தத்3இங்கித3 பராதீ4நோ விதத்4த்தே" என்று தொடங்கி ஶ்லோகத்தின் பிற்பாதியில், 'பிராட்டியின் முகத்தைப் பார்த்து அவள் முகக்குறிக்கு வசப்பட்டவனாகவே அவற்றைச் செய்கிறான்' என்றும், 'அவளோடு ஏக ரஸனாயிருப்பதால் இப்படிச் செய்தாலொழிய அவனுடைய ஸ்ருஷ்டி முதலான லீலைகள் அவனுக்குச் சுவையளிக்காது' என்றும் அருளிச்செய்கிறார். ஸ்ரீபராசரபட்டரும் ஸ்ரீகு3ணரத்னகோஶம் முதல் ஶ்லோகத்தில்,

ஶ்ரியை ஸமஸ்த சித3சித்3 விதா4ந வ்யஸநம் ஹரே: |
அங்கீ3காரிபி4ராலோகை: ஸார்த்த2யந்த்யை
க்ருதோऽஞ்ஜலி: ||

[எல்லாச் சேதனாசேதனங்களையும் படைப்பதனால் உண்டான ஹரியினுடைய சிரமத்தை, தன்னுடைய அங்கீ3காரத்தைக் காட்டும் திருக்கண் நோக்குகளாலே பயனுடையதாக்குகிற ஸ்ரீதே3விக்கு ஓர் அஞ்ஜலி செய்யப்பட்டது] என்று உலகைப் படைத்ததை எம்பெருமானே செய்கிறான் என்றும், அதை அங்கீகரிப்பதையே பெரியபிராட்டியார் செய்கிறாள் என்றும் காட்டினார். அவரே ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தர சதகத்தில் 44வது ஶ்லோகத்தில்

acharya.org

ப்ரளய ஸமய ஸுப்தம் ஸ்வம் ஶரீரைகதே₃ஶம்
வரத₃! சித₃சித₃ாக்₃யாம் ஸ்வேச்ச₂யா விஸ்த்ருணந: |
க₂சிதமிவ கலாபம் சித்ரமாதத்ய தூ₄ந்வந்
அநுஶிகி₂நி ஶிகீ₄வ க்ரீட₃ஸி ஶ்ரீஸமக்ஷம் ||

[வரமளிக்கும் பெருமாளே! ப்ரளய காலத்தில் ஒடுங்கியிருக்கும் சேதநாசேதனங்கள் அடங்கிய உலகாகிற தன் ஶரீரத்தின் ஒரு பகுதியைத் தன் ஸங்கல்பத்தினால் பலவிதமான விசித்ரமான ஸ்தூ₂ல உலகாகப் பரப்பாநின்று கொண்டு (தோகையற்ற)பெண் மயிலுக்கு எதிரே பல வர்ணங்களையுடைய தன்னுடைய தோகையை ஆகாசத்தை அளாவியதுபோல் விரித்து உதறி ஆடுகின்ற ஆண் மயில் போலே பிராட்டியின் முன்னிலையில் விளையாடா நின்றீர்.] என்று உலகிற்கு நிமித்தகாரணமாகவும் உபாதாந காரணமாக வும் இருந்து, ஆண்மயில் தோகையை விரித்து ஆடுவதுபோலே உலகைப்படைப்பவன் உலகை சரீரமாகக்கொண்ட எம்பெருமானே என்றும், தோகையில்லாத பெண்மயில்போலே உலகைச் சரீர மாகக் கொள்ளாத பிராட்டி இந்த எம்பெருமானுடைய இந்த லீலையில் இன்புறுவது மூலம் பங்கு கொள்பவளே என்றும் காட்டி னார். ஸ்ரீவேதா₃ந்ததே₃சிகரும் தம்முடைய ஸ்ரீஸ்துதியில் (4)

யத்ஸங்கல்பாத் ப₄வதி கமலே யத்ர தே₃ஹிந்யமீஷாம்
ஜந்மஸ்தே₂மப்ரளய ரசநா ஜங்க₃மாஜங்க₃மாநாம்
தத்கல்யாணம் கிமபி யமிநாம் ஏகலக்ஷ்யம் ஸமாதெ₄ள
பூர்ணம் தேஜ: ஸ்பு₂ரதி ப₄வதீபாத₃லாக்ஷாரஸாங்கம் ||

[பெரிய பிராட்டியாரே! உலகனைத்தையும் ஶரீரமாகக்கொண்ட எந்த நாராயணனாகிற பரஞ்சோதியிடமிருந்து அவனுடைய ஸங் கல்பத்தாலே அசைவனவும் அசையாதனவும் அடங்கிய இவ் வுலகப்பொருள்களுக்கு ஸ்ருஷ்டி ஸ்தி₂தி ஸம்ஹாரங்கள் செய்யப் படுகின்றனவோ, அத்தகைய பரமமங்களமானதாய் யோகிகளின் ஸமாதி₄நிலைக்கு ஒரே இலக்காயிருப்பதான பரஞ்ஜோதி தேவரீரு டைய திருவடிச் செம்பஞ்சுக்குழம்பின் அடையாளம் பெற்றிருக் கிறது.] என்று எம்பெருமானே உலகனைத்தையும் சரீரமாகக்கொண் டவன் என்றும், அவனுடைய ஸங்கல்பத்தாலேயே ஜகத்ஸ்ருஷ்டி முதலானவை உண்டாகிறது என்றும் கூறுவதன் மூலம், உலகிற்கு நமித்த உபாதாந காரணமானவன் எம்பெருமானே என்றும், அவனை அடையாளம் காட்டுபவளாகவே பிராட்டி இருக்கிறாள் என்றும் மிகத்தெளிவாக அருளிச்செய்தார். இவரே இந்த ஸ்ரீஸ்துதி யில் "த்வாமேவாஹு:" என்று தொடங்கும் 9வது ஶ்லோகத்தில்

acharya.org

"சிலர் உன்னையே லோகஸ்வாமினியாகவும், மற்றும் சிலர் உனக்கு இனியவனான எம்பெருமானையே உலகநாதனாகவும் கூறிச் சண்டையிடுகின்றனர். இப்படி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு இருவரும் சிறிது கிளம்பி அமிழ்ந்துவிடுகிறார்கள். உன்னுடைய ஆனந்தத்துக்காகவே உலகைப் படைத்து எம்பெருமான் விளையாடுபவனாயிருக்கையில், இவ்வண்ணம் ஶ்ருதிகளில் முழங்கப்படும் நீங்கள் இருவருமே எங்களுக்கு தெய்வங்கள் ஆகிறீர்கள்" என்று கூறியிருப்பது—பிராட்டியையே பரமாத்மாவாகக் கூறும் சில சாக்தர்களுக்கும் உலகை ஒரு மிது₂நஶேஷமாக ஒப்புக்கொள்ளாமல் எம்பெருமான் ஒருவனுக்கே ஶேஷமாகக் கொள்ளும் ஏகாயநர்களுக்கும் உள்ள சண்டையைக் குறிப்பிட்டு, "நீங்கள் இருவருமே எங்களுக்கு சேஷிகளாகையாலே நாங்கள் மிது₂நாயனர்களே" என்று கூறியதேயாகுமாகையாலே எம்பெருமான் ஒருவனே ப்ரதாநமான ஜக₃த்காரணன் என்று முன் ஶ்லோகத்தில் சொன்னதோடு முரண்படாது. இந்த ஶ்லோகத்திலும் "தவத் ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ" என்று உலகைப் படைப்பது முதலான லீலைகளை எம்பெருமானே செய்கிறான் என்றும் அதில் பிராட்டிக்கு அந்வயம் ஆனந்தமடைவதன் மூலமே என்றும் குறித்திருக்கையால் இந்த ஶ்லோகத்திலும் உலகிற்கு உபாதா₃ந நிமித்தங்களாயிருக்கை எம்பெருமானுக்கே என்றும், கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுகை அல்லது உலகை உடையவர்களாயிருக்கையாகிற சேஷித்வத்திலேயே இருவரும் சேர்ந்து அந்வயிக்கிறார்கள் என்றும் தெளிவாகக் காட்டினார் தேசிகர். இவரே சது:ஶ்லோகீ இரண்டாவது ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில், "கிஞ்ச யதா₂ முக்தஸ்ய ப₄க₃வதா பரமஸாம்யே ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி₃ ஸித்₃தே₄ऽபி 'ஜக₃த் வ்யாபார வர்ஜம்' இதி லக்ஷண ஸூத்₄ரைத: ஆகாரைர் வைஷம்யம் ஸ்தா₂ப்யதே தத₂ஹாபி ப₄வதி:" [மேலும், முக்தாத்மாவுக்கு ஶ்ருதி ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்தபோதிலும் 'ஜக₃த்₃ வ்யாபார வர்ஜம்' என்று ப்ரஹ்ம ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணமாயிருக்கும் தன்மைகளில் வேறுபாடு எப்படி நிலை நிறுத்தப்படுகிறதோ, அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு.] என்று மிகத்தெளிவாக அருளிச்செய்திருக்கையாலே உலகைப் படைப்பது முதலானவற்றை எம்பெருமானே செய்கிறான் என்றும், பிராட்டி அவன் செய்யும் விளையாட்டின் ஆனந்தத்திலேயே பங்குகொள்கிறாள் என்றும் தேசிகர் உள்ளிட்ட எல்லா ஆசார்யர்களின் ஒருமிடனான ஸித்தாந்தம் என்று விளங்குகிறது

acharya.org

இதுவே விசிஷ்டாத்₃வைதம்; உலகிற்கு உபாதாநம் நிமித்தம் முதலானவற்றிற்குக் காரணம் ஒருமிதுநம் என்று ஸ்ரீதேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்யர்களுக்கும் விருத்தமாக இவர் (நா.வ.) கூறுவது விசிஷ்டத்₃வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்புக் கூறட்டும்.

11. எம்பெருமானாருடைய முக்ய சிஷ்யர்களில் ஒருவரான ஸோமாசியாண்டான் "உப₄யாதி₄ஷ்ட₂ாநம்ச ஏகம் ஶேஷித்வம்', [உலகைக் குறித்து சேஷித்வம் பெருமாளும் பிராட்டியுமாகிற இருவரிடமும் ஒன்றாகவே இருக்கிறது] என்று அருளியிருப்பதை தே₃சிகன் பலவிடங்களில் காட்டுகிறார். இங்கு சேஷித்வம் என்பது கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுபவராயிருக்கை என்னும் பொருளிலேயோ, உடையவராயிருக்கை என்னும் பொருளிலேயோ வழங்கப்படுகிறது. நம் ஸம்ப்ரதாயத்தில் பெருமானைவிட்டுப் பிராட்டிக்கு மட்டுமோ, பிராட்டியைவிட்டுப் பெருமாளுக்கு மட்டுமோ கைங்கர்யம் செய்வது என்பது ஏற்கப்படவில்லை. ஆகையால் 'ஜீவர்கள் செய்யும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்பவர்களாயிருக்கை' என்னும் சேஷித்வம் ஒரு மிதுநத்திடமே இருக்கிறது என்று எல்லாப் பூர்வாசார்யர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். சேஷித்வத்தை 'ஸ்வாமித்வம்' (உடையவராயிருக்கை) என்று கொண்டாலும், 'கணவனுக்கு உடைமையாயிருப்பது மனைவிக்கும் உடைமை' என்னும் நியாயத்தாலே உலகைக் குறித்து திவ்ய த₃ம்பதிகளின் சேஷித்வம் ஒன்றாகவே இருக்கிறது. இப்படி ஒரே சேஷித்வம் இருவரிடம் இருப்பதை 'வ்யாஸஜ்ய வ்ருத்தி' என்று வடமொழியில் கூறுகிறார்கள். ந்யாய ஸித்₃த₄ாஞ்ஜநத்தில் ஈஶ்வர பரிச்சே₂த₃த்தில் ஸ்ரீராமமிஶ்ரர் என்னும் திருநாமத்தையுடைய ஸோமாசியாண்டானுடைய ஷட்₃ர்த்த₂ ஸங்க்ஷேபத்தில் இதுபற்றியுள்ள ஸ்ரீஸூக்திகளை ஸ்ரீதேசிகன் எடுத்திருக்கிறார். அது பின்வருமாறு:—

"ஸமாநநயாத் மஹிஷ்யாதி₃ஸித்₃தி₄ஶ்ச। நநு-ஶேஷித்வ விஶிஷ்ட விதி₄ர் வாக்ய:; அந்யஶேஷஸ்ய தத₃ந்ய ஶேஷித்வா யோகா₃த்। நச அநுவாத₃:; அத ஏவ। கிஞ்ச மஹிஷ்யாதி₃கம் பரஸ்ய ஶரீரம்। அந்யதா₂ 'ஏகமேவ' இதி விரோத₄பாதே। ஆநந்த₃ாதி₃வத் அப்ருத₂க்₃பூ₄வ-பூ₄வாத்। அத: ஸாமத்வாத் நாதி₂: ஶேஷ ஶேஷிதா। மைவம்; பத்யு:பத்ந்யா அபீதி லோகஸித்₃த₄ம்। உப₄யாதி₄ஷ்டா₂நம்ச ஏகம் ஶேஷித்வம்। அவிபா₄க₃ ஸ்ம்ருதே:। தது₃க்தம் நீதி வித்₃பி₄: 'அந்யதரா நிச்ச₂யாம் த்யாக₃ ஏவ நஸம்வர்த்தேத'இதி। ந ஹ்யநிர்

வ்ருத்தி:ப்ருத₂க்த்வே ।ஏதந்ந்யாய ஸஹக்ருத வாக்யேந ச ஶேஷித்வ விஶிஷ்டபத்நீவிதி₄:। அநூத்₃யவா। நச லோகே ஶரீரஸ்ய அபத்நீத்வாத் மாநாந்தராகோ₃சரே விரோத₄:। அசித்த்வாச்ச அபத்நீத்வம் லோகே"। [இதே நியாயத்தைக்கொண்டு பார்க்கும்போது பரமாத்மா மஹிஷீ முதலானவர்களோடு கூடியவன் என்றும் விளங்குகிறது இனி ஓர் ஆக்ஷேபம்;-"அஸ்யேஶாநா ஜக₃த: விஷ்ணுபத்நீ" (விஷ்ணுவுக்குப் பத்நியாய் இவ்வுலகிற்குத் தலைவியாய் இருக்கிறாள்) என்னும் வேதவாக்யத்தில் ஶேஷித்வத்தோடு கூடியவளாகப் பிராட்டி விதிக்கப்படுகிறாள் என்று கூறமுடியாது; ஒருவருக்கு அடிமைப்பட்டிருக்கும் பொருள் மற்றொருவருக்கும் அடிமைப்பட்டிருப்பது பொருந்தாதாகையால்; அதே காரணத்தால், ஶேஷித்வத்தோடு கூடிய பிராட்டி அநுவதிக்கப்படுகிறாள் என்று கூறுவதும் பொருந்தாது. மேலும் பிராட்டி முதலானோர் பரமாத்மாவுக்கு ஶரீரம், பிராட்டியை ஶரீரமாகக் கொள்ளாவிடில் "தன்னை யொழிந்ததனைத்தையும் ஶரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே" என்று ஶ்ருதி கூறுவது பொருந்தாது. ஈஶ்வரனுடைய த₄ர்மபூ₄தஜ்ஞாநம் அவனுக்கு ஶரீரமல்லாவிடினும் முற்கூறிய ஶ்ருதிக்கு விரோத₄மில்லாததுபோல் இதையும் கொள்ளலாமே?எனில்; த₄ர்மபூ₄த ஜ்ஞாநாநந்தா₃தி₃கள் ஸ்வரூபத்தினால் மட்டும் த₄ரிக்கப்படுபவை; பிராட்டி (மற்ற ஶரீரங்களைப்போல்) ஸங்கல்பத்தாலும் த₄ரிக்கப்படுபவள். ஆகையால் இங்கு முற்கூறிய ஶ்ருதி விரோத₄ம் வந்தே தீரும், ஆக, 'மற்ற ஶரீரங்களோடு ஸாம்யமிருக்கையால் எம்பெருமானுக்கு அடிமைப்பட்ட உலகம் அவனுக்கு அடிமைப்பட்ட பிராட்டிக்கும் அடிமைப்பட்டுள்ளது' என்று கூற முடியாது—என்னும் இந்த ஆக்ஷேபம் பொருந்தாது; கணவனுடைய உடைமை மனைவிக்கும் உடைமை என்னும் உலகநியாயத்தோடு இது முரண்படுகிறதன்றோ; ஆகையால் பிராட்டியிடமும் பெருமாளிடமும் (உலகைக்குறித்து) உள்ள ஶேஷித்வம் ஒன்றே என்று கொள்ளவேண்டும். 'பதியின் உடைமை பத்னிக்கும் உடைமையாகும்' என்று ஸ்ம்ருதி கூறுவதும் இவ்விஷயத்தில் ப்ரமாணம். அதனாலேயே யாக₃நீதியறிந்தவர்கள் "பதிபத்னிகள் இருவரில் ஒருவர் இசையாவிட்டால் யாக₃த்தில் த்₃ரவ்ய த்யாக₃மே பொருந்தாது" என்று கூறுகிறார்கள். தம்பதிகள் தனித்தனி த்₃ரவ்யமுடையவரானால் இந்த வசனம் ஒட்டாது. ஆகையால் 'அஸ்யேஶாநா' என்னும் வேத₃ வாக்யம் ஶேஷித்வத்தோடு கூடிய பத்னியையே விதி₄க்கிறது அல்லது அநுவதிக்கிறது எனக்கொள்ள வேண்டும். 'உலகில் ஶரீரம் பத்னியாயிருப்பதில்லையே; இங்கு சரீ

ரமான பிராட்டி எப்படிப் பத்தினியாயிருக்கமுடியும்?' என்னும் கேள்வியும் வேதாந்தத்தால் ஶரீரமாக ஸித்திக்கும் பிராட்டி விஷயத்தில் பொருந்தாது. அசித்தாகையாலே நம் ஶரீரம் நமக்குப் பத்தினியாயில்லை.]

இந்த ஸோமாசியாண்டானுடைய ஸ்ரீஸூக்தியிலிருந்து பிராட்டியும் பெருமாளும் சேர்ந்து உலகிற்கு ஒரே ஶேஷியாய் (உடையவர்களாய்) இருக்கிறார்கள் என்றும், அதே சமயத்தில் பிராட்டி பெருமாளுக்கு ஶரீரமாய் இருக்கிறாள் என்றும் தேறுகிறது. இவர் (நா வ) பிராட்டி பெருமாளுக்கு ஶரீரமல்ல என்று கூறுவது இந்த ஸோமாசியாண்டானுடைய திருவுள்ளத்திற்கும் அவரை ப்ரமாணமாக எடுத்திருக்கும்ஸ்ரீதேசிகனுடையதிருவுள்ளத்திற்கும் முரண்பட்டது என்று தெளிவாக விளங்குகிறது. ஆகையால் இந்த ஆசார்யர்கள் பின்பற்றியிருக்கும் விசிஷ்டாத்வைதத்தைக் கைவிட்டு விசிஷ்டத்வைத மதத்தை இவர் (நா வ) கைக்கொண்டு விட்டார் என்பது தெளிவாகிறது. மேலும், 'கணவனின் உடைமைமனைவிக்கும் உடைமையாகும்' என்னும் நியாயத்தைக்கொண்டே இங்கு பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஶேஷித்வம் வ்யாஸஜ்ய வ்ருத்தியாகக் கொள்ளப்படுவதால், இந்த நியாயத்திற்கு இடமில்லாத ப்ரஹ்மத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் முதலானவற்றையும் எம்பெருமானுக்கும் அவனுக்கு ஶரீரமான பிராட்டிக்கும் வ்யாஸஜ்ய வ்ருத்தியாக இவர் கொள்வது பொருந்தாது என விளங்குகிறது. நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

12 ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" [வி பு 1-8-17] என்னும் ஶ்லோகத்தில் பெருமானைப்போலவே பிராட்டியும் உலகிற்கு அந்தர்யாமியாய் இருப்பவளே என்று பராஶர மஹரிஷி கூறியிருக்கையாலே இருவரும் துல்யமான ஈஶ்வரர்கள் என்று இவர் எழுதுகிறார். இந்த ஶ்லோகத்திற்கு வியாக்கியானம் செய்த ஸ்வாமி எங்களாழ்வான் பிராட்டி அணுவான ஜீவனாயிருந்தபோதிலும் ஶக்தியாலே எங்கும் வியாபித்திருப்பதாகவே இங்கு கூறுகையாலே, இருவரும் உலகிற்கு அந்தர்யாமி என்றோ துல்யமான ஈஶ்வரர்கள் என்றோ தேறாது பம்பாய் வேங்கடேஶ்வர ஸ்டீம் பிரஸ்ஸில் இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ரீவிஷ்ணுசித்தீய வ்யாக்யானத்துடன் ஸ்ரீ விஷ்ணுபுராணம் நாகராக்ஷரத்தில் வடநாட்டினரால் அச்சிடப்பட்டுள்ளது, அப்பதிப்பில் எங்களாழ்வான் ஸ்ரீஸூக்திகள் பின்வருமாறு காணப்படுகிறது:—

acharya.org

"விஷ்ணோ:—ஜகத்பிது: விஷ்ணோ: அநபாயிநீ ஏஷா: ஜகந்மாத்ருத்வேந தத்வந் நித்யா। தஸ்யாஸ்ச விஷ்ணோ: இவ ஆவிர்பாவதிரோபாவௌ ஸ்த:। ஸா பூர்வம் ப்ருகோ: ஸுதாத்வேந ஆவிர்பூதா, பஸ்சாத் இந்த்ரஸ்ய துர்வாஸஸ்ஸாபாத் திரோபூத்வாऽம்ருதமதநே ப்ராதுர்பூதா। அதோ ந விரோத:। யதேதி-ஸர்வகதோ விஷ்ணு: யதா யத்ஸ்வபாவ: இயமபி ததா — தத்ஸ்வபாவேதி விஷ்ணோ: ஸர்வகதத்வ ஸத்ய ஜ்ஞாநாதி ஸ்வரூப கல்யாண குணநாம் அதிதேஸ:। அதவா பகவாந் விபுத்வேந ஸர்வகத:, அஸ்யா: தச்சக்தி வஸாத் அணுத்வேऽபி தத்ரதத்ர ஸந்நிதாநாத் ஸர்வகதத்வ முக்தம்। இயம் ச ஸர்வகதா"

[உலகின் தந்தையான விஷ்ணுவைவிட்டுப் பிரியாத உலகின் தாயான இவள், அவனைப்போலவே நித்யையாய் இருப்பவள். அவளுக்கும் விஷ்ணுவுக்குப்போலே (விக்ரஹத்தோடு) தோன்றுவதும் மறைவதும் உண்டு. அவள் முதலில் ப்ருகுவின் பெண்ணாகத் தோன்றினாள். அதற்குப் பிறகு இந்திரனுக்கு ஏற்பட்ட துர்வாஸருடைய சாபத்தாலே மறைந்து அம்ருதம் கடைந்த பிறகு மறுபடியும் தோன்றினாள். ஆகையால் விரோதமில்லை. (இது ஸ்லோகத்தின் முற்பாதியின் பொருள்) "யதா ஸர்வகத:" என்று தொடங்கும் பிற்பாதியின் பொருள் பின்வருமாறு:—'எங்கும் வியாபித்திருக்கும் விஷ்ணு எந்த ஸ்வபாவத்தை உடையவராயிருக்கிறாரோ, அந்த ஸ்வபாவத்தை உடையவளே இப்பிராட்டியும்' என்பது பிற்பாதியின் பொருள்; இதில் (முற்கூறியபடி) விஷ்ணுவின் விக்ரஹத்தால் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையும், ஸத்யம் ஜ்ஞானம் முதலான ஸ்வரூப கல்யாண குணங்கள் முதலானவையும் இவளுக்கு உண்டு என்று கூறப்படுகிறது. அன்றிக்கே, "பகவான் ஸ்வரூபத்தால் எங்கும் பரந்திருக்கும் விபுவாகையாலே ஸர்வ வ்யாபியாகிறான். இவளோ எனில்—அணுவாய் இருந்தபோதிலும் (அகடிதகடனா) ஶக்தியாலே (எம்பெருமான் இருக்கும்) எல்லாவிடத்திலும் இருக்கையாலே இவளுக்கும் ஸர்வ வ்யாபித்வம் சொல்லப்பட்டது" என்றும் கொள்ளலாம். இந்த முறையில் இவளும் ஸர்வ வியாபியே]

இந்த எங்களாழ்வான் ஸ்ரீஸூக்தியில் ஸ்லோகத்தின் முற்பாதிக்குப் பொருள் சொல்லும்போது எங்களாழ்வான் விக்ரஹ வ்யாப்தியையே கூறுகிறார் என்பது மிகத்தெளிவு. பிற்பாதிக்கு இரண்டு விதமாக எங்களாழ்வான் பொருள் கொள்கிறார். முதல் பொருளில்

acharya.org

"ஸர்வகதத்வ" என்று முற்பாதியில் சொல்லப்பட்ட விக்ரஹ வ்யாப்தியைத் தனியாக எடுத்து, அதுவும் ஸத்யம் ஜ்ஞாநம் முதலான ஸ்வரூப கல்யாண குணங்களும் பிராட்டிக்கு உண்டு என்று ஸாதித்திருப்பதால் இப்பொருளில் எங்களாழ்வான் பிராட்டிக்கு விக்ரஹ வ்யாப்தியையே திருவுள்ளம்பற்றியிருக்கிறார் என்பது தெளிவு. அதற்குமேல் 'பிராட்டிக்கு ஸ்வரூப வ்யாப்தியும் சொல்லக்கூடாதோ?' என்னும் கேள்வியெழுகையாலே இரண்டாவது பொருளில் "பகவான் விபுவாய் இருந்துகொண்டு எங்கும் வியாபித்திருக்கிறான். இவள் ஸ்வரூபத்தில் அணுவாய் இருந்த போதிலும் அகடிதகடநா சக்தியினாலே பகவான் உள்ளவிடம் எங்கும் வியாபித்திருக்கையாலே இவளுக்கும் ஸர்வவ்யாபித்வம் சொல்லப்பட்டது. ஆகையால் இவள் ஸ்வரூபத்தாலும் எங்கும் வியாபித்திருப்பவளே" என்று எங்களாழ்வான் அருளியிருக்கிறார். இதைப் பிற்காலத்தில் க்ரந்தலிபியில் அச்சிட்ட தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள், "அஸ்யா: தச்சக்திவஶாத் அணுத்வேऽபி தத்ர தத்ர ஸந்நிதாநாத் ஸர்வகதத்வமுக்தம்" என்னும் பங்க்தியை எடுத்துவிட்டு அச்சிட்டார்கள், இடையிலுள்ள வாக்யம் எடுக்கப்பட்டதால் இவ்விரண்டாவது வாக்யம் அநந்விதமாய் நிற்கிறது. மேலும் பெரியவாச்சான்பிள்ளையின் சிஷ்யரான வாதிகேஸரி ஜீயர் தம்முடைய ரஹஸ்யத்ரய காரிகாவளியில் "ஶக்த்யா ஸர்வத்ர ஸாந்நித்யாத் ஸர்வகதத்வம் உதீரிதம் । இதி ஸ்ரீவிஷ்ணுசித்தார்யை: வ்யாக்யாநாத்து ந ஸாதநம்" என்று இவ்விரண்டாவது வாக்யத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். ஈட்டின் அரும்பதவுரைகளிலும் நாகரலிபிப்பதிப்பில் உள்ளபடியே இந்த விஷ்ணுசித்திய வ்யாக்யானம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது, ஆகையால் எங்களாழ்வான் இந்த ஶ்லோகத்திற்குப் பொருளாக விக்ரஹ வ்யாப்தியையே கூறியிருக்கிறார் என்றும் அந்தர்யாமியாகக் கூறவில்லை என்றும் விளங்குகிறது. ஈஶ்வரர்கள் இருவர் என்று கொண்டால் விசிஷ்டாத்வைதம் அழிந்துவிடும் என்னும் திருவுள்ளத்தாலேயே எங்களாழ்வான் இப்படி வியாக்கியானம் செய்திருக்கிறார் என்பது தெளிவு. நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

13 எங்களாழ்வானுடைய இந்த வியாக்யானத்தை தேசிகன் தம் சதுஶ்லோகீ பாஷ்யத்தில் மறுத்திருக்கிறாராகையாலே தேசிகனுடைய திருவுள்ளப்படி ஈஶ்வரர்கள் இருவர் என்றுதானே தேறும் என்னும் கேள்வியெழுகிறது. தேசிகன் பிராட்டியை ஈஶ்வர கோடி

acharya.org

யில் கொண்டாலும் அவனுக்கும் ஈஶ்வரனாக எம்பெருமானை ஒப்புக் கொண்டிருக்கிறாராகையாலும் பிராட்டிக்கு ஏகாந்த ஶேஷித்வத்தையே (எம்பெருமான் தவிர்ந்த மற்றவர்க்கு ஶேஷியாயிருக்கையையே) ஏற்றுக்கொண்டிருக்கையாலும், அவர் இருவரும் ஸமமான ஈஶ்வரர்கள் என்று கருதியிருக்க முடியாது. தேசிகன் தம்முடைய ந்யாயஸித்தாஞ்ஜனம் முதலான க்ரந்தங்களில்

லக்ஷ்ம்யா: ஸமஸ்தசிதசித்ப்ரபஞ்சோ
வ்யாப்யஸ்ததீஶஸ்ய து ஸாபி ஸர்வம் ।
ததாபி ஸாதாரணமீஶித்ருத்வம்
ஶ்ரீஶயோர்த்வைவ ச ஸதைகஶேஷீ ॥

[லக்ஷ்மியால் சேதநாசேதநங்கள் அடங்கிய எல்லா உலகங்களும் வியாபிக்கப்பட்டுள்ளது. அவிளுடைய ஈசனான நாராயணனால் இந்த எல்லா உலகங்களோடும் அவளும் வியாபிக்கப்பட்டுள்ளாள். இருந்தபோதிலும் உலகத்தைக் குறித்து இருவருக்கும் ஈஶ்வரத்வம் (உடையவராயிருக்கை) பொதுவானது. இருவரும் எப்போதும் ஒரே சேஷியாய் உள்ளனர்] என்னும் பாஞ்சராத்ரவசநத்தை மேற்கோள் காட்டுகிறார். பிராட்டி உலகை வியாபித்திருந்தபோதிலும் பெருமாள் அவளையும் வியாபித்திருக்கிறார் என்று கூறுகிறது இவ்வசநம். ஆகையால் தேசிகன் "பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமாய் அவனால் வ்யாபிக்கப்படுபவளாய் இருந்தபோதிலும், உலகைக்குறித்து ஶேஷியாயிருக்கையாலே ஈஶ்வர வகுப்பில் சேர்ந்தவள்" என்னும் நாலாவது பக்ஷத்தையே கைக்கொண்டிருந்தார் என்று தெளிவாக விளங்குகிறது. இதுவே விசிஷ்டாத்வைதத்திற்கு முரண்படாதது. இவர் (நாவ) இந்த ஶ்லோகத்தை எடுக்கும்போது முன்பகுதியை விட்டு விட்டுப் பின்பகுதியை மட்டும் எடுக்கிறார். முன்பகுதிக்கு முரணாகப் பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமோ வியாபிக்கப்படுபவளோ அல்லள் என்று இவர் கூறுவது விசிஷ்டாத்வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

14 தேசிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநம் ஈஶ்வர பரிச்சேதத்தில் 'பிராட்டியும் பெருமாளும் ஒத்தவர்களே' என்னும் வசநங்களுக்குக் கருத்துரைக்கும்போது, "ஜ்ஞாநாநந்தாத்யத்யந்த ஸாம்யாத் ஜகஜ்ஜநகத்வ ஶேஷித்வ ஶரண்யத்வப்ராப்யத்வாதி ஸாம்யாச்ச ஸாம்யகிராம் நிர்வாஹோ வ்யக்த:"। [பிராட்டிக்கும் பெரு

மாளுக்கும் ஜ்ஞாநம் ஆனந்தம் முதலான குணங்களில் மிகவும் ஒற்றுமையிருக்கையாலும், ஜகத் காரணத்வம் ஶேஷித்வம் ஶரண்யத்வம் ப்ராப்யத்வம் முதலானவற்றில் ஒற்றுமையிருக்கையாலும் இருவரும் ஸமம் என்று கூறும் வசநங்கள் பொருந்திவிடுகின்றன] என்று அருளியிருக்கையாலே, ஜகத்காரணத்வம் முதலானவற்றில் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் வேற்றுமையும் உள்ளது என்று விளங்குகிறது. அடுத்துள்ளதொரு வாக்கியத்தில் "ஶக்தித்வவாதஸ்து பத்நீத்வாதிரூபேண விஶேஷணத்வ — அபிப்ராயா: ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரேஷு ஸமாநலீலதயா ப்ரேரகத்வேந ஸஹகாரித்வ-அபிப்ராயாவா", [பிராட்டி பெருமாளுக்கு சக்தி என்று கூறும் வசநங்கள் பத்னியாகவும் சரீரமாகவும் இருந்துகொண்டு பிராட்டி பெருமாளுக்கு விசேஷணமாக இருக்கிருள் என்னும் கருத்தை உடையவை. எம்பெருமான் ஸ்ருஷ்டி முதலான செயல்களைச் செய்யும்போது அதனுல் உண்டாகும் ஆனந்தத்தில் பங்கு கொள்வதின் மூலமும் அவனை அவற்றைச் செய்யும்படி தூண்டுவதன் மூலமும் அவனுக்குத் துணை புரிகிருள் என்னும் கருத்தை உடையவை என்றும் கொள்ளலாம்] என்று அருளியிருக்கையாலே பிராட்டி பெருமாளுக்கு விசேஷணமாகவே இருக்கிருள் என்றும், ஸ்ருஷ்டி முதலான செயல்களை அவள் நேரே செய்வதில்லை. அவனைத் தூண்டுவது முதலானவற்றைச் செய்வதன் மூலம் அவள் அப்ரதாநமான ஜகத்காரணமாகவே ஆகிருள் என்றே தேசிகன் திருவுள்ளம் பற்றுகிருர் என்றும் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. இது விசிஷ்டாத்வைதத்தோடு முரண்படாத நாலாவது பக்ஷத்தையே தேசிகன் தழுவியிருக்கிருர் என்று காட்டுகிறது. "அத்யந்தஸாம்யாத்" என்னும் பகுதியை எடுக்காமல் "ஸாம்யாத்" என்னும் பகுதியை மட்டும் எடுத்து, ஜகத் காரணத்வம் முதலானவை எல்லாம் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் எல்லாவிதத்திலும் ஒன்றுபட்டதே என்று இவர் (நாவை) கூறுவது விசிஷ்டாத்வைதமேயாகும். நடுநிலையாளர் தீர்ப்பளிக்கட்டும்.

15 "ஈஶ்வர: ஸர்வபூதாநாம்" என்று பகவானைச் சொன்னதுபோலே, "ஈஶ்வரீம் ஸர்வ பூதாநாம்" என்று பிராட்டியை ஸ்ரீஸூக்தம் கூறுகையாலே, பெருமாளுக்குப்போலே பிராட்டிக்கும் மூக்யமான ஈஶ்வரத்வத்தைக் கொள்ளவேண்டும் என்னும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் தழுவியுள்ளார் என்று இவர் கூறுகிருர். கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் பிராட்டியைப்பற்றிய "அநவதிகாதிஶய — அஸங்க்யேய கல்யாணகுணகணஶ்ரீவல்லப:" என்னும் தொடரில் "அநவதிகாதிஶய" என்னும் பதத்தை

விவரிக்கும் போது "அநவதி₄காதிஶயத்வ வசநாத் ஈஶ்வர வ்யதிரிக்த — அஶேஷ சேதநாசேதநஸ்யாபி ததைஶ்வர்யஸ்ய ஈஶ்வராபி₄மதத்வாத் ந த்₃வைராஜ்யாதி₃ தோ₃ஷ: | அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ இதி விஷ்ணு பத்நீத்வ வேஷேணஹி ஸர்வஸ்ய ஜக₃த இயம் ஈஷ்டே | 'ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்' இத்யத்ர து யத்₃யபி ஸர்வபூ₄தாநாம் இதி ப்ரதிஸம்ப₃ந்தி₄ நிர்த்தே₃ஶாத் ஸ்த்ரீ ப்ரத்யயாநுஸாரேண ஈஶ்வர பத்நீதி விவக்ஷாநுபயா ததா₂பி வாக்யாந்தர ப₃லாத் அர்த்த₂ஸ்ய தத₂த்வஸித்₃தி₄:" [பிராட்டியின் கல்யாண கு₃ணங்கள் எல்லையற்ற மேன்மையை உடையவை என்று கூறியதால், ஈஶ்வரனைத் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல இவளுடைய நியமன ஸாமர்த்₂யம் ஈஶ்வரனுக்கு இஷ்டமாகையால், 'இரண்டு ஈஶ்வரர்கள்' முதலான தோஷம் இல்லை; "விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈஶ்வரியாயிருக்கிருள்" என்னும் வேதவாக்கியத்தின்படி விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருப்பதாலன்றே இவள் அனைத்துலகையும் நியமிக்கிருள். 'ஸர்வ பூ₄தங்களுக்கும் ஈஶ்வரி' என்னும் ஸ்ரீஸூக்த வாக்கியத்தில், (யாருக்கு ஈஶ்வரி என்னும் கேள்விஎழ) ஸர்வ பூ₄தங்களுக்கும் என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச் சொல்லியிருப்பதால், ஈஶ்வர பத்னியென்று பொருள்கொள்ள முடியாது என்பது உண்மையானாலும், முன் எடுத்த ('அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ' எனும்) வாக்கியத்தின் ப₃லத்தாலே இவ்வாக்யத்திலும் விஷ்ணு பத்னியாயிருப்பதாலேயே இவள் ஈஶ்வரியாகிருள் என்று கொள்ள வேண்டும்] என்று ஸர்வபூ₄தேஶ்வரத்வ வசந ஸாம்யத்தைக் கொண்டு பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸமமான முக்₂யேஶ்வரத்வத்தைச் சொல்லும் ஐந்தாவது பக்ஷத்தை மிகத்தெளிவாகக் கண்டித்திருக்கிருர் தேசிகன். இவர் ஐந்தாவது பக்ஷத்தைத்தழுவியிருந்தால் தொடங்கியவுடன் 'ஈஶ்வரனைத் தவிர்ந்த மற்றவர்களுக்கே இவள் ஈஶ்வரி' என்று சொல்லியிருக்கமாட்டார். 'மற்றவர்களைக்குறித்து இவளுடைய ஈஶ்வரத்வம் எம்பெருமான் உகந்தது' என்றும் சொல்லியிருக்கமாட்டார். ஈஶ்வரனைக் குறித்த இவளுடைய ஶேஷத்வம் உப₄யேச்ச₂ாஸித்₃த₄ம் என்றே கூறியிருப்பார். 'ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்' என்னும் வாக்யத்திற்கு இங்கு எடுக்கப்பட்ட 'அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணு பத்நீ' என்னும் வாக்யத்தையொட்டி 'விஷ்ணு பத்னியாயிருக்கையாலே இவளுக்கு உலகைக்குறித்து ஈஶ்வரத்வம்' என்று கூறியிருப்பது ஐந்தாவது பக்ஷத்தை நேரே கண்டிப்பது. இப்படியிருக்க, 'விஷ்ணுபத்நீ

த்வ வேஷேண:' என்பதற்கு 'விஷ்ணு பத்நியென இவள்வேஷம் போடுகிருள்' என்று இவர் பொருளுரைப்பதும், வாக்யாந்தரம் என்று இங்கு தேசிகன் குறிபிட்டது 'ஶ்ரத்₃த₄யா தே₃வோ' என்று இங்கில்லாத வேறொரு வாக்யம் என்று இவர் (நூ வ) எழுதுவதும் வடமொழியறிந்தவர்கள் எவராலும் ஏற்கத்தக்கதல்ல. தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தைக் கண்டித்தவரேயொழிய ஆதரித்த வரல்ல என்பது இந்த ஸ்ரீஸூக்திகளில் மிகத்தெளிவாக விளங்கு கிறது. நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

16 எம்பெருமானுர் ஸ்ரீரங்க₃க₃த்₃யத்தின் தொடக்கத்தில் "ஸ்வா தீ₄ந த்ரிவித₄ சேதநா சேதந ஸ்வரூப ஸ்தி₂தி ப்ரவ்ருத்தி பே₄த₃ம் ......பரப்₃ரஹ்மபூ₄தம் புருஷோத்தமம் ஸ்ரீரங்க₃ஶாயிநம்" [தனக்கு வசப்பட்டிருக்கும் மூவகைப்பட்ட சேதநாசேதநங்களின் ஸ்வரூப ஸ்தி₂தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையுடையவனுய் .... பரப்₃ரஹ்ம மாய் இருப்பவனுய், புருஷோத்தமனுய் இருக்கும ஸ்ரீரங்கநாதனை] என்று அருளிச்செய்கிருர். இதிலிருந்து மூவகைப்பட்ட சேதநா சேதநங்களுடைய ஸ்வரூபத்தின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் பர ப்₃ரஹ்மமாய், புருஷோத்தமனுய் இருக்கும் ரங்க₃நாத₂னுக்கே வசப்பட்டவை என்று விளங்குகிறது. திருமந்திரத்தில் "நார" சப்தத்திற்குப் பொருளாக எல்லா ஆசார்யர்களாலும் கொள்ளப் படும் பிராட்டி இங்கு த்ரிவித₄சேதநர்களில் அடங்கியவள் என் பதை எவராலும மறுக்க இயலாது. ஆகையால் பிராட்டியின் ஸ்வரூபம் ஸ்தி₂தி முதலானவையெல்லாம் பெருமாளுக்கு வசப் பட்டவை என்றும். அப்படி அனைத்தையும் தன்வசத்தில்கொண்ட ஸ்ரீரங்கநாதனே பரப்₃ரஹ்மம் என்றும் எம்பெருமானுர் திருவுள்ளம் பற்றியிருக்கிருர் என்பது தெளிவாக விளங்குகிறது. இவ்விடத் திற்கு வியாக்கியானமிட்ட ஸ்ரீவேதா₃ந்த தேசிகர். "ஏவம் ப₄க₃வ த: ஸர்வாதா₄ரத்வாத₃வ்யாஞ்ஜநாத் தத₃ந்யேஷாம் சேதநாசேதந த்₃ரவ்யாணும் தம் ப்ரத்யாதே₄யத்வவிதே₄யத்வஶேஷத்வ நிய மேந தத₃ப்ருத₂க்ஸித்₃த₄ விஶேஷணதயா தச்ச₂ரீரத்வம் ஶ்ருதி ஸித்₃த₄ம் முக்₂யமேவ ஸ்தா₂பிதம் ப₄வதி|" [இவ்வண்ணமாக எம்பெருமான் தன்னைத்தவிர்ந்த மற்ற அனைவருக்கும் ஆதாரமாக இருப்பவன் என்று தெளிவுபடுத்துகையால், அவனைத் தவிர்ந்த மற்ற சேதநாசேதநத்₃ரவ்யங்கள் அனைத்தும் அவனால் தாங்கப் படுவதாய் அவனுக்கு வசப்பட்டதாய் அவனுக்கு சேஷமாகவே எப்போதும் இருக்கின்றனவாகையால், அவனை விட்டுப்பிரியாத விசேஷணமான ஶரீரமாய் இருக்கின்றன என்று வேதங்களில் முழங்கப்படுவது முக்கியமானதென்று நிலைநிறுத்தப்பட்டதாகிறது]

acharya.org

என்று அருளிச்செய்திருக்கிறார், இதுவே விசிஷ்டாத்வைதத்திற்கு மிகப்பொருந்திய நிர்ணயமாகும். இவர் (நாவ) இந்த தேசிக ஸ்ரீஸூக்திக்கும எம்பெருமானார் பலவிடங்களில் அருளியிருக்கும் ஶரீரலக்ஷணத்திற்கும் முரணாக, "அப்ருதக்ஸித்த விசேஷண த்ரவ்யத்வம்' என்பதை மட்டுமே சரீரலக்ஷணமாகக் கொண்டு ஶரீரத்வமும் ப்ரஹ்மத்வமும் முரண்பட்டதல்ல என்று ஓரிடத்தில் எழுதுவதும், மற்றொரிடத்தில் 'பிராட்டி எம்பெருமானுக்கு சரீர மல்ல' அவனால் தாங்கப்படுபவளோ நியமிக்கப்படுபவளோ அல்ல' என்று கூறுவதும் எம்பெருமானார் தேசிகன் முதலான ஸகல பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் மிகவும் முரண்பட்ட விசிஷ்டத்வைதமேயாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

17 பட்டர் ஸ்ரீகுணரத்நகோஶம் 31வது ஶ்லோகத்தில், ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோஸ் ஸ்வமஸி தத ஏவைஷ பகவாந் த்வதாயத்தர்த்திர்த்வே஽பி அபவதபராதீந விபவ:| ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் ந விகுணம் ந குண்டஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹித குணம் || (ஸ்ரீதேவியே! நீ விஷ்ணுவுக்கு இயல்பாகவே உடைமைப் பொருளாய் இருக்கிறாய் அதனாலேயே இந்த பகவான் உன்னால் உண்டான பெருமைகளை உடையவனாய் இருந்தபோதிலும், வேறொருவரால் உண்டாகாத ஸ்வதந்த்ரமான பெருமைகளை உடையவனாகவே ஆகிறான். ரத்தினமானது தன் ஒளியினாலேயே மிகுந்த விலையுள்ளதானபோதிலும், அது இயற்கையான சிறப்புடையதல்லாததாகவோ ஸ்வாதந்திரியத்தில் குறையுடையதாகவோ, மற்றொன்றால் பெருமைபெற்றதாகவோ ஆவதில்லையன்றோ) என்று ரத்னத்திற்கு ஒளிபோலே பிராட்டி பெருமானுக்கு இயற்கையான உடைமைப் பொருளாயிருக்கிறாள் என்று அருளிச்செய்கிறார். இதற்கு அநுகுணமாக 53 வது ஶ்லோகத்தில் "யுவயோ: ஸ்வாதந்த்ர்யம் அத்யங்குஶம்" என்று பெருமானுக்கும் பிராட்டிக்கும் சேர்த்து பட்டர் ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்று அருளியிருப்பதை நிர்வஹிக்கவேண்டிய முறையை 'விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்' ஆறாவது கேள்வியில் நாம் விரிவாகக் காட்டியிருக்கிறோம். இதற்கு விடையெழுதப்புகுந்த இவர் தனது புத்தகத்தின் 41 வது பக்கத்தில், "ஸ்வத: விஷ்ணோ: ஸ்வம்" என்றதற்கு, பிராட்டியின் ஸங்கல்பத்தால் அவளுக்கு விஷ்ணு ஶேஷத்

வம் வந்தது என்பதே பொருள் என்று விதண்டாவாதம் செய்கிறார். 'ரத்தினத்திற்கு ஒளிபோலே பிராட்டி எம்பெருமானுக்கு இயல்வான உடைமைப்பொருள்' என்று பட்டர் ஸ்லோகத்தில் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கும் போது இவர் (நாவ) கூறும் பொருள் பொருந்துமா எனபதை நடுநிலையாளர்களே தீர்ப்புக் கூறவேண்டும். நஞ்சீயர் பேரில் ஸ்ரீஸூக்த பாஷ்யம் என ஒன்றைக் கற்பித்து அச்சிட்ட புதுக்கோட்டை ஸ்ரீநிவாஸராகவனும் அந்த நூலில் ஸ்ரீகுணரத்நகோசத்தின் இந்த ஸ்லோகத்தை விவரிக்கும்போது "Sri! Even though the glory of the Lord is dependent on you, still HE is said to be the possessor of a glory NOT dependent on another ; because you belong to VISHNU by your very nature (ie unconditionally)" என்று பிராட்டியின் சேஷத்வம் இயல்வானதே என்று பொருள் எழுதியிருக்கிறார். மனஸ்ஸாக்ஷியுள்ள எவரும் த்ருஷ்டாந்தத்தைப் பார்க்கும்போது "ஸ்வத:" என்பதற்குத் "தன் ஸங்கல்பத்தாலே" என்று பொருள் எழுத இயலாது. நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

18 பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் 34வது ஸ்லோகத்தில் "யுவத்வாதௌ துல்யேऽபி அபரவசதா சத்ருசமந ஸ்திரத்வாதீந் க்ருத்வா பகவதி குணாந் பும்ஸ்த்வ ஸுலபாந் | த்வயி ஸ்த்ரீத்வைகாந்தாந் ம்ருதிம பதிபாரார்த்ய கருணா க்ஷமாதீந் வா போக்தும் பவதி யுவயோராத்மதி பிதா", என்று அருளிச் செய்திருக்கிறார். இவர் அந்த ஸ்லோகத்தை முழுவதும் எடுக்காமல் அதற்குப் பதவுரையோ பொழிப்புரையோ கொடுக்காமல் தம் புத்தகத்தில் ஸ்ரீபட்டர் 'யுவத்வாதௌ' என்ற ஸ்லோகத்தில் 'க்ருத்வா' என்பதால் பிராட்டி பத்தினியாகவேஷம் போட்டுக்கொண்டு விளையாடுகிறாள்' என்று கூறுவதாக எழுதுகிறார். இந்தஸ்லோகத்தின் பதவுரைமேல்கோட்டை ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சிக் கழகத்தில் அச்சிட்டுள்ள வ்யாக்யானத்தின் படி பின்வருமாறு;— (பெரியபிராட்டியாரே!) யுவத்வாதௌ துல்யேऽபி—யௌவநம் முதலான திருக்குணங்கள் உங்கள் இருவருக்கும் பொதுவாயிருந்த போதிலும், பும்ஸ்த்வ ஸுலபாந்—ஆண்களுக்கே உரியவையான, அபரவசதா சத்ருசமந ஸ்திரத்வாதீந் குணாந் — ஸ்வாதந்த்ரியம் எதிரிகளை அழிப்பதில் நிலைபெற்றிருக்கை முதலான குணங்களை, பகவதி க்ருத்வா— எம்பெருமானிடம் வைத்தும், ஸ்த்ரீத்வைகாந்தாந்—பெண்களுக்கேயுரியவையான, ம்ருதிமபதிபாரார்த்ய கருணா க்ஷமாதீந் வா—மென்மை, பர்த்தாவுக்குப் பாரதந்த்

acharya.org

ரையாயிருக்கை (வசப்பட்டிருக்கை), கருணை, பொறுமை முதலான குணங்களை. த்வயி ஸ்ருத்வா—உன்னிடம் வைத்தும், பே₄ாக்தும்—(அனுபவிப்பவர்கள்) அனுபவிப்பதற்கு, யுவயோ: ஆத்மநி—உங்களுடைய ஸ்வரூபத்தில், பி₄த₃ா ப₄வதி—பே₄த₃ம் அமைந்து இருக்கிறது. இந்த ஶ்லோகத்திலிருந்து பிராட்டி பத்தினியாக வேஷம் போட்டுக்கொண்டு விளையாடுகிறாள் என்று எப்படித் தேறும்? நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

19. ஸ்ரீ பராசரப₄ட்டர் (இப்போது கிடைக்காத) 'லக்ஷ்மீ கல்யாணம்' என்னும் நாடகத்தில்

அநந்யாதீ₄ந கல்யாணம் அந்ய மங்க₃ள காரணம் |
ஜக₃ந்நிதா₃நம் அத்₃வந்த்₃வம் த்₃வந்த்₃வம்வந்தாமஹே வயம் ||

[வேறு எவர்க்கும் அதீ₄நமல்லாமல் தமக்கே இயல்வான கல்யாண குணங்களையுடையவர்களாகவும், பிறருக்கு நற்குணங்கள் உண்டாவதற்குக் காரணங்களாகவும், ஜக₃த் காரணமானவர்களாகவும், தங்களுக்கு ஒப்பில்லாதவர்களாகவும் உள்ள பெருமாளும் பிராட்டியுமாகிற தம்பதிகளை வணங்குகிறோம்.] என்று ப₄ட்டர் அருளிச்செய்திருக்கிறார் என்று தேசிக க்ரந்தங்களிலிருந்து விளங்குகிறது. இந்த ஶ்லோகத்திலிருந்து பிராட்டியும் பெருமாளும் துல்யமான ஈஶ்வரர்கள் என்று விளங்குவதாகக் கூறுகிறார் இவர். 'பிராட்டியும் பெருமாளும் அநந்யாதீ₄நர்கள்' என்று சொன்னால் அவர்களுடைய பெருமை வேறொருவரால் ஏற்பட்டதன்று என்று தேறுமேயொழிய அவர்களில் பிராட்டி பெருமாளுக்கு அதீ₄னையல்லள் என்று எப்படித் தேறும்? ராமலக்ஷ்மணர்கள் அநந்யாதீ₄நர்கள் என்றால் லக்ஷ்மணன் ராமனுக்கு அதீ₄நன் அல்லன் என்றோ இருவரும் ஒத்தவர்கள் என்றோ தேறிவிடுமா? எம்பெருமானார், கூரத்தாழ்வான், ப₄ட்டர், தே₃சிகன் ஆகிய அனைவரும் தம் க்₃ரந்தங்களில் பெருமாளுக்கே உலகிற்கு நிமித்த உபாத₃ாந காரணமாயிருக்கையாகிற முக்₂யமான ஜக₃த் காரணத்வம் உண்டு என்றும், அவன் செய்யும் ஜக₃த் ஸ்ருஷ்டி முதலான லீலைகளில் அவனைத் தூண்டுபவளாகவும் அவனது ஆனந்தத்தில் பங்குகொள்பவளாகவுமே பிராட்டி அந்வயிக்கிறாள் என்றும், அதனால் அப்ரதா₄நமான ஜக₃த்காரணத்வமே இவளுக்கு உண்டு என்றும் காட்டியிருக்கிறார்கள் என்பதை முன்னமே காட்டியிருக்கிறோம். பிராட்டி ஜீவகோடியே என்று நிர்ணயித்த நாயனாராச்சான்பிள்ளையும் தம் சது:ஶ்லோகீ வ்யாக்₂யாநத்தில் (நமுடைய பதிப்பு 59ம் பக்கத்தில்) பிராட்டிக்கு

இத்தகைய (அப்ரத₄ாந) ஜக₃த் காரணத்வம் உண்டு என்பதை ஐதிஹ்யமும் ப்ரமாணமும் காட்டி நிரூபித்திருக்கிறுர். ஆகையால் திவ்யத₃ம்பதியை ஜக₃த்காரணம் என்று ப₄ட்டர் சொன்னது துல்யமான ஜக₃த்காரணம் என்று சொன்னதாகாது. இவ்விஷயத்திலும் நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

20. இவர் தமது புத்தகத்தில் ''ஆச்ரயண தசையோடு போக தசையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்'' என்று ஈட்டிலிருப்பது தங்களுக்கு ஸாத₄கம் என்று எழுதுகிருர், அதே ஈட்டில் ''ஆஶ்ரயண தசையில் புருஷகாரமாகவும் பே₄ாக₃தசையில் ப்ராப்யமாகவுமே பிராட்டி உத்தேச்யமாகிருள்'' என்று பலவிடங்களில் எடுத்துக்காட்டியுள்ளதை இவர் மறைத்திருப்பது மனஸ்ஸாக்ஷியை மீறிய செயலாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

21 த்வாமஸீர் மாத: ஸ்ரீ: ! கமிதுரித₃மித்த₂ந்த்வவிப₄வ:
தத₃ந்தர் பா₄ராத் த்வாம் ந
ப்ருத₂ங்₃பி₄த₄த்தே ஶ்ருதிரபி [ஸ்ரீகுண 28]

என்னும் ஶ்லோகத்தில் 'எம்பெருமானை ஆயிரக்கணக்கான வேத₃ வாக்யங்கள் சொல்லும்போது பிராட்டியைப் பற்றி ஒரு சில வேத₃ வாக்யங்களே காணப்படுகின்றனவே' என்னும் சந்தேகத்திற்குப் பரிஹாரமாக, 'நிரூப்யமான எம்பெருமானைச் சொல்லுமிடமெல்லாம் நிருபகையான இவளையும் சொன்னதேயாகும்' என்று ப₄ட்டர் அருளிச்செய்திருக்கிறுர். இதற்கு மூலம் 'எம்பெருமானைச் சொல்லுமிடமெல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றும்' என்னும் எம்பெருமானுருடைய வார்த்தை (ஸ்ரீதேசிகனுல் எடுக்கப்பட்டது). ப₄ட்டர் தம் ஶ்லோகத்தில் பிராட்டியை 'இத₃மித்த₂ந்த்வ-விப₄வ:' என்று நிருபகையாகவே சொல்லியிருப்பதைக் கண்டுகொள்ளாமல் இவர் விதண்டாவாதம்செய்வது மனஸ்ஸாக்ஷியை மீறிய செயலாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

22 'புருஷஸூக்தத்தில் பரமபுருஷனுக்கு ஜக₃த்காரணத்வம், மோக்ஷப்ரத₃த்வம் முதலான அனைத்தையும் சொல்லி'

"ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ" என்று பிராட்டிமாரைப் பத்தினிகளாகக் காட்டுவதன் மூலம் அவனுடைய செயல்களில் பத்தினியாயிருக்கும் இவர்களுக்கு அப்ரதாநமான அந்வயமே உண்டு என உணர்த்தப்படுகிறது. கௌஷீதகீ உபநிஷத்தில் பர்யங்கவித்யையில் "ஸ்ரீருபபர்ஹணம் தஸ்மிந் ப்ரஹ்ம ஆஸ்தே" [ஸ்ரீதேவி ப்ரஹ்மத்தின் திருவடிக்கு அணையாக இருக்கிறாள்; அதில் ப்ரஹ்மமான பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான்,] என்று சேஷ சாயியே ப்ரஹ்மம் என்றும், அவனது திருவடிக்கு அணையாயிருக்கும் ஸ்ரீதேவி சேஷத்வமே வடிவெடுத்தவள் என்றும் காட்டிற்று. தமிழ் வேதங்களும்,

"வடிவிணையில்லா மலர்மகள் மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை" [திருவாய் 9—2—10]
"நின் ஈரடி ஒன்றிய மனத்தால் ஒருமதிமுகத்து
மங்கையர் இருவரும் மலரன அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை" [திருவெழு]
"சந்தணி மென்முலை மலராள் தரணிமங்கை
தாமிருவர் அடிவருடும் தன்மையானை" [பெரியதிரு 2-10-2]
"செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியினிணை வருட முனிவரேத்த" [பெரிய திரு 7-8-1]

என்று பெரியபிராட்டியார்க்கும் பூமிப்பிராட்டியார்க்கும் எம்பெருமானுடைய திருவடியைப்பிடிக்கையாகிற சேஷத்வம் எப்போதும் இயல்வாக உள்ளது என்று காட்டின. 'சைவத்திற் போலே சாக்தம் உருவாகிவிடக்கூடாது, பேசநின்ற சிவனைப்போலே பிராட்டியையும் பேசநின்ற பிராட்டியாக்கிவிடக் கூடாது' என்னும் காரணத்தாலேயே ஆழ்வார்கள் பிராட்டிக்கென்று தனியாக ஒரு பிரபந்தமும் அருளிச்செய்யவில்லை. இவளுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை விளக்குவதற்காக, தனியாக ஸ்தோத்திரங்கள் அருளிச்செய்த ஆசார்யர்களும் எம்பெருமானுக்குப் பெரியபிராட்டியார் அடங்கியவள் என்று விளங்கும்படியாக—எம்பெருமானைப்பற்றி ஸ்தோத்ர ரத்னத்தில் 65 ஶ்லோகங்கள் அருளிய ஆளவந்தார் பிராட்டியைப் பற்றி நாலே ஶ்லோகங்கள் கொண்ட சது:ஶ்லோகியையும், எம்பெருமானைப்பற்றி நூற்றுக்கணக்கான ஶ்லோகங்கள்கொண்ட நாலு ஸ்தவங்களை அருளிச்செய்த கூரத்தாழ்வான் பிராட்டியைப்பற்றி பதினொரு ஶ்லோகங்களேகொண்ட ஸ்ரீஸ்தவத்தையும், ஸ்ரீரங்க நாதனைப்பற்றி 200 ஶ்லோகங்களுக்குமேல்கொண்ட ஸ்ரீரங்கராஜஸ்தவத்தை அருளிய பராசரபட்டர் பிராட்டியைப்பற்றி 61 ஶ்லோகங்

களே கொண்ட ஸ்ரீகு₃ணரத்னகோசத்தையும், எம்பெருமானைப் பற்றி நூற்றுக்கணக்கான ஶ்லோகங்கள் கொண்ட பல ஸ்தோத்திரங்களை அருளிய ஸ்ரீவேதாந்ததேசிகன் பிராட்டியைப்பற்றி இருபத்தைந்தே ஶ்லோகங்கள் கொண்ட ஸ்ரீஸ்துதியையும் அருளிச் செய்து, அவற்றில் ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவைற்றைச் செய்பவ தாயிருக்கும் ப்₃ரஹ்மலக்ஷணத்தை எம்பெருமானுக்கே அருளிச் செய்திருப்பதும், அவனை ப்₃ரஹ்மம் என்றே பலவிடங்களில் குறிப்பிட்டிருப்பதும், பிராட்டிக்கு ஜகத் ஸ்ருஷ்டியில் ப்ரேரகத்வம் (தூண்டுபவளாயிருக்கை), ரஸத்தை அநுபவிப்பவளாயிருக்கை என்னும் அப்ரத₄ானமான அந்வயத்தையே கூறியிருப்பதும், அவர்கள் எம்பெருமானையே ப்₃ரஹ்மமாகவும் ஸர்வேஶ்வரனாகவும் திருவுள்ளம் பற்றினர்கள் என்றும், இவளை அவனையொழிந்த மற்றவர்களுக்கு ஈஶ்வரியாயிருந்தபோதிலும் அவனிடத்தில் சேஷத்வமே வடிவெடுத்தவள் என்றே திருவுள்ளம் பற்றினர்கள் என்றும் காட்டுகிறது. இப்படியிருக்கும்போது இவையனைத்துக்கும் முரணாக இவர் (நா வ) பிராட்டிக்கு ப்₃ரஹ்மத்வத்தையும், பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் துல்யமான ஈஶ்வரத்வத்தையும் கூறுவதும், பிராட்டியின் சேஷத்வம் செயற்கையானது என்று கூறுவதும், மனஸ்ஸாக்ஷியை அடியோடு கைவிட்டுச் செய்யும் செயலாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

23 தேசிகனை உள்ளிட்ட ஆசார்யர்கள் எவரும் பிராட்டியை ப்₃ரஹ்மம் என்றோ 'எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரி' என்றோ எங்கும் குறிப்பிட்டதில்லை. பிராட்டி ஈஶ்வரகோடியைச் சேர்ந்தவள் என்று திருவுள்ளம்பற்றிய தேசிகனும், 'அவள் எம்பெருமானையொழிந்த மற்றவர்களுக்கே ஈஶ்வரியாகையாலே அவளுக்கு ஏகாந்தசேஷித்வமே உள்ளது; ஸர்வசேஷித்வம் உள்ளது எம்பெருமான் ஒருவனுக்கே' என்று பலவிடங்களில் காட்டியிருக்கிறார். இது நாலாவது பக்ஷத்திற்கே பொருந்தும். ஐந்தாவது பக்ஷத்தில் கூறியதுபோல் பிராட்டியின் சேஷத்வம் உப₄ய இச்சா₂ஸித்₃த₄ம் என்று தேசிகன் எவ்விடத்திலும் கூறவில்லை. மாறாக பிராட்டிக்கு ப₄க₃வச்ச₂ரீரத்வத்தையும், அதனால் உண்டான ஆதே₄யத்வ விதே₄யத்வ நியாம்யத்வங்களையுமே அருளியிருக்கிறார். இவையெல்லாம் நாலாவது பக்ஷத்திற்கே பொருந்தும். நாலாவது பக்ஷத்தையே தேசிகன் மிக்க ஆதரத்துடன் விரிவாக (பத்துவரிகளில்) விளக்குகிறார். இப்படியிருக்கும்போது இரண்டே வரிகளில் விளக்கப்படும் ஐந்தாவது பக்ஷத்தை, அது கடைசிப்பக்ஷமாகையாலே அதையே அவர் ஆதரித்தார் என்று பிடிவாதம் பிடிப்பது நியாய

acharya.org

மாகுமா? இந்தப் பக்ஷத்தையும் 'கேசித்₃ஆஹு:' (சிலர் கூறுகிறார்கள்) என்றுதானே அவர் சொல்லியிருக்கிறார். 'ஸபத்நீகஸ்ய ஸாம்ராஜ்யம் ஸர்வதா₂ ஸுப்ரதிஷ்டி₂தம்' என்று 'இந்தப்பக்ஷத்தை ஒப்புக்கொண்டவர்களும் பத்தினியோடு கூடிய எம்பெருமானுக்கே ஈச்வரத்வத்தைக் கொண்டார்கள்' என்று கூறுகிறாரேயொழிய 'பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் துல்யமான ஈச்வரத்வமோ, ப்₃ரஹ்மத்வமோ உண்டு என்று கொண்டார்கள்' என்று சொல்லவில்லை. இப்படியிருக்கும்போது இவர் (நா வ) பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமல்ல; எம்பெருமான் பிராட்டிக்கு சரீரமல்ல' என்று ஐந்தாவது பக்ஷத்தை வர்ணித்து விசிஷ்டாத்₃வைதத்தையே அழிப்பது எப்படி நியாயமாகும்? "தன்னையொழிந்த மற்ற அனைத்தையும் சரீரமாகக் கொண்டிருப்பவன் நாராயணனான ப்₃ரஹ்மம் ஒருவனே" என்பதுதானே தேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்யர்களின் க்₃ரந்த₂ங்களிலும் காணப்படும் விசிஷ்டாத்₃வைதம். இவர் (நா வ) கூறியிருப்பதன்படி பார்த்தால் பிராட்டி பெருமாள் இருவருக்குமே ப்₃ரஹ்மத்வமோ ஈச்வரத்வமோ இல்லாமல் போய் விடுமே. இது எப்படிப் பொருந்தும்? நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

24. ஐந்தாவது பக்ஷம் இப்போது காணப்படும் பூர்வாசார்ய க்₃ரந்த₂ங்கள் எதிலும் இல்லாமலிருப்பதைப் பார்த்து தே₃சிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ர்களில் சிலர் நஞ்ஜீயர் பேரில் ஸ்ரீ ஸூக்த பா₄ஷ்யம் என்னும் ஒரு க்₃ரந்த₂த்தையே கல்பித்து அச்சிட்டனர். இந்த ஸ்ரீஸூக்த பா₄ஷ்யம் உண்மையில் கோமடம் ரங்கநாதர் என்பவர் எழுதியது என்று சென்னை ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட் லைப்ரரியிலுள்ள ஓலைச்சுவடிகளிலிருந்து விளங்குகிறது. அதில் பல மாறுதல்களைச் செய்து இப்புத்தகத்தை அச்சிட்டவர்களால் ஓர் ஓலைச்சுவடி தயாரிக்கப்பட்டது. அதில் க்₃ரந்த₂ கர்த்தாவின் பெயர் 'கோமடம் ரங்கநாதமுனி' என்று மாற்றப்பட்டது. அதில் ஸ்ரீஸூக்தம் 9வது மந்திரத்திலுள்ள 'ஈச்வரீம் ஸர்வ பூ₄தாநாம்' என்னும் பதங்களுக்கு உரையிடுகையில், அச்சில் 17 பக்கங்கள் வரும் (மூலச்சுவடியில்லாத) ஒரு விசாரம் புகுத்தப்பட்டு 'தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை விவரித்திருக்கும் பங்க்திகளை இதிலிருந்தே எடுத்திருக்கிறார்' என்று தோன்றும்படியாகப் பல வாக்கியங்கள் சேர்க்கப்பட்டன. இந்தச் சுவடி திருவஹீந்த்ரபுரத்தில் க₄டிலநதியிலிருந்து தங்களுக்குக் கிடைத்ததாக ஒரு பெரும் பொய்யை இந்த நூலைப் பதிப்பித்தவர் தம் முகவுரையில் எழுதியிருக்கிறார். எந்தையார் காலத்திலேயே இப்பொய்களெல்லாம்

acharya.org

அம்பலப்படுத்தப்பட்டு, தேசிகனால் ஸ்ரீஸூக்த பாஷ்யம் எழுதியவராகக் குறிப்பிடப்பட்ட நாராயணமுனி என்னும் பெரிய ஜீயர் கூரத்தாழ்வானுக்கும் பட்டருக்கும் சிஷ்யராய், ஸ்ரீரங்கம் -ஸ்ரீரங்க நாராயண ஜீயர் மடத்தை ஸ்தாபித்தவராய், ஸுதர்சன சதக கர்த்தாவான நலந்திகழ் நாராயண ஜீயரே என்றும், அச்சிடப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்த பாஷ்யம், கோமடம் ரங்கநாதருடைய தாகையாலே அவருடைய பாஷ்யம் அல்லவென்றும், நஞ்ஜீயருக்குக் கோமடம் ரங்கநாதர் என்றோ ரங்கநாதமுனி என்றோ, நாராயணமுனி என்றோ, பெரிய ஜீயர் என்றோ எந்தப் பூர்வாசார்ய க்ரந்தத்திலும் திருநாமம் இல்லையென்றும், இந்த நாராயண முனியை வங்கிபுரத்து நம்பிக்கும் சிஷ்யராக ஸ்ரீதேசிகன் குறிப்பிட்டிருக்கையால் இவர் பட்டரையல்லது அறியாத நஞ்ஜீயராயிருக்க இடமேயில்லையென்றும் எந்தையாரால் அபயப்ரதராஜ விஜயத்திலும் நம்மால் ஸ்ரீஸூக்த வ்யாக்கியானத்திலும் மற்றும் பல கட்டுரைகளிலும் ஐயந்திரிபறப் பலமுறை நிலைநாட்டப்பட்டுள்ளது. ஸ்ரீஸூக்தபாஷ்யத்தை முதலில் நஞ்ஜீயருடையது என்று எழுதிய D. T. தாதாசார்ய ஸ்வாமியே சில வருடங்கள் கழிந்தபின், 'அதை எழுதியவர் நாராயணமுனியேயொழிய நஞ்ஜீயரல்ல' என்று இசைந்தது இந்த ஆராய்ச்சிக்கு விஜயத்வஜமாய் அமைந்தது என்பதை ஸுதர்சன விஜயம் நாலாம் அத்தியாயம் பக்கம் 43ல் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படியிருக்கும்போது இவர் (நா.வ.) தம் புத்தகத்தில் மோசடி நூலான இந்த ஸ்ரீஸூக்த பாஷ்யத்தை நஞ்ஜீயருடையதாகக் காட்டுவது மநஸ்ஸாக்ஷியை மீறிய செயலாகும். நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

25 இவரது நூலுக்கு வடமொழியில் ஆமுகம் (முகவுரை) எழுதியிருக்கும் N. S. ராமாநுஜதாதாசார்ய ஸ்வாமி (121, பெருமாள் கோவில் தெரு, பாண்டிச்சேரி 605 001) இவர் (நா.வ.) தமிழில் எழுதியிருப்பவற்றை வடமொழியில் சுருக்கிக் கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய முகவுரையின் தொடக்கத்தில்

ஸ்வஶேஷாஶேஷார்த்தேஷு நிரவதிகநிர்பாதமஹிமா
பலாநாம் தாதா ய: பலமபி ஸஶரீரகமித:।
ஶ்ரியம் தத்ஸத்ரீசீம் தது3பகமநத்ராஸஸமநீம்
அபிஷ்டௌதி ஸ்துத்யாமவிததமதிர் யாமுநமுநி:॥

என்று சது:ஶ்லோகீ பாஷ்யத்தின் தொடக்கத்தில் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் நாலு அத்தியாயங்களில் எம்பெருமானுக்குச் சொல்லப்

acharya.org

பட்ட ஸகல ஜக₃ச்சே₂ஷித்வம் (எல்லா உலகுக்கும் ஶேஷியா யிருக்கை), நிரபா₃த₄ நிரவதி₄கமஹிமத்வம் (தடையற்ற எல்லை யற்ற மஹிமையை உடையவனாயிருக்கை), ப₂லப்ரத₃த்வம் (ப₂லனையளிப்பவனாயிருக்கை), ப₂லரூபத்வம் (ப₂லமாயிருக்கை) என்ற இந்த நாலு பெருமைகளும் லக்ஷ்மியிடமும் உள்ளதாகவும் அதற்கு மேலே புருஷகாரத்வமும் உள்ளதாகவும் வேத₃ாந்த தேசிகர் கூறுவதாக எழுதியுள்ளார். உண்மையில் இந்த ஶ்லோகத் தில் இந்த நாலு பெருமைகளும் எம்பெருமானுக்கு உள்ளதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. பிராட்டியை அவனை அடைவதில் பயத் தைப்போக்கும் (புருஷகாரமான) துணைவியாகவே சொல்லப்பட் டிருக்கிறது. ''ப₂லப்ரத₃த்வம் என்னும் முக்₂ய உபாயத்வம் பிராட்டி யிடம் இருந்தால், எம்பெருமானிடம் பலனளிக்கவேண்டி மன்றாடுவதாகிற புருஷகாரத்வம் அவளிடம் எப்படியிருக்கமுடியும் என்பதை இவர் (NSR) ஆராயவில்லை. ''அத்ர ஸமந்வய அவிரோத₄ ஸாத₄ந ப₂ல விஷய ஶாரீரக சதுரத்₄யாயீ ஸமதி₄க₃தஸ்ய ப₄க₃ வத: ஸர்வப்ரகாராபி₄மதாநுரூப ஸஹ(த₄ர்மசாரிணீ) த₄ர்மிணீ விஶிஷ்டதயாऽபி ஸர்வாதி₄கத்வம் 'க: ஶ்ரீ ஶ்ரிய:' இத்யுக்த கை முதிகந்யாயகாகு கூர்ப₄யா சது:ஶ்லோக்யா ப்ரகாஶயந்'' [இங்கு (1) ஸமந்வயம் (2) அவிரோத₄ம் (3) ஸாத₄நம் (4) ப₂லன் ஆகிய வைபற்றிய ப்₃ரஹ்மஸூத்ரத்தின் நாலு அத்தியாயங்களால் அறி யப்படும் எம்பெருமானுக்கு, எல்லாவகையிலும் இஷ்டமானவளும் பொருந்தியவளுமான துணைவியோடு கூடியிருக்கையாலும் அனை வரிலும் மேம்பட்டிருக்கையாகிற பெருமையை—ஸ்தோத்ரரத்னத் தில் 'திருவுக்கும் திருவாகியவன் யார்?' என்னும்கேள்வியின் கருத்தா யிருப்பதை—சது:ஶ்லோகியினாலே வெளிப்படுத்துகிறவராய்] என்று இந்த ஶ்லோகத்தையொட்டியுள்ள பா₄ஷ்யவாக்கியத்திலும், எம் பெருமானே ப்₃ரஹ்மஸூத்ரத்தின் நாலு அத்தியாயங்களிலும் அறியப்படுகிறானென்றும் அவனுடைய ஸர்வாதி₄கத்வத்தை வெளிப் படுத்தவே அவனுடைய பத்தியின் பெருமைகளைச் சது:ஶ்லோகியில் பேசுகிறார் என்றும் தேசிகன் அருளியிருக்கும்போது ப்₃ரஹ்ம ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஸர்வசேஷித்வம் முதலான அனைத் தையும் பிராட்டிக்கும் உள்ளதாக தேசிகன் கூறுவதாக இவர் எழுதுவது எப்படிப்பொருந்தும்? ப்₃ரஹ்மஸூத்ரத்தில் சொல்லப் பட்ட ஸர்வசேஷித்வம் பிராட்டிக்கு இல்லையே. எம்பெருமானை யொழிந்த உப₄யவிபூ₄தியைக்குறித்தன்றோ இவளுக்கு சேஷித்வம் உள்ளது. இவர் (N S R) நாம் நமது நூலை அபிநிவேசத்தால் (பிடிவாதத்தால்) எழுதியிருக்கக் கூடும் என்கிறார். தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளில் இல்லாததை இருப்பதாகக் கூறும் இவர் (N S R) அபி₄நிவேஶத்தால் எழுதுகிறாரா அல்லது நாம் அபி₄நிவேஶத்தால் எழுதுகிறோமா என்று நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

acharya.org

26. நம்முடைய விசிஷ்டாத்₃வைத ஸித்₃தா₄ந்தத்திற்கு ப்ரதா₄ந ப்ரதிதந்த்ரங்கள் (முக்கியமான கொள்கைகள்) (1) எம்பெருமானுக்குள்ள பரத்வமும், (2) உலகுக்கும் அவனுக்கும் உள்ள சரீரசரீரி பா₄வமுமேயாகும். இவர்களுடைய புத்தகத்தில் பிராட்டி பெருமானுக்குத் துல்யமானவள் என்று கூறுவதன் மூலம் பேசநின்ற சிவனைப்போலே பிராட்டியையும் பேசநின்ற பிராட்டியாக்கி இவர்கள் பர₃த்வத் பரத்வத்திற்கும் உலைவைக்கிறார்கள். 'பிராட்டி பெருமானுக்கு சரீரமல்ல' என்று கூறுவதன் மூலம் ஶரீரஶரீரி பா₄வத்தையும் அழிக்கிறார்கள். இப்படி நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ப்ரதா₄ந ப்ரதிதந்த்ரங்கள் இரண்டையும் இவர்கள் அழிக்கையாலே உப₄ய ஸம்ப்ரதா₃யத்தைச்சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவராலும் இவர்களுடைய வாதங்கள் விலக்கத்தக்கவையே. நடுநிலையாளர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

முடிவுரை

இது தென்கலை வடகலை ஸம்ப்ரதாய சர்ச்சையல்ல. ஒரு சில நூற்றாண்டுக்குள் இருந்த ஸாக்ஷாத் ஸ்வாமி என்பவரும் இவர் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள கரூர்ஸ்வாமி என்பவரும் பிராட்டிக்குப் பெருமாளோடு துல்யமான ஈஶ்வரத்வம் உண்டு என்றும், பிராட்டிக்கு ப்₃ரஹ்மத்வம் உண்டு என்றும், ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்கும் பாஞ்சராத்ர ஆக₃மத்திற்கும் ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கும் ஆளவந்தார் தொடக்கமான தேசிகனுள்ளிட்ட ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் விரோத₄மாகவும், விசிஷ்டாத்₃வைதத்தையே தகர்க்கும்படியாகவும் செய்துள்ள வாதங்களை—இன்றுள்ள தேசிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ வித்வான்களில் பலர் பிடிவாதமாகப் பின்பற்றிக்கொண்டிருப்பது நியாயமல்ல என்று நிலைநாட்டுவதே இந்தச் சர்ச்சையின் முக்கிய நோக்கம். உப₄யஸம்ப்ரதா₃யத்திலும் உள்ள நடுநிலைநிற்கும் நல்லோர்கள் மேலே காட்டியுள்ள 26 விஷயங்களைப்பற்றியும் நடுநிலை நின்று நிர்ணயித்து, தம்மால் இயன்றவரையில் பிரசாரம் செய்வதாலேயே விசிஷ்டாத்₃வைதத்திற்கு இவர்கள் இழைக்கும் பெரிய தீங்கு தவிர்க்கப்படும் என்று உணர்ந்தே நாம மூன்று வருடங்களுக்கும் மேலாக இவர்களுடைய பல ஏச்சுப்பேச்சுகளையும் பொறுத்துக்கொண்டு இந்த விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இக்காலத்திலும் வருங்காலத்திலும் இதைக்காணும் நடுநிலையாளர்கள் உண்மையை நிலைநாட்டி விசிஷ்டாத்₃வைதம் விசிஷ்டாத்₃வைதமாக உருமாறாமலிருக்க வழிவகுப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். ' ஸத்யமேவ ஜயதே '' [உண்மையே வெல்லும்] என்னும் வேத வாக்கு இவ்விஷயத்திலும் வெற்றிபெறும்.

acharya.org

நடுநிலையாளர்களின் தீர்ப்புகள் — முன்னுரை

சென்ற இதழில் [595] "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?" என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையில் நடுநிலையாளர்களைத் தீர்ப்பளிக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தோம். அதற்குப்பிறகு பாண்டிச்சேரியிலும் கோவையிலும் நடைபெற்ற பெரிய வைணவ மாநாடுகளில் நாம் கலந்துகொண்டோம். அங்கும் ஸ்ரீரங்கம் முதலான மற்ற இடங்களிலும் நாம் சந்தித்த உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த ரசிகர்கள் அனைவரும் நமக்கு ஆதரவாகவே கருத்தைத்தெரிவித்தார்கள். ஸ்ரீமத் பரமஹம்ஸ ஆழ்வார் திருநகரி எம்பெருமானார் தேவஸ்தான மடாதிபதியான திருவேங்கடராமானுஜ ஜீயர் ஸ்வாமி, "விசிஷ்டாத்₃வைதம் விசிஷ்டத்₃வைதமாக மாறக் கூடாது என்ற கட்டுரை நல்லமுறையில் வித்வந் மநோரஞ்ஜகமாக அமைந்துள்ளது" என்று கடிதம் எழுதியுள்ளார். மற்றும் பலரும் இதுபோன்ற கடிதங்களை எழுதிவருகிறார்கள். ஸ்ரீ உ.வே என். எஸ். ராமானுஜதாதாசார்ய ஸ்வாமி 28-6-1997 அன்று நமக்கு எழுதிய கடிதத்தில், "இம்மாதம் [595] ஸுதர்சன பத்திரிகையைப்பார்த்தேன். இந்தவிவாதத்தைவளர்ப்பதில் அடியேனுக்கு நோக்கு இல்லை. ஸ்ரீவரதாசார்யர் எழுதிய நூலின் ஸாராம்சத்தை ஸம்ஸ்கிருதத்தில் எழுதினேன். தேசிகன் திருவுள்ளம் என்ன என்பதை அவர் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸாக்ஷாத் ஸ்வாமி முதலியவர்கள் விஸ்தாரமாக ஸாதித்துள்ளபடியால் அவ்வழியில் தோன்றிய அடியோங்களுக்கு அதுவே ப்ரமாணமாகும். தேவரீரும் சிலக்ரந்தங்களைக்கொண்டு கொள்கையை மாற்றிக்கொள்ள ஸித்தமாக இல்லை. இந்நிலையில் நாம் அவாந்தர விஷயங்களில் இனி சர்ச்சை செய்யாமல் இருப்பது நல்லது என்றும், நம்முடைய இராமானுசனுடைய தர்ஶனத்தைப் பரப்புவதில் முயல்வது நன்று என்றும் அடியேன் அபிப்ராயம். தவறுகள் இருந்தால் க்ஷமிக்கவும். தேவரீர் ஸ்ரீவைஷ்ணவ தர்ஶனத்துக்குப் பொதுவாக எவ்வளவோ தொண்டுகள் செய்து வருகிறது. அதையே வளர்க்கலாம். அடியேனும் சர்ச்சைக்கிடமான விஷயங்களில் பொதுவாகத் தலையிடுவதில்லை, மற்றவை நேரில்" என்று எழுதியிருந்தார்.

புதுவை வைணவ மாநாட்டுக்காக நாம் அங்கு சென்றிருந்தபோது 13-7-97 காலையில் ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பித்தேன். நாயனாராச்சான்பிள்ளை அருளிய சது:ஶ்லோகீ வ்யாக்யானம் — நமது பதிப்பின் பிரதிஒன்றை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தேன். அவரிடம் அடியேன் நேரில் விண்ணப்பித்ததின் ஸாரமாவது:- நாயனாராச்சான்பிள்ளையின் சது:ஶ்லோகீவ்யாக்யானமும் தேசிகனுடையசது:ஶ்லோகீ பா₄ஷ்யமும் இவ்விரு ஆசார்யர்களும் ஒருவரோடு ஒருவர் சர்ச்சை செய்தபின் எழுதப்பெற்ற க்ரந்தங்கள் என்பது இவ்விரண்டையும் ஸேவிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இவற்றை நடுநிலை நின்று ஸேவித்தால் "பிராட்டிக்கு அணுத்வமும் அதனால் உண்டான ஜீவத்வமுமே உண்டு: புருஷகாரத்வம் உண்டேயொழிய உபாயத்வத்தில் அந்வயமில்லை" என்று நாயனாராச்சான்பிள்ளையின் திருவுள்ளம் என்பதும், "பிராட்டிக்கு ஸ்வரூபவிபுத்வமும் உபய

acharya.org

விபூ4தி ஶேஷித்வமும் உண்டாகையாலே அவளை ஈஶ்வர கோடியில் சேர்ப்பதே உசிதம், ஆயினும் அவள் எம்பெருமானுக்கு ஶேஷபூ4தையாகையாலே ஈஶ்வரன் ஒருவனே என்று முழங்கும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு முரணில்லை. மோக்ஷப்ரத3ாந ஸங்கல்பத்தை ஸபத்நீகனான (பிராட்டியோடு கூடிய) எம்பெருமானே செய்கிருனுகையாலே, அவளுக்கு உபாயத்வத்திலும் அப்ரத4ாநமான அந்வயம் உண்டு'' என்று தேசிகனின் திருவுள்ளம் என்பதும் தெளிவாக விளங்கும். ''இருவரும் துல்யமான ஈஶ்வரர்கள்'' என்றோ, ''இருவருக்கும் ப்3ரஹ்மத்வம் உண்டு'' என்றோ, ''பிராட்டியின் ப4க3வச்சே2ஷத்வம் அவளுடைய இச்சையினால் விளைந்ததாகையாலே செயற்கையானது; ஸ்வாதந்த்ரியமே அவளது இயல்வு'' என்றோ இவ்விருநூல்களிலும் பூர்வபக்ஷமாகவோ ஸித்3த4ாந்தமாகவோ எடுக்கப்படவேயில்லை என்பதை தேவரீர் இருநூல்களையும் ஸேவித்துப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். உண்மையில் இத்தகைய வாதங்கள் பூர்வாசார்ய க்ரந்தங்கள் எதிலுமில்லை. இவ் விஷயத்தில் வாத விவாத நூல்கள் பிற்காலத்தில் வளர்ந்தமையாலே ஸாக்ஷாத் ஸ்வாமி போன்ற தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சில பெரியவர்கள், பிராட்டிக்குத் துல்ய ஈஶ்வரத்வ வாதம், ப்3ரஹ்மத்வவாதம் முதலான தேசிகன் கருதாத பல வாதங்களைக் கைக்கொள்ள நேரிட்டு விட்டது என்பது தேவரீரைப்போன்ற மத்யஸ்தர்களுக்குப் பூர்வாசார்யக்ரந்தங்களை, குறிப்பாக இவ்விரு சது:ஶ்லோகீ வ்யாக்யானங்களை நடுநிலைநின்று ஆழ்த்து ஸேவித்தால் விளங்கும். தேசிக ஸம்ப்ரத3ாயஸ்த2ர்களான மட2ாதி4பதிகளுக்கும் வித்3வத்3வரிஷ்ட2ர்களுக்கும் இவ்விஷயத்தை எடுத்துக் காட்டி, அவர்கள் பலரையும் ஒரு வித்3வத்ஸத3ஸ்ஸில் கூட்டி, தேசிகன் வரையிலுள்ள பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை மட்டும் கருத்தில் கொண்டு, பிற்காலத்தில் வந்தவர்களின் எழுத்துக்களைக் கருத்தில் கொள்ளாமல் ஒரு நிர்ணயம் செய்யவேண்டியது தேசிகன் முதலான ஆசார்யர்களுக்கும் விசிஷ்டாத்3வைத ஸித்3த4ாந்ததிற்கும் தேவரீரைப்போன்ற மத்4யஸ்தர்கள் செய்யவேண்டிய பெரிய தொண்டாகும். இதை தேவரீர் முன்னின்று செய்ய வேண்டும்—என்று பிரார்த்தித்து விடைபெற்றேன்.

இவ்விஷயத்தில் தேசிக ஸம்ப்ரதாயஸ்தராய் தேசிகக்3ரந்த3ங்களை நன்கு பயின்ற ஒரு ரசிகர் (ஸ்ரீ K. ஜகந்நாதன் சென்னை), தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவரும் பலருக்கு ஸ்ரீபா4ஷ்ய ப4க3வத்3விஷயங்களைக் காலக்ஷேபம் ஸாதித்து வருபவருமான சென்னை ஸ்ரீ P ஸௌந்தரராஜய்யங்கார் ஸ்வாமி ஆகிய இருவரது தீர்ப்புகளை ''ஸ்ரீதத்வஸர்வஸ்வம்'' என்னும் தலைப்பில் அடுத்தபடி வெளியிட்டிருக்கிறோம். மற்றும் பல மஹநீயர்களுடைய தீர்ப்புகள் அடுத்து வரும் 'ஸுதர்சனம்' இதழ்களில் வெளியாகும். ''ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்'' தனிப்புத்தகமாகவும் வெளிவரும்.

acharya.org

ஸ்ரீதத்வஸர்வஸ்வம்

தீர்ப்புகள்

1. வேற்றுமையில் ஒற்றுமை

[ஸ்ரீ கி. ஜகந்நாதன் (ஆடிட்டர்), ஸீவியூ அபார்ட்மெண்ட்ஸ் 112/9, 4-வது தெரு, கற்பகம் அவென்யூ, சென்னை 600 028]

நமது விலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத மதம் வடகலை என்றும் தென்கலை என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து இருந்தாலும் ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை என்னும் கொள்கையில் கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. இருப்பினும் பிராட்டி விஷயத்தில் ஸ்வாமி தேசிகன் தென்னாசார்யர்களோடு கருத்து வேற்றுமைகொண்டு பிராட்டியின் ஸ்வரூப விபுத்வத்தைக் கருத்தில்கொண்டு அவளை ஈச்வரகோடியில் சேர்த்தார். ஆனால் அவரும் பிராட்டிக்கு ப்ரஹ்மத்வத்தை இசையவில்லை. அதுமட்டுமல்ல, பிராட்டியை ஈச்வர கோடியைச் சேர்ந்தவளாகக்கொண்டாலும், தன்னைத்தவிர்ந்த மற்ற அனைத்துச் சேதநாசேதநங்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டு தான் ஆத்மாவாய் நின்று விளங்கும் எம்பெருமானுக்கு எப்படிப்பட்ட ஈச்வரத்வத்தைச் சொல்லுகிறோமோ அதேபோல ஈச்வரத்வம் பிராட்டியினுடையதும் என்று ஸ்ரீதேசிகன் கருதவில்லை என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு ஆராய்ந்தால் நன்கு புலப்படும். பிராட்டியினுடைய ஈச்வரத்வம் எம்பெருமானுடைய நித்ய இச்சையால் ஏற்பட்டது என்றும் "அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணு பத்நீ" என்கிற வேதவசனப்படி இவருடைய ஈஶ்வரத்வம் பத்நீத்வ ப்ரயுக்தம் என்றும் நிலைநாட்டினார் ஸ்வாமி தேசிகன்.

தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலர் பிராட்டியும் எம்பெருமானுக்குத் துல்யமான ஈஶ்வரி என்றும், இவளுடைய சேஷத்வம் இயல்பானதல்ல என்றும், தன் இச்சையினாலேயே இவளுக்குச் சேஷத்வம் என்றும் ஜகத்காரணத்வம், உபாயத்வம், ஸர்வ சேஷித்வம் முதலானவைகளில் இவனுக்கும் துல்யமான அந்வயம் உண்டென்றும் வாதிடத் தொடங்கினார்கள். இந்த வாதங்கள் அனைத்தும் ஸ்ரீராமாநுஜருடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கும், "ராமாநுஜ தயாபாத்ரம்" என்று போற்றப்படும் ஸ்ரீதேசிகனுடைய நிருபணங்களுக்கும் விரோதமாய் அமைவதோ

acharya.org

டல்லாமல், பெருமாள், பிராட்டி இவர்களுடைய ஸ்வரூப ஸ்வ பாவங்களிலும் உண்மைக்கு முரணான நிலையை ஏற்படுத்தி, குழப்பத்தையும் உண்டுபண்ணுகிறது.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியரும், புத்தூர் ஸ்வாமியு மான ஸ்ரீ உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தேசிகன் சதுஃஸ்லோகீபாஷ்யத்தில் தம் காலத்தில்பிராட்டி விஷயமாக இருந் ததாகக்குறிப்பிடும் ஐந்து நிர்வாஹங்களைக்காட்டி, அவற்றில் ஸகல ப்ரமாணங்களுக்கும் பொருந்தியநான்காவது பக்ஷத்தை தேசிகன் தம்பக்ஷமாகக்கொண்டார் என்று நிரூபித்தார். இதனை ஏற்றுக்கொள் ளாமல், ஐந்தாவதுபக்ஷத்தை தேசிகனுடையதாகக்கொண்டு "யதார் த்த விசிஷ்டாத்வைத ஸித்தாஞ்ஜநம்" என்னும் நூலை ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் வரதாசார்யர் ஸ்வாமி எழுதியிருப்பதாகவும், மேற்படி நூலில் எம்பெருமானுக்கும், பிராட்டிக்கும் துல்யமான ஈஸ்வரத்வமே உண்டு என்று வாதம் செய்திருப்பதாகவும் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர் சனம் இதழ் 595ல் வெளியிட்டு, ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் வரதா சார்யர் ஸ்வாமியின் வாதங்களையும் வெளியிட்டிருந்தார்.

நடுநிலை நின்று ஆராய்ந்ததில் தேசிகனுடைய பல நிருபணங் கள் புத்தூர் ஸ்வாமியின் கருத்துக்களுக்கு அநுகுணமாகவும், நாவல்பாக்கம் ஸ்வாமியின் கருத்துக்களுக்கு எதிராகவும் அமைந்து இருந்ததை ஸ்வாமி தேசிகனுடைய ரஹஸ்ய க்ரந்தங்களையும், ஸ்தோத்திரங்களையும் பார்த்ததில் அறிந்துகொண்டேன். அடியேன் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவனாயினும், நமது விசிஷ்டாத் வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை உயிரினும் மேலாக மதிப் பவன் என்கிற முறையிலும், பிராட்டி, எம்பெருமான் இவர்களைப் பற்றிய விஷயங்களை ஸ்வாமி தேசிகனின் நிருபணங்களோடும், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளோடும் பொருந்தும் வகையில் நிர் வஹிப்பதே உண்மைக்கு அளிக்கும் மதிப்பு என்கிற கருத்திலும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்னும் தலைப்பில் கீழ்க்கண்ட கருத்துக்களை உபய ஸம்ப்ரதாயத்திலும் உள்ள ஸ்ரீவைஷ்ணவர் களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

பிராட்டியினை ஈஸ்வரகோடியில் சேர்ந்தவளாகக் கருதினாலும் அவளது ஸ்வரூபம் வேறுபட்டதே என்று விளக்கியுள்ளார் தேசிகன். சில்லரை ரஹஸ்யம் ஸாரஸாரம் த்வயாதிகாரத்தில் "இதுக்குப் பதிபக்கல் அந்தர்பூவம் சொல்லுமிடம் விசிஷ்ட அந்தர்பூவத்தையும், பஹிர்பூவம் சொல்லுமிடம் ஸ்வரூப

பேதத்தையும் விவக்ஷிக்கிறது; அல்லது ஸ்வரூப ஐக்யமான அந்தர்பாவமும், ஸ்வரூபத்தைவிட்டு நிற்கும் பஹிர்பாவமும் ப்ரமாண ஸம்மதமன்று" என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளாராகையால், எம்பெருமான், பிராட்டி ஆகிய இருவருமே வெவ்வேறு ஆத்மாவென்றும் எம்பெருமான் விசேஷ்யம் என்றும், பிராட்டி விசேஷணம் என்றும் விசேஷணத்தோடு கூடிய விசேஷ்யமே விசிஷ்டம் என்றும் விளங்குகிறது; விசேஷணம் இயற்கையாகவே விசேஷ்யத்தை வேறுபடுத்தித் தருவது என்றும் ஏற்படுகிறது. ஆக இருவர் ஸ்வரூபத்திற்குத் தகுந்தபடி பிராட்டிக்கும், பெருமாளுக்குமுள்ள வேறுபாட்டை ப்ரமாண கதியை அநுஸரித்து, இசைந்து அர்த்த நிர்ணயம் பண்ணவேண்டியது மிகவும் முக்கியமாகிறது.

ஸ்வாமி தேசிகன் தமது ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஈச்வர பரிச்சேதத்தில் "ஜ்ஞாநாநந்தாதி - அத்யந்த ஸாம்யாத் ஜகஜ் ஜநகத்வ சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வாதி ஸாம்யாச்ச ஸாம்யகிரம் நிர்வாஹோ வ்யக்த:" [பிராட்டிக்கும், பெருமாளுக்கும் ஜ்ஞானம், ஆனந்தம் முதலான குணங்களில் மிகவும் ஒற்றுமையிருக்கையாலும், ஜகத்காரணத்வம், சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வம் முதலானவற்றில் ஒற்றுமையிருக்கையாலும் இருவரும் ஸமம் என்று கூறும் வாக்கியங்கள் பொருந்திவிடுகின்றன] என்று ஸாதித்துள்ளதைக்கொண்டு பெருமாளோடு பிராட்டி எல்லாவகையிலும் துல்யமான ஈச்வரியே என்று வாதிடுகின்றனர். விஷ்ணு பத்னியாய் இருப்பதாலேயே இவள் ஈச்வரி ஆகிறாள் என்பதே தேசிகனுடைய அபிப்ராயம் என்பதை அவருடைய பின் வரும் பல ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு அறியலாம்.

1. ஜகத்காரணத்வம்:

"ஜகத்வ்யாபாரவர்ஜம்" [ப்ரஹ்ம. ஸூத். 4-4-17] மற்றும் "தர்சயதஸ்சைவம் ப்ரத்யக்ஷாநுமாநே" [ப்ரஹ்ம. ஸூத். 4-3-20] ஆகிய ஸூத்ரங்களில் ஜகத்காரணத்வம் பரமபுருஷனுக்கு மட்டுமே என்று ச்ருதி ஸ்ம்ருதிகள் காட்டுகின்றன என்கிறார் வியாஸர். இதில் பிராட்டிக்கு அப்ரதானமான அந்வயம் மட்டுமே என்பதை பட்டர் தமது ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் (2-44) "அநுசிகிநி சிகீவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்" என்கிற ஸ்லோகத்தில் பெண் மயிலின் சமீபத்தில் ஆண் மயிலானது தோகையை விரித்து ஆடுவது போல, பிராட்டியின் முன்னிலையில் எம்பெருமான் தனது ஸங்கல்

பத்தினால் உலகைப் படைத்து விளையாடுகிறான் என்னும் உவமை முகத்தால் அறிவித்தார். அதாவது-எம்பெருமான் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச்செய்யும்போது அருகிலிருந்துபிராட்டி கடாக்ஷிக்கிறாள் என்கை. இத்தால் கார்யகரத்வ ரூபமான ஜகத் காரணத்வம் எம்பெருமான் ஒருவனுக்கே என்றதாயிற்று, சது: ஶ்லோகி இரண்டாவது ஶ்லோக வ்யாக்யானத்தில் "கிஞ்ச யதா முக்தஸ்ய பரமஸாம்யே ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி ஸித்தே அபி ஜகத் வ்யாபார வர்ஜமிதி லக்ஷணபூதை ராகாரைர் வைஷம்யம் ஸ்தாப்யதே ததா இஹாபி பவதி" [முக்தனுக்குப் பரமபுருஷனோடு மேலான ஒற்றுமை 'பரமம் ஸாம்ய முபைதி' என்னும் வேதவாக்கியத்திலும், 'மம ஸாதர்ம்ய மாகதா:' என்னும் ஸ்ம்ருதியிலும் ஏற்பட்டிருந்த போதிலும் "ஜகத் வ்யாபார வர்ஜம்" என்று ப்ரஹ்ம ஸூத்ரத்தில் சொல்லியபடியே பரப்ரஹ்ம லக்ஷணமான ஜகத்காரணத்வம் முதலான ஆகாரங்களால் வேறுபாடு நிலைநிறுத்தப்படுவது போலவே, இங்கும் (இப்பிராட்டி விஷயத்திலும்) ஆக வேண்டும்] என்று ஸாதித்துள்ளார். இதிலிருந்து ப்ரதானமான அந்வயம் ஜகத்காரணத்வத்தில் பிராட்டிக்கு இல்லை என்பது ஸ்வாமி தேசிகனால் காட்டப்பட்டது. "காரணம் து த்யேய:" [காரணப்பொருளே தியானிக்கத்தக்கது.] என்ற அதிகரணத்தின் படி ஜகத்காரண வஸ்துவுக்கே ப்ரதானமான முமுக்ஷு உபாஸ்யத்வம் உண்டாகையால் மோக்ஷப்ரதத்வத்திலும் (அதாவது உபாயத்வத்திலும்) பிராட்டிக்கு அப்ரதானமான அந்வயம் மட்டுமே என்று ஸித்தித்தது.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இம்மூன்றையும் எவன் செய்கிறானோ அவனே ஜகத்காரணம் என்றும், அவனே ப்ரஹ்மம் என்றும், அவனுக்கே மோக்ஷ ப்ரதத்வம் என்றும் தேசிகனை உள்ளிட்ட அனைத்துப் பூர்வாசார்யர்களுடைய அபிப்ராயமாகும். 'பஹுஸ்யாம்' [நான் பலவாகக் கடவேன்] என்று பகவான் ஸங்கல்பிக்க, பிராட்டியானவள் அதைக் கடாக்ஷிக்கிறாளாகையாலே இவளுக்கு அப்ரதானமான அந்வயத்தைச் சொல்லலாம் என்றும் அவர்கள் கருதினர், ஸம்ஹாரத்தில் பிராட்டியானவள் ப்ரதானமாகப் பங்கேற்பது இல்லை; காரணம் அஜ்ஞாத நிக்ரஹையானபடியால். ஆகையால் பிராட்டியின் காரணத்வம் அப்ரதானமே.

acharya.org

எம்பெருமானுடைய ஜகத்காரணத்வத்தை ஸ்வாமிநம்மாழ்வார்,

"தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து
தானே உண்டுமிழ்ந்து தானே யாள்வானே" என்றும்,

"அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்
அவனே அஃது உண்டுமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே" என்றும்,

'ஏவ' காரத்தையிட்டு எம்பெருமானின் ஜகத்காரணத்வத்தை அவனுக்கே உரித்தான செயலாக அறிவித்ததும் அறியத்தக்கது.

2 ரக்ஷகத்வம் (உபாயத்வம்).
ஜகத்காரண வஸ்துவுக்கே ரக்ஷகத்வம் சொல்லப்பட்டது,
லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா|
ரக்ஷகஸ் ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே ||
[கருணையே வடிவெடுத்தவளான பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே ரக்ஷகனாகிறான் என்று எல்லாவித ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் சொல்லப்படுகிறது]

[லக்ஷ்மீதந்த்ரம் 28-14]

மேலே கண்ட லக்ஷ்மீதந்த்ர வசனத்தில் "லக்ஷ்ம்யா ஸஹ" என்கிற பதமானது "ஸஹயுக்தேऽப்ரதானே" என்கிற பாணினி ஸூத்ரப்படி பிராட்டியினுடைய அப்ரதானமான அந்வயத்தையே காட்டியுள்ளது குறிக்கொள்ளத்தக்கது. பிராட்டி முக்ய விசேஷணமென்பதால் இவளுக்கு அப்ரதானமான உபாயத்வமுண்டு என தேசிகன் திருவுள்ளம் பற்றினார்; அதாவது எம்பெருமான மோக்ஷ ப்ரதான ஸங்கல்பத்தையும் பிராட்டியுடன் கூடியவனாகவே செய்வதால் இவளுக்கும் அப்ரதானமான உபாயத்வம் உண்டு என்பது தேசிகன திருவுள்ளம். இருவரும் ப்ரத்யேகமாய் உபாயம் என்பது 'லக்ஷ்மீ விசிஷ்டம் உபாயம்' என்கிறதோடு சேராதாகையால் ஜகத்காரணத்வத்திற்போலே ரக்ஷகத்வத்திலும் அப்ரதானமான உபாயத்வமே கொள்ளத்தக்கது.

ஸ்ரீமத் ராமாயணம் ஆரண்ய. கா. 60-20 ஶ்லோகத்தில்
குஞ்ஜரம் வா விசஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாऽபி வராங்கநா|
நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ஶ்ரிதா ||

acharya.org

[மிக அழகிய முகத்தை உடையவளான ஸீதாப்பிராட்டி ராம னுடைய தோள்நிழலை அண்டியிருக்கையாலே, யானையையோ சிங்கத்தையையோ, புலியையோ கண்டு பயப்படுவது இல்லை.] என்று எம்பெருமானுடைய ரக்ஷகத்வத்தைக் கோட் சொல்லிக் கொடுக்கக்கூடியது அவனது திரண்ட தோள் என்பது தெரி விக்கப்பட்டது: அதுமட்டுமல்ல, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் துவக்கத்திலேயே [பாலகாண்டம் 1-9] உள்ளதாவது:—

புத்₃தி₄மாந் நீதிமாந் வாக்₃மீ ஸ்ரீமாந் ஶத்ருநிப₃ர்ஹண: |
விபுலாம்ஸோ மஹாபா₃ஹு: கம்பு₃க்₃ரீவோ
மஹாஹநு: ||

[புத்திமான், நீதியறிந்தவர், வாக்குவன்மையுள்ளவர், திருவுடன்கூடி யவர், சத்ருக்களை அழிப்பவர், பரந்த தோள்களையும் நீண்ட கை களையும் உடையவர். சங்கு போன்ற கழுத்தையுடையவர். பெரிய முகவாயை உடையவர்.]

இங்கு எம்பெருமானுடைய தோளைப்பற்றிக் குறிப்பிடுகையில் "விபுலாம்ஸோ மஹாபா₃ஹு:" என்று விசேஷணமிடுவது, இவனுடைய நிருபாதிக ரக்ஷகத்வத்தின் சிறப்பினையும், இவனே ரக்ஷகன் என்பதனையும் உணர்த்தவே, பரமகாருணிகரும், வ்யாக்யான சக்ரவர்த்தியுமான பெரியவாச்சான்பிள்ளை எம்பெருமா னுடைய தோளைப்பற்றி வ்யாக்யானம் செய்யும்போது "உபய விபூதியும் ஒதுங்கினாலும் ஒதுங்கின ரக்ஷ்ய வர்க்கம் அளவுபட்டு ரக்ஷகனுடைய காவல் துடிப்பே மிக்கிருக்கை" என்று காட்டிய அழகை என்னென்பது! இத்தால் இவனே நிருபாதிகரக்ஷகன் என்றதாயிற்று. பிராட்டியானவள் ரக்ஷண ஹேதுவாகிறாள். இதைக் கருத்திற்கொண்டே பரதத்வ நிர்ணயம் செய்த பெரியாழ்வார் தமது ப்ரபந்தத்தின் தொடக்கத்திலேயே

"மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!
உன்சேவடி செவ்வித்திருக்காப்பு" என்று பிரானின்தோளை அநு பவித்து அதற்கு அடுத்த பாசுரத்தில் "வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்று பிராட்டியை மங்களாசாஸனம் செய்தார். "வடிவாய்" என்னும் பதத்தையிட்டு "கருணையே வடிவெடுத்தவளாய் இருக்கும் பிராட்டி

acharya.org

அஜ்ஞாதநிக்ரஹை என்று அறிவித்தார். ப்ரபந்தத்தை முடிக்கையிலும் "தடவரைத்தோள் சக்கரபாணி" என்று எம்பெருமானுடைய தோளையே குறிப்பிட்டுத் தமது ப்ரபந்தத்தை நிறைவு செய்தார்.

தமது தந்தையும் ஆசார்யருமான பெரியாழ்வார் வழியிலேயே ஸ்ரீஆண்டாளும் வேதமனைத்துக்கும் வித்தாய் விளங்கும் திருப்பாவையின் தொடக்கத்தில் "பாழியந் தோளுடைப் பற்பநாபன்" என்றும், முடிவில் "ஈரிரண்டு மால்வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்" என்றும் எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகமான தோளை அநுஸந்தித்தாள்.

திருமங்கையாழ்வாரும் தமது பெரியதிருமொழியில் "வில்லார் மலி வேங்கடமாமலை மேய மல்லார் திரள் தோள் மணி வண்ணன் அம்மானை" என்று முதல் பதின் இறுதியிலும் "மல்லார் தோள் வடவேங்கடவனை வர" என்று பத்தாம் பத்தின் இறுதியிலும் திருவேங்கடமுடையானின் தோளை அநுஸந்தித்தார்.

"தனக்கு விசேஷணமான பிராட்டியோடு கூடிய எம்பெருமான் உபாயம் என்று சொன்னால் 'இருவர் உபாயம்' என்று ஆகாதா?" என்கிற ஐயத்தை தேசிகன் விரோதபரிஹாரத்தில் பின்வருமாறு பரிஹரிக்கிறார். "'ஒருவனையே நோக்கும் உணர்வு' என்றும், 'தமேவ ஶரணம் கச்ச' என்னும் இப்புடைகளிலே 'ஏகனே மோக்ஷோபாயம்' என்று சாஸ்த்ரங்கள் சொல்லாநிற்க ஸபத்னீகனானவன் சரண்யன் என்று த்வயத்தில் சொன்னால் உபாயத்விதவம் (இருவர் உபாயம் என்பது) ப்ரஸங்கியாதோ? என்னில் குண விக்ரஹாதிகளைப்போல, பத்னியும் உபாய விசேஷணமாய் நிற்கையாலே விசிஷ்டோபாயம ஏகமாகையாலே, ப்ராஸ்வான் ஒருவனுமே ராத்ரி நிவர்த்தகன (ஒளியுடைய சூர்யனே இரவைப் போக்குமவன்) என்னுமாபோலே ஸ்ரீமான ஒருவனுமே ரக்ஷகன் என்ன விரோதம் இல்லை" என்று பரிஹரித்துள்ளார்.

இதைக்கொண்டு பார்க்கும்போது ஒரு முக்கிய விஷயத்தை நாம் அறியமுடியும். ஆஶ்ரயண தஶையிலே விசேஷணப்ராதான்யம் (பிராட்டி). உபாயதஶையில் விசேஷ்ய ப்ராதான்யம் (பெருமாள்), பலதசையில் விசிஷ்டப்ராதாந்யம் (சேஷி தம்பதிகள் இருவரும்) என்பதை அனுபவிக்கப்பெறலாம்.

3 ஸர்வசேஷித்வமும், ப்ராப்யத்வமும்

''மச்சேஷ பூதா ஸர்வேஷாமீச்வரீ மம வல்லபா''

[பாஞ்சராத்ரம்]

[ஸ்ரீதேவி எனக்குச் சேஷபூதையாயிருப்பவள். மற்ற எல்லோருக்கும் ஈச்வரியாயிருப்பவள். எனக்குப் பிரியையாயிருப்பவள்.]

''ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி''

[தாயே! நீ இயற்கையாகவே விஷ்ணுவுக்கு உடைமையாயிருப்பவள்.] [ஸ்ரீகுணரத்னகோசம்]

என்கிறபடியே எம்பெருமானுக்கு மட்டும் இவள் சேஷமாய், மற்றவர்களுக்கு இவள் சேஷியாய் விளங்குவதால் ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஜ்ஞாநாநந்தாதிகளுக்குப்போலே அத்யந்தஸாம்ய பதத்தையிடாமல் ''ஸாம்யப்'' என்ற பதத்தையிட்டார் ஸ்வாமிதேசிகன். பிராட்டியினுடைய புருஷகாரத்வத்தைப் பற்றி விளக்கம் அருளிச்செய்கையில் ''ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷபூதையாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்ய அதிசயத்தாலும், அத்தலையில் வால்லப்ய அதிசயத்தாலும் புருஷகாரமாயக்கொண்டு அஞ்சமாகிறாள்'' என்று குறிப்பிட்டு உள்ளார் ''ஸர்வ ஸ்வாமிநியாய்'' என்று மட்டும் குறிப்பிட்டால் எம்பெருமானுக்கு எப்படிப்பட்ட ஈச்வரத்வத்தை இவளும் சகிக்கிறோமோ அதேபோலத்தான் இவளுக்கும் என்று எண்ண விட நேரிடும் என்றே அடுத்தவார்த்தையிலேயே ''ஸர்வேச்வரனுக்கு சேஷபூதையாய்'' என்று குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், '''ஸர்வ சேஷி வ்யதிரிக்த ஸர்வ சேஷித்வம்' (அதாவது, எல்லோருக்கும் சேஷியான எம்பெருமானைத் தவிர மற்ற அனைவருக்கும் சேஷியாயிருக்கும் தன்மை) 'நிக்ரஹ அஸமாநாதிகரண ஸர்வாநுக்ரஹவத்த்வம்' (அதாவது சீற்றமே சிறிதுமில்லாமல் எல்லோரையும் தாய்மைக்குணத்தால் உண்டான வாத்ஸல்யத்தோடு அநுக்ரஹிக்கை) இத்யாதிஸ்வபாவவிசேஷங்களையுடையளான பிராட்டி ஸாபராதரானவர்கள் (அபராதம் செய்தவர்கள்) எல்லோருக்கும் மாதாவான ஸர்வேச்வரனை (தண்டதரனான ஈச்வரனை) அபிமுகம் கொள்ளமாட்டாதே தயங்காதபடி அவனுடைய பித்ருத்வ ப்ரயுக்தமான ஊஷ்மளீபாவத்தை (தந்தை என்னும் முறையில் ஏற்பட்ட உள்ளக்கொதிப்பை) 'உசிதை: உபாயைர் விஸ்மார்ய' (தகுந்த உபாயங்களால் அதனை மறக்கச்செய்து) என்னும்படிபோக்கி இவர்களை அவன் திருவடிகளிலே சேர்த்து 'தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார்' என்னும்படி பண்ணிக்கொண்டு'பூர்வேய ஶரணம் ஹி வ:'

acharya.org

[ஸ்ரீராமா. ஸுந். 58-90] என்று அருளிச்செய்தபடியே இவர்களுக்கு ரக்ஷாஹேது (ரக்ஷிப்பதற்குக் காரணம்) ஆகிறாள்'' என்று தமது ரஹஸ்ய ரத்னாவளீ வாக்யம் நான்கில் ஸாதித்துள்ளார் ஸ்வாமி தேசிகன்.

தயா ஶதகம் 36 வது ஶ்லோகத்தில்
பரஹித மநுகம்பே பா₄வயந்த்யாம் ப₄வத்யாம்
ஸ்தி₂ர மநுபதி₄ ஹார்த்த₃ம் ஸ்ரீநிவாஸோ த₃தா₄ந: |
லலித ருசிஷு லக்ஷ்மீ பூ₄மி நீளாஸு நூநம்
ப்ரத₂யதி ப₃ஹுமாநம் த்வத் ப்ரதிச்ச₂ந்த₃பு₃த்₃த்₄யா ||

[தயா தேவியே! பிறருக்கு நன்மை புரிவதையே சிந்தித்துக் கொண்டிருக்கும் உன்னிடத்தில் எக்காரணத்தையும் முன்னிடாத நிலையான அன்பைக் கொண்டுள்ள ஸ்ரீநிவாஸன் அழகிய ஒளியுடையரான பெரிய பிராட்டியார், பூமிதேவி, நீளாதேவி இவர்களிடம் உன் பிரதிபிம்பங்கள் (நிழல்கள்) என்று பெருமதிப்பைக் காட்டுகின்றான்.]

இதில் பிராட்டிமார்கள் ஸ்ரீநிவாஸ தயையின் நிழல்களாக வர்ணிக்கப்பட்டனர்.

திரு விருத்தம் இரண்டாவது பாசுரத்தில் ஸ்வாமி நம்மாழ்வாரும்,

"சூழற் கோவலர் மடப்பாவையும் மண்மகளும்
திருவும் நிழற்போல்வனர் கண்டு நிற்குங்கொல்"

என்று பிராட்டிமார்களை எம்பெருமானின் நிழல்களாக வர்ணித்ததன் மூலம் பிராட்டிமார்களின் இயல்பான சேஷத்வத்தை அறிவித்தார், இத்தால் 'பிராட்டியின் சேஷத்வம் இச்சையினால் ஏற்பட்டது' என்னும் வாதம் தேசிகன் உகந்த அர்த்தமல்ல என்றதாயிற்று.

எம்பெருமானார் சிஷ்யர்களுள் ஒருவரான சோமாசியாண்டான் அருளிச்செய்த 'ஷட₃ர்த்த₂ஸங்க்ஷேபம்' என்னும் நூலில் "உப₄யாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் ஶேஷித்வம்'' (பெருமாளும் பிராட்டியுமான இம்மிதுனத்திற்குச் சேதனரைக் குறித்த சேஷித்வம் ஒன்றே) என்னும் வாக்யத்தைப் பல இடங்களில் உதாஹரித்துக் காட்டியுள்ளார் ஸ்வாமி தேசிகன். இதன்படி பகவான் ப்ராப்யமாகும்போது பிராட்டியும் ஸர்வசேஷி என்கிற முறையில் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாகிறாள். பிராட்டிக்குச்செய்யும் கைங்கர்ய

acharya.org

மும் எம்பெருமானுக்கு உகப்பு என்பதாலும், கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியான சேஷித்வம் ஒன்றே இருவரிடமும் உள்ளதைக் கருதியும் 'ஸாம்யம்' என்ற பதத்தையிட்டார் ஸ்வாமி தேசிகன்.

ஸோமாஜியாண்டான் அந்த ஸ்ரீஸூக்திகளில்—

"ஸமாநநயாத் மஹிஷ்யாதி₃ ஸித்₃த₄ஶ்ச......... ஏதந்ந்யாய ஸஹக்ருதவாக்யேந ச ஶேஷித்வ விஶிஷ்ட பத்நீவிதி₄:। அநுவாத்₃ய வா | ந ச லோகே ஶரீரஸ்ய அபத்நீத்வாத் மாநாந்தரஸித்₃த₄ சரே விரோத₄:|| அசித்த்வாச்ச அபத்நீத்வம் லோகே"
[ஆகையால் 'அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ' என்னும் வேத வாக்கியம் சேஷித்வத்தோடு கூடிய பத்னியையே விதிக்கிறது அல்லது அநுவதிக்கிறது என்று கொள்ளவேண்டும். 'உலகில் சரீரம் பத்னியாயிருப்பதில்லையே. இங்கு சரீரமானபிராட்டி எப்படிப் பத்னியாகமுடியும்?' என்னும் கேள்வியும் வேதத்தால் சரீரமாக ஸித்திக்கும் பிராட்டி விஷயத்தில் பொருந்தாது. அசித்தாகையாலே நம் ஶரீரம் நமக்குப் பத்னியாயில்லை.] என்று பிராட்டியும் எம்பெருமானுக்கு ஶரீரமே என்று நிர்ணயித்தார். இதற்கு முக்கியமான பிரமாணம் உண்டு. அதாவது—

"ஶரீரம் ச ஹரேரஸ்மி"

[நான் ஹரியினுடைய சரீரமாயிருக்கிறேன்] என்னும் லக்ஷ்மீ தந்த்ரத்தில் பிராட்டியின் வாக்கு.

எம்பெருமான் ஒருவனே நிருபாதி₄க ஶேஷியாய் இருக்க, இவளுக்கும் ஸர்வ ஶேஷித்வத்தைச் சொன்னால் அது பொருந்துமோ? என்கிற ஸந்தேஹத்திற்குப் பின்வருமாறு விரோத பரிஹாரத்தில் தேசிகன் ஸாதித்துள்ளார். அந்தவாக்கியங்களை அப்படியே எழுதியுள்ளேன். 'ஈஶ்வரன் ஒருவனுக்குஎல்லாம் அநந்யார்ஹ நிருபாதி₄க ஶேஷம் என்றும், அதடியாக விநியோக₃ ப்ரகாரத்தாலே ததீ₃ய சேஷம் என்றும் ப்ரமாணங்கள் காட்டாநிற்க, இருவருக்கும் தத்₃ வ்யதிரிக்தம் எல்லாம் நிருபாதிக சேஷம் என்னப்போமோ? ஸோபாதி₄க ஶேஷித்வத்தையும், நிருபாதி₄க ஶேஷித்வத்தையும் கூட்டி 'உப₄யாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் ஶேஷித்வம்' என்னத்தான் போமோ? ஆகையால் கீழ்ச்சொன்ன கட்டளையிலே இருவருக்கும் தத்₃வ்யதிரிக்தமெல்லாம் ஶேஷமானாலும் ஒருத்தருக்கு நிருபாதி₄க சேஷம் ஒருத்தருக்குத் ததீ₃யத்வமடியாகஸோபாதி₄க ஶேஷம் என்று பிரிக்கவேண்டாவோ? என்னில்: இது இருவருக்கும் தத்₃

வ்யதிரிக்தமெல்லாம் ஶேஷம் என்று சொல்லுகிற ஶ்ருதி ஸ்ம்ருதி வசனங்களில் உபாதிகன் சொல்லாமையாலும் ஸ்வாரஸ்யத்தைப் பற்ற பாதிக்கைக்கு வேறுப்ரமாணம் இல்லாமையாலும், ஒருவருக்கு அநந்யார்ஹ ஶேஷம் என்றவிடம் 'ததந்தர்பாவாத் த்வாம் ந ப்ருதக்பிப்ருத்தே ஶ்ருதிரபி' என்கிற கட்டளையிலே நிர்வஹிக்க ஶக்யமாய் இருக்கையாலும். இருவரையும் பற்ற வ்யதிரிக்தமெல்லாம் நிருபாதிக ஶேஷம் என்னக்குறையில்லை. இப்படி இதரங்களைப்பற்ற இருவருக்கும் வந்த ஏகரூபமான ஶேஷித்வம் அந்யோந்யம் ஆகார பேதத்தாலே வரும் ஸாம்ய வைஷம்யங்களுக்கு நிவாரகமல்லாமையாலே. நித்ய வ்யவஸ்திதமான பதித்வ பத்னீத்வங்களுக்கும், தண்டதரத்வ புருஷகாரத்வங்களுக்கும் விருத்தமன்று." என்று ஸாதித்துள்ளார். ஸ்வாமி தேசிகனுடைய இந்த ஸமாதானங்களை அப்படியே 'விரோதபரிஹாரம்' என்னும் வடமொழி க்ரந்தத்தில் குமார நயினராசார்ய ஸ்வாமி விளக்கியுள்ளார்.

"கதம் ச ஸோபாதிக ஶேஷித்வம் நிருபாதிக ஶேஷித்வம் ச ஸங்கல்ய்ய 'உபயாதிஷ்டாநாம் ச ஏகம் ஶேஷித்வம்' இதி வக்தும் ஶக்யதே" [எம்பெருமானுடைய இயல்வான ஶேஷித்வத்தையும், பிராட்டியின் செயற்கையான (பத்னீத்வத்தாலுண்டான) ஶேஷித்வத்தையும் சேர்த்து 'உலகைக் குறித்து இருவரின் ஶேஷித்வமும் ஒன்றே' என்று எப்படிக் கூறமுடியும்?] என்று கேள்விகேட்டுக்கொண்டு,

"ஏவம் விஶ்வ விஷய-மிதுன ஶேஷத்வஸ்ய அநௌபாதிகத்வேऽபி பகவத: ஸர்வஶேஷித்வம், தத்பத்ந்யா: ஶ்ரிய: தச்சேஷத்வம், ஈஶ்வரஸ்ய தண்டதரத்வம், தஸ்யாஶ்ச தத்புருஷகாரத்வம், விஶேஷ்ய பூதஸ்ய பகவத: ப்ரதாந்யம், விஶேஷண பூதாயா: தஸ்யா: தத்ஸ்வரூப நிரூபகத்வேந அப்ராதாந்யம் இத்யாதி ஸர்வம் வ்யவஸ்திதம்"

[உலகம் மிதுன ஶேஷமாயிருப்பது இயல்வான போதிலும் பகவானுடைய ஸர்வ சேஷித்வம், அவனது பத்னியான பிராட்டிக்கு சேஷத்வம், மற்றும் பகவானுடைய தண்டதரத்வம், அதேபோல் பிராட்டியினுடைய புருஷகாரத்வம், விசேஷ்யமாக உள்ள பகவானுக்கு ப்ராதாந்யம், விசேஷணமாகவும், ஸ்வரூபநிருபகபூதையாகவும் விளங்கும் பிராட்டிக்கு அப்ராதாந்யம் ஆகிற ஆகாரங்கள் இருவருக்கும் தனித்தனியாக அமைந்திருப்பதால் பொருந்தும்] என்று பதிலளித்துள்ளார். இதை இன்னும் சற்றுத் தெளிவாகவும்

acharya.org

வெளிப்படையாகவும் ஸ்வாமி தேசிகனே தமது ப்ரதா₄ன ஶதகத்திலும் 14 வது வாக்யத்தில் கல்வெட்டாகக் காட்டியுள்ளார். அந்த வாக்யம் வருமாறு:

"ஏகரூபமான இச்சேஷித்வம் உப₄யாதி₄ஷ்டா₂நமானாலும் தம்பதிகளில் பதி ப்ராதாந்யம் லௌகிக வைதிக மர்யாதைகளின் படியே நித்ய நியதமாகையாலே, 'பதிகளுக்கும் பரமனான பதி' என்னும்படி நின்ற நாராயணனே ஸர்வ ப்ரதா₄னனும்' என்று விவரித்துள்ளார்.

ஆகையால் நாவல்பாக்கம் வரதாசார்யர் ஸ்வாமி பிராட்டி எம்பெருமானுக்குச் சரீரம் என்பதை இசையாமல், பிராட்டிக்கு ப்₃ரஹ்மத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் இவைகளை வ்யாஸஜ்ய வ்ருத்தியாகக் கொள்வது பொருந்தாது என்பது நிரூபிக்கப்பட்டது

4 ஸர்வ வ்யாபகத்வம்:

அநந்த வீர்யாऽமித விக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:! [கீதை 11-40]

[அளவற்ற வீர்யத்தை உடையவனே! அளவற்ற பராக்ரமத்தை உடைய நீ உன்னையொழிந்த எல்லாப்பொருள்களையும் வியாபித்திருக்கையால், அவற்றைச் சொல்லும் சொற்களால் சொல்லப் படுபவனாகிறாய்]

ஸ்வாமி தேசிகன் தமது தத்த்வத்ரய சுளகம், ஈஶ்வர நிருபணத்தில் "விபு₄த்வே ஸதி ஜ்ஞாநத்வம்"என்று ஈஶ்வர லக்ஷணமாகக் குறிப்பிட்டிருப்பது எம்பெருமானைப்பொறுத்தவரையில் கர்மாநுகு₃ண நியமனத்திற்கு உறுப்பான முக்ய வ்யாப்தியாகும். இப்படி இவன் வியாபிக்கும் போது பிராட்டியும் தத்பாரதந்த்ர்ய ஸ்வரூபத்திற்குச் சேர அவனை அனுஸரித்துத் தானும் தன் ஸ்வரூபத்தால் வியாபிக்கிறாளாகையாலே அவ்யாப்தி இல்லை. இத்தன்மையைக் கொண்டே பிராட்டியை ஈஶ்வரகோடியில் சேர்த்தார் ஸ்வாமி தேசிகன்.

	எம்பெருமான்	பிராட்டி
1	ஜகத்தை ஸ்ருஷ்டிப்பவனாய்	அதைக் கடாக்ஷிப்பவளாய்
2	நிரங்குஶ ஸ்வதந்த்திரனாய்	அத்யந்த பரதந்த்ரையாய்
3	து₃ண்ட₃ த₄ரனாய்	புருஷகாரபூ₄தையாய்
4	ஸர்வ ஶேஷியாய்	பகவான் தவிர்ந்த மற்ற அனைவர்க்கும் ஶேஷியாய்
5	ஸர்வ ரக்ஷகனாய்	ரக்ஷண ஹேதுவாய்

acharya.org

6 ஸர்வ ஶரீரியாய் — பரமனுக்கு சரீரமாய்
7 த₄ர்மியாய் — அவனுக்கு த₄ர்மமாய்
8 போக்தாவாய் — அவனுக்கு போ₄க்₃யமாய்
9 புருஷோத்தமனுயிருப்பவன் — நாரீணுமுத்தமையாய் இருப்பவள்

இத்தகைய தனித்தன்மைகளை உடையவர்களாய், பிரிவற்ற திவ்ய தம்பதிகளின் ஸ்வரூப ஸ்வபா₄வங்களை உள்ளபடி அறிந்து தெளிவோமாக.

முடிவுரை

ஸ்ரீவிசிஷ்டாத்வைதத்திற்கு எந்தத்தீங்குமின்றி, பிராட்டியை ஈஶ்வரகோடியைச் சேர்ந்தவளாகக் கொள்ளும் நான்காவது பக்ஷத்தையே தேசிகன் ஆதரித்துள்ளார் என்பது மேலே காட்டியுள்ள நிரூபணங்களிலிருந்து விளங்குகிறது. இதை விடுத்து ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் திருவுள்ளமாகக் கொள்வது பல வலுவான ப்ரமாணங்களோடு விரோதிப்ப தோடுமல்லாமல் பின்வரும் தோஷங்களும் தவிர்க்க முடியாதபடி ஏற்படும்.

1 எம்பெருமானுக்கே உரியதான ஜகத்காரணத்வம் ஸர்வ சரீரித்வம் முதலியவைகளை 'ஏவ' காரத்தையிட்டு அறி விக்கும் பல வேத வாக்கியங்கள் பொருளற்றவையாகும்.

2 பிராட்டிக்கு சரீரத்வத்தை இசையாமல் எம்பெருமா னுக்குத் துல்யமான ஈஶ்வரத்வத்தைச் சொன்னால் இருவரும் வெவ்வேறு ஆத்மாவாய் இருப்பதால் ஈஶ்வரத்₃வித்வமாகிற தே₃ாஷம் உண்டாகும்.

3 ஸ்த்ரீ தேவதைக்குப் பரத்வம் சொல்லும் சாக்தமத ப்ர வேசமும் ஏற்படும்.

4 விசிஷ்டாத்வைதம் போய் விசிஷ்டத்வைதம் ஏற்படும்.

இவைகளைக் கருத்தில்கொண்டு புத்தூர்ஸ்வாமி காட்டிய படி விசிஷ்டாத்வைதத்திற்கு விரோதமில்லாமல் தேசிக னுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் விரோதமில்லாமல் பிராட்டியை ஈஶ்வரகோடியைச் சேர்ந்தவளாக அறிந்து வேற்றுமை யிலும் ஒற்றுமைகாண முயல்வோமாக,

ஆழ்வார், ஆசார்யர், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2. விசிஷ்டாத்3வைதமா? விசிஷ்டத்3வைதமா? விமர்சனம்

[ஸ்ரீ உ.வே. திருப்புல்லாணி P. ஸௌந்தரராஜய்யங்கார் ஸ்வாமி 7, ஜெயின் காலனி, சென்னை-24]

பெரிய பிராட்டியாருக்கு மகாரவாச்யத்வமும் நாரஶப்3த3வாச்யத்வமும் உள்ளன. மகாரவாச்யத்வம் இல்லையெனில் அவளுக்கு ப4க3வச்சே2ஷத்வமே ஸித்3தி4யாது. அது இஷ்டாபத்தியே என்றால், ஆழ்வாராசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திவிரோத4ம் வரும். நாரஶப்3த3வாச்யத்வமும் "ஜ்ஞாநாத3யோ கு3ணா: ரூபம் லக்ஷ்மீ: நித்யாநபாயிநீ" [எம்பெருமானுடைய ஜ்ஞாநாதி3கு3ணங்களும் திருமேனியும், என்றுமே விட்டுப்பிரியாதவளான லக்ஷ்மியும் நாரஶப்3த3வாச்யர்கள்.) என்ற வசநத்தால் ஸித்3த4ம். இந்த வசநம் ஸ்ரீவசநபூ4ஷண மீமாம்ஸாபா4ஷ்யத்தில் பதினொன்றாவது அதி4காரமான லக்ஷ்மீவிபு4த்வப4ங்கா3தி4காரத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து சில விஷயங்களை விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன் இனி. பா4ஷ்யகாரராலும் க3த்3யத்தில் நாரஶப்3தா3ர்த்த2மாக அவள் கூறப்பட்டிருக்கிறாள், "யோऽஸௌ ஶ்ரிய: ஸ்ரீ: பரமா தேந நாராயண: ஸ்ம்ருத:" (அவன் நாரஶப்3த3வாச்யையான ஸ்ரீதேவிக்கு மேலான இருப்பிடமாக உள்ளான். எனவே அவன் நாராயணன் எனப்படுகிறான்) என்ற ஹாரீத ஸ்ம்ருதிவசனமும் அவளை நாரஶப்3தா3ர்த்த2மாகக் கூறுகிறது.

இப்படி அணுத்வத்துக்கு (பிராட்டி அணுவாயிராமல் விபு4வாயிருக்கைக்கு) ப்ரமாணபா3த4மும் இருப்பதால் 'ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்3ரஹ்ம' என்ற வாக்யவிரோத4மும் வரும். லக்ஷ்மிக்கும் 'அநந்தத்வம்' வந்தால், அது ப்3ரஹ்மத்தினுடைய லக்ஷணமாக ஆகமுடியாது. அது லக்ஷ்மீ விசிஷ்டமான ப்3ரஹ்மத்துக்கு லக்ஷணம் என்று கூற முடியாது: அணுத்வபரமான மூலமந்த்ரத்துக்கு விரோத4ம் வருவதாலும் ஸத்யாதி3 பத3ங்களுக்கு த்3விவசநாந்தத்வாபத்தி வருவதாலும். ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வங்கள் இருவருக்கு லக்ஷணங்கள் என்றால் ஸத்யாதி3 பத3ங்களுக்கு த்3விவசநாந்தத்வந்தானே வரவேணும்? 'ஈஶ்வரஸ்வரூபமானது ஸத்யாதி3பத3வாச்யமாயிருந்தாலும் கூட ஸத்3ருஶ லக்ஷ்மீஸ்வரூபத்துடன் உபஶ்லிஷ்டமாயிருக்கிறது; எனவே அர்த்த2ஸாமர்த்யத்தினால் ஸத்யத்வாதி3களுக்கு லக்ஷ்மீஸ்வரூப லக்ஷணத்வம் ஸித்3திக்கிறது' என்று கூறமுடியாது. 'லக்ஷ்மிக்கு அப்படிப்பட்ட ஸத்3ருஶஸ்வரூபமானது ஸித்3தி4த்தால் அர்த்த2ஸாமர்த்2யத்தினால் இவை லக்ஷ்மீஸ்வரூப லக்ஷணங்கள் என்று கல்பிக்கலாம்: இவை லக்ஷ்மீ ஸ்வரூப லக்ஷணங்கள் என்று ஸித்3தி4த்தால் அவளுக்கு ப்3ரஹ்மஸத்3ருஶஸ்வரூபம் உள்ளது என்று கல்பிக்கலாம்' என்றிப்படி அந்யோந்யாஶ்ரயணம் வருகிறது. ஆக, ஸத்யாதி3வாக்யத்துக்கு விஶிஷ்டலக்ஷணத்வத்தில் தாத்பர்யமின்மையால் லக்ஷ்மிக்கு விபு4த்வம் ஸித்3தி4யாது.

acharya.org

மேலும் லக்ஷ்மிக்கு ஸ்வரூபவ்யாப்தி உள்ளது என்ற பக்ஷத்தில் அந்தர்பா3ஹிர்வ்யாப்திகள் இரண்டுமே விவக்ஷிதங்களா? பா3ஹிர்வ்யாப்தி மட்டுமே விவக்ஷிதமா? முதல் பக்ஷத்தில் ஈஶ்வரஸ்வரூபத்தை உட்புகுந்து வ்யாபிக்க முடியாது; அப்படி வ்யாபிப்பவளானால் அவனுக்கே நியாம்யத்வம் வந்துவிடும்; அந்தர்வ்யாப்தியே நியமனத்துக்காக ஏற்படுவதால், அப்பொழுது அவன் யாருக்கும் நியாம்யனல்லன் என்று கூறும் ப்ரமாணங்களுக்கு விரோத4ம் வரும். எனவே ஈஶ்வரஸ்வரூபத்தில் லக்ஷ்மிக்கு அந்தர்வ்யாப்தி கிடையாது. அது இஷ்டாபத்தியே என்று கூறமுடியாது; மத்4யம பரிமாணத்வம் வருவதால், அநித்யத்வம் வந்துவிடுமாகையால்.

விளக்கம்: விபு4த்வத்தில் அந்தர்வ்யாப்தியும் விவக்ஷிதம் என்று கொண்டுவிட்டால் எல்லாவிடத்திலும் அவளுக்கு அந்த அந்தர்வ்யாப்தி வரவேணும்; ஓரிடத்தில் அது இல்லையானாலும் மத்4யமபரிமாணம் வந்துவிடும்; தத்ப்ரயுக்தமாக அநித்யத்வமும் வந்துவிடும்.

பா3ஹிர்வ்யாப்தி மட்டுமே உள்ளது என்ற இரண்டாவது பக்ஷமும் தவறு. பிராட்டிக்கு பா3ஹிர்வ்யாப்திமாத்ரமே உள்ளது என்றால் ஈஶ்வரதுல்யத்வம் இல்லாமற்போகிறது; எம்பெருமானுக்கு அந்தர்வ்யாப்தி, பா3ஹிர்வ்யாப்தி இரண்டுமே உள்ளன. பிராட்டிக்கு ஒன்று மட்டுமே உள்ளது என்பதால். எனவே பிராட்டியும் பெருமாளும் எல்லாவித4த்தாலும் துல்யர்கள் என்ற ஸ்வஸித்3தா4ந்தம் ப4ங்க3மடைகிறது.

மேலும், பிராட்டி ஸர்வாந்தர்யாமியாக இருப்பாளேயானால் அவளுக்கு நாராயணஶப்3த3வாச்யத்வம் வரும். அப்பொழுது த்3வயத்திலுள்ள இரண்டு ஸ்ரீஶப்3த3ங்களுக்கும் வையர்த்2யம் வரும். விபு4த்வத்தால் வந்த நியந்த்ருத்வத்தால் ஸர்வாத்மகத்வம் ஸித்3தி4த்ததேயானால் சேதநாசேதனவாசகஸர்வஶப்3த3வாச்யத்வமும்வரும், அதுவும் "அர்த்தோ2 விஷ்ணுரியம் வாணீ" (இவள் வாசகஶப்3த3மாகவும் விஷ்ணு வாச்யனாகவும் உள்ளார்கள்) என்ற ப்ரமாணத்தால் தள்ளப்படுகிறது. இவளுக்கு விபு4த்வம் வந்தால் தத்த்வத்ரயபா3ஹிர்பா4வமும் வரும்.

விளக்கம்: ஈஶ்வரஶேஷத்வம் இவளுக்கு உள்ளபடியால் ஈஶ்வரத்வம் இவளுக்கு ஸித்3தி4யாது. இவளை 'விஷ்ணுபத்நீ' என்றே ப்ரமாணங்கள் காட்டுகிறபடியால் பத்நீத்வப்ரயுக்தமான ஶேஷத்வத்தை இல்லை செய்யமுடியாது. எனவே ஈஶ்வரத்வம் ஸித்3தி4யாது. அணுத்வமில்லாதபடியால் சேதநத்வமும் ஸித்3தி4யாது. ஏகதே3ஶ லக்ஷணமிருந்தாலுங் கூட பூர்ணலக்ஷணமில்லை பூர்ணலக்ஷணமே அந்தந்தத் தத்த்வநியாமகமாகும். எனவேசேதன லக்ஷணமான அணுத்வமில்லாதபடியால் ஜீவகோடியில் சேர்ந்தவளும்

acharya.org

அல்லள். ஜ்ஞாத்ருத்வமிருப்பதால் அசேதனமுமல்லள். இப்படி விபு4த்வத்தைக் கொண்டால் பிராட்டிக்கு தத்த்வத்ரயப3ஹிர்பா4வம் வருகிறது. ஆக விபு4த்வமானது அநேக ப்ரமாணோபபத்திகளால் பா3தி4க்கப்பட்டிருப்பதால் அது அவளுக்குக் கிடையாது என்று தேறுகிறது.

அவ்வாறே பிராட்டிக்கு ஈஶ்வரதுல்யோபாயத்வமோ ஸ்வபாரதந்த்ர்யாநுகு3ணமாக கு3ருதி3துல்யமான உபாயத்வமோ கூடக் கிடையாது என்று மீமாம்ஸாபா4ஷ்யத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி தேவரீர் அவர்களுடைய ஸம்ப்ரதா3யத்தைக் கண்டிக்கவில்லை.

நடுநிலை நின்று ஸ்வாமி தேஶிகனை உள்ளிட்ட ஆசார்யர்கள் எவரும் பிராட்டியை ப்3ரஹ்மம் என்றோ எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரி என்றோ குறிப்பிட்டதில்லை என்றே தேவரீர் நிரூபித்திருக்கிறது. பிராட்டி எம்பெருமானுக்குச் சரீரமல்லள் என்றும், அவளுடைய ஶேஷத்வமானது செயற்கையானது என்றும் கொள்வது விஶிஷ்டாத்வைதத்தை அழிக்கும் செயலே ஆகும். ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞா, காரணவாக்யங்களிலுள்ள ஏகத்வாவதா4ரணம், நூற்றுக்கணக்கான வேதா3வாக்யங்களால் ஸித்3தி4க்கும் எம்பெருமானுடைய ஸர்வஸ்மாத்பரத்வம் முதலியவற்றை எடுத்துக்காட்டி "அனைத்துலகையும் வியாபித்து நியமிக்கும் ஈஶ்வரர்கள் இருவர் என்று கொள்ளுதல் விஶிஷ்டத்3வைதமாகுமேயொழிய விஶிஷ்டாத்3வைதமாகாது" என்று தேவரீர் காட்டியிருக்கிறது. இது பக்ஷபாதமற்ற இதர ஸம்ப்ரதா3யஸ்த2ர்களுக்கும் ஏற்புடையதேயாகும்.

ஸ்வாமி தே3ஶிகன் பிராட்டிக்கு ஏகோநஶேஷித்வத்தையே ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதை அவருடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே தேவரீர் தெளிவாக விளக்கிக் காட்டியருளியது. எனவே 'பிராட்டி எம்பெருமானுக்குச் சரீரமாய் அவனால் வியாபிக்கப்படுபவளாய் இருந்தபோதிலும் உலகைக்குறித்து ஶேஷியாயிருக்கையாலே ஈஶ்வரகோடியில் சேர்ந்தவள்' என்ற நாலாவது பக்ஷமே ஸ்வாமி தே3ஶிகனுடைய பக்ஷமாயிருக்கவேணும் என்ற தேவரீருடைய முடிவே பக்ஷபாதமற்றவர்கள் அனைவராலும் ஏற்கத்தகுந்ததாகும். விஶிஷ்டாத்3வைத ஸித்3தா4ந்தத்திற்கு ப்ரதா4ன ப்ரதிதந்த்ரார்த்த2ங்களாயுள்ள ப4க3வத்பரத்வம், ப4க3வானுக்கும் ஜக3த்துக்குமுள்ள ஶரீரஶரீரிபா4வம் என்பவற்றுக்கு ஊறுவிளைவிக்கும் வாத3ங்கள் உப4யஸம்ப்ரதா3யஸ்த2ர்களாலும் விலக்கத்தக்கவையே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

acharya.org

3. பிராட்டியின் பெருமை

[ஸ்ரீ உ. வே. பராசர ஸுதர்சன பட்டர் ஸ்வாமி, தெற்கு உத்திரவீதி, ஸ்ரீரங்கம்]

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஈச்வர ஆனி [595] இதழில் 'விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?' என்னும் கட்டுரையைப் படித்தேன். அதுபற்றிய அடியேனது கருத்தைத் தெரிவிக்கிறேன்.

1 வேதங்கள் இதிஹாஸபுராணங்கள் முதலான சாஸ்திரங்கள் எல்லாமே ஜகத்காரணமாய் மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல பரம் பொருள் நாராயணன் ஒருவனே என்று தெளிவாகக் குறிப்பிடுகின் றன. புருஷஸூக்தம் (உத்தராநுவாகம்) லக்ஷ்மீதேவி அந்தப் பரமபுருஷனுக்குப் பத்நீ என்று முழங்குகிறது. பத்னிக்குப் பார தந்த்ர்யமே ஸ்வரூபம் என்பது நம்முடைய ஸகல சாஸ்திரங் களின் நிர்ணயம். ஆகையால் நாரீணும் உத்தமையான பிராட்டி யும் எம்பெருமானிடம் பாரதந்த்ர்யமே வடிவெடுத்தவள் என்று சொல்லாமலே விளங்கும். கௌஷீதகி உபநிஷத்து பரமபதத்தில் பிரம்மம் பர்யங்கத்தில் (ஆதிசேஷனுகிற படுக்கையில்) எழுந் தருளியிருப்பதாகவும், அவனுடைய திருவடிக்கு அணையாக ஸ்ரீதேவி எழுந்தருளியிருப்பதாகவும் முழங்குகிறது, ''மலராள்......அடிவரு டும் தன்மையான்'' [பெரிய திரு ௫-10-2] முதலான பாசுரங்களில் ஆழ்வார்களும் பிராட்டி புருஷசேஷத்வமே வடிவெடுத்தவள் என்று பாடுகிருர்கள், ஆகையால் 'பிராட்டியும் பெருமாளுக்கு நிகரான ஈச்வரி' என்றும் 'பிரம்மம்' என்றும், 'ஸ்வாதந்த்ர்யம் உடையவள்' என்றும் வாதம் செய்வது எல்லாப் பிரமாணங்களுக் கும் முரண்பட்டதாகும். பிராட்டி ஸ்வரூபத்தின் இனிமையிலும், குணங்களிலும், ரூபத்திலும் எம்பெருமானைக்காட்டிலும் பெருமை பெற்றவள் என்று ஸ்ரீராமாயணம் முதலான சாஸ்திரங்கள் முழங்கு கின்றன. ஆனாலும், அவள் எம்பெருமானுக்கு உடைமையா யிருப்பவளாகையாலே வைஷ்ணவத்தில் சாக்தமதம் இல்லை. உண்மையில் பிராட்டியின் இந்தப் பாரதந்த்ரியமே அவளுடைய தலைசிறந்த பெருமை. அவளுக்கு ஸ்வாதந்த்ரியத்தைக் கூறுவது அவளுக்குப் பெருமையல்ல; துர்க்கை முதலான மற்ற ஸ்த்ரீ தெய்வங்களிடமில்லாத அவளுடைய பூர்த்த பாரதந்த்ரியமாகிற பெரும் பெருமையை இல்லை செய்வதேயாகும்.

2, எம்பெருமான் ஸ்வாதந்த்ர்யமுடையவனும் இருக்கையா லேயே, ஸ்வாதந்த்ர்ய லேசமுமற்ற ஜகந்மாதாவான பிராட்

டியை நாம் புருஷகாரமாகப் பற்றுகிறோம். அவளுக்கும் ஸ்வாதந்த்ர்யம் உண்டெனில் அவளையடைவதற்கு ஒரு புருஷகாரம் தேவைப்படும். ஆனால் இப்படி எந்தப் பிரமாணத்திலும் காணப் படவில்லை, ஆகையால் பிராட்டிக்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்னும் வாதம் பொருத்தமற்றது,

3. நம்முடைய பூர்வாசார்யர்கள் அனைவரும் நாராயணன் ஒருவனையே 'பிரம்மம்' என்றும், 'ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன்' என்றும், "பிராட்டி தொடக்கமான மற்ற எல்லாச் சேதனர்களும் 'நார' ஶப்தத்தால் சொல்லப்படுபவர்கள்" என்றும், 'நாராயணனால் வியாபித்து தரித்து நியமிக்கப்படுபவர்கள்' என்றும் ஏககண்ட₂மாக முழங்கியிருக்கிறார்கள். ஸ்ரீவேதாந்த தேசிகனும் பலவிடங்களில் இதைக்காட்டியிருக்கிறார்.

உதாரணத்திற்குப் பின்வருமிடங்களைக் காணலாம்:—

1. "கிஞ்ச யதா₂ முக்தஸ்ய ப₄க₃வதா பரமஸாம்யே ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி₃ ஸித்₃தே₄ऽபி ஜக₃த்₃ வ்யாபார வர்ஜமிதி லக்ஷண பூ₄தைராகாரைர் வைஷம்யம் ஸ்தா₂ப்யதே தத₂ இஹாபி ப₄வதி". [முக்தனுக்குப் பரமபுருஷனோடு உயரிய ஒற்றுமை, 'பரமம் ஸாம்யமுபைதி' என்னும் வேத வாக்யத்திலும் 'மம ஸாத₄ர்ம்யமாக₃தா:' என்று கீதையிலும், மற்றும் பல ப்ரமாணங்களிலும் ஏற்பட்டிருந்த போதிலும் 'ஜக₃த்₃ வ்யாபார வர்ஜம்' என்று ப்₃ரஹ்மஸூத்ரத்தில் கூறிய பிரகாரம் பரப்ரஹ்ம லக்ஷணமான ஜகத் காரணத்வம் முதலானவற்றால் வேறுபாடுகளைக் கொள்வதுபோல், பிராட்டி விஷயத்திலும் ஆகவேண்டும்] என்று ஸ்ரீதேசிகன் சது:ஶ்லோகீ 2-வது ஶ்லோக பா₄ஷ்யத்தில் அருளியுள்ளார்.

2. "ஏகரூபமான இச்சேஷித்வம் உப₄யாதி₄ஷ்டா₂நமானாலும் தம்பதிகளில் பதிப்ராதா₄ந்யம் லௌகிக வைதிக மர்யாதையின் படியே நித்யநியதமாகையாலே. 'பதிகளுக்கும் பரமனான பதி' என்னும்படி நின்ற நாராயணனே ஸர்வப்ரதானனும்" என்று தம்முடைய ப்ரதான ஶதகத்தில் ஸ்ரீதேசிகன் எம்பெருமானுடைய இயல்வான ஶேஷித்வத்தையும், பிராட்டிக்குப் பத்னீத்வத்தாலுண்டான அப்ரதா₄னமான ஶேஷித்வத்தையும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் நிரூபித்துள்ளார்.

acharya.org

3. இப்படிப் 'பரப்பொருள் ஒன்றே' என்று கொண்டிருக்கையாலேயே நம்முடைய தரிசனம் விசிஷ்டாத்வைததரிசனம் என்று பெயர் பெற்றிருக்கிறது. பூர்வாசார்ய க்ரந்தங்களில் எவ்விடத்திலும் 'பிராட்டி பரப்பிரம்மம்' என்றோ, 'அவளுடைய சேஷத்வம் செயற்கையானது' என்றோ 'ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு ஸ்வரூபம்' என்றோ காணப்படவில்லை. ஆகையால் சமீபகாலத்தில் எழுந்த இத்தகைய வாதங்கள் உபயஸம்ப்ரதாயஸ்தர்களாலும் ஆதரிக்கத்தக்கவையல்ல,

4. 'பத்யுர்நோ யஜ்ஞ ஸம்யோகே₃' என்னும் இலக்கண வழக்கின்படி பத்னியசன பிராட்டி எம்பெருமானுடைய காரியங்களில் தானும் அப்ரதா₄நமாகப் பங்குகொள்கிறாள். இப்படித் தன்னுடைய பாரதந்த்ரியத்துக்குச் சேர எம்பெருமானுடைய காரியங்களில் அப்ரதானமாகப் பங்கு கொள்கையாலே அவள் 'ஸஹத₄ர்மசரி' என்று ஜநகராஜனாலே ஸீதாகல்யாணத்தின்போது அழைக்கப்பட்டாள். இதனாலேயே எம்பெருமான் ஜகத்காரணனாகும்போது அவனை உலகைப் படைக்கத் தூண்டுவதன் மூலமும், அவனுடைய லோக ஸ்ருஷ்டியாகிற அலகிலா விளையாட்டைக் கண்டு இன்புறுவதன் மூலமும் அதில் பங்கு கொள்கிறாள். அதனாலேயே பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் [2-44] "உலகையெல்லாம் சரீரமாகக் கொண்ட எம்பெருமான் உலகைப்படைக்கும்போது தோகையை விரித்தாடும் ஆண்மயில் போலிருக்கிறான்" என்றும், "உலகை சரீரமாகக்கொள்ளாத பிராட்டி தோகையற்ற பெண்மயில்போலே அந்த எம்பெருமானுடைய லீலையில் பங்கு கொள்கிறாள்" என்றும் அருளிச்செய்தார், ஆகையால் லக்ஷ்மீகல்யாண நாடகத்தில் திவ்ய தம்பதிகளை அவர் ஜகத்காரணர்களாகக் குறிப்பிட்டது பெருமான் பிரதானமான ஜகத்காரணர் என்றும் பிராட்டி அப்ரதானமாக அதில் பங்கு கொள்கிறாள் என்றும் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்ததேயாகும்.

5. பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் "யுவத்வாதெ₃ள" [34] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் 'ச்₂த்₃வா' என்னும் பதத்தால் 'பிராட்டி பத்நியாக வேஷம்போட்டுக்கொண்டு விளையாடுகிறாள்' என்று உணர்த்துவதாகச் சொல்லுவது பொருந்தாது. "ஆண்மைக்

குரிய குணங்கள் எம்பெருமானிடமும் பெண்மைக்குரிய குணங்கள் பிராட்டியிடமும் தம்மைப்போன்றவர்கள் அநுபவிக்கலாம்படி அமைந்திருக்கின்றன'' என்றே இந்த ஶ்லோகத்தில் பட்டர் அருளிச் செய்கிறார்.

6. ''ஸ்வத: ஸ்ரீஸ்த்வம்'' [ஸ்ரீகுணரத்நகோஶம் 31] என்னும் ஶ்லோகத்தில் ''உடைமையான ஒளியின் பெருமையெல்லாம் ரத்னத்தின் பெருமையாவதுபோலே, இயற்கையாகவே எம்பெருமானுக்கு உடைமையாயிருக்கும் ஸ்ரீதேவியின் பெருமையெல்லாம் அவளை உடையவனான எம்பெருமானின் பெருமையாகவே ஆகின்றன'' என்று பட்டர் மிகத்தெளிவாகக் காட்டுகிறார். இதை மாற்றி ''ஸ்வத:'' என்பதற்கு 'தன் இச்சையாலே' என்று பொருள் கொள்வது-ஒளியை இயல்வான உடைமையாகக் கொண்ட ரத்னத்தை த்ருஷ்டாந்தமாகக் காட்டியிருப்பதோடு ஒட்டாது.

7. பட்டர் ஸ்ரீகுணரத்னகோசம் 28 வது ஶ்லோகத்தில் ''பிராட்டியால் நிருபிக்கப்படும் எம்பெருமானைச் சொல்லுமிடமெல்லாம் அவனுடைய ஸ்வரூபத்தை நிருபித்துத்தரும் இவளையும் சொன்னதாகும்'' என்று அருளியிருப்பதிலிருந்து எம்பெருமான் விசேஷ்யமாய் ப்ரதாநனாயிருப்பவன் என்றும், பிராட்டி அவனுக்கு விசேஷணமாய் அப்ரதாநமாய் இருப்பவளென்றும் தெளிவாக விளங்குகிறது. இந்த ஶ்லோகத்தைக் கொண்டு எம்பெருமானுக்கு உள்ள எல்லாப் பெருமைகளும் பிராட்டிக்குமுண்டு என்று வாதம் செய்வது நடுநிலையாளர்கள் ஏற்கத்தக்கதல்ல.

8. ''பிராட்டிக்கு ஜகத்காரணத்வம் முதலியவற்றில் அப்ரதாநமான அந்வயம் இருக்கையாலே, அவளை ஈஶ்வரகோடியில் சேர்க்கலாம். இருந்தபோதிலும் அவள் எம்பெருமானுக்கு சேஷபூதையானவளே'' என்னும் (நாலாவது) பக்ஷத்தையே ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் பற்றினார். பாரதந்த்ரியமே இவளுக்கு இயல்வாக இருப்பதையும் எம்பெருமானைத் தவிர்ந்த மற்றவர்களுக்கே இவள் ஈஶ்வரியாயிருப்பதையும் திருவுள்ளம் பற்றிய தென்னாசார்யர்கள் அவள் ஜீவகோடியே என்று திருவுள்ளம் பற்றினார்கள். இப்படி ஒப்புக்கொண்டால் தான் நம்முடைய விசிஷ்டாத்வைதம் விசிஷ்டாத்வைதமாக மாருமலிருக்கும். ஸுதர்சனருடைய இந்த நியாயமான கருத்தைத் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

acharya.org

4 ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீவானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி ஸ்ரீமுகம் (முகாம்) புதுடில்லி (21-8-97)

श्रीमदुभयेत्यादिविरुदवृन्दसम्मण्डितेभ्योऽस्मदाप्ततमेभ्यः श्री कृष्णस्वाम्यय्यङ्गार् महाशयेभ्यो भूयांसि हार्दानि मङ्गलान्याशास्यन्ते। आषाढमासिक श्रीवैष्णवसुदर्शनपत्रिका सम्प्राप्तात्र, यथापूर्वं समग्रावलोकनविषयतां सम्प्राप्तवत्यस्माकम् । 'श्रीतत्त्वसिद्धाञ्जनसङ्ग्रहो' नाम पुस्तकं नास्माभिरवलोकितम् । इदं पत्रिकायां प्रकाशितं श्रीमज्जगन्नाथस्वामि - श्रीमदुभयवे सुन्दरराजार्यस्वामिनोः निबन्धद्वितयमपि निरीक्षितं, समीक्षितं, परीक्षितञ्च । अतिविस्तरेण विषयचर्चाः परमप्रामाणिकतया विहिताः प्रतिभान्ति । श्रीवेदान्तदेशिकमहाचार्यग्रन्थेषु, स्तोत्रमतल्लिकासु, श्रीपराशरभट्टमहाचार्यश्रीसूक्तिषु, श्रीलोकाचार्यानुपमदिव्यरहस्यग्रन्थेषु, श्रीभगवद्रामानुजमहाचार्यदिव्यसूक्तिषु च समुचितावगाहनं कृतवतां विदुषां मनसि नैवोदियादेवं विपरीतभावना, या वा 'श्रीतत्त्वसिद्धाञ्जनसङ्ग्रह' प्रणेतुर्मानसे - समुदिता दृश्यते । निश्चप्रचं वच्मोऽथ शपामहे च सुदृढं यत्परब्रह्मत्वेन श्रियस्सर्वजगन्मातुर्महालक्ष्म्याः व्यवहारो नैव दृश्यते कुत्रापि । एतदुद्धृत्य सुजमुच्यते । अवकाशाभावादतिसंगृहीततयायं सारो विलिखितोऽस्माभिः । अयमभिप्रायोऽस्माकमस्मिन्विषये यदुत्तरोत्तरं वादविवादपरम्पराः परिहार्या इति । उ वे सुन्दरराजाचार्यमहाशयैः श्रीभाष्याध्ययनं श्रीमत्परमहंसेत्यादि-वर्तमान-श्रीमदहोबिल-पीठाधिपेभ्यः परमविद्वद्वरेण्येभ्योऽपि कृतमिति श्रुतचरम् । इतःपरमपि यद्यावश्यकतोदियात्तर्हि वयं पुनरपि विस्तरशो विलिखेम । शुभमेव भूयात्सर्वत्र सर्वदा सर्वथेति कथयित्वा विरमामोऽधुना ॥

श्रीरामानुजन्

(श्रीकलियन् वानमामलै रामानुज जीयर् स्वामी)

acharya.org

இதன் மொழி பெயர்ப்பு (முகாம் டெல்லி 21 8-97)

ஸ்ரீமத் உபய வேதாந்த இத்யாதி விருதுகளால் அலங்கரிக்கப் பெற்றவராய், நமக்கு மிகவும் ஆப்தரான ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களுக்கு மனமுவந்த மங்களாசாஸனங்கள் பல. ஆடி மீ ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகை இங்கு வந்து சேர்ந்தது. முன்பத்திரிகைகளைப் போல் நம்மால் முழுவதும் பார்க்கப்பட்டது. "ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜன ஸங்க்ரஹம்" என்னும் புத்தகம் நம்மால் பார்க்கப்படவில்லை. ஆனால் 'ஸுதர்சனம்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஸ்ரீமான் ஜகந்நாத ஸ்வாமி, ஸ்ரீமதுபயவே ஸுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி ஆகியவர்களுடைய இருகட்டுரைகளும் பார்க்கப்பட்டது. பூர்வபக்ஷஸித்தாந்தங்கள் அனைத்தும் ஆராயப்பட்டது. மிக விரிவாக விஷயங்களைப்பற்றிய சர்ச்சைகள் பரம ப்ராமாணிகமான முறையில் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று விளங்குகிறது. ஸ்ரீவேதாந்தாசார்ய மஹாசார்யருடைய க்ரந்தங்களையும், சிறந்த (பூர்வாசார்ய)ஸ்தோத்ரங்களையும், ஸ்ரீபராசர பட்டராகிய மஹாசார்யருடைய ஸ்ரீஸூக்திகளையும், ஸ்ரீலோகாசார்யருடைய ஒப்பற்ற திவ்யரஹஸ்ய க்ரந்தங்களையும், ஸ்ரீபகவத்ராமானுஜாசார்யருடைய திவ்யஸூக்திகளையும் நன்கு பரிசயம் செய்தவர்களுக்கு, ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜன ஸங்க்ரஹத்தை எழுதியவருடைய மனத்தில் தோன்றியிருக்கும் விபரீதமான கருத்து ஒருபோதும் உண்டாகாது. உறுதியாக ஐயந்திரிபற சபதமிட்டுச்சொல்லுகிறோம்—ஸர்வஜகந்மாதாவாய் 'ஸ்ரீதேவி'யான மஹாலக்ஷ்மிக்கு பரப்ரஹ்மம் என்னும் வழக்கு எவ்விடத்திலும் காணப்படவில்லை. இது விஷயம் (வேதவ்யாஸரைப் போலே) கைதூக்கி நின்று முழங்கப்படுகிறது. அவகாசமின்மையால் மிகச் சுருக்கமாக ஸாரமான வார்த்தை நம்மால் எழுதப்பட்டது. இது விஷயத்தில் மேன்மேலே வாத விவாத பரம்பரைகள் விலக்கத்தக்கவை என்பது எம்முடைய கருத்து. ஸ்ரீ உ. வே. ஸுந்தரராஜாசார்யர் அவர்கள் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பிருதுகளால் அலங்கரிக்கப்பெற்றவராய், வித்வான்களில் தலைசிறந்தவரான வர்த்தமான ஸ்ரீமதஹோபில பீடாதிபதிகளிடமிருந்து ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் செய்துள்ளார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதற்கு மேலும் அவசியம் நேருமானால் அப்போது நாம் விரிவாக எழுதுவோம். எங்கும் எல்லாக்காலத்திலும் எல்லாப்படியாலும் மங்களமே உண்டாகட்டுமென்று கூறி இப்போது நிறைவுபடுத்திக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீராமானுஜன்

(ஸ்ரீகலியன் வானமாமலை ராமானுஜஜீயர் ஸ்வாமி)

acharya.org

ஸ்ரீ தத்வஸர்வஸ்வம்—தீர்ப்புகள்

5. அவதாரங்களில் பிராட்டி

[Dr V. V. ராமானுஜன், ஆசிரியர், யதிராஜ பாதுகா
சென்னை-5]

ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ ॥

என்பது ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலுள்ள ப்ரஸித்தமான ஶ்லோகம். எம்பெருமான் உலகில் அவதாரம் செய்யும் போதெல்லாம் பெரிய பிராட்டியான ஸ்ரீதேவியும் அவனைவிட்டுப் பிரியகில்லாமல் அவனுக்குத்தக்கபடி வந்து பிறக்கிறாள். ராமாவதாரத்தில் ஸீதையாகவும், க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாகவும் பிறந்தாளன்றோ. எம்பெருமான் விபவத்தில் தனது ஒப்பற்ற மேன்மையைக் கழற்றாமல் வந்து பிறப்பது போலே, இவளும் தன் இயல்வான நற்குணங்களோடே வந்து பிறக்கிறாள் என்று கொள்வதே யுக்தம். ஸ்ரீராமாயணம் மற்றும் புராணங்கள் வேதத்துக்கு உபப்ருஂஹணங்களாக அவதரித்தவை. இவற்றைக்கொண்டு வேதார்த்தம் றுதியிட வேண்டுகையாலே அவதாரங்களில் பிராட்டியின் சரிதையைக் கொண்டு எம்பெருமானுக்கும் பிராட்டிக்குமுள்ள பரிமாற்றத்தை அறியலாம்.

ராமாவதாரத்திலும் ஸரி, க்ருஷ்ணாவதாரத்திலும் ஸரி பிராட்டி எம்பெருமானுக்குப் பரதந்த்ரையாகவே நடந்து கொண்டுள்ளதைக் காணலாம். ஜகந்நாதனை ஒருவனைக் கைப்பிடித்ததனால் பத்நீத்வப்ரயுக்தமாக இவள் ஈஶ்வரியாகிறாள். ஆளவந்தாரும் இதை "லோகைகேஶ்வரி! லோகநாததயிதே!" என்று தமது சது:ஶ்லோகியான ஸ்ரீஸ்துதியில் காட்டியிருக்கிறார். ச்ருதியும் "அஸ்யேஶாநா ஜகத:" என்றுசொல்லி அதற்கு நிதாநம் 'விஷ்ணுபத்நீ" என்று காட்டிற்று. இப்படி லோகநாததிவ்யமஹிஷி என்பதற்குச்சேர ஈஶ்வரத்வத்தையும் ஸீதையோ ருக்மிணியோ வெளிக்காட்டியதாகச் சரித்திரம் அமையவில்லை. பிராட்டியை நலிந்த அரக்கியரைத் திருவடி தண்டிக்கவிருப்புற்று, பிராட்டியை அநுமதிகேட்டபோது "நீ அப்படிச் செய்யாதே" என்று கட்டளையிடவில்லை. "கார்யம் கருணமார்யேண நகஶ்சிந்நாபராத்யதி" என்று மார்த்தவத்தோடு பேசுவது காணலாம்.

ஸீதையைக் கந்யாதாநம்பண்ணும்போது ராஜரிஷியானஜனகன் "ஸஹதர்ம சரீ தவ" என்று சொல்லியே அவனைக் கைப்பிடித்துத் தந்தான், தனது நாயகன் நினைவைப் பின்செல்பவளிறே ஸஹதர்மசாரிணி. "ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம்

சொல்லுகிறது'' என்பர் நமதாசாரியர்கள். இது க்ருபாகார்யம். க்ருபையே இங்கு நிரூபகமாயிற்று, ஈஸ்வரத்வமல்ல. லங்காபுரியில் சிறையிலிருந்தது பெருமாளிடமிருந்து முதல் பிரிவு. இது க்ருபையை வெளியிடுவதற்காக. தன்னை நலிந்த அரக்கியருக்கும் அவர்கள் ப்ரார்த்தியாமலே அருள்புரிந்தது க்ருபையை வெளியிட்டபடி. பெருமானை "ரிபூணாமபி வத்ஸல:" என்று நிரூபித்த பிராட்டி அவருக்கு ஸஹதர்மசரியாயிருந்தமையை ராக்ஷஸிகளை ரக்ஷித்து நிரூபித்தாள்.

பிராட்டியின் இரண்டாவது பிரிவு நகரமக்களில் எவனோ ஒருவன் பொறுப்பில்லாமல் பேசியதை வ்யாஜமாகக்கொண்டது. லோகாபவாதத்தைத்தவிர்க்க அரசனிட்ட கட்டளைப்படி இலக்குவன் பிராட்டியை வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் விட்டுவந்தபோது தன்னிடம் மாசேதுமில்லை என்பது உலகறிய இலங்கையிலேயே ஆக்னி பரீக்ஷையால் காட்டப்பட்டிருந்தபோதிலும், 'தான் தன்னை முடித்துக்கொள்ளல் ஸ்வாதந்த்ர்யகார்யமாகும். மேலும் இக்ஷ்வாகுவம்ச ப்ரஜைகள் தன் திருவயிற்றிலுள்ளபடியாலும் அது தக்கதன்று' என்று உயிர்வாழ்ந்திருந்தது தனது பாரதந்த்ர்ய தர்மத்தை வெளியிட்டபடியாகும். காட்டிலே (அரண்யத்திலே அந்த:புரத்திலே) வைத்திருந்தபோதும் காட்டிலேவிட்டபோதும் ஒருவாசியுமின்றி "இவ்வுடலும் உயிரும் பெருமாளுடைய ஸொத்து" என்று அவர் திருவுள்ளத்தையே பின்சென்று நடந்துகொண்டது பாரதந்த்ர்ய காஷ்டை. தான் உயிரை மாய்த்துக்கொண்டால் அது பெருமாளுக்கும், பிறந்தகம் புக்ககம் இரண்டுக்குமே அபத்யமுண்டாக்கும் என்று பெருந்துயரத்தையும் பொறுத்துக்கொண்டு தன் உயிரை நோக்கிக் கொண்டிருக்கும்படியான பரதந்த்ர்யமே இப்பிரிவில் வெளியாயிற்று.

பிள்ளைகள் பிறந்து வளர்ந்த பிறகு பிராட்டி ராஜஸபைக்கு வால்மீகி மஹரிஷியால் அழைத்துச் செல்லப்படுகிறாள். பெருமாள் பிராட்டியிடம் எவ்விதமான தோஷமுமில்லை என்று நன்கறிந்தவராகிலும் லோகாபவாதத்தைத் தவிர்க்கத்தச்சபடி சபதம் பண்ணும்படி நியமிக்க, "அடியேன் பெருமாளைத்தவிர்த்து மற்றெவரையும் மனத்தினாலும் நினையாதவளாயின் இப்பூமிப்பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக்கடவள்" என்று சபதமிட, அப்பொழுதே பூமி வெடித்து ஒரு திவ்ய ஸிம்ஹாஸனம் தோன்ற, பூமிப்பிராட்டியும் தோன்றி ஸீதாபிராட்டியை அந்த ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளப் பண்ண, அத்துடன் பூமிக்குள்ளே மறைந்தாள். இங்கு மூன்றாவது பிரிவால் அநந்யார்ஹத்வம் (எம்பெருமானையன்றி வேறொருவருக்கும் உரித்தாகாத்தன்மை) என்ற குணம் வெளிப்படுத்தப்பட்டது.

acharya.org

க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் இவை புருஷகார பூதையான பிராட்டியிடம் இயல்பாகவே உள்ளவையாம், தான் பெருமாளுடைய ஸொத்து என்பதை பிராட்டியினுடைய வசநங்கள் பல ஸூசிப்பித்துத் தருகின்றன. "ஸமா த்3வாத3ஶ தத்ராஹம் ராக4வஸ்ய நிவேஶநே" — (ஸு'ந் 33-18) என்று புக்ககத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தமையைக் குறிப்பிட்டருளும்போது "ராக4வஸ்ய நிவேஶநே"— என்கிருள். ராகவன் என்பது தசரதனையோ பெருமாளையோ குறிப்பது. க்ருஹயஜமானி—மஹிஷீஸ்த2ானத்திலுள்ளவள் "எங்கள் இடம்" என்னுமல் பெருமாளுடைய திருமாளிகை என்பது உற்றுநோக்குதற்குரியது. பரதன் சொன்ன "ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய" என்பதையொப்பது இது.

தண்டகாரண்யத்தில் பெருமாள் ரிஷிகளுக்கு அபயம் தந்து ராக்ஷஸர்களை வதம் செய்வதாக சபதம் செய்து கொடுக்க, பிராட்டி தனது மார்த்தவத்துக்குச்சேர ரக்ஷஸவதம் அப்போது பெருமாள் ஏற்றிருந்த தாபஸவேஷத்துக்குச்சேராதென்று சொல்லும்போது, "ஸ்நேஹாச்ச ப3ஹுமாநாச்ச ஸ்மாரயே த்வாம் ந ஶிக்ஷயே"-தேவரீர் எல்லாமறிந்தவர். அன்பினாலும் பரிவினாலும் ஸ்த்ரீசாபல்யத்தாலும் இதை தேவரீருக்கு நினைவூட்டுகிறேனத்தனை—என்று மிக்க பணிவுடன் சொல்லுவது காணலாம். இங்கும் பாரதந்த்ர்யமே பளிச்சிடுகிறது, இப்படிப் பலவிடங்களுண்டு,

அசோகவனத்தில் பிராட்டியைச் சிறைவைத்த ராவணன் தகாத பேச்சுக்களைப் பேசினபோது "ராவணா, உன்னை நீருகும்படிச் சபிப்பதே செய்யவேண்டுவது. உன்னை எனது தேஜஸ்ஸினால் பஸ்மமாக்க வல்லேனாயினும் எனக்கு ராமனது ஆஜ்ஞை இல்லாமையால் அப்படிச் செய்யவில்லை" என்கிருள். மேலும் திருவடி பிராட்டியைப் பெருமாளிடம் கொண்டு சேர்த்து விடுவதாக அழைத்தபோதும் "பெருமாள் வந்து லங்கையை நாசம் பண்ணி ராவணனை முடித்து என்னை அழைத்துப்போவரேல் அதுவே தக்கதாகும்-மாம் நயேத்3யதி3 காகுத்ஸ்த2: தத் தஸ்ய ஸத்3ருஶம் ப4வேத்" என்று சொன்னதும் பிராட்டியின் பாரதந்த்ர்யத்தைக் குன்றிலிட்டவிளக்கெனக் காட்டுகிறது.

தூது சொல்லிவிட்டு லங்கையிலிருந்து திரும்பிச்செல்லத் திருவடிக்கு விடைகொடுக்கும்போது பிராட்டி சொன்னது: "கௌஸல்யா லோகப4ர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ। தம் மமார்தே2 ஸுக2ம் ப்ருச்ச2 ஶிரஸா சாபி4வாத3ய ॥" [உலகுக்கெல்லாம் ஸ்வாமியான ஒருவரை எனது விசாலமனமுடைய மாமியார் பெற்றார்; அடியேனுக்காக அவர் திருவடிகளில் தலைசாய்த்து வணங்கு; நலம ?

என்று ஒருசொல் நான் கேட்டதாகக் கேள்] என்பது. இதில் எம்பெருமான் ஶேஷி என்பதும், பிராட்டி அவனுக்கு ஶேஷபூதை என்பதும் பளிச்சிடுகிறது.

ஸ்ரீராமாயணமே "ஸீதாயா: சரிதம் மஹத்" என்று பிராட்டியின் பெருமை பேசுவதற்கென்றே அவதரித்ததாகக் கொண்டாடப் படுகிறது. ஸ்ரீராமாயணத்தில் பிரகாசிப்பது புருஷகாரவைபவம். "இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்பதை ஒரு ஸாரதமமான அர்த்தமாகக் காட்டுகின்றனர் நமதாசாரியர்கள். புருஷகாரமாம்போது வேண்டிய முக்கிய குணங்கள் க்ருபையும் பாரதந்த்ர்யமும் அநந்யார்ஹ ஶேஷத்வமும். இவையே ஸ்ரீராமாயணத்தில் பிராட்டியிடம் பிரகாசிக்கும் முக்கியமான குணங்கள் — அதிலும் பிராட்டி பாரதந்த்ரியமே வடிவெடுத்தவள் என்பதை மறுக்க முடியுமா?

இனி, க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீதேவியின் அவதாரமான ஸ்ரீ ருக்மிணிப்பிராட்டி பாரதந்த்ரியமே நிருபகமாக உடையவள் என்பது வெள்ளிடைமலை. ஸீதாபிராட்டியளவுக்கு இவள் சரிதம் ஸ்ரீபாகவதத்திலோ ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலோ பாரதத்திலோ காணக்கிடைக்கவில்லை. ஸத்யபாமையையே பலவிடங்களிலும் கண்ணனுடன் காண்கிறோம். இதனால் இவள் கண்ணனுக்கு சுச்ரூஷை பண்ணுவதிலேயே மனநிறைவு கண்டமை தெரிகிறது. குசேலோபாக்யானத்தில் இது நன்றாக வெளிப்படுகிறது. தனது பால்ய நண்பர், பரம பாகவதர் என்று கிருஷ்ணன் அவருக்கு உபசாரம் பண்ணும் போது ருக்மிணிப்பிராட்டி ஆலவட்டம் வீசிப் பணிவிடை செய்ததாகச் சொல்லப்படுகிறது. பகவத்பாரதந்த்ரியத்தின் எல்லை பாகவத பாரதந்த்ர்யமல்லவா? மிகவும் பரிவுள்ள இவளைக் கோப மூட்டிவேடிக்கைபார்க்க எண்ணிக் கண்ணன், "நான் உனக்குத் தக்க கணவனல்லேன்" என்று சில சொல்ல, அவள் மூர்ச்சித்தேவிழுந்து விட்டதாகவும், கண்ணன் அவளைத் தன் மடியிலிட்டுக்கொண்டு சைத்யோபசாரம் பண்ணி மூர்ச்சை தெளிவித்து ஸமாதானப்படுத்தியதாகவும் சரித்திரம். ருக்மிணியாக வெளியிட்டதும் பாரதந்த்ரியமும் அநந்யார்ஹத்வமுமே. தன் அநந்யார்ஹத்வத்தைத் தான் கண்ணனுக்கு அந்தணரொருவர் மூலமனுப்பிய ச்லோகமாலிகையில் தெள்ளத்தெளிய வெளியிட்டாளே.

ஸமீபத்தில் நமது ஆசிரியர் ஸுதர்சனர் ஸ்வாமி "விசிஷ்டாத்வைதமா விசிஷ்டத்வைதமா?" என்று விரிவான நிரூபணத்தை வெளியிட்டிருந்தார். அதன்பேரில் அந்த நிரூபணம் மிகவும் ருஜுவானது என்பதைச் சில பெரியோர்கள் தங்கள் கருத்தாகத் தெரிவித்ததையும் அநுபவித்தோம். "பிராட்டி ஜீவகோடியிலே சேர்ந்

acharya.org

தவளே, எம்பெருமானுக்குள்ள விபுத்வமும் வியாப்தியும் ஈச்வரத்வமும் இவளுக்குண்டு என்பதற்கு ப்ரமாணமேதும் கிடையாது. இப்படி ஒரு சாரார் சொல்லுவதும் பிரசாரம் பண்ணுவதும் வைதிக ஸித்தாந்தத்துக்கு ஒவ்வாது'' என்பதை ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் P B A ஸ்வாமி "தேசிக ஹ்ருதயம்" என்ற தமது நூலில் நிலை நாட்டியுள்ளார். ஸுதர்சனர் ஸ்வாமி இவ்விஷயத்தில் நிகமாந்த மஹாசாரியரின் திருவுள்ளத்தைத் தெள்ளத்தெளிய எடுத்து விளக்கியுள்ளார். இது அசைக்கமுடியாத உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புப் போலவே அமைந்துள்ளது. நடுநிலையாளர்கள் கருத்துத் தெரிவிக்க வேணுமென ஸுதர்சநர் ஸ்வாமி கேட்டுக்கொண்டுள்ளபடியால், அவதாரங்களில் பிராட்டியிடம் பிரகாசிக்கும் குணங்களை விவரித்து, பாரதந்த்ரியமும் புருஷகாரத்வமுமொழிய ஸ்வாதந்த்ரியமோ உபாயத்வமோ சொல்ல வேதோபப்ருஹ்மணங்களான இதிஹாஸபுராணங்களில் சான்றேதுமில்லை என்று காட்டுவதற்காக ஸீதாபிராட்டி ருக்மிணிப்பிராட்டிகள் வெளியிட்ட குணாதிசயங்களை விமர்சிக்கலாயிற்று.

இந்த ஜகத்தில் எவையெல்லாம் காணப்படுகிறதோ கேட்கப்படுகிறதோ (பேசப்படுகிறதோ) அவையெல்லாவற்றையும் உள்ளும் புறமுமாக நாராயணன் வ்யாபித்துநிற்கிறான்-''அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண:ஸ்தித:''என்பது மிகப்ரஸித்தமான ச்ருதி வாக்கியம். 'தத்ஸர்வம்' என்பதில், ''மதேககவர்ஜம் கிமிதம் வ்ரதம் தே'' என்று பரமாசார்யர் கேட்பதுபோல் பிராட்டி விலக்கா? ''ந தத்ஸமாஸ்சாப்யதிகஸ்ச த்ருஸ்யதே'' ''ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா'' என்பது உபயவேதாந்தங்களிலும் ஸித்தாந்தமான விஷயமாக இருக்க, 'பிராட்டிக்குப் பரமபுருஷனுக்கு ஸமமாக எல்லாப்பெருமைகளுமுண்டு' என்பது எப்படிச் சேரும்? ஜகத்காரணதத்வமே பரம்பொருள். இவனே ஸர்வேச்வரன்—நாராயணன் என்பது வைதிக ஸித்தாந்தம். ''ஸ்வாபாவிகானவதிகாதிஸயேசித்ருத்வம் நாராயண த்வயி ந ம்ருஷ்யதி வைதிக: க:?'' என்ற பரமாசார்ய வசநப்படி நாராயணனையொழிய மற்றொருவரிடமும் இயல்பான ஈச்வரத்வம் சொல்பவன் வைதிகனேயல்லன்: ''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்,ஏகமேவ அத்விதீயம்'' என்று இவன் அத்விதீயதத்வம் என்று விசிஷ்டாத்வைதம் நிலைநாட்டப்பட்டது நாராயண சப்தத்துக்கு அர்த்தம் கண்டால், அவன் சிதசித்விசிஷ்டனான ஸர்வேச்வரன் என்று விளங்குகிறது இப்படி அத்விதீயமான காரணவஸ்துவான பரப்ரஹ்மம் ஜகத்ஸ்ரீ என்று பூர்வாசார்யர்களாலும் அவர்களைத்தழுவி பகவத்பாஷ்யகாரராலும் நன்றாக நிலைநாட்டப்பட்டு நமது எம்பெருமானார் தரிசநம் (ஸித்தாந்தம்) விசிஷ்டாத்வைதம் என்று ப்ரஸித்

தமாயுள்ளது. சித்து, அசித்து என்ற தனித்தத்துவங்களைத் தன்னிடமிருந்து பிரிக்கமுடியாத விசேஷணங்களாகக் கொண்ட விசிஷ்டதத்வம் அத்விதீயனான ஸர்வேச்வரன். உபப்ருஂஹணமான இதிஹாஸத்திலும் நான்முகன் "ஸீதா லக்ஷ்மீ:-பவான் விஷ்ணு:" என்று அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டு. "ஜகத்ஸர்வம் சரீரம் தே" என்று பெருமானுக்கு மட்டுமே ஜகச்சரீரத்வத்தைச் சொன்னான். சிதசித்விசிஷ்டமான காரணப்பொருள் ஒன்றேயன்றி இரண்டல்ல என்பதனால் இந்த ஸித்தாந்தம் விசிஷ்டாத்வைதமாயிற்று. விஷ்ணுவையொத்த வ்யாப்தியைப் பிராட்டிக்கும் சொன்னால் விசிஷ்டாத்வைதம் மாண்டு விசிஷ்டத்வைதமே ஸித்தாந்தமென்றதாகும். இப்படிச்சொல்வது எம்பெருமானுக்கும் ஆசார்யர்களுக்கும் பண்ணும் மஹத்தான த்ரோஹமாகும்.

பிராட்டிக்கு ப்ரதான நிர்தேசமான 'ஸ்ரீ:' என்ற திருநாமத்திற்கு முக்கியமாக இரண்டுபொருள்கள் காட்டப்பட்டன, 'ச்ரயதே' [இவளொருவனைப் பணிகிறாள்] என்றதனால் சேஷத்வமும் பாரதந்த்ர்யமும் தேறின. 'ஸ்ரீயதே' (அந்த ஒருவனைத் தவிர்த்து யாவராலும் ஸேவிக்கப்படுகிறாள்) என்றதனால் பத்நீத்வப்ரயுக்தமான ஸ்வாமித்வம் தேறிற்று. பரமாசாரியரும் சது:ச்லோகியான ஸ்ரீஸ்துதியால் 'லோகைகேச்வரி' என்று விளித்து உடனே 'லோகநாததயிதே' என்றார். ஜகந்நாதனின் பத்நி என்றதால் லோகைகேச்வரியாகிறாள் என்று காட்டப்பட்டது. "அஸ்யேசாநா ஜகத: விஷ்ணுபத்நீ" என்ற ச்ருதியைத்தழுவியது இது திருவுக்கும் திருவாகிய செல்வன் ஸர்வேச்வரன் என்பது ஆழ்வார் திருவாக்கு. "ஆலவாலோக க்ருஹயஜமானனுக்கு எழுதினாலும் பணி செய்வது க்ருஹிணிக்கிறே" என்பது உலகாரியன் வாதிப்பது, க்ருஹிணி என்று க்ருஹஸ்தனுடைய பத்நியைச் சொல்லும்படி. ப்ரதானமான உரிமை க்ருஹயஜமானனுடையதே என்பதை மாற்றவே முடியாது,

"அரியலலால் தேவியில்லை" என்ற சைவர் (அப்பர்) தேவாரத்துக்குப்பொருள் கூறும்படி வைசைத்தலைவன் கேட்டானும், அதற்கு நம்பிள்ளை "உங்கள் தேவனுக்கு இது ஒரு பெருமையென்று சொல்லுகிறாயோ? பெண்வேடமணிந்த ஆண்பிள்ளை என்று நன்கறிந்தும் அப்பெருமகன் பின்னே ஒருவன் அலைந்தான் என்பதுசிவனுக்குப்பெருமையாகாது, இதைச்சொன்னவன் அநாப்தன் (அறிவிலி அல்லது பொய்யன்) என்று கொள்வதே தக்கது" என்று பதிலளித்தாராம், அதுபோலே ஸகல சாஸ்திரங்களுக்கும், எம்பெருமானார், பட்டர், தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்துக்கும் முரணாகப் பிராட்டிக்கு, ப்ரஹ்மத்வத்தையும், துல்யமான ஈச்வரத்வத்தையும், ஸ்வாதந்த்ர்யத்தையும் சொல்லுகிறவர்கள் அநாப்தரே.

acharya.org

6. ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் ஒருவனே

[Dr. M வரதராஜன். தமிழ்ப்பேராசிரியர்
வேங்கடேச்வரா ஸர்வகலாசாலை, திருப்பதி]

ஜூன் மாத ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன இதழில் தேவரீர் எழுதிய 'விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?' என்ற கட்டுரையை ஆழ்ந்து படித்தேன். தேவரீருடைய அறிவுத் திறனைக்கொண்டு பலப்ரமாணங்களைக்காட்டி, பிராட்டியின் பெருமையை (நிலைமையை) நிலைநாட்டியதற்குமேல் யார் என்ன எழுத முடியும்? 'எண்ணிலும் வரும்' என்கிறபடியே 26 என்ற எண்ணுக்கு இலக்கான எம்பெருமானைப்பற்றி — 26-வது தத்துவம் ஒருவனேயன்றி, இருவரல்லர் என்பது பற்றி, தேவரீர் 26 பாராவில் விளக்கம் அளித்தது குறிப்பிடத்தக்கதாகும். எனினும் நம் தர்சனத்தில் சிலருக்கு இப்படிப்பட்ட மருள் ஏற்படவேண்டாம். எம்பெருமான் ஸங்கல்பம—தன்னில் தான் பிணக்கிடும் சமயம்போல் வைணவசமயத்தில் ஒருசிலரைக் கலங்கவைக்கிறான் போலும். தேவரீர் ஸுப்ரஸித்தமான ப்ரமாணங்களைக்காட்டி நிலைநாட்டியது இளைய தலைமுறைக்கு உள்ளபடி நம் தர்சனத்தை அறிய வழிவகுத்ததாகும்.

நடுநிலையாகச் சொல்லப்போனால் மேலைநாட்டறிஞர்களும் தத்துவ ஞானிகளும் பலர் நம் தர்சனத்தை நன்கு ஆராய்ந்து தேவரீர் காட்டியபடியே ஈச்வரன் ஒருவனே என்பதையும் "பிராட்டி (லக்ஷ்மி) எம்பெருமானுக்கு வசப்பட்டவளே" என்பதையும் பலபடியாக எழுதியுள்ளனர்.

எடுத்துக்காட்டாக 1916ல் வெளிவந்த Introduction to the Pancharatra and the Ahirbudhnya Samhita என்ற புஸ்தகத்தில் Dr. F. Otto Schrader கருத்தாவது:—

"In spite of frequent assurances as to the real identity of Lakshmi and Vishnu, the two are actually regarded as distinct: even in Pralaya they do not completely coalesce but become only 'as it were' a single principle (Ah.S.4.78), the Lakshmi eventally emerging from the Great Night being the old Lakshmi, not a new one. The mutual relation of the two is declared to be one of inseparable connection or inherence like that of an attribute and its bearer (dharma, dharmin) existence and that which exists (bhava, bhavat) I ness and I (ahamta, aham), moonshine and moon, sunshine and sun. Still, the dualism is, strictly speaking, a makeshift for preserving the transcendent character of Vishnu: Lakshmi

acharya.org

alone acts, but everything she does is the MERE EXPRESSION OF THE LORD'S WISHES. (p. 30)

தத்துவ ஞானியான Dr Bharatan Kumarappa, 1934ல் வெளியிட்ட The Hindu conception of the Deity as culminating in Ramanuja என்ற புஸ்தகத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"In order to preserve the transcendent character of Vishnu Lakshmi is also regarded as a principle eternally distinct from the Deity". (p. 103)

தத்துவஞானியான P. N. Srinivasachari எழுதிய The Philosophy of Visisktadvaita (1943) என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

"The two, Isvara and Sri, are one ontologically but different functionally owing to the redemptive needs of the jiva. In the interest of redemption, Lakshmi becomes the Iswari of Iswara and changes His law of Karman into the rule of krupa........ He is the only Saranya or refuge and strength of the jiva... He is the only Upaya and UPeya" (p. 389-90)

இவ்வண்ணமாக மேலை நாட்டவர்களும், ஆங்கிலமறிந்த தத்துவஞானிகளும் விசிஷ்டாத்வைதத்தில் எம்பெருமான் ஒருவனே ஒப்பாரும் மிக்காருமில்லாத பரம்பொருள் என்று காட்டியுள்ளனர்.

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

கடந்த சிலமாதங்களாக விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃தா₄ந்தத்தில் ஸ்ரீதேவியாகிற மஹாலக்ஷ்மியின் ஸ்தானம் பற்றி ஒரு சர்ச்சை நடைபெறுவது நம் அன்பர்கள் அறிந்ததே. ஸ்ரீதேவியைப்பற்றிய தென்னாசார்யர்களின் கருத்தில் இன்று வரையில் விவாதம் எதுவுமில்லை. ஸ்ரீவேதாந்ததேசிகர் அவருக்கு முன்னிருந்த ஆசார்யர்களோடு ஸ்ரீதேவியின் ஸ்தானம் பற்றிய விஷயத்தில் கருத்து வேற்றுமையைத் தம் கிரந்தங்களில் தெரிவித்திருக்கிறார். சதுःஶ்லோகீ பா₄ஷ்யத்தில் தமக்கு முற்பட்ட ஆசார்யர்களிடம் ஸ்ரீதேவியைப்பற்றிய ஐந்து விதமான கருத்துக்கள் நிலவியதைக் குறிப்பிட்டு, அதில் ஏதேனுமொன்று உண்மையானது என்று கூறி, தம் கருத்து இன்னதென்று தெளிவாகக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார். அவருடைய ஸகல கிரந்தங்களையும் நடுநிலை நின்று ஆராய்ந்தால், பிராட்டிக்கு அப்ரதானமான உபாயத்வம், அப்ரதானமான ஜகத்காரணத்வம், ஏகோந சேஷித்வம், ஜகத் வ்யாபகத்வம் ஆகியவற்றை அவர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்றும், பிராட்டி எம்பெருமானுக்கு சேஷபூதை என்பதில் அவ

acharya.org

ருக்குக் கருத்துவேற்றுமை இல்லையென்றும் விளங்குகிறது. இவை யெல்லாம் அவர் காட்டியிருக்கும் நாலாவது பக்ஷத்திற்கே மிகப் பொருந்தியிருக்கிறது. நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தோடு முரண்படாமலும் இருக்கிறது. ஆனால் ஒருசில நூற்றாண்டுகளுக் குள் இருந்த ஸாக்ஷாத் ஸ்வாமி போன்ற தேசிக ஸம்ப்ரதாயஸ்தர் களான சிலபெரியோர்கள் தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தையே திருவுள்ளம்பற்றியிருக்கிறார் என்றும். பிராட்டிக்கு எம்பெருமானுக் குத் துல்யமான முக்₂யேஶ்வரத்வம் உண்டு என்றும், முக்₂யமான ஜக₃த்காரணத்வம், உபாயத்வம் முதலானவை உண்டு என்றும். பிராட்டி எம்பெருமானுக்கு சரீரமல்ல, ஸ்வாதந்த்ரியமே அவளுக்கு இயல்வானது என்றும். 'ஆயினும், அவள் ஜக₃த்₃வ்யாபாரத்தை சக்தியிருந்தபோதிலும் செய்வதில்லையாகையால் அவளுக்கு ப்₃ரஹ் மத்வம் கிடையாது' என்றும் தம் நூல்களில் எழுதிவைத்தார்கள். மற்றும் சில பெரியவர்கள் 'பிராட்டிக்கு ப₄கவச்சரீரத்வமும் ப்₃ரஹ் மத்வமும் உண்டு' என்று எழுதிவைத்தார்கள். இவையனைத்தும் தேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் மிகவும் முரண்பட்டிருப்பதை நாம் பல வருடங்களாக ஸ்ரீஸூக்த வ்யாக்₂ யானம் முதலானவற்றில் எடுத்துக் காட்டிவந்தோம். சமீபத்தில் சென்னை தரமணி ஹயக்ரீவ வித்₃யாபீட₂த்தின் ஆதரவில் வெளி வரும் "காஞ்சீ பேரருளாளன்" என்னும் பத்திரிகையில் பிராட்டி யின் ஸ்வரூபத்தைப் பற்றி ஒரு கட்டுரைத் தொடர் வெளிவந்தது. அதுபற்றி நடுநிலைநின்று விமர்சித்து 'விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷ ணம்' என்னும் கட்டுரையை ஸுதர்சனத்தில் எழுதி, வித்வான் களின் மனஸ்ஸாக்ஷியைக் கூறித்துச் சிலகேள்விகளையும் கேட்டிருந் தோம். பல வித்வான்களை நேரிலும் வித்வத் ஸதஸ்ஸிலும் இது பற்றி நடுநிலைநின்று எழுதும்படி கேட்டுவந்தோம். முதலில் எல்லா வித்வான்களும் எழுத மறுத்து வந்தனர். மூன்று வருடங்களுக்குப் பிறகு திருவஹீந்த்ரபுரத்தில் வசிக்கும் மதுராந்தகம் ஸ்வாமியின ஜாமாதாவான நா. வரதாசார்யஸ்வாமி 'யதார்த்த விசிஷ் டாத்வைத ஸித்₃த₄ாஞ்ஜனம்" என்னும் சிறுபுத்தகத்தை நம்மு டைய விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணத்திற்குப் பதிலாக வெளியிட் டார். அதற்கு மேல் "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?" என்னும் தலைப்பில் நமது பக்ஷத்தையும் 'நா. வ' பக்ஷத்தையும் 26 பாராக்களில் வெளியிட்டு இதில் எந்தப் பக்ஷம் விசிஷ்டாத்வைதத் திற்குப் பொருத்தமானது என்று தீர்ப்பளிக்க வேண்டுமென்று நடுநிலையாளர்களைக் கேட்டுக்கொண்டிருந்தோம், இதுவரையில் சென்னை K ஜகந்நாதன் ஸ்வாமி என்னும் தேசிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ ரான நமது வாசகரும், ஸ்ரீமத்பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமியும். சென்னையில் ஸ்ரீபா₄ஷ்யாதி₃ ப்ரவசனம் செய்துவரும் திருப்புல்லாணி ஸ்ரீ உ வே ஸுந்தரராஜய்யங்கார் ஸ்வாமியும். ஸ்ரீரங்கத்தில் வாழும் ஸ்ரீ உ வே பராசரஸுதர்சன பட்டர் ஸ்வாமியும். சென்னை திருவல்லிக்கேணி 'யதிராஜ பாதுகா' ஆசிரியர் ஸ்ரீ உ வே V V ராமானுஜஸ்வாமியும், திருப்பதி வெங்கடேஶ்வரா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் M வரதராஜன் ஸ்வாமியும் 'நா. வ'

வின் பக்ஷம் தேசிகனுள்ளிட்ட அனைத்துப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி களோடும், அனைத்து ப்ரமாணங்களோடும் சிறிதும் பொருந்தாது என்றும், "தேசிகன் நாலாவது பக்ஷத்தைத் தழுவியவர்" என்று சொல்வதே அவருடைய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் மற்ற பிரமாணங் களுக்கும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கும் பொருத்தமானது என்னும் நமமுடைய பக்ஷமே ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவராலும் ஆதரிக்கத்தக்கது என்றும் பல பிரமாணங்களைக்காட்டித் தீர்ப்புகள் வழங்கியுள்ளார்கள். இதுவரையில் நம்முடைய பத்திரிகையைப் பெற்று வரும் தேசிக ஸம்ப்ரதாயஸ்தரான வித்வான்கள் எவருமே இதுபற்றி ஒன்றும் எழுதாமல் இருக்கிறார்கள். பூர்வாசார்யர் களுக்கு மிகவும் பிற்பட்டகாலத்தைச் சேர்ந்த பெரியவர்கள் பலர் "ப்ரஹ்ம ஸ்வரூபத்துக்கு ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தங்களாகிற குணங்கள் உண்டு" என்பது போன்ற ஶாஸ்த்ரஜ்ஞர்கள் எவரும் ஏற்கமுடியாத பல விஷயங்களைப் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். பெரிய ஸ்தானத்திலிருந்த போதிலும் அத்தகைய வர்களின் பக்ஷங்களை அவர்களுடைய சிஷ்யர்களே ஏற்பதில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. இந்த விஷயத்திலும் ஸாக்ஷாத் ஸ்வாமி முதலான பிற்பட்டவர்கள் தேசிகன் முதலான பூர்வா சார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கு முரணாக எழுதியுள்ளார்கள் என்று பல நடுநிலையாளர்கள் தீர்ப்பளித்திருக்கும்போது தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான வித்வான்கள் இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும், முடிந்தால் "பிராட்டிக்கு ஸ்வாதந்த்ரியத்தை யும் முக்யமான ஜகத்காரணத்வத்தையும், தேசிகன் முதலான பூர் வாசார்யர்கள் இன்ன இன்ன இடங்களில் காட்டியிருக்கிறார்கள். ப்ரஹ்மத்வத்தையோ அல்லது துரீயமான ஈஶ்வரத்வத்தையோ இன்ன இன்ன இடங்களில் காட்டியிருக்கிறார்கள்; பிராட்டி எம் பெருமானுக்கு ஶரீரமல்ல என்று இன்ன இன்ன இடங்களில் அருளிச்செய்திருக்கிறார்கள்" என்று எடுத்துக்காட்டவேண்டும். அப்படி முடியாவிட்டால் தேசிகன் நாலாவது பக்ஷத்தையே தழு வியவர் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். பாண்டியில் வாழும் ஸ்ரீ உ வே N S ராமானுஜதாதாசாரிய ஸ்வாமியிடம் நாம் பிரார்த் தித்தபடி அவர்கள் வித்வான்களின் ஸதஸ்ஸைக் கூட்டி அதில் நிர் ணயம் செய்தும் நமக்கு அனுப்பலாம். அவ்வாறு ஸதஸ்ஸைக் கூட்ட இயலாவிடில் தனிப்பட்ட முறையிலும் நமக்கு எழுதலாம். அவர்களுடைய தீர்ப்பு நம்மோடு முரண்பட்டிருந்தாலும் அவற் றையும் ஸுதர்சனத்தில் ஸ்ரீதத்வஸர்வஸ்வத்தில் மற்ற தீர்ப்பு களோடு வெளியிட்டு, பிற்காலத்தில் வரும் அறிவாளிகளின் முடி வுக்கு விட்டுவிடுகிறோம். இவ்விரண்டுவழிகளில் ஒன்றைக் கைக்கொள்வதே ப்ராமாணிகர்களின் வழி; மௌனமாயிருப்பது அல்ல. தேசிகஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்களில் சிலராவது இந்த நம்முடைய பிரார்த்தனையை ஏற்பார்கள் என்று நம்புகிறோம்,

acharya.org

7. VISISHTADVAITA OR VISISHTA-DVAITA?

Sri Desika Dasa Sri U. Ve K Varadhadesikachariyar Bsc., BL. Advocate, Villupuram

Though I am an ardent devotee of Sri Vedanta Desika, I bear no ill-will or hatred towards other sampradayas. As the Editor of Sudarsanam has been repeatedly pointing out in his journal and his works, there should be tolerance among different religious sects, since doctrinal differences and religious beliefs can not be wiped out or eradicated all of a sudden. Each should follow his own Sampradaya according to the tenets and philosophy preached by his Acharya. But when differences arise as to what exactly a particular Acharya has preached on any particular aspect of religion such a controversy has got to be determined and resolved solidly on the 'Pramanas' and authoritative statements of the Acharya concerned, in his different works and the particular stand taken by him. Mainly because one is very well learned in Tarka (logic), one should not ventilate his own views on mere logical arguments without having due regard for the adverse consequences of such ill-conceived logical arguments Even Sri Vedanta Desika has declared that by resorting to logical arguments (Tarka) alone, he could prove that white is black or black is white and that he could make and unmake things; but as he is a 'Pramanica' he is not willing to deviate from the path chalked out by his great Acharya Sri Ramanuja and from what he actually preached and stood for.

Though I am a lay man with limited knowledge about the abstruse aspects of the philosophy in general, I am closely following the articles in Sudarsanam on the above controversies raised by the Editor about the theological status, rank and position of Lord Narayana's Divine Consort Sridevi. In my humble opinion, to say that Sridevi is an Independant over-lord or over-lady equal to Lord Narayana in all aspects of creation, sustenance and destruction is to offend against what our poorvacharyas such as Sri Ramanuja and Sri Yamunacharya have formulated as the philosophy of Visishtadvaita on the status and rank of the Divine Consort Sridevi. In the above context, I would like to bring to the notice of our readers

acharya.org

the following excerpts and extracts from chapter 18 entitled "The Divine Consort-Sri—The Problem of the Unity of the Divine Nature" in the book, "The Theology of Ramanuja" by John Braisted Carman (This book is available with Ramanuja Vani Office, 10, South Mada Street. Triplicane, Madras-5.)

PAGE : 239:— "Embedded in his defence of the Divine form and all the entities which accompany God in that form is a very brief description of the Divine Consort refered to with the title Mahisi (queen or chief consort), She is of matchless glory with respect to Her essential nature, beautiful form, qualities, manifestations (Vibhava), dominion (aisvarya), gracious conduct (sila), and so on, qualities that are pleasing and appropriate to Him (Narayana), Almost exactly the same words are used in describing Sri in the introduction to the Gitabhasya, with "auspicious qualities" taking the place of "glory" (mahiman). It is also incorporated, with minor variations, into the two prayers of surrender in the Saranagatigadya, the first to Sri and the second to Narayana. Since Ramanuja no-where amplifies or explains this brief definition of Sri, it is difficult to interpret it precisely, but it seems to imply both a close likeness in nature to Narayana and A CLEAR SUBORDINATION TO HIM"

PAGE 243:— "If we return to Ramanuja's terminology in the Vedarthasamgraha, we see that he is defending more than the possibility of the supreme Person's having a Divine Consort. He is trying to establish the fact that the actual Divine Person has that particular Consort who is pleasing to Him and in accordance with His nature. Since Sri is a separate person, She may also be separately addressed and that is what is done at the beginning of the Saranagatigadya. EVEN WHEN SHE IS ADDRESSED, HOWEVER, HER SUBORDINATION TO THE SUPREME LORD, NARAYANA, IS MADE CLEAR. Whereas Yamuna uses hyperbole and metaphor, Ramanuja (or possibly his disciple, in the case of the Saranagatigadya) tries TO EXPRESS BOTH THE SUBORDINATION AND THE INTIMACY OF RELATIONSHIP IN MORE ABSTRACT CONCEPTS.

acharya.org

"Both Yamuna and Ramanuja wanted to guard against the Consort being conceived as the immanent power in material nature who is in some sense over against the transcendent Deity. Their successors in the Sri Vaisnava tradition remained faithful to their teaching at this point, for they never accepted the Tantric view that the Consort of Narayana was the active creative principle in Her own right. the Sakti. The very fact that Yamuna and Ramanuja had effectively excluded this doctrinal deviation however, made it all the more likely that some other way would be found to differentiate between the Lord and His Consort. The possibility of independent and prior address to the Goddess before praying to the Lord was reinterpreted as a distinction in a function between Narayana and Sri corresponding to a difference in their inherent natures. This difference was drawn along the line which Ramanuja had felt as the line of tension in the one Divine nature: between God's supreme inaccessibility on the one hand and His gracious accessibility to creatures on the other. In Ramanuja's own thougt, that tension is maintained because no distinct function is assigned to Sri, for both in the supreme form and in the various incarnate forms, She does nothing but accompany Her Divine Husband and Lord (Sriyah pati), Bhagavan Narayana."

PAGE 244:— 'Pillan paraphrases (6, 10, 10 of Thiruvoimozhi) as follows: "Being without any other refuge and without any other aim, after having taken the Great Goddess (Sri) as my mediatrix (purusakara), I have taken refuge with Thee." This seems to be the first appearance of the term that both later schools of Sri Vaisnavas were to use regularly to describe the mediatorial function of the Goddess Sri. She is the purusakara, the one who recommends the sinful soul to Lord Narayana for the bestowal of His grace. In view of Pillan's general faithfulness to his teacher's position, the possibility should be considered that this reflects Ramanuja's view-point on Sri. It seems to me more likely, however, that this is one of the points where Ramanuja's disciples were somewhat closer to sectarian Sri Vaisnava doctrines, especially of the Tamil tradition, than was their master."

acharya.org

PAGE 245:— "K. V. Varadachari suggests that it was in reaction to this tendency that "Vedanta has sternly to revert to the Neuter and the Transcendental (nirguna) aspect of the Deity, Brahman. However, the very quotation he gives from Sankara's hymn suggests a different explanation, namely, that Sankara (or, if the hymn is not composed by him, his school) accepted this same Tantric polarity between Siva and Sakti but emphasized in philosophical thought the other pole: the transcendent Siva far removed from the incessant activity and accompanying change of the transient universe. At the lower level of devotion. as in this hymn, the immanent "power" aspect of Deity could be fully and even extravagantly acknowledged.

Varadachari goes on to state that the Vaisnava Agamas "accept the Motherhood of God along with tha Fatherhood of God"

IT CAN BE STATED HOWEVER, THAT THE MOTHER HOOD OF GOD HAS ALWAYS HELD A SUBORDINATE POSITION TO THE FATHERHOOD OF GOD: love has always been subordinated to Law and Sovereign Being. Power bas always been subordinated to Truth. Though the precise ratio or rationale of subordination has remained undetermined, ... The mother Sri is thus the fullest consciousness power of the Divine Purusottama and in Sri Vaisnava theology, She is approached as the Mother who leads us as the agent of our ascent to the Lord which she fulfills through Her Illimitable Grace and knowledge. This distinction in doctrine between Saivas and Vaisnavas leads to a difference in practice.

In the Yoga of Sri Vaisnavism in general, there is no place for dionysiac worships of Kali in the pure power-aspect. Sri Vaisnavas make the mother the agent of our transformation on Satvik lines as Maha-Lakshmi or Sri who ever resides in the supreme Purusa—Purusottama, Narayana or Visnu; the omnipervader God is the means (upaya) and the goal (upeya) and Mother is the agent, the purusakara.

acharya.org

According to Otto Schrader, the Tantric distinction between the God and the Goddess is also characteristic of the Pancaratra Agamas."

PAGE 246:— "In any event, Yamuna and Ramanuja did not understand the Pancaratra to teach such a Tantric distinction between the Lord and His Consort. Their non-Tantric conception of the Divine nature prevailed in subsequent Sri Vaisnavism.

What is striking about the theology of Ramanuja how ever, is that while the polarity between supremacy and accessibility is clearly present, there is no division of functions between God and His Consort. It is Ramanuja's concern for the unity of the Divine nature that leads him to guard so carefully against the possibility of any second ultimate cause. It is this same exclusive monotheism that may well account for the fact that in his system the Goddess has no special function different from Her Lord's. She simply accompanies Him in all of His states"

In the face of the above indisputable and uncompromising stand of our poorvacharyas on the subordinate rank and status of Sri, the attempt of the modern scholars of Desika Darsana to equalise Sridevi to her Lord Narayana in all the aspects is only to bring into Vaishnavism the concepts of Saivism and Saktaism about the separatability and independent status and rank of Siva and Sakthi. These attempts will militate against the basic concepts and doctrines of Visishtadvaita philosophy and will cut at the very roots of the philosophy which has been formulated and consolidated by the poorvacharyas such as Yamunacharya, Ramanuja and Vedanta Desika making great sacrifices. The attempt is only to develop a dichotomy between Sri Ramanuja Darsana and Sri Desika Darsana. I would like to question whether Desika Darsana is in any way different from and contrary to Sri Ramanuja Darsana and whether Sri Vadanta Desika has not followed in the foot steps of his revered Poorvacharyas particularly Sri Ramanuja and whether he has broken a new ground

acharya.org

on basic concepts of the philosophy of Sri Ramanuja. If the modern trend among the scholars of Sri Desika Sampradaya is allowed to proceed only on grounds of Tarka and logical arguments without having any regard for pramanas and without any check, I shudder to think as to what would happen to Desika Darsana proper and as to what is in store for the true and genuine and bonafide disciples of Sri Vedanta Desika in centuries to come. God forbid if Desika Darsana disintegrates in future owing to internal and internecine feuds and fissures and frictions. Then it would become indefensible and vulnerable against external forces, impacts and attacks. We should not propound a dichotomy and irreconcilable differences between Sri Ramanuja Darsana and Sri Desika Darsana. If we do so, we will cease to be true and faithful disciples of those great Acharyas. Though I do not agree with what all is said by Thennacharya Sampradayins on the status and position of the Divine Consort of Lord, I do not subsh cribe to the modern and latest views and developments that as per Desika's philosophy, 'Sri' is an independent deity without being subordinate to her Lord Narayana and that she has got all powers equal to that of her Lord. The learned pundits of Sri Desika Darsana have got a moral and spiritual duty to lead guide and inform the laity among Desika devotees on proper, correct and truthful lines, without their being lost in wilderness and without being led astray. I do not want to enter into deeper concepts on this question and I am quite content with what all I have stated above as it is a matter of my conscience and as I am concerned with the future and the contigious integrity of Sri Ramanuja Darsana and Sri Desika Darsana without any unwarranted and unjustified polarisation of the two Darsanas. The truth does not die on the cross; nor does it perish in the poison-cup. Be thou true to thyself, thouh can'st not then be false to others. "Satyameva Jayathe".

acharya.org

ஸ்ரீதத்வஸர்வஸ்வம்—தீர்ப்புகள்

8. திருமகள் பற்றிய வாதங்கள்

[டாக்டர் E S. V. நரஸிம்ஹாசாரியர்,
ஆஸ்தானவித்வான், அஹோபிலமடம், ஸ்ரீரங்கம்]

ஸ்ரீஸுதர்சனம் ஆசிரியரும் என் நண்பருமான ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களும் பரமஸுஹ்ருத்தான நாவல்பாக்கம் ஸ்ரீ உ. வே. வரதாசார்யரும் பத்திரிகைகள் வாயிலாக திருமகளின் நிலை பற்றி வாதப்பிரதிவாதங்களைச் செய்து வருகின்றனர். நடுநிலையாளர்களிடம் தீர்ப்பு எழுதுமாறு ஸுதர்சனம் ஆசிரியர் கேட்டபடி பலரும் அப்பத்திரிகைக்கு விடையும் எழுதியுள்ளனர், எல்லோரும் அவரை ஆதரித்தே எழுதியுள்ளனர்.

ஆனால் என் கருத்து மாறுபட்டதாயிருக்கும். ஆதலின் கூச்சத்துடனே இதை எழுதுகிறேன். இதனால் அவரது நட்புக்கோர் கோத்தை வாராதென்று துணிபுண்டு.

தாயாருக்கு இருசாராரும் ஈச்வரத்வம்-சேஷித்வம் முதலிய சில தர்மங்களைப் பெருமானுக்குச் சமமாக ஏற்கின்றனர். சரீரத்வம் ப்ரஹ்மத்வம், ஜகத்காரணத்வம் போன்ற தர்மங்களைத் தாயாருக்கு ஒரு சாரார் மறுக்கின்றனர். மற்றவர் உளதென்று ஏற்கின்றனர். நூற்றுக்கணக்கான ஆதாரங்களை இருசாராரும் தத்தமக்கு ஏற்றவையாகக் காட்டுகின்றனர். அனேகமாக நுணுகி ஆராய்பவர் மிகச்சிலரே. அடியேன் இருதரப்புவாதத்தையும் பல முறை பரிசீலித்ததில் ஒரு முடிவுக்கு வந்தபடி இங்கு விஜ்ஞாபிக்கிறேன். ஒரேவிதமாக பிடிவாதமான ஒருகருத்தையே உள்ளத்தில் தீர்மானம் செய்து கொண்டு-பரிசீலனை செய்தால் நம் உள்ளத்திலுள்ளதே வெளியே பிரதிபலிக்கும். அதனால் பிடிவாதமே உள்ளத்திலும் நிலைபெறும். இனி விஷயத்தை ஆய்வோம்.

எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தின் துவக்கத்திலே "ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்று அருளியதை முதலில் உள்ளத்தில் பதியவைத்துக்கொள்ளவேண்டும்.

1 அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கை யுறைமார்பனான திருமாலே-ஸ்ரீநிவாஸனே பரப்பொருள் —பரப்ரஹ்மம் என்பது நம்மதம். அவளின்றி அவனில்லை. அவனின்றி அவளில்லையென்றவாறு நித்திய ஸ்ரீயோகமுள்ள ஸ்ரீநிவாஸனே ப்ரஹ்மம் அதனைக்

acharya.org

கொண்டே இணைபிரியாத இந்த திவ்ய தம்பதிகளையே—சர்வசேஷி யாகவும் சர்வசரீரியாகவும் கருதி "உபயாதிஷ்டானம் ச ஏகம் சேஷித்வம்" என்று பூர்வர்கள் அறுதியிட்டனர்.

2 எந்தெந்த இடத்தில் தனியே நாராயணன்—ப்ரஹ்மம் பேசப்பட்டாலும் அங்கெல்லாம் ஸ்ரீமந்நாராயணன்—ஸ்ரீவிசிஷ்ட ப்ரஹ்மம் என்றே பொருள் கொள்ளவேண்டும் என்பதாக "தத்3ந் தர்ப4ாவாத் த்வாம் ந ப்ருத2க் அபி4த4த்தே ச்ருதிரபி" என்று பட்டர் போன்றோர் உபபாதித்தனர். ஆதலின் ப்ரஹ்மம் என்பது ஜகத்தின் காரணம் என்றால் ஸ்ரீவிசிஷ்டமான ப்ரஹ்மமே காரணம் எனல் தகும். 'ஜகத்வ்யாபாரம் இல்லை' என்று ஸூத்ரகாரர் கூறியது முக்தர்களுக்கேயன்றி பிராட்டிக்கன்று.

ஒரு கட்டடத்தை ஒரு தனிகர் கட்டுவித்தார் என்றால்—தொழிலாளிகள் தான் ப்ரதான காரணம் தனிகர் அப்ரதான காரணம் என்று கூறுவது தகாது. மாற்றியுங் கூறல் பொருந்தாது. யாகாதிகளில் யஜமானன் தானே ஹோமாதிகளைச்செய்கையில், அவன் பத்னியை அப்ரதான கர்த்ரீ என்றும் கூறுவதில்லை, 'உபயோ: ஸஹாதிகாராத்'என்றவாறு தான ஹோமாதிகளில் இருவரும் ஸமமான அதிகாரமுள்ளவராகவே ஏற்கப்படுகின்றனர், அவர்கள் செய்யும் செயலைக்கொண்டு ப்ரதானம்; அப்ரதானம் எனப் பிரிப்பதில்லை. அதுபோல பிராட்டியின் இங்கிதமறிந்து உலகஸ்ருஷ்டி முதலியவற்றை எம்பெருமான் செய்கிறான் என்பதால் அச்செயல்கள் லீலையானபடியால் அவற்றால் கிடைக்கும் ஆனந்தத்தை இருவரும் பகிர்ந்து கொள்கின்றனர்

ஸ்வாமி தேசிகனின், 'த்வாமேவாஹு: கதிசிதபரே' —. என்ற ச்லோகத்திலும் 'உத்3தே3ச்யத்வம் ஜநநி ப4ஜதோ:' என்றே ச்லோகத்திலும் இந்த தாத்பர்யமே தலைதூக்கி நிற்கிறது. தம்பதிகள் இருவரும் சம அந்தஸ்து உள்ளவராயிருப்பினும் ஒருவர் திருப்திக்காக மற்றொருவர் செயலாற்றுவதால் ஒருவருக்கும் பிராதான்யமோ அப்ராதான்யமோ உறுதிப்படுத்த இயலாதவை.

3 பெருமாளும். பிராட்டியும் தமக்குள் ஆண்மைக்கும், பெண்மைக்கும் தக்கவாறு சிற்சில வ்யாபாரங்களைப் பிரித்துக்கொண்டு விட்டனர் என்பதைப் புரிந்துகொண்டவர்கள் இந்தச்செயலை இவர் ஏன் செய்யவில்லை? அதனால் அவருக்கு அச்செயல் செய்ய—இயலாது—உரிமையில்லை என வாதம் செய்வது தகாது. உதாரணமாக, நம் க்ருஹங்களில் பெண்டிர் சில காரியங்களையும், ஆண்

acharya.org

கள் சிலகார்யங்களையும் தத்தமக்கென வகுத்துக்கொண்டுள்ளோம். இவருள் மற்றவருக்கு ஒருவர் செய்யும் கார்யம் தெரியாதென்று, இப்படியென்றும் கூறுவது பொருந்தாது. அதுபோலவே பிராட்டிக்கு ரக்ஷகத்வ-நாசகத்வம் இரண்டிலும் சக்தியில்லை என்றவாதம் அதிவாதமாகும். ஸ்வரூபயோக்யதையுண்டு. செயலாற்ற முற்படுவதில்லை என்பதேயாம். மைதிலி, அரக்கியர்களைப் பாதுகாத்தாள். அஜ்ஞாத நிக்ரஹை [தண்டிப்பதையறியாதவள்] ஆனபடியால் இராவணனை பஸ்மமாக்கும் சக்தியிருப்பினும் அவ்வாருக்கவில்லை. பதியினிடம் பரதந்த்ரையானதாலும். கற்பெனும் தபஸ்ஸைக் காத்து நின்றமையாலும் அவனையழிக்கவில்லையென்கிறாள்.

4 பாரார்த்யம்—பரார்த்ததை பரமாத்மாவுக்கே தானுரியவள் என்பது நூற்றுக்கணக்கான ச்ருதிகளால் நிரூபிக்கப்பட்டதென்கிறதற்கும் தங்கள் இருவரின் ஸங்கல்பத்தாலேயே ஏற்படுத்திக்கொண்ட நிலையிலேயே தாத்பர்யம். நிரவதிகாதிசயமான ஸ்வரூபரூபகுணவிபவைச்வர்யங்கள் இருவருக்கும் ஸமமாய் இருப்பினும் எம்பெருமானின் திருக்கரங்கள், திருப்பாதங்கள் போல் இணைபிரியாது, ஸ்வம் என்ற சப்தத்தின் பொருளாய் வ்யவஹரிக்கப்படுபவளாதலால்-இருவருமே கர்த்தாக்கள் என்று கூறுவதால்-விசிஷ்டத்வைதம் என்றாகிவிடாது. விசேஷணாவிசிஷ்டம் ஒன்றுதான். ஆதலின் அத்வைதத்திற்கு ஓர் இழுக்கும் இல்லை. இராமன் கட்டடத்தை நிர்மாணித்தான் என்றால் அவன் கரசரணாதிகளைக்கொண்டு நிர்மாணித்தமையால் - அவன் செய்யவில்லை. அவயவங்கள்தான் செய்தன என்று கூறுவதும் சரியன்று. விசேஷண விசிஷ்டன் ஒருவனேயாதலின், 'ஸ்வேதர ஸமஸ்த வஸ்து சரீரகன்' என்பது போன்ற இடங்களிலும் ஸ்வசப்தத்தால் லக்ஷ்மீவிசிஷ்டனான நாராயணனே பேசப்படுவதால், மற்றவையே அவனுக்குச் சரீரமெனப்படுவதாகிறது.

5 இவ்வாறு 'ஸ்வ'சப்தார்த்தமாகப் பிராட்டியும் ஆவதாகப் பூர்வர்கள் அருளியுள்ளபடியே பார்த்தால் பிராட்டியைசரீரமாகவோ பெருமானை சரீரமாகவோ கொள்ளவேண்டிய அவசியமில்லை.

“ந ஸம்ராஜ்ஞி ஸபத்நீகே ஸத்விதீயோக்தி ஸாஹஸம்” என்றபடி இருவரும் சேர்ந்தே சேஷிசப்தப் பொருள் என்றவாறு-சேஷித்வம் தம்பதித்வம் போலே இருவரிலும் கலந்து நிற்கும் தர்மம் [வ்யாஸஜ்ய வ்ருத்தி] என்பதை ஏற்றுவிட்டால், 'ஸ்வேதர நியந்

acharya.org

த்ருத்வம்' என்பது இந்த திவ்யதம்பதிகளைத் தவிர்த்த ஏனைய சேதனுசேதனங்களை நியமனம் செய்யும் ஆற்றல் என்றே பொருள் படும். இவர்களுக்குள் பரஸ்பரம் நியாம்யன்–நியாமகன் என்ற பேதம் இல்லை. இவர்கள் ஸ்வஸங்கல்பத்தாலேயே ஸகல யோக க்ஷேமங்களையும் நிர்வஹிப்பவர்கள். இவர்களுள்–நீச உச்சபாவமு மில்லை—'ஸதேவ ஸோம்ய' என்பது போன்ற வாக்கியங்கள் திவ்ய மிதுனத்தையே ப்ரஹ்மம், ஸத், ஆத்மா என்றெல்லாம் கூறுவன. இதனால் விசிஷ்டம் த்வைதமாகிவிடாது. விசேஷண விசிஷ்டம் ஒன்றே. "ஸோऽபித்யாய சரீராத் ஸ்வாத்" என்று அவன் ஸங் கல்பத்தாலே ப்ரஜைகளைப் படைத்தான் என்றவிடத்தில் பிராட்டி என்ற சேதனமும் படைக்கப்பட்டதாகக் கூற ஏதும் ப்ரமாணம் இல்லை 'விஷ்ணோரேஷா அநபாயிநீ' என்றவாறு எக்காலத்திலும் பகவானைவிட்டு இணைபிரியாதசக்தியே பிராட்டி. அவனைப்போலவே இவளும் பற்பல அனுகுணமான அவதாரங்களையெடுத்து, தனும் அவனும் உகந்த கைங்கர்யங்களைச் செய்வதைத் தன் ஸங்கல்பத் தாலேயே செய்து பூரிப்பவள். பகவான் பிராட்டியைப் படைத்த தாக எந்த ப்ரமாணமுமில்லை.

ஆகலால் ஸ்வாதீன த்ரிவித சேதனு சேதன இத்யாதி ஸ்த லங்களில் ஸ்வசப்தத்தால் இருவருமே குறிப்பிடப்படுகின்றனர், அத னாலேயே 'பாஸ்கரேண ப்ரபாயதா' என்று இணைபிரியாதபெருமை சேர்த்தியில் காட்டப்படுகிறது. சேதன ஸ்ருஷ்டிக்கு பகவான் கார ணம் என்பதால்-பிராட்டிக்கும் ஸ்ருஷ்டிகர்த்தா பகவான் என்பது பொருந்துமா? சிறிதும் பொருந்தாது.

நான்முகன், "ஜகத்ஸர்வம் சரீரம்தே" என்று கூறியதற்கும் 'தேவீ விசிஷ்டனை உமக்கு உலகெலாம் சரீரம்' என்றே பொருள். ஆகலால் விசிஷ்டத்வைதம் ஆகிவிடாது. "ஆத்மானம் மானுஷம் மந்யே" என்று ஸ்ரீராமன் அருளியபடியே தேவியும் "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றதும் அதேபோன்ற பாவனையால் என லாம். இவ்விதமே கீதையில் "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சி தஸ்தி தனஞ்ஜய" என்றதுபோன்ற இடங்களிலும் லக்ஷ்மீநாத னை என்னைவிட சிறந்தவனொருவனுமில்லையென்ற பொருள் பொருந்துவதாகும். பாஞ்சராத்ரத்தில் பிராட்டி தன்னை அஹந்தை யென்றும் பகவானை அஹம் என்றும் கூறியதும், பாஸ்கரனுக்கும் ப்ரபைக்கு முள்ளதுபோன்ற ஸம்பந்தத்தை உணர்த்தும், இருவரும் விசேஷ்ய விசேஷண பாவமுள்ளவரென்பதால், ஆதாராதேய பாவத்தையோ சரீர சரீரி பாவத்தையோ கூறவேண்டியதில்லை.

பாஸ்கரனும் ப்ரபையும் இணைபிரியாத நிலையால் சரீரசரீரிபாவம் கூறவேண்டுமா? ஸ்வம்-ஸ்வாமீ என்ற ஸம்பந்தமுள்ள இடங்களில் ஆதாராதேய பாவமோ-சரீர சரீரி பாவமோ நியதமாகக்கூற வேண்டாமே-ப்ரபையையும், ப்ரபாவானையும் தேஜஸ் என்ற சொல்லால் வழங்குவதைப்போல ஸ்ரீயையும்-ஶ்ரிய:பதியையும் சேர்த்து ப்ரஹ்மம் என்று அழைக்கின்றோம், அதில் தவறென்ன?

மேலும், ஸ்ரீ பாஷ்யம்-தொடங்குகையில் 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என அருளியதையே பின்னர், ப்ரஹ்மசப்தேந ச......ஸ்வரூபதோ குணதச்ச ப்ருஹத்வம்யத்ர அநவதிகாதிசயம் ஸோऽஸ்ய முக்யோர்த்த: ஸ ச ஸர்வேச்வர ஏவ'' என்றெல்லாம் விளக்கியதால்—திருமகளின் கேள்வனே புருஷோத்தமன் என்னும் ப்ரஹ்மம் எனப்படுகிறது-இதனால் விசிஷ்டத்வைதமாகாது, பாஸிடிவ்-நெகடிவ் இரு கம்பிகளும் சேர்ந்தே மின்சாரத்தை இயக்குவன. அதுபோல் ஆண் பெண் என்ற இருசக்திகளும் ஒன்று சேர்ந்தே ஓரே தத்வமாய்—ப்ரஹ்மமாய் உலகைப் படைக்கவும்—புரக்கவும்-அழிக்கவும் வல்லதாகிறது. இரண்டுபேரும் சேர்ந்தாலே ப்ருஹத்வம் என்ற குணம் சேருகிறது.

சரணாகதி கத்யத்திலும் 'பரமே வ்யோம்நி-ஏகஏவாவதிஷ்டதே' [ஸ்ரீவைகுண்டத்தில் நாராயணன் ஒருவனே விளங்குகின்றான்] என்பதற்கும் ஸ்ரீவிசிஷ்டனான நாராயணன் என்பதே பொருள். விசேஷணரஹிதனானவனை அங்கும் எங்கும் குறிப்பிட்டதாகாது நிருபித ஸ்வரூப விசேஷணம் என்னும்படி, ஸர்வதேச காலாவஸ்தைகளிலும், ஸத்யத்வ-ஜ்ஞானத்வ, அநந்தத்வாதிகளைப்போன்றே ஸ்ரீயும் அவனைவிட்டுப்பிரியாதவளாயிற்றே. அதேபோல் பிராட்டியின்றி ப்ரஹ்மசாரி நாராயணன் ஜகத்தின் உபாதானம் என்று எங்கும் கூறவில்லை. ''எந்த ஆசார்யரும் பிராட்டியை ப்ரஹ்மம் என்று கூறவில்லை'' என்ற கூற்று சரியன்று-அவ்வாறே ''பிராட்டியை ஜகத்துக்கு உபாதானம் நிமித்தம் என்றும் குறிப்பிடவில்லை'' என்பதும் சரியன்று. ''ததந்தர்பாவாத் த்வாம்'' என்று பட்டர் நாராயணனைக் குறித்த இடமெல்லாம் ஸ்ரீமந்நாராயணனென்றேபொருள் கொள்ளவேண்டும் என்றதனால், பிராட்டிக்கும் ப்ரஹ்மத்வமும் உபாதாநத்வாதிகளும் மறுக்கவொண்ணாதவை. ப்ராமாணிகமாக நவீனர் அல்லது ப்ராசீனர் யார் கூறினாலும் அதை ஏற்க வேண்டியதே-மறுக்கலாகாது. ஸாக்ஷாத் ஸ்வாமியோ-கரூர் ஸ்வாமியோ—ஸுதர்சன ஸ்வாமியோ, ஸ்ரீவரதாசார்ய ஸ்வாமியோ-வேதாந்த

தேசிகனோ—மணவாளமாமுனிகளோ யார் அருளினாலும் ப்ராமாணிகமானவற்றை யாரும் இசைந்தேயாகவேண்டும், "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்" என்ற ச்லோகத்தில்-பழமையெல்லாம் சிறந்தவையல்ல; புதியன யாவும் ஒதுக்கத்தக்கவையுமல்ல-என்று காளிதாஸன் கூறுவதை கவனிக்கவேண்டும்.

எம்பெருமானே லீலையாக ஜகத்தைப் படைக்கிறான் என்றும் பிராட்டிக்கு அதில் சம்பந்தம் ஆனந்தமடைவதே யென்றும், கூறுவதும் லோகசேஷித்வத்தில் இருவருக்கும் சம்பந்தமுண்டென்றும் ஸ்ரீதேசிகன் அருளினார் என்பது இருக்கட்டும், முக்தாத்மாவுக்கு எம்பெருமானோடு மேலான ஒற்றுமை (பரமஸாம்யம்) கூறப்பட்டிருப்பினும், ஜகத்வ்யாபாரம் இல்லை என்ற லக்ஷண பூதமான ஆகாரத்தினால் வேற்றுமையும் நிலைநாட்டப்பட்டதுபோல் இவ்விரு தம்பதிகளுக்குள்ளும வேறுபாடு உண்டு என்றும் ஸ்ரீதேசிகன் அருளியதால் என்னசித்திக்கிறது-பிராட்டி உலகைப்படைக்கவில்லை என்று சாதிப்பதால் என்ன லாபம்? படைக்க சக்தியற்றவள் என்று தேறுமா? தாமாக அவர்கள் ஸ்தாபித்துக்கொண்டுள்ள சில வ்யவஸ்தைகளே யன்றி இதனால் உயர்வோ தாழ்வோ யாருக்கும் பலிக்காது.

சோமாசியாண்டானின் ஷடர்த்த ஸங்க்ஷேபத்திலுள்ள வாக்கியங்கள் பிராட்டிக்கு சரீரத்வத்தை நிரூபிப்பதாகப் பொருள் கூறல் தகாது. சேஷித்வத்தோடு கூடிய பத்நீத்வத்தையே அவை காட்டுகின்றன. "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" என்னும் விஷ்ணுபுராண வசனமும் இருவரும் ஸர்வாந்தர்யாமிகள் என்றே காட்டுகிறது என்ற வ்யாக்யானமும் (எங்களாழ்வானருளியது) பிராட்டிக்கும் ஸர்வகதத்வம்—ஸர்வாந்தர்யாமித்வ—பகவானைப்போன்றே ஸமம் எனத்தெளிவுபடுத்துகிறது-விக்ரஹ வ்யாப்தி என்றும்—ஸ்வரூபத: வ்யாப்தி என்றும் இருவகைகளில் வேறுபாடுகளை எங்களாழ்வான் அருளியதாக ச்ரமப்பட்டு ஸ்தாபிக்க ஏன் பாடுபடவேண்டும்? இருவருக்கும் வ்யாப்தியுண்டென்பதில் என்னதோஷம்? ஏகோன சேஷித்வம் என்று குறைகூறத் தொடங்கினால் அது பொருந்தாது. ஸ்வ இதர சேஷித்வம் என்று இந்த தம்பதிகளைத் தவிர்த்த இதரர்களைப்பற்றியே சேஷித்வம் என்பதை விளக்குகிறது பத்னீ யென்பவள் ஆத்மாவின் ஓர்பாதி என்று வேதம் கூறுகிறது. அதையே ஆங்கிலேயர் சிறந்தபாதி (Better half) என்று கூறுவர். இம்முறையில் இருபாதிகள் சேர்ந்தே பூர்ணமானதோர் அத்வைதம்—ஏகமான தத்வம் என்பதை யுணர்ந்தால் தான் (ஸ்வ) என்று வருமிடங்களில் ஒருபாதியான பகவானைமட்டும் பொருளாக யாரும் கூறத்துணியார்.

acharya.org

"லக்ஷ்ம்யாஸ் ஸமஸ்த: சிதசித் ப்ரபஞ்ச:" என்ற ந்யாய ஸித்தாஞ்ஜன ச்லோகமும் பிராட்டி பகவானுல் உலகைப்போலவே வ்யாபிக்கப்படுபவள் என்று குறிப்பிடுவதால்–அவள் சரீரம் என்று ஸ்தாபிக்கப்பட்டதாகாது.

ந்யாய ஸிததாஞ்ஜன ஸ்ரீஸூக்தியிலிருந்து–அத்யந்தஸாம்யம் சிலரென்றுலே, ஸாம்யம் சிலரென்றுலேயென்று பிரித்துக்காட்டுவதன் மூலம் ப்ரதான காரணம்–அப்ரதான காரணம் என்று பிரிப்பதும்— பிராட்டியைச் சரீரம் என்று காட்டுவதும் வலியப்பொருள் கொள்வதாகத் தோன்றுகிறது.

அடுத்து 'ஈச்வரீம் ஸர்வபூதாநாம்' 'ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்' என்ற இருவருக்கும் ஸர்வபூத ஈச்வரத்வம் ஸமமாகக் கூறினுலும் 'ஈரரசு' என்ற தோஷம் வாராது என்பதுபோன்ற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகள் ஐந்தாவது பக்ஷத்தை எதிர்ப்பவை என்பது பொருத்தமற்றது.

பெருமாள் ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரன் என்றும்—அவர் பத்னீ என்ற தன்மையிலும் இருவரின் ஸங்கல்பத்தாலும் பிராட்டியும் ஸர்வபூதேச்வரீ என்பதால் இருவரும் அநலதிகாதிசயமான கல்யாண குணாதிகளைப்பெற்று சம கோடியில் நிற்பதாக எம்பெருமானுர்–ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளால் விளங்குவதால் இருவரும் பரஸ்பர நிமன்ஹதையைப் பெருமல் ஸ்வதந்த்ரமாய் தம்மிருவரைத் தவிர்த்த ஸமஸ்த பூதங்களுக்கும் ஈச்வரர்கள் என்ற நிர்வாஹத்தில்–குறையேதுமில்லை. இந்த ஜகத்தின் ஈச்வரியானவள் விஷ்ணுவின் பத்னியானவள் என்ற உத்தேச்ய விதேயபாவங்களை யொட்டிப் பொருள் கொள்வதே பொருந்துவதாகும்–மாறிப் பொருள் கொள்ளல் தகாதே.

"ச்ரத்தயா தேவோ தேவத்வம் அச்நுதே" என்பதற்கும் பிராட்டியுடன் கூடி நின்று ஈச்வரன் லீலாரஸத்தை அனுபவிக்கிறன் என்ற பொருளே பொருத்தமானது. ஸ்ரீஸூக்தபாஷ்யப்படியும் ஈசான என்பது ஸ்வாபாவிகமானது ஈச்வரத்வம்–என்றும், விஷ்ணு பத்நீத்வம் சரீரஸம்பந்தக்ருதம்–செயற்கையானது அவர்களது ஸங்கல்பத்தால் ஏற்படுத்திக்கொண்டதென்பதும் பொருத்தமாகத் தோன்றுகிறது. பத்னீத்வமும்–வ்யாகரணப்படி–யஜ்ஞாதிகார்ய ஸம்யோகத்தால் வ்யவஹரிக்கப்படுகிறது. ஜகத்ரக்ஷணமென்ற யாகத்தில் இருவருமே கங்கணம் கட்டிக்கொண்டபடியால் ஒருவர் முக்யர் மற்றவர்

கொள்ளார்' என்று கூற இடமில்லை, ஆதலின் நான்காவது பக்ஷத்தை இங்கு ஏற்க இடமேயில்லை. ப்ரபையின் பெருமையினால் ப்ரபாவான் (சூர்யன்) பெருமை பெறுவது போலவே எம்பெருமானும் பிராட்டியின் அநவதிகாதிசய குணகணங்களாலே பெருமை பெறுகிறான். அவனுக்கு அவற்றால் இழுக்கில்லை என்பதால் ஐந்தாவது பக்ஷமே ஸ்ரீதேசிகன் உகந்ததெனப்படுகிறது.

ஸ்ரீபாஷ்யாதிகளில்வரும் அதிகரணங்களில்-பலர் கருத்துக்களைக் காட்டவேண்டிய சந்தர்ப்பங்களில்--புருஷார்த்தாதி கரணாதிகளில் ஸூத்ரகாரர் தன் சித்தாந்தத்தை முந்துறமுன்னம் கூறிப் பின் பிறர்மதங்காட்டுவது ஒருமுறை. ப்ராஹ்மாதிகரணாதிகளில் தன் பக்ஷத்தை இறுதியில் காட்டுவது மற்றோர் முறை. அஃதன்றி, தன் பக்ஷத்தை இரண்டும்கெட்டானாக இடையில் காட்டுவது, மரபேயன்று. இந்த நிலையிலும் 4 பக்ஷங்களையும் காட்டி ஐந்தாவது பக்ஷத்தைக் கூறி, இவற்றுள் ஒன்றே சிறந்தது என்பது கடைசியில் கூறிய பக்ஷமே சிறந்ததென்ற கருத்தை விளக்குவதாகிறது.

ஆக ஸ்ரீவரதாசார்ய ஸ்வாமியின் விளக்கப்படி ஐந்தாவது பக்ஷமே ஸ்ரீதேசிகன் உகந்தது என்பது அடியேன் உள்ளத்தில் படுகிறது—தவறாகத் தோன்றினால் க்ஷமிக்கவும்.

ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு

நண்பர் ஸ்ரீ உ. வே. E S V நரசிம்மாசார்யர் சுமார் இருநூறு வருடங்களாக 'ஸாக்ஷாத் ஸ்வாமி' முதலான தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான பெரியவர்கள் சொல்லி வரும் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார், ஆகையால் இது அவருடைய சொந்தக் கருத்து அல்ல, எனவே நட்புறவுக்குப் பங்கம் விளைய இடமே இல்லை, ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தைப் படிக்கும் அறிவாளிகளுக்கு இவருடைய தொகுப்புக் கட்டுரை பூர்வபக்ஷத்தை அறிந்துகொள்ள உதவும். தேசிகன் முதலான பூர்வாசார்யர்களின் ஸம்ப்ரதாயம் இதுவல்ல என்று தெளிந்து கொள்ளவும் உதவும்.

" நகுதற்பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்பொருட்டு" [784]

என்னும் திருக்குறளைப் பின்பற்றி அடியேன் எழுத நேர்ந்துவிட்டதாகையாலே, நண்பர் அடியேனை க்ஷமித்தருள்வாராக.

acharya.org

"தாயாருக்கு இருசாராரும் ஈச்வரத்வம், சேஷித்வம் முதலிய சில தர்மங்களைப் பெருமாளுக்குச் சமமாக ஏற்கின்றனர்" என்று நண்பர் எழுதியிருப்பது சரியல்ல. அடியேன் பின்பற்றியிருக்கும் தென்னுசார்யர்களின் திருவுள்ளம்-"பிராட்டிக்கு ஈச்வரத்வம் முதலானவை உண்டானாலும் அவை எம்பெருமானுடைய நித்யேச்சையால் விளைந்தவையாகையாலும், இரண்டு ஈச்வரர்களைக் கொள்வது ப்ரமாண விருத்தமாகையாலும் பிராட்டி ஜீவகோடியில் சேர்ந்தவளே" என்பது தேசிகன் திருவுள்ளம்—"பிராட்டிக்கு ஜகச்சேஷித்வம் ஜகத் வ்யாபகத்வம் முதலானவை உண்டாகையாலே அவளை ஜீவ கோடியில் சேர்க்கக்கூடாது. ஈச்வர வகுப்பிலேயே சேர்க்க வேண்டும். ஜகத்தை வியாபித்திருக்கும் இவளையும் எம்பெருமான் வியாபித்திருக்கையாலும், உலகுக்குசேஷியான இவளுக்கும் அவனே சேஷியாகையாலும் ஸர்வேச்வரன் ஒருவனே. இருவரும் துல்யமான ஈச்வரர்கள் அல்ல" என்பதே. தேசிகனுடைய திருவுள்ளம்-"விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்" "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?" என்னும் அடியேனுடைய கட்டுரைகளிலும், தேசிக ஸம்ப்ரதாயஸ்தரான சென்னை ஸ்ரீ உ வே கி, ஜகந்நாதன் அவர்களுடைய கட்டுரையிலும் பல தேசிக ஸ்ரீஸூக்திகளைக்காட்டி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அவைகளுக்கு நண்பர் எந்த சமாதானமும் சொல்லவில்லை. பெருமாள் பிராட்டி இருவருக்கும் சமமான ஈச்வரத்வம், சேஷித்வம் முதலானவை உண்டு என்றும், ஆனால் ப்ரஹ்மத்வம் பிராட்டிக்கு இல்லையென்றும், பகவச்சரீரத்வமும் பிராட்டிக்குஇல்லையென்றும் கொள்பவர்கள் ஒருசில நூற்றாண்டுகளுக்குள் இருந்த ஸாக்ஷாத் ஸ்வாமியும் அவரைப்பின்பற்றும் முனித்ரய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சில வித்வான்களுமே. 'பிராட்டிக்கு பகவச்சரீரத்வம் உண்டு; ஆனால் ப்ரஹ்மத்வமும் உண்டு" என்று ஒரு நூற்றாண்டு காலத்துக்குள் இருந்த அஹோபில மடத்து வித்வான்கள் கூறுகின்றனர். சில நூற்றாண்டுகளுக்கு முன் அஹோபில மடத்தின் பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீமந் நாராயணஜீயர் ஸ்வாமி தம்முடைய புருஷகார மீமாம்ஸையில் 'பிராட்டிக்கு புருஷகாரத்வமே உண்டு. எம்பெருமானுக்குப்போல உபாயத்வம் கிடையாது. ஆகையால் எம்பெருமான் ஒருவனே ஸர்வேச்வரன்" என்று நிலைநாட்டியிருக்கிறார். இதற்கு மறுப்பாக அமைந்ததே ஸாக்ஷாத் ஸ்வாமியின் "ஸ்ரீ தத்வ விந்துஞ்ஜனம்" என்னும் நூல். ஸ்ரீஸைலாசார்யர் என்னும் ஒருபெரியவர் இப்புருஷகாரமீமாம்ஸைக்குத் தாம் ஒரு உரையெழுதி அதில் ஸ்ரீதத்வவிந்துஞ்ஜனத்தில் கூறிய கருத்துக்களை மறுத்துள்ளார். புருஷகாரமீமாம்ஸை, அதன் வ்யாக்யானம் ஆகியவற்றில்

acharya.org

ஆராய்ச்சி செய்து தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ஈகுந்தலா என்னும் அம்மையார் சென்னைசர்வகலாசாலையில் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை அளித்து, முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றிருக்கிறார். பூர்வாசார்யர்களுக்கு மிகப்பிற்காலத்தில் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களிடையே பிராட்டியின் நிலைபற்றி இவ்வண்ணமாகப் பல கருத்து வேற்றுமைகள் விளைந்துள்ளன. தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களிடையே பிராட்டிவிஷயத்தில் எக்கருத்துவேற்றுமையும் இல்லை. இவையொன்றையுமறியாமல் மனம்போனபடி பேசிக்கொண்டு இவ்விஷயத்தில்பிடிவாதமாக மீண்டும் மீண்டும் சொன்னதையேதிரும்பச்சொல்லுபவர்கள் யார்? என்பதை நடுநிலையாளர்களான அறிவாளிகளே முடிவுசெய்யவேண்டும்.

இனி, நண்பர் தம்கட்டுரையில் முதலில் இலக்கமிட்டுக் காட்டியிருக்கும் 5 பாராக்களின் பொருந்தாமையைச் சுருக்கமாகக் காட்டுவோம்.

(1) "எம்பெருமானார், 'ப்₃ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்று ஸ்ரீபூ₄ஷ்யத்தின் துவக்கத்தில் அருளியிருப்பதால், இந்த திவ்ய தம்பதிகளையே சர்வசேஷியாகவும், சர்வ சரீரியாகவும் கருதி, 'உப₄யாதி₄ஷ்டானம் ச ஏகம் சேஷித்வம்' என்று பூர்வர்கள் அறுதியிட்டனர்" என்று நண்பர் எழுதுகிறார். 'ஸ்ரீநிவாஸன் ப்₃ரஹ்மம்' என்று எம்பெருமானார் அருளியதால் 'ஸ்ரீ' 'ஸ்ரீநிவாஸன்' ஆகிய இருவரும் ப்₃ரஹ்மம்என்று ஆகுமானால் "கருடவாஹனனே ப்₃ரஹ்மம்" "சேஷசாயியே ப்₃ரஹ்மம்" என்று ஆழ்வார்களும் ஆசார்யர்களும் பல இடங்களில்அருளியிருப்பதைக்கொண்டு கருடனுக்கும் சேஷனுக்கும் ப்₃ரஹ்மத்வம் சொல்லவேண்டியதுருமாகையால். திருவில்லாத்தேவர்கள் ப்ரஹ்மமல்லர் என்றுகாட்டுவதற்காகவேஸ்ரீபாஷ்யகாரர் 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்று அருளினார் என்பதை நண்பர் உணர்வாராக. "உப₄யாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் சேஷித்வம்" என்னும் ஸோமாசியாண்டானுடைய வாக்யத்தையும் முன்பின் வாக்யங்களையும் ஸ்ரீதேசிகன் ந்யாய ஸித்₃தா₄ஞ்ஜனத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார். நம்முடைய "விசிஷ்டாத்₃வைதமா விசிஷ்டாத்வைதமா" என்னும் கட்டுரையில் 11 வது பாராவில் இதனை முழுவதும் எடுத்துக்காட்டிப்பொருளும் எழுதியிருக்கிறோம். இதில் சேஷித்வம் என்றது ஜக₃ச்சே₂ஷித்வத்தையோ, ஸர்வ சேஷித்வத்தையல்ல, அந்த வாக்யத்திலேயே ஸோமாசியாண்டான் பிராட்டிக்கு ப₄க₃வச்ச₂ரீரத்வத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார், ஸோமாசியாண்டானும் அவ்வுரை மேற்கோளாகக் காட்டியிருக்கும்

acharya.org

ஸ்ரீவேதாந்த தேசிகரும் எம்பெருமான் ஒருவனையே ஸர்வசேஷியாகவும் ஸர்வசரீரியாகவும் திருவுள்ளம் பற்றினர் என்றும், பிராட்டியை ஜகத்சேஷியாகமட்டுமே திருவுள்ளம்பற்றினர்கள் என்றும் தெளிவாக விளங்குகிறது.

(2) ''தத3ந்தர் ப4ாவாத்'' என்று தொடங்கும் பட்டருடைய ஸ்லோகத்தில் ''எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொன்னதாகும்'' என்று சொன்னது, பிராட்டி எம்பெருமானுக்கு ஸ்வரூபநிரூபகையாகையாலே என்பதை ''த்வமாஸீர்மாத: ஸ்ரீ: கமிது: இத3மித்த2ந்த்வ—விப4வ:'' என்னும் மூற்பகுதியில் தெளிவாகக் காட்டியிருக்கிறார் என்றும், பிராட்டி, பெருமாள் இருவரும் துல்யர் என்று பட்டர் திருவுள்ளம் பற்றவில்லை என்றும் நாம் 21வது பாராவில் தெளிவாக விளக்கியிருக்கிறோம். அதைக் கண்டுகொள்ளாமலே நண்பர் விதண்டாவாதம் செய்கிறார். வித்வான்களின் மனஸ்ஸாக்ஷியைக் குறித்து நாம் கேட்டகேள்விகளில் 8வது கேள்வியில் தேசிகன் சதுःஸ்லோகீ ப4ாஷ்யத்தில், ''கிஞ்ச யத2ா முக்தஸ்ய ப4க3வதா பரமஸாம்யே ஸ்ருதி ஸ்ம்ருத்யாதி3ஸித்3தே4பி 'ஜக3த்3வ்யாபாரவர்ஜம்' இதி லக்ஷணபூ4தை: ஆகாரை: வைஷம்யம் ஸ்த2ாப்யதே ததே3ஹாபி ப4வதி'' [மேலும் முக்தாத்மாவுக்கு ஸ்ருதி ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்தபோதிலும், 'ஜக3த்3 வ்யாபாரவர்ஜம்' என்ற ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணமாயிருக்கும் தன்மைகளில் வேறுபாடு எப்படி நிலைநிறுத்தப்படுகிறதோ, அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு] என்று அருளியிருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதைக்கண்டும் காணாதவர்போலே நண்பர் ''ஜக3த்3வ்யாபாரம் இல்லை யென்று ஸூத்ரகாரர் கூறியது முக்தர்களுக்கேயன்றி பிராட்டிக்கன்று'' என்று எழுதுவது மனஸ்ஸாக்ஷியை மீறிய செயலேயாகும்.

(3) ''பெருமாளும் பிராட்டியும் தமக்குள்ள ஆண்மைக்கும் பெண்மைக்கும் தக்கவாறுசிற்சில வ்யாபாரங்களைப் பிரித்துக்கொண்டுவிட்டனர்'' என்று தொடங்கி நண்பர் சில வாதங்களை எழுதியுள்ளார். நம்முடைய ''விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?'' என்னும் கட்டுரையில் 18-வது பாராவில் ''யுவத்வாதெ3ள துல்யே 5பி'' என்று தொடங்கும் ப4ட்டருடையஸ்லோகத்திற்கு 'பெருமாளும் பிராட்டியும் குணங்களைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டார்கள்' என்று இவர்கள் பொருள் கூறுவது பொருந்தாது என்று எடுத்துக் காட்டியிருக்கிறோம். இதைக்கண்டும் காணாததுபோல் நண்பர் எழுதுவது மனஸ்ஸாக்ஷியை மீறிய செயலேயாகும்.

acharya.org

(4 & 5) "ஸ்வேதர ஸமஸ்த வஸ்து மரீரகன்" என்பது போன்ற இடங்களில் ஸ்வ சப்தத்தால் லக்ஷ்மீ விசிஷ்டனை நாராயணனே பேசப்படுவதாகவும், "அதனால் பிராட்டியைச் சரீரமாகவோ பெருமாளைச் சரீரமாகவோ கொள்ளவேண்டிய அவசியமில்லை" என்றும்எழுதுகிறார். "ஆக, பெருமாளும் பிராட்டியும் ஒருவர்க்கொருவர் சரீரமல்ல, இருவரும் சேர்ந்து உலகிற்கு சரீரிகள்" என்று நண்பர் கூறுவதால் ஸகல சேதநாசேதன விசிஷ்டம் ஒரு மிதுனம் என்றே தேறுகிறது. இப்படி இருவரை விசிஷ்டமாகக் கொள்ளும் மதம் விசிஷ்டத்வைதமாகுமேயொழிய எப்படி விசிஷ்டாத்வைதமாகும்? "விசிஷ்டஸ்ய ப்₃ரஹ்மண: அத்வைதம் — விசிஷ்டாத்₃வைதம்" என்னும் வ்யுபத்தியாலே ஸகல சேதநா சேதனங்களும் அடங்கிய உலகை ப்ரகாரமாகக்கொண்ட ப்₃ரஹ்மம் ஒன்றே எனக்கொள்ளுகையாலேயன்றோ இம்மதம் விசிஷ்டாத்₃வைதம் எனப்படுகிறது. "ஸ்வ மப்₃த₃ர்த்த₂மாகப் பிராட்டியும் ஆவதாகப் பூர்வர்கள் கூறியுள்ளனர்" என்கிறார் நண்பர். தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் எவரும் இப்படிக் கூறவில்லையே. கூறியிருந்தால் எடுத்துக்காட்டியிருக்கலாமே.

"ப₄க₃வான் பிராட்டியைப் படைத்ததாக எந்த ப்ரமாணமும் இல்லை, ஆதலால் "ஸ்வாதீ₄ந த்ரிவித₄ சேதநாசேதந" இத்யாதிஸ்த₂லங்களில் 'ஸ்வ' சப்தத்தால் இருவருமே குறிப்பிடப் படுகின்றனர்" என்று நண்பர் எழுதுகிறார், எம்பெருமானார் ஸ்ரீரங்க₃ க₃த்₃யத்தின் தொடக்கத்தில், 'ஸ்வாதீ₄ந த்ரிவித₄ சேதநா சேதந ஸ்வரூபஸ்தி₂தி ப்ரவ்ருத்தி பே₄த₃ம்......பரப்₃ரஹ்மபூ₄தம் புருஷோத்தமம் ஸ்ரீரங்க₃மாயிநம்" [தனக்கு வசப்பட்டிருக்கும்மூவகைச் சேதநாசேதநங்களின் ஸ்வரூபஸ்தி₂தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையுடையவனாய், பரப்₃ரஹ்மமாய் இருப்பவனாய், புருஷோத்தமனாய் இருக்கும் ஸ்ரீரங்கநாதனை] என்று அருளிச்செய்கிறார். இங்கு புருஷோத்தமன் என்று அருளுகையாலே நாரீணாம் உத்தமையான பிராட்டியை "ஸ்வ" சப்தத்தில் சேர்க்கமுடியாதே! இவ்விடத்தில் வ்யாக்யானம் செய்த தேசிகரும் ப₄க₃வான் ஒருவனையே "ஸ்வ" மப்₃த₃ம் குறிப்பதாகக் காட்டியிருப்பதை 'விசிஷ்டாத்வைதமா' என்னும் கட்டுரையில் 16 வதுபாராவில் நாம் விரிவாகஎடுத்துக்காட்டியிருக்கிறோம். அவற்றைக்கண்டிருந்தும் காணாதவர் போல் "பகவான் பிராட்டியைப் படைத்ததாக எந்த ப்ரமாணமும் இல்லை" இத்யாதிகளை நண்பர்எழுதுவது தம்முடைய மனஸ்ஸாக்ஷியைமீறிய செயலேயாகும். பிராட்டியுள்ளிட்ட ஸகல சேதனர்களின் ஸ்வரூப ஸ்தி₂தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் எம்பெருமானுக்கு வசப்பட்டவை என்று எம்பெருமானார் கூறுகிறார். பிராட்டியைப் படைத்ததாக எங்

acharya.org

கும்ஃவரும் கூறுபவிருக்கையில் நண்பர் யாரோ அப்படிக் கூறுவது போல் எழுதுவது படிப்பவர்களைக் குழப்புவதற்கே ஆகும். "ஒருவரை ஒருநாள் ஏமாற்றலாம். சிலரைச் சிலநாள் ஏமாற்றலாம், அனைவரையும் எப்போதும் ஏமாற்றமுடியாது" என்று அறிவாளிகள் கூறுவதுண்டு. இவ்விஷயத்தில் தேசிக ஸம்ப்ரதாயத்திலுள்ள சாஸ்திரஜ்ஞானமுள்ளவர்களாகப் பறைசாற்றிக்கொள்ளும் எல்லா வித்வான்களும் தம் ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த ஸாமான்ய மக்களை இருநூறு வருடங்களாக ஏமாற்றி வருவது மிகவும் வருந்தத்தக்கது. அத்வைத மதஸ்தாபகரான ஆதிசங்கரரை அத்வைதபண்டிதர்கள் அனைவரும் ஷண்மத ஸ்தாபகர் என்னும் பெரும் பொய்யைக் கூறிப் பாமரர்களை ஏமாற்றி வருவது போன்றது இது. கசப்பான இவ்வுண்மையை வெளிப்படையாகக் கூறியுள்ளதற்கு தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களாய், பெரும்பாலும் நம் நண்பர்களாயிருக்கும் வித்வான்கள் நம்மை க்ஷமித்தருள்வார்களாக,

நண்பர் தம் கட்டுரையின் பிற்பகுதியில் எழுதியிருக்கும் எல்லா விஷயங்களுக்கும் "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?" என்னும் நம்முடைய கட்டுரையில் 26 பாராக்களில் ஏற்கனவே மறுப்பு உரைக்கப்பட்டிருக்கிறது. அவற்றைக் கண்டும் காணாதவர் போல் நண்பர் ப்ரதிஜ்ஞா மாத்திரத்தைச்செய்து திருப்திபட்டுக் கொள்கிறார், 26 பாராக்களில் பலவற்றை இவர் காணுக்கண்ணாட்டிருக்கிறார். 'பிராட்டியை ப்3ரஹ்மம் என்றோ, துல்யமான ஈச்வரி என்றோ, ஜகத்துக்கு உபாதானம், நிமித்தம் என்றோ எந்தப் பூர்வாசாரியரும் கூறவில்லை" என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறார் நண்பர். "ஆத்3ந்தர் ப4ரவாத் த்வாம்" என்று பட்டர் கூறியிருப்பதால் எல்லாம் பிராட்டிக்கு வந்து சேரும் என்று நண்பர் பிடிவாதம் பிடிக்கிறார். "புருஷோத்தமன்" என்று எம்பெருமானார் பல இடங்களில் பரப்ரஹ்மத்தைக் கூறியிருப்பதை நாம் "விசிஷ்டாத்வைதமா? .." என்னும் கட்டுரையின் 9 வது பாராவில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். "த3ந்தர்ப4ரவாத்த்வாம்" என்னும் ஶ்லோகத்தைக் கொண்டு பிராட்டிக்குப் புருஷோத்தமத்வமும் உண்டு என்று நண்பர் கூறத்துணிவாரா? "நாரீணாம் உத்தமை" என்றல்லவோ அவளை ப்ரமாணங்கள் காட்டுகின்றன. அதுவன்றோ பிராட்டிக்கு உண்மையான பெருமை.

"விக்3ரஹ வ்யாப்தி" என்றும்—ஸ்வரூபத: வ்யாப்தியென்றும் இருவகைகளில் வேறுபாடுகளை எங்களாழ்வான் அருளியதாக ச்ரமப்பட்டு ஸ்தாபிக்க ஏன் பாடுபடவேண்டும்" என்று நண்பர் எழுதுகிறார். எங்களாழ்வான் முதலில் ஒருநிர்வாஹத்தையும் 'அத2வா' என்று தொடங்கி மற்றொரு நிர்வாஹத்தையும் அருளியிருக்கிறார். அதில் "அத2வா" என்று தொடங்கும் இரண்டாவது நிர்வாஹத்தில்

acharya.org

—வாதிகேஸரிஜீயராலும் ஈடு அரும்பதவுரைகளிலும் மேற்கோளாக எடுக்கப்பட்ட வாக்கியத்தில் "பகவான் விபுத்வத்தாலே எங்கும் வியாபித்திருக்கிறான், இவள் சக்தியாலே எங்கும் வியாபித்திருக்கிருள்" என்று தெளிவாக அருளிச்செய்திருக்கிறார். முதல் நிர்வாஹத்தில், பகவானுடைய விக்ரஹவ்யாப்தியை விவரித்துவிட்டு, 'விஷ்ணோ: ஸர்வகுணத்வ ஸத்ய ஜ்ஞாநாதி ஸ்வரூப கல்யாண குணாதீநாம் அதிதேவதா:' என்று ஸ்வரூபகல்யாண குணங்களுக்கு முன்னதாக எடுக்கப்படும் 'ஸர்வகுணத்வம்' சற்று முன் எடுக்கப்பட்ட 'விக்ரஹவ்யாப்தி'யைத் தானே குறிக்கமுடியும். இரண்டாவது நிர்வாஹத்திலுள்ள தங்களுடைய கொள்கைக்கு முரணாயிருக்கும் ஒரு வாக்யத்தையே எடுத்துவிட்டு, தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் எங்களாழ்வான் வ்யாக்யானத்தை அச்சிட்டிருப்பது 12 வது பாராவில் நம்மால் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டும் காணாதது போல் நண்பர் எழுதுவது மனஸ்ஸாக்ஷியை மீறிய செயலேயாகும். 13 வது பாராவில் உள்ள "லக்ஷ்ம்யா: ஸமஸ்த" என்று தொடங்கும் ஶ்லோகத்தில் "ததீயஸ்ய து ஸாபி" என்று எம்பெருமான் பிராட்டியை வியாபித்திருக்கிறான் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கும்போது நண்பர் "இதனால் அவள் சரீரம் என்று ஸ்தாபிக்கப்பட்டதாகாது" என்று ஒரு ஆதாரமும் காட்டாமல் கூறுவது எவ்வகையில் பொருந்தும்? அடுத்து வெளியிடப்படும் ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸபா வித்வான் ஸ்ரீ உ. வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் தீர்ப்பில் பல ப்ரமாணங்களைக் காட்டி இவர்களுடைய விதண்டாவாதங்கள் மறுக்கப்பட்டிருப்பதைக்கண்டு நண்பர் தெளிவடைவாராக.

பிராட்டிக்குத் தங்கள் ஸம்ப்ரதாயத்தில் ப்ரஹ்மத்வமும் அதே சமயத்தில் பகவச்சரீரத்வமும் ஒப்புக்கொள்ளப்படுவதாக வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீரங்கத்திலும், மதுராந்தகத்திலும் நடந்த வித்வத்ஸதஸ்ஸுகளில் அடியேனிடம் கூறினார். ஸ்ரீமதஹோபில மடத்தின் ஆஸ்தான வித்வானான நண்பர் பிராட்டிக்கு பகவச்சரீரத்வம் இல்லை என்பது எப்படிப் பொருந்தும்?

பிராட்டிக்கு அந்தர்யாமியாயிருக்கை, அவளை நியமிப்பவராயிருக்கை முதலான எந்தப் பெருமையும் பெருமாளுக்கு இல்லையாகையாலேஇருவரும் ஸமரே என்கிறார் நண்பர், ஆனால் நல்லவேளையாக ஸூர்யனுக்கு ஒளியைப்போலே பிராட்டி பெருமாளுக்கு விசேஷணம் என்றும், ஸூர்யனைப்போலே பெருமாள் விசிஷ்டர் என்றும் ஒப்புக்கொள்கிறார். பெருமாள் பிராட்டியைக் காட்டிலும் ப்ரதானர் என்பதற்கு இது ஒன்றே போதுமே! விசிஷ்டதத்துவத்துக்குள்ள நிரதிசயப்ருஹத்வமாகிற ப்ரஹ்மத்வம் விசேஷணதத்துவத்திற்கு வராதே!

acharya.org

"விசிஷ்டாத்வைதமா?......" என்னும் கட்டுரையின் 24-வது பாராவில் நாம் நிலைநாட்டியபடி கோமடரங்கநாத பாஷ்யத்தில் பல வாக்கியங்களை ப்ரக்ஷேபம் செய்து நஞ்சீயருடையதாகக் கற்பிக்கப் பட்ட மோசடி நூலை நண்பர் பிரமாணமாகக் காட்டுவதிலிருந்து நண்பர் மோசடிகளுக்குத் துணைபோகின்றவர் என்று விளங்குகிறது.

"தேசிகன் ஐந்து பக்ஷங்களில் கடைசியானதாக எடுத்த ஐந்தாவது பக்ஷமே அவருடைய பக்ஷம் என்பது ஸூத்ரகாரருடைய ப்ராஹ்மாதிகரணாதிகளிலிருந்து விளங்குகிறது." என்று எழுதுகிறார். ஸூத்ரகாரர் தம் கருத்தை ஒவ்வொரு அதிகரணத்திலும் ஒரு சில ஸூத்ரங்களால் தெளிவாகக் கூறியுள்ளார். தேசிகன் இந்த ஐந்து பக்ஷங்களில் எது தம்முடைய பக்ஷம் என்று தெளிவாகக் கூறாமல், 'ஐந்தில் ஏதோவொன்று பிரமாணம்?' என்றல்லவோ முடித்திருக்கிறார். ஆகையால் அவருடைய கிரந்தங்களில் உள்ள மற்ற பலபல வாக்யங்களைப் பார்க்கும்போது— எம்பெருமானுக்கு ஸர்வேஶ்வரத்வத்தையும், ஸர்வவ்யாபகத்வத்தையும், ஜகத்துக்கு மூலகைக் காரணமாயிருக்கையையும் கூறியிருப்பதையும், பிராட்டிக்கு ஏகோந ஈஶ்வரத்வத்தையும், ஏகோநசேஷித்வத்தையும், ஜகத்வ்யாபாரமிகாமையையும் கூறியிருப்பதையும் பார்க்கும்போது இவற்றுக்குப் பொருந்திய நாலாவது பக்ஷத்தையே அவர் தழுவியவர் என்பது மிகத்தெளிவாக விளங்குகிறது. ஆனால் பிடிவாதம் பிடிப்பவர்களுக்கு எதுவுமே விளங்காது.

நம்முடைய நிருபணங்களுக்குப் பயன் என்ன? என்று வினவுகிறார் நண்பர். ஸ்ரீதேசிகன் விசிஷ்டாத்வைதத்தோடு பொருந்தியிருக்கும் நாலாவது பக்ஷத்தைத் தழுவியவரேயொழிய அதற்குப் பொருந்தாத ஐந்தாவது பக்ஷத்தைத் தழுவியவரல்லர் என்னும் உண்மையை ஐயம் திரிபற நிலைநாட்டுவதே நம் நிருபணங்களுக்குப் பயனாகும், தற்காலத்திலும் வருங்காலத்திலும் உபய ஸம்ப்ரதாயத்திலும் உள்ள நடுநிலையாளர்கள் வெள்ளிடை மலையாகவும், கையிலங்கு கனியாகவும் விளங்கும் இவ்வுண்மையைப் புரிந்துகொண்டு விசிஷ்டாத்வைதம் விசிஷ்டத்வைதமாக மாறாமலும், நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் சாக்தமதம் உட்புகாமலும் பாதுகாப்பார்கள் என்பது உறுதி. நம் நிருபணங்களுக்குப் பயன் இதுவேயாகும். விழுப்புரம் வழக்கறிஞர் வரததேசிகாசாரியரின் தீர்ப்பை நண்பர் ஊன்றிப்படிப்பாராக, 'ஸத்யமேவ ஜயதே' (உண்மையே வெல்லும்) என்பது வேதவாக்கன்றோ.

acharya.org

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா விளக்கவேண்டிய விஷயங்கள்

இவ்விஷயம் அச்சாகி வரும்போது ஈஶ்வர௵ ஐப்பசி மீ ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா (16—10—97) வியாழனன்று வந்தது. அதில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விளக்கத்தில் நம்முடைய சர்ச்சையைப் பெயரைச்சொல்லாமல் குறிப்பிட்டு ஐந்தாவது பக்ஷமே ஸ்ரீதேசிக பக்ஷம் என்னும் உண்மையை நாம் மாற்றி நான்காவது பக்ஷமே ஸ்ரீதேசிகபக்ஷம் என்று ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயத்தவரிடையே குழப்பத்தை விளைப்பதாகவும், அதைத்தீர்ப்பதற்கு "ஸ்ரீதத்வ தீபிகை" என்னும் நூலை வெளியிடப்போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது, இதை வரவேற்கிறோம். ப்ரியா வாசகர்கள் உண்மையைப்புரிந்து கொள்வதற்காக ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா விளக்கவேண்டிய முக்கியமான விஷயங்களையும் கீழே பட்டியலிட்டுக் காட்டுகிறோம்.

(1) "ஒருவனே உலகுக்கு நிமித்தோபாதாந ஸஹகாரி காரணமான ஒப்பற்ற பரமாத்மா" என்று வேதசாஸ்திரங்கள் முழங்காநிற்க, மிதுனத்தை நிமித்தோபாதாந ஸஹகாரி காரணம் என்பது எப்படிப் பொருந்தும்?

(2) பல வேத வாக்யங்கள் ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானத்தை (ஒன்றை அறிவதால் எல்லாம் அறிந்ததாவதை) முழங்கா நிற்க, மிதுன விஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானம் என்பது எப்படிப் பொருந்தும்?

(3) ஸ்ரீராமாயணம் ஸூர்யனுக்கு ஒளிபோலே பிராட்டி எம்பெருமானுக்கு விசேஷணமாயிருப்பவள் என்று முழங்கியிருக்க, இருவரும் அத்யந்த ஸமர் என்னும் ஐந்தாவது பக்ஷம் எப்படிப் பொருந்தும் ?

(4) லக்ஷ்மீதந்த்ரம் (17—30, 31) பிராட்டி எம்பெருமானுக்கு ஸ்வரூபநிரூபகையான அஹந்தையாயிருப்பவள். எம்பெருமான் அவளுக்கு ஆதாரமாயிருக்கும் அஹமர்த்தமாயிருப்பவன் என்று முழங்கியிருக்க, எம்பெருமான் பிராட்டிக்கு ஆதாரமாயிருப்பவன் என்பதை மறுக்கும் ஐந்தாவது பக்ஷம் எப்படிப் பொருந்தும்?

(5) ஆளவந்தார் சது:ஶ்லோகியிலும், எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதிகளிலும் நாராயணன் ஒருவனே ப்ரஹ்மம் என்று குறிப்பிட்டுள்ளார், பிராட்டி அவனை ஸ்வரூபரூபங்களால் இறுகத்தழுவியிருக்கும் ஸ்வரூப நிரூபகதர்மத்தை என்றே குறிப்பிட்டுள்ளார். பிராட்டியை ப்ரஹ்ம ஶப்தத்தால் ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை. அப்

படியிருக்க, இருவரும் ப்₃ரஹ்மம் என்னும் ஐந்தாவது பக்ஷம்எப்படிப் பொருந்தும்?

(6) பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (2-44) தோகையை விரித்தாடும் ஆண்மயிலைப்போலே எம்பெருமான் தன் சரீரத்தின் ஒரு பகுதியை விரித்து உலகைப்படைக்கிறுன். தோகையற்ற பெண்மயில் போன்ற பிராட்டி அதில் ஆனந்தமடைகிருள் என்கிறர். இது போலவே கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவம் முதல் ஶ்லோகத்திலும், தேசிகன் ஸ்ரீஸ்துதி 4-வது ஶ்லோகத்திலும் இதை வலியுறுத்தி, ப்ரதா₄னமான ஜகத்காரணம்எம்பெருமான் என்றும், அவனை உலகைப் படைக்கத் தூண்டுவதாலும், அவன் உலகைப்படைப்பதில் ஆனந்தமடைவதாலும் பிராட்டி அப்ரதா₄னமான ஜகத்காரணமாகிருள் என்றும் காட்டியிருக்க. இருவரும் துல்யமான ஜகத்காரணம்என்பது எப்படிப் பொருந்தும்? சதுஶ்லோகீ இரண்டாவது ஶ்லோகபா₄ஷ்யத்தில் "ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்னும் ஸூத்ரம் முக்தர்களுக்குப்போலே பிராட்டிக்கும் பொருந்தும் என்று ஸாதித்திருக்க, இருவரும் துல்யமான ஜகத்காரணர் என்னும் ஐந்தாவது பக்ஷம் எப்படி தேசிகனுகந்ததாகும்?

(7) ந்யாயஸித்₃தா₄ஞ்ஜனத்தில் தேசிகன் மேற்கோளாக எடுத்திருக்கும் ஸோமாசியாண்டானின் ஷட₃ர்த்த₂ ஸங்க்ஷேபவசனத்தில், பிராட்டிக்கு ஜக₃ச்சே₂ஷித்வமிருந்தபோதிலும் பு₄க₃வச்ச₂ரீரத்வமுண்டு என்று தெளிவாகக்கூறியிருக்க, இருவரும் ப்₃ரஹ்மம் என்னும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் எப்படி உகந்திருக்கமுடியும்?

(8) ந்யாயஸித்₃தா₄ஞ்ஜனத்தில் "லக்ஷ்ம்யா: ஸமஸ்த சித₃சித்ப்ரபஞ்சே வ்யாப்ய:ததீ₃ஶஸ்ய து ஸாபி"என்னு ஶ்லோகத்தாலே எம்பெருமான் உலகையும், அதை வ்யாபித்திருக்கும்பிராட்டியையும் வியாபித்திருக்கிறுன் என்று தேசிகன் தெளிவாக நிருபித்திருக்கிறர். ஜக₃ஜ்ஜனகத்வ ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வாதி₃களில் பிராட்டிக்குப் பெருமாளோடு அத்யந்தஸாம்யமில்லை என்றும் காட்டியிருக்கிருர், அப்படியிருக்க, இவற்றில் அத்யந்த ஸாம்யத்தைக் கூறும் ஐந்தாவது பக்ஷம் எப்படி ஸ்ரீதேசிகன் உகந்ததாயிருக்கமுடியும?

(9) ஶ்ருதியில் "ஈஶ்வர: ஸர்வபூ₄தாநாம்" என்று சொல்லப்பட்ட பெருமாளைப்போலே "ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்" என்று பிராட்டியும் வ்யஸ்த பத₃ங்களாலே ஸ்வதந்த்ரேஶ்வரியாகச் சொல்லப்பட்டிருக்கிருள் என்கிறது ஐந்தாவது

acharya.org

பக்ஷம். கீ3தாபா4ஷ்யத்தின் தொடக்கத்தில் "அநவதி4காதிஶய" என்னும் பதத்தை விவரிக்கும்போது தாத்பர்ய சந்த்ரிகையில் "ஈஶ்வரனைத் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல பிராட்டியின் நியமன ஸாமர்த்யம். ஈஶ்வரனுக்கு இஷ்டமாகையால் 'இரண்டு ஈஶ்வரர்கள்' முதலான தோ3ஷம இல்லை. "விஷ்ணுவுக்கும் பத்னியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈஶ்வரியாயிருக்கிறாள்" என்னும் வேதவாக்கியத்தின்படி விஷ்ணுவுக்குப் பத்னியாயிருப்பதாலன்றோ இவள் அனைத்துலகையும் நியமிக்கிறாள். "ஸர்வபூ4தங்களுக்குப் ஈஶ்வரீ" என்னும் ஸ்ரீஸூக்தவாக்யத்தில் "ஸர்வபூ4தேஶ்வரீ" என்று ஸமஸ்த பதமாயிராமல் பிரித்துச்சொல்லியிருப்பதால் ஈஶ்வரபத்னி என்று பொருள் கொள்ளமுடியாது என்பது உண்மையானாலும் "அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ" என்னும் முன் எடுத்த வாக்யத்தின் பலத்தாலே இவ்வாக்யத்திலும் விஷ்ணுபத்னியாயிருப்பதாலேயே இவள் ஈஶ்வரியாகிறாள் என்று கொள்ளவேண்டும்" என்னும் (பொருளுள்ள) ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்து ஸ்ரீதேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை நேரே கண்டித்திருக்கும்போது அவர் அப்பக்ஷத்தை எப்படித் தழுவியிருக்க முடியும்?

(10) ஸ்ரீரங்க3க3த்3யத்தின் தொடக்கத்தில் "ஸ்வாதீ4ந த்ரிவித4 சேதநாசேதநஸ்வரூப ஸ்தி2தி ப்ரவ்ருத்திபே4த3ம்......பரப்3ரஹ்மபூ4தப் புருஷோத்தமம் ஸ்ரீரங்க3ஶாயிநர்" (தனக்கு வசப்பட்டிருக்கும் மூவகைப்பட்ட சேதந சேதநங்களின் ஸ்வரூபஸ்தி2தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை உடையானும்... பரப்3ரஹ்மமாய் இருப்பவனும், புருஷோத்தமனும் இருக்கும் ஸ்ரீரங்க3ஶாயியை) என்று எம்பெருமானார் அருளியிருப்பதால் புருஷோத்தமனான ஸ்ரீரங்க3ஶாயியே பரப்3ரஹ்மமென்றும், த்ரிவித4 சேதநர்களில் சேர்ந்த பிராட்டி அவனுக்கு வசப்பட்ட ஸ்வரூபஸ்தி2தி ப்ரவ்ருத்திகளை உடையவள் என்றும் உணர்த்தியுள்ளார். புருஷோத்தம ஶப்3த3த்தோடு ஸமாநாதி4கரணமாயிருப்பதால் வழக்கமாக நீங்கள் விதண்டா3வாத3ம் செய்வதுபோல் 'ஸ்வ' ஶப்3த3த்தில் பிராட்டியும் சேர்ந்தவள் என்று கூறமுடியாது. இங்கு தேசிகனும் "எல்லாச் சேதநரும் பகவானால் தாங்கப்படுவதால், அவனுக்கு வசப்பட்டவராய், அவனுக்கு சேஷமாகவே எப்போதும் இருக்கின்றனராகையால் அவனை விட்டுப்பிரியாத விஶேஷணமான ஶரீரமாயிருக்கின்றனர்" என்று உரையிட்டுள்ளதால், எம்பெருமானாரோ, தேசிகனோ இவ்வுண்மையை மறுக்கும் ஐந்தாவது பக்ஷத்தை எப்படி ஏற்றுக்கொண்டிருக்கமுடியும்?

acharya.org

(11) பட்டர் ஸ்ரீகுணரத்னகோசத்தில் "ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி" [31] என்னும் ஶ்லோகத்தில் மாணிக்கு அதன் ஒளி இயற்கையாகவே உடைமையாயிருப்பதுபோல் பிராட்டி பெருமாளுக்கு இயற்கையிலேயே உடைமையாயிருப்பவள் என்று அருளியிருப்பது ஐந்தாவது பக்ஷத்தில் எப்படிப் பொருந்தும்?

(12) ஸ்ரீகுணரத்னகோசத்தில் பட்டர் "யுவத்வாதௌ" [34] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் பெருமாளும் பிராட்டியும் தங்களுக்குள் குணங்களைப் பிரித்துக்கொண்டுள்ளதாகக் கூறுவதாகச் சொல்லுகிறீர்கள். "க்ருத்வா போக்தும் யுவயோ: ஆத்மநி பித்ரா பவதி" [(அனுபவிப்போர்) இருவகையான குணங்களை உங்களிருவரிடமும் வைத்து அனுபவிக்கலாம்படி உங்களுடைய ஸ்வரூபத்தில் பேதம் அமைந்துள்ளது.] என்றல்லவோ அந்த ஶ்லோகம் பொருள் படுகிறது. இதில் பெருமாளும் பிராட்டியும் குணங்களைப் பிரித்துக் கொண்டார்கள் என்று எங்கே வருகிறது?

(13) கௌஷீதகீஉபநிஷத்து பர்யங்கவித்யையில் "ஸ்ரீருப பர்ஹணம் தஸ்மிந் ப்ரஹ்ம ஆஸ்தே" [ஸ்ரீதேவி ப்ரஹ்மத்தின் திருவடிக்கு அணையாக இருக்கிறாள்; அப்படுக்கையில் ப்ரஹ்மமான பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான்.] என்று மோக்ஷமாயிடோ ப்ரஹ்மம் என்றும், அவனது திருவடிக்கு அணையாயிருக்கும் ஸ்ரீதேவி சேஷத்வமே வடிவெடுத்தவள் என்றும் காட்டிற்று. தமிழ் வேதங்களும்

"வடிவிணையில்லா மலர்மகள் மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை" [திருவாய் 9-2-10]

"நின்னாடி ஒன்றியமனத்தால் ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும் மலரன அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை" [திருவெழு]

"சந்தணி மென்முலை மலராள் தரணிமங்கை
தாமிருவர் அடிவருடும் தன்மையானை
[பெரிய திரு 2—10—2]

"செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியின்ணை வருட முனிவரேத்த" [பெரிய திரு 7-8-1]

என்று பெரிய பிராட்டியார்க்கும் பூமிப்பிராட்டியார்க்கும் எம்பெருமானுடைய திருவடியைப் பிடிக்கையாகிற சேஷத்வம் எப்போதும் இயல்வாக உள்ளது என்று காட்டின, பிராட்டிக்கு இயல்வான

acharya.org

சேஷத்வத்தைக் கூறும் இந்த உப4ய வேதங்களுக்கும் முரணாகப் பிராட்டியின் சேஷத்வம் செயற்கையானது என்று கூறும் ஐந்தாவது பக்ஷம் எப்படி ப்ராமாணிகமாகும்?

(14) தேசிகனை உள்ளிட்ட ஆசார்யர்கள் எவரும் பிராட்டியை 'ப்3ரஹ்மம்' என்றோ, ''எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரீ'' என்றோ எங்கும் குறிப்பிடவேயில்லை. பிராட்டி ஈஶ்வரகோடியைச் சேர்ந்தவள் என்று திருவுள்ளம் பற்றிய தேசிகனும், ''அவள் எம்பெருமானையொழிந்த மற்றவர்களுக்கே ஈஶ்வரியாகையாலே அவளுக்கு ஏகாந்த சேஷித்வமே உள்ளது; ஸர்வஶேஷித்வம் எம்பெருமான் ஒருவனுக்கே உள்ளது'' என்று பலவிடங்களில் காட்டியிருக்கிறார். இது நாலாவது பக்ஷத்திற்கே பொருந்தும். ஐந்தாவது பக்ஷத்தில் கூறியதுபோல் 'பிராட்டியின் ஶேஷத்வம் உப4ய-இச்சா2-ஸித்3த4ம்' என்று எவ்விடத்திலும் தேசிகன் கூறவில்லை. மாறாக பிராட்டிக்கு ப4க3வச்ச2ரீரத்வத்தையும் அதனால் உண்டான ஆதே4யத்வ விதே4யத்வ நியாம்யத்வங்களையுமே அருளியிருக்கிறார். இவையெல்லாம் நாலாவது பக்ஷத்திற்கே பொருந்தும். நாலாவது பக்ஷத்தையே மிக்க ஆதரத்துடன் விரிவாகப் பத்துவரிகளில் தேசிகன் விளக்குகிறார். இவ்வாறிருக்கும்போது இரண்டேவரிகளில் சொல்லப்படும் ஐந்தாவது பக்ஷத்தை, அது கடைசிப் பக்ஷமாகையாலே அதையே அவர் ஆதரித்தார் என்று பிடிவாதம் பிடிப்பது நியாயமாகுமா? இந்த ஐந்தாவது பக்ஷத்தையும் 'கேசிதா3ஹு:' (சிலர் கூறுகிறார்கள்) என்று தானே தேசிகன் சொல்லியிருக்கிறார். தேசிகன் திருவுள்ளம் பற்றும் ஈஶ்வரத்வத்தையும், ஜக3த்3வ்யாபித்வத்தையும், ஜக3த்3காரணத்வ ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களையும் எம்பெருமானின் நித்ய ஸங்கல்பப்படி பிராட்டி எப்போதும் பெற்றிருக்கிறாள் என்று ஏற்கும் நாலாவது பக்ஷத்தில் நீங்கள் காணும் குறை என்ன?

(15) ஐந்தாவது பக்ஷம் இப்போது காணப்படும் பூர்வாசார்ய க்3ரந்த2ங்கள் எதிலும் இல்லாததைப் பார்த்த தேசிக ஸம்ப்ரதா3ய ஸ்வாமிகளில் சிலர் நஞ்ஜீயர் பேரில் ஸ்ரீஸூக்தபா4ஷ்யம் என்னும் ஒரு க்3ரந்த2த்தையே கல்பித்து அச்சிட்டனர். இந்த ஸ்ரீஸூக்தபா4ஷ்யம் உண்மையில் கோமடம் ரங்கநாதர் என்பவர் எழுதியதே என்று சென்னை ஓரியண்டல் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரியிலுள்ள ஓலைச்சுவடிகளிலிருந்து விளங்குகிறது. அதில் பல மாறுதல்களைச் செய்து இப்புஸ்தகத்தை அச்சிட்டவர்களால் ஒரு ஓலைச்சுவடி தயாரிக்கப்பட்டது. அதில் க்3ரந்த2 கர்த்தாவின்

acharya.org

பெயர் 'கோமடம் ரங்கநாதமுனி' என்று மாற்றப்பட்டது. அதில் ஸ்ரீஸூக்தம் 9 வது மந்திரத்தில் "ஈஶ்வரீம் ஸர்வ பூதாநாம்" என்னும் பதங்களுக்கு உரையிடுகையில், அச்சில் 17 பக்கங்கள் வரும் ஒரு விசாரம் மூலச்சுவடியில் இல்லாதது புகுத்தப்பட்டு 'தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தை விவரித்திருக்கும் பங்க்திகளை இதிலிருந்தே எடுத்திருக்கிறார்' என்று தோன்றும்படியாகப் பல வாக்யங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சுவடி திருவஹீந்த்ரபுரத்தில் கடிலநதியிலிருந்து தங்களுக்குக் கிடைத்ததாக ஒரு பெரும் பொய்யை இந்த நூலைப் பதிப்பித்தவர் தம் முகவுரையில் எழுதியிருக்கிறார். எந்தையார் காலத்திலேயே இப்பொய்களெல்லாம் அம்பலப்படுத்தப்பட்டு, தேசிகனால் ஸ்ரீஸூக்தபாஷ்யம் எழுதியவராகக் குறிப்பிடப்பட்ட நாராயணமுனி என்னும் பெரிய ஜீயர் கூரத்தாழ்வானுக்கும் பட்டருக்கும் சிஷ்யராய், ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்க நாராயண ஜீயர் மடத்தை ஸ்தாபித்தவராய், ஸுதர்சன சதக கர்த்தாவான நலந்திகழ் நாராயண ஜீயரே என்றும், அச்சிடப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்தபாஷ்யம் கோமடம் ரங்கநாதருடையதாகையாலே அவருடைய பாஷ்யம் அல்லவென்றும், நஞ்ஜீயருக்கு கோமடம் ரங்கநாதர் என்றோ, ரங்கநாதமுனி என்றோ, பெரிய ஜீயர் என்றோ எந்த பூர்வாசார்ய க்ரந்தத்திலும் திருநாமம் இல்லையென்றும், இந்த நாராயணமுனியை வங்கிபுரத்து நம்பிக்கும் சிஷ்யராக ஸ்ரீ தேசிகன் குறிப்பிட்டிருக்கையால் இவர் பட்டரை அல்லது அறியாத நஞ்ஜீயராயிருக்க இடமேயில்லையென்றும் எந்தையாரால் அபயப்ரதராஜவிஜயத்திலும் நம்மால் ஸ்ரீஸூக்தவ்யாக்யானத்திலும் மற்றும், பல கட்டுரைகளிலும் ஐயந்திரிபறப் பலமுறை நிலைநாட்டப்பட்டுள்ளது. ஸ்ரீஸூக்தபாஷ்யத்தை நஞ்ஜீயருடையது என்று முதலில் எழுதிய D. T. தாதாசார்யஸ்வாமியே சிலவருடங்கள் கழிந்தபின், அதை எழுதியவர் 'நாராயணமுனியேயொழிய நஞ்ஜீயர் அல்ல' என்று இசைந்தது இந்த ஆராய்ச்சிக்கு ஜயத்வஜமாய் அமைந்தது. இந்த உண்மையை ஒப்புக்கொள்ளும் நேர்மை உங்களுக்கு உண்டா?

(16) "பிராட்டிக்கு பகவச்சேஷத்வமும் உண்டு; ப்ரஹ்மத்வமும் உண்டு என்பது எங்கள் கொள்கை" என்று வர்த்தமான ஸ்ரீமத்அழகியசிங்கர் அடியேனிடம் ஸதஸ்ஸில் ஸாதித்தார். சேஷத்வம் இருக்கும் இடத்தில் நிரதிசய ப்ருஹத்த்வமாகிற ப்ரஹ்மத்வம் (தன்னைக்காட்டிலும் மேலானது இல்லாது இருக்கையாகிற ப்ரஹ்மத்தின் தன்மை) எப்படி இருக்கமுடியும்?

acharya.org

முடிவுரை

"பிறருடைய ஸித்தாந்தத்தில் புகுந்து "உங்கள் ஸித்தாந்தம் உங்களுக்குத்தெரியாது; இதுதான் உங்கள் ஸித்தாந்தம்" என கலஹத்தையும் கிளர்ச்சியையும் செய்து நாம் குழப்பத்தை விளைவிக்கப்பார்ப்பதாக 'ப்ரியா' கூறுகிறது. காஞ்சிப்'பேரருளாளன்'பத்திரிகையில்— "பிராட்டிக்கு ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபம்" 'அவளுக்கு எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்வம் உண்டு" "ப்ருதக்ஸ்வச்சரீரத்வம் கிடையாது" முதலான விசிஷ்டாத்வைதத்தையே தகர்க்கக்கூடிய கொள்கைகளை தேசிகன் மாத்திரமல்லாமல் தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்தர்கள் பரமாசார்யர்களாகக் கொண்டாடும் பட்டர், நஞ்ஜீயர் முதலானோரும் நிலைநாட்டினார்கள்— என்று 8 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதாலேயே நாம் இந்தச்சர்ச்சையைத்தொடங்க நேர்ந்தது. "பிராட்டிக்குஏகோநாராயணத்வத்தையும் ஜகத்வ்யாபித்வத்தையும் ஜகச்சேஷித்வாதிகளையும் அப்ரதானமான ஜகத்காரணத்வத்தையும் ப்ருதக்ஸ்வச்சரீரத்வத்தையும் ஏற்றுக்கொண்டு அவள் ஈஶ்வரகோடியைச் சேர்ந்தவளே என்னும் நாலாவது பக்ஷத்தையே தேசிகன் தழுவியிருக்கமுடியுமேயொழிய விசிஷ்டாத்வைதத்தையே தகர்க்கும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது என்று பலப்ரமாணங்களைக் காட்டி "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?' என்னும் கட்டுரையில் நிருபித்து நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரியிருந்தோம். தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் நம் கருத்தினை ஏற்றுக்கொண்டு தங்கள் தங்களுடைய தீர்ப்பினை வழங்கி வருகிறார்கள். நமக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ள அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உ. வே E S V நரஸிம்ஹாசார்யரின் கட்டுரையையும் அப்படியே வெளியிட்டிருக்கிறோம். நாம் குழப்பம் விளைவிக்கிறோமா? அல்லது தெளிவை உண்டாக்குகிறோமா? என்று 'ப்ரியா' வாசகர்களும் தெரிந்து கொள்ளவேண்டுமன்றோ. நாம் ஆஸ்தான வித்வானின் தீர்ப்பை வெளியிட்டிருப்பதுபோல் இதுவரை நாம்கேட்டிருக்கும் பதினாறு கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு அவற்றுக்கு ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளையும் தேசிகனுள்ளிட்ட பூர்வாசார்யர்களுடைய வசனங்களையும் மேற்கோளாகக் காட்டி 'ப்ரியா' பதிலளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம் "ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, 66, டாக்டர் ரங்காச்சாரி ரோடு, சென்னை-600018" என்னும் விலாஸத்திற்கு எழுதி 'ப்ரியா'வைப்பெற்று உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஸுதர்சனம் வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். இதேபோல் நம்முடைய பத்திரிகை விலாஸத்தையும் 'ப்ரியா' பதிலுரைக்கும்போது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். விசிஷ்டாத்வைதிகள் அனைவரும் உண்மையை உணர்ந்து கொள்வதற்காகவே அடியேன் இந்தச் சர்ச்சையில் இறங்கினேனேயொழிய, கலஹம் விளைவிப்பதற்காகவோ கிளர்ச்சி செய்வதற்காகவோ அல்ல என்பதைப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

acharya.org

ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்—தீர்ப்புகள்

9. ஸ்ரீதத்வ விமர்சம

[ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ வே R. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணஸபா வித்வான்]

பிராட்டி விஷயமான தெளிவான ஸுதர்சனம் ஆசிரியருடைய நிர்ணயத்தை ஸேவித்தேன். உத்தமசீலி ஸ்வாமி, கோவிந்தாசாரியர் ஸ்வாமி, அடியேன் தகப்பனார் இவர்கள் பால் கேட்டபடியே ஸ்ரீதத்வம் பற்றி விண்ணப்பிக்கிறேன்.

ஸ்ரீஸ ஏவ ஜகதஃஹேது: ப்ரபத்தவ்யஸ்ச முக்தயே|
ரக்ஷகஸ்ச ஸ்ரியா ஸார்த்தம் ப்ராப்யஸ்சேதி விபஸ்சித: ||
ஸ்ருதௌ ஸாரீரகே ஸூத்ரே ஸ்ரீபாஷ்யே கத்யஸாரயோ:|
ஸ்தோத்ரேஷு தத்தத் வ்யாக்யாஸு காரணத்வாதி ந ஸ்ரிய: ||

என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் அஹோபிலமடாதிபதியாயிருந்த அஹோபில ஸூரியினால் அருளிச்செய்யப்பட்ட புருஷகாரமீமாம்ஸையில் கூறப்பட்டுள்ளது.

"ஸ்ரிய:பதியான எம்பெருமானே ஜகத்காரணம், மோக்ஷமளிப்பவனுமவனே. மோக்ஷம் பெறுகைக்கு அவனையே ப்ரபத்தி செய்ய வேண்டும். பிராட்டியுடன் கூடியே ரக்ஷிப்பவனும் ப்ராப்யனுமாகிறான்" என்று ச்ருதி, ஸாரீரகஸூத்ரம், ஸ்ரீபாஷ்யம், கத்யம், ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்தோத்ரங்கள், அவற்றின் வ்யாக்யானங்கள் இவைகளில் நிரூபிக்கப்படுகின்றன, காரணத்வ-உபாயத்வ-மோக்ஷப்ரதத்வ-விபுத்வங்கள் எம்பெருமானுக்கே உள்ளது. பிராட்டிக்கு இல்லை என்று இதன் கருத்து இதனை விவரிக்கிறேன்.

பிராட்டிக்கு விபுத்வமில்லை

பிராட்டிக்கு ஸ்வரூபத்தாலே விபுத்வம்கொண்டால் அந்த விபுத்வம் இன்னதென்று விசாரிக்கவேணும். விபுத்வமாவது ஸர்வ ஸரீரகனாய் ஸர்வாந்தர்யாமியாய் இருப்பதா? அல்லது தர்மபூத ஜ்ஞானம் போலே எல்லாவஸ்துவோடும் சம்பந்தமா? முதலாவது பொருந்தாது. "ய ஆத்மநி திஷ்டந் ..ஏஷ ஸர்வபூதாந்தராத்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிற பிரமாண விரோதம் உண்டாகிறது. இரண்டாவதும் பொருந்தாது. தர்ம பூத ஜ்ஞாநம் எல்லாவஸ்துவோடும் ஸம்பந்தப்படுகிறதேயொழிய அங்கு நியந்த்ருத்வமில்லை. அவ்வித வ்யாப்தி நியந்த்ருத்வத்துக்கு ப்ர

acharya.org

யோஜகமாக இருக்காது. ஆதலால் பிராட்டிக்குச்சொல்லப்படுகிற ஸ்வருபவ்யாப்தி எங்களாழ்வான் அருளிச்செய்ததுபோலே அகடித கடநா ஶக்தியினால் உண்டானதே என்று ஒப்புக்கொள்ளவேணும். எம்பெருமானுக்குப்போலே ஸர்வாந்தரத்வம்-ஸர்வநியாமகத்வம் முதலானவை பிராட்டிக்கு இல்லை என்பதை வித்வான்கள் தெளிய வேணும்.

பிராட்டிக்கும் ஸர்வாந்தர்யாமித்வம் ஒப்புக்கொண்டால் "ந தத்ஸமஶ்ச அப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே" போன்ற ஶ்ருதி ஈஶ்வரனுக்கு ஸமமான வேறு ப்ரகாரியில்லை என்ற கருத்துடையது என்று ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையிலே அருளிச்செய்கையாலே விரோதம் தடுக்கமுடியாது "₃ப்ரஹ்மாத்₃வைதம் ஜீவாத்₃வைதம் இதிஅத்₃வைதம் த்₃விவிதம் ஶாஸ்த்ர ப்ரதிபாத்₃யம்। தத்ர ப்₃ரஹ்மாத்₃வைதம் ப்₃ரகார்யத்₃வைதம்।" [ப்ரஹ்மாத்வைதம்-ஜீவாத்வைதமென்று சாஸ்த்ரம் கூறும் அத்வைதம் இரண்டுவிதம். ப்ரஹ்மாத்வைதமாவது—ப்ரகாரி ஒன்றே என்பது. ஜீவாத்வைதமாவது-ப்ரகாராத்வைதம்.] ஆக ப்ரகாரபேத விசிஷ்டனான ப்ரகாரி ஒருவனே என்றதாகிறது. "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்ற விடத்தில் ப்ரஹ்மத்துக்கு ஸமமான ப்ரகாரி வேறு இல்லை என்று தெளிவாகச் சொல்லுவதால் ப்ரகாரி-அத்வைதமே ப்ரஹ்மாத்வைதம். ஜிஜ்ஞாஸாதிகரணச்ருதப்ரகாசிகையில் "ந ஹி ப்₃ரஹ்மவ்யதிரிக்தஸ்ய கஸ்யசித் ஸமஸ்தசித₃சிச்சரீரகத்வ ஸம்ப₄வ:" என்று ப்ரஹ்மத்தைத் தவிர்ந்த ஒருவஸ்துவுக்கும் ஜகச்சரீரகத்வமில்லை என்று மிகத் தெளிவாக அருளிச்செய்தார். பிராட்டிக்கு விபுத்வம் ஒப்புக்கொண்டால் ப்ரகாரித்வைதம் அதாவது ப்ரஹ்மத்வைதம் என்று ஆகிவிடும். பாஷ்யகாரர் நியமனம் பெற்று விஷ்ணுபுராண வ்யாக்யானம் செய்தருளிய எங்களாழ்வான், [வி-பு 1-8-17; 1-9-145]

நித்யைவைஷா ஜக₃ந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ
யதா₂ஸர்வக₃தோ விஷ்ணு: ததை₂வேயம் த்₃விஜோத்தம॥
தே₃வத்வே தே₃வதே₃ஹேயம் மநுஷ்யத்வேச மாநுஷீ ..

என்றவிடங்களில்:— (1) அவதார தசையில் அவனோடு ஸமமாக அவனுக்கு அநுருபமான [உனக்கேற்கும் கோலமலர்ப் பாவை] என்றபடி விக்ரஹத்தை உடையவளாய்க்கொண்டு அவதரிக்கிறாள்.

(2) உலகுக்கோர் தந்தையான நாராயணனுக்குப் பத்னியாய் உலகுக்கெல்லாம் தாயாய் இருக்கையாலே அவனைப்போலவே நித்

acharya.org

யமானவள். அவளுக்கும் எம்பெருமானுக்குப்போலவே அவதரிக்கும் தோற்றமும் மறைவுமுண்டு. அவள் முதலில் ப்ருகுவுக்கும் க்யாதிக்கும் மகளாக ஆவிர்ப்பவித்தாள். பின்பு தூர்வாஸாவின் சாபத்தாலே மறைந்து அம்ருதம் கொண்ட காலத்திலே தோன்றினாள்.

(8) பகவான் எந்த ஸ்வபாவமுள்ளவனோ பிராட்டியும் அந்த ஸ்வபாவமுடையவள். எம்பெருமானுடைய (விக்ரஹ) ஸர்வவ்யாப்தி, ஸத்யஜ்ஞானதிஸ்வரூப குணங்கள் இவளுக்குமுண்டு. அல்லது பகவான் விபுவாகையாலே ஸர்வகதன். இவளும் அணுவாயினும் சக்தியினால் ஆங்காங்கு ஸந்நிதி பண்ணுவதால் ஸர்வகதை எனப்பட்டாள்—என்று வியாக்கியானமிட்டுள்ளார்.

ஸ்வாமி வேதாந்த தேசிகனும் ஸர்வநியாமகத்வமாகிற ஸர்வசரீரித்வம் முதலானவை எம்பெருமானுக்கே அஸாதாரண தர்மங்கள் என்று ரஹஸ்யத்ரயஸாரத்திலே பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரத்திலே "ஈச்வரனுக்குச த்ரசாமராதிகளைப்போலே லக்ஷணமாகச் சொன்ன-ஜகத்காரணத்வ-மோக்ஷப்ரதத்வ-ஸர்வாதாரத்வ-ஸர்வநியந்த்ருத்வ-ஸர்வசேஷித்வ - ஸர்வசரீரித்வ-ஸர்வ சப்தவாச்யத்வ—ஸர்வலோகசரண்யத்வ-ஸர்வவேதவேத்யத்வ – ஸர்வ முமுக்ஷு உபாஸ்யத்வ-ஸர்வவ்யாப்தஜ்ஞாநாநந்தரூபத்வ லக்ஷ்மீஸஹாயத்வாதிகள் ப்ரதிநியதங்கள்" என்றும், மூலமந்த்ராதிகாரத்தில்-"ஸர்வோபாதாநத்வ-ஸர்வநிமித்தத்வ-ஸர்வசரீரத்வ ஸர்வசப்தவாச்யத்வம் தொடக்கமான குணங்கள்பகவதஸாதாரணங்கள்" என்றும் அருளிச்செய்தார்.

ஆக விபுத்வம் பரமபுருஷனுக்கே அஸாதாரண தர்மம் என்கையாலே பிராட்டிக்கு விபுத்வமில்லை. ஸர்வேச்வரத்வமில்லை. பிராட்டி போக்ய சப்த வாச்யமான அசேதனத்தில் சேர்ந்தவளில்லை-லசுந்யமுடையவளாகையாலே போக்த்ருசப்தவாச்யரான ஜீவகோடியிலேயேசேர்ந்தவள். த்ரிவிதமான ஆத்மவர்க்கத்தில் இவளுக்கு ப்ராதான்யம் கொள்ளவேணும்.

ஸ்வாமி வேதாந்ததேசிகன் ரஹஸ்யத்ரயஸாரம் தத்வத்ரயாதிகாரத்தில் 'பிராட்டியும் ஜீவகோடியில்அடங்கினவள்' என்று ஒப்புக்கொண்டு பிராட்டிக்கும் பொருந்தும்படியான ஜீவலக்ஷணத்தை "அணுத்வே ஸதி சேதநத்வம் போலே ஸ்வதஸ்சேஷத்வேஸதி சேதனத்வமும் ஜீவலக்ஷணமாகையாலே சேஷத்வம் ஜீவனுக்கு ஸ்வரூப நிரூபகதர்மம்" என்று அருளிச்செய்தார்.

'அணுத்வே ஸதி' என்று விபுவான ஈச்வரனை விலக்குகிறது; 'சேதநத்வம்' என்று ப்ருதிவீ முதலான அசேதனத்தை விலக்குகிறது; 'ஸ்வத:' என்று ஈச்வரனை விலக்குகிறது.

ஈச்வரனுக்கும் ஆச்ரித விஷயத்தில் ஔபாதிகமான சேஷத்வமுண்டல்லவா? "த்விதீய லக்ஷணம் லக்ஷ்மீ ஜீவகோடி என்னும் அபிப்ராயத்தாலே" என்று முதல் வ்யாக்யானமான ஸாரதீபிகையில் ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீநிவாஸாசார்யர் அருளிச்செய்தார்,

பிராட்டிக்கு ப்ரஹ்மத்வமில்லை

கேள்வி: "ப்₃ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" "ஸ்ரீமதி ப்₃ரஹ்மதோக்தே:" என்கிற ப்ரமாணங்களாலே ஸ்ரீ விசிஷ்டனை ஸர்வேச்வரனிடத்திலே ப்ரஹ்மசப்தம் முக்கியமாயிருக்கையாலே விசேஷணமான பிராட்டிக்கும் ப்ரஹ்மசப்தார்த்தமாயிருக்கை ஏற்படுமாகையாலே ஸ்வரூபத்தாலே ப்ருஹத்வ-ப்ரும்ஹணத்வரூபமான ஜக₃த்காரணத்வ-மோக்ஷப்ரதத்வங்களைத் தவிர்க்கமுடியாதே?

பதில்: ஜகத்காரணத்வம் ப்ரஹ்மலக்ஷணம். பிராட்டிக்கு ப்ரஹ்மசப்தவாச்யத்வம் உண்டா இல்லையா என்று விசாரிக்க வேணும். ஸ்ரீபாஷ்யத்தில் -தாபத்ரயங்களாலே நலிவுற்றவர்களுக்கு நிருபாதிகனான ஈச்வரனே உபாஸ்யன். மற்றவர்கள் உபாஸ்யர்கள் அன்று என்று தெளிவாகக் கூறியிருக்கிறபடியாலே விசேஷணமான பிராட்டிக்கு ப்ரஹ்மசப்த வாச்யத்வம் கூடாது.

"ப்₃ரஹ்ம ஶப்₃தே₃ந ச ஸ்வபா₄வதோ நிரஸ்த நிகி₂லதோ₃ஷ அநவதி₄க-அஸங்க்₂யேய கல்யாணகு₃ணக₃ண: புருஷோத்தம: அபி₄தீ₄யதே-ஸர்வத்ர ப்₃ருஹத்₃வ கு₃ணயோகே₃ந ஹி ப்₃ரஹ்ம ஶப்₃த₃: ப்₃ருஹத்வஞ்ச ஸ்வரூபேண கு₃ணைஶ்ச யத்ர நிரதிஶய: ஸோ஽ஸ்ய முக்₂யோர்த்த₂: ஸ ச ஸர்வேச்வர: ஏவ அத: ப்₃ரஹ்ம ஶப்₃த₃: தத்ரைவ முக்₂யவ்ருத்த: தஸ்மாத₃ந்யத்ர தத்₃கு₃ணலேஶயோகா₃த் ஔபசாரிக: அநேகார்த்த₂கல்பநாயோகா₃த் ப₄க₃வச்ச₂ப்₃த₃வத்" என்று ஜிஜ்ஞாஸாதிகரண ஸ்ரீபா₄ஷ்ய ஸூக்திகள்.

இதற்கு வ்யாக்யானமான (ஸ்ரீதேசிகனின்) தத்வடீகையிலே "ஏகஸ்யைவ ஸர்வநியமநாதி₃ ரூபமான நிரதிசய ப்₃ருஹத்த்வம் சாஸ்திரத்திலே கூறப்பட்டுள்ளது" "தத₃ந்யேஷாந்து தாத₃தீ₄ந்யாத் தத்த்வம் தாத்₃ருக்த்வம் அபி நாஸ்தி இதி அவதா₄ரணாபி₄ப்ராய:" [பரமபுருஷனைத் தவிர மற்றவர்கள் அவனதீனமாகையாலே அவன்போல் ப்₃ரஹ்மமோ அவன்போன்றவரோ இல்லை என்பது ஏவகாரத்தின் பொருள்] என்றுவேதாந்ததேசிகரும் ப்ரஹ்மசப்த முக்யார்த்தத்வத்தை நிருபாதிக ஸர்வேசவரனை நாராயணனிடத்திலேயே நிலைநிறுத்துகையாலே-அவனிலும் வேறாய் விசேஷணமான பிராட்டிக்கு ப்ரஹ்மசப்₃த₃த்திலே அந்வயம் ஸ்ரீபாஷ்யாதிகளுக்கு அபிமதமாகாது.

ஸ்ரீதத்வஸார்வஸ்வம் — தீர்ப்புகள்

"ப்₃ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்கிறவிடத்தில் "ப்₃ரஹ்ம இதி லக்ஷ்யம்; ஸ்ரீநிவாஸந்வாதிகூ₃ம் லக்ஷணம்" என்று தத்வடீகையிலே அருளிச்செய்கையாலே விசேஷணமான பிராட்டிக்கு ப்₃ரஹ்மஶப்₃த₃வாச்யத்வம் பொருந்தவே பொருந்தாது.

ப்ரஹ்மசப்தவாச்யத்வம் பிராட்டிக்கு இல்லாமையாலே
"யதோ வா இமாநி பூ₄தாநி ஜாயந்தே
யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்தி
அபி₄ஸம்விஶந்தி தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்₃ரஹ்மேதி||"
"ஜந்மாத்₃யஸ்ய யத: ||"

என்று ப்ரஹ்ம லக்ஷணமாகச் சொல்லப்பட்ட ஜக₃ஜ்ஜந்மாதி₃ காரணத்வம் பிராட்டிக்கு இல்லை என்பதைச் சொல்லவேணுமா? ஜகஜ்ஜந்மாதிகாரணத்வம் இவளுக்கும் உண்டென்றுகொண்டால் ஈச்வரனைக் குறித்தும் இவளுக்கும் காரணத்வம் கொள்ளவேண்டி வரும். அதனால் "ஆத்மேஶ்வரம்" "ஈஶதே தே₃வ ஏக:" "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" போன்ற ச்ருதிகளுக்கு விரோதம் வரும்.

"ஜந்மாதி₃ அஸ்ய யத:" [ப்ரஹ்மஸூத்ரம் 1-1-2] "இந்த ஜகத்துக்கு ஸர்வேஶ்வரனும் நிகிலஹேயப்ரத்யநீக ஸ்வரூபனும் ஸத்யஸங்கல்பனும் ஜ்ஞாநாநந்தாதி கல்யாண குணங்களை உடையவனும் ஸர்வஜ்ஞனும் பரமகாருணிகனுமான எந்தப் பரம புருஷனிடமிருந்து ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்கள் உண்டாகின்றனவோ அது ப்ரஹ்மம்" என்று ஸூத்ரத்தின் பொருள்.

நிக்ரஹமேயறியாது அனைவருக்கும் அருள்புரியும் ஸ்வபாவமுடையவளான பிராட்டிக்கு "க்ஷிபாமி" என்கிற 'த₃ண்ட₃ த₄ரத்வம்' முதலியவற்றோடு கூடின ப்₃ரஹ்மலக்ஷணம் இல்லாமையாலே ப்ரஹ்மசப்தவாச்யத்வமில்லை.

மேலும் பிராட்டிக்கு ப்ரஹ்மசப்தவாச்யத்வம் கொண்டால் தத் ஸமாநாதிகரணமான "நாராயண பரம் ப்₃ரஹ்ம" என்கிற நாராயணசப்தவாச்யத்வமும் கொள்ளவேண்டிவரும். அதனால், "ஸ்ரீவல்லப₄ ஏவம் பூ₄த பூ₄மி நீலாநாயக" என்று தொடங்கிச் சொல்லப்படும் ஸத்யத்வாதி நிரூபகதர்மங்களும் தேவீ பூஷணாயுத பரிஜந பரிச்சத த்வாரபால பர்ஷதாதி பேதங்களும் அங்கே அநுஸந்திக்க வேண்டிவரும்.

"அத்ர நாரஶப்₃தே₃ந ஜ்ஞாநாநந்த₃ கு₃ண தி₃வ்ய விக்₃ரஹ
ஸ்ரீ ஆதி₃ மஹிஷீ ஶேஷ ஶேஷாஶநாதி₃
பரமபத₃ கால புருஷ ப்ரத₄ாந மஹதா₃தி₃கார்ய
ப்₃ரஹ்மாண்ட₃த்த₃ந்தர்வர்த்திநஶ்ச க்₃ருஹ்யந்தே"

போன்ற ஸ்ரீஸூக்தி விரோதம் வரும்.

acharya.org

பிராட்டிக்கு மோக்ஷோபாயத்வமில்லை.

கேள்வி:— மந்த்ரரத்னத்திலே ஸ்ரீவிசிஷ்டன் ப்ராப்யனானால், பிராட்டிக்கும் ப்ராப்யத்வம் கொள்ளுமாபோலே பூர்வ கண்டத்திலும் ஸ்ரீவிசிஷ்டன் உபாயம் என்னும்போது விசேஷணமாகையாலே பிராட்டிக்கும் உபாயத்வம் கொள்ளவேணுமே?

பதில்:— "த்வமேவ உபாயபூ₄தோ மே₂
ப₄வேதி ப்ரார்த்த₂நாமதி:|"
"தமேவ ஶரணம் க₃ச்ச₂"
"மாமேவ யே ப்ரபத்₃யந்தே"

ஆகிய பல வசனங்களாலே எம்பெருமான் ஒருவனுமே உபாயாந்தர நிரபேக்ஷமான உபாயம் என்று சொல்லப்பட்டிருப்பதால் பிராட்டிக்கு உபாயத்வம் இல்லை என்று கிடைக்கும். ஸ்ரீவிசிஷ்டன் உபாயமாகையாலே விசேஷணமான பிராட்டி உபாயம் என்ன முடியாது. பிராட்டிக்கு உபாயத்வம் கொண்டால் எம்பெருமானுக்கு நிரபேக்ஷ உபாயத்வம் நிலைக்காது. உத்தரகண்டத்தில் பாதகமில்லாமையாலே விசேஷணமான பிராட்டி ப்ராப்யமென்று கொள்ளப்பட்டது. இங்கு ஈச்வரனுடைய நிரபேக்ஷ உபாயத்வ ப₄ஞ்ஜகமாகையாலே பூர்வகண்டத்தில் விசேஷணமான பிராட்டிக்கு உபாயத்வம் கொள்ளமுடியாது. பூர்வகண்டத்தில் நாரபதார்த்தங்களெல்லாம் விசேஷணமாகையாலே அவைகளுக்கும் உபாயத்வம் ஏற்கவேண்டிவரும்.

கேள்வி:— பூர்வகண்டத்தில் நாரபதார்த்தங்களுக்கு உபாயத்வம் வந்துவிடுமே என்று பயந்து பிராட்டிக்கு உபாயத்வத்தை விடுவதுபோல உத்தரகண்டத்திலும் நாரபதார்த்தங்களுக்கு ப்ராப்யத்வம் வந்து விடுமே என்று பயந்து பிராட்டிக்கு ப்ராப்யத்வமும் விடவேண்டி வருமே?

பதில்:— ஸ்வரூப-ரூப-குண-விபூதிகளுக்கு ப்ராப்யத்வம் ஸர்வ ஸம்மதமே.

கேள்வி:— அப்படியானால் திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபாயத்வம் இல்லாது போய்விடுமே?

"சரணௌ ஶரணம் ப்ரபத்₃யே"
"சரணௌ ஶரணம் தே₃வ்ரஜம் விபோ₄"
"ஸர்வதா₃ சரணத்₃வந்த்₃வம் வ்ரஜாமி ஶரணம் தவ"
"த்வத்பாத₃மூலம் ஶரணம் ப்ரபத்₃யே"

போன்ற இடங்களில் விசிஷ்டமாகச் சொல்லாமல் சரணாரவிந்தங்களையே விசேஷ்யமாகக் கூறியதால் திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபாயத்வம் ஸர்வாசார்ய ஸம்மதந்தான். "நாராயண சரணௌ"

acharya.org

என்று த்வயத்தில் பூர்வகண்டத்தில் சொல்லப்படும் ஜ்ஞாநம், ஶக்தி முதலான பகவத்குணங்களும், திருமேனியும் தனியாகச் செயல்படத் தகுதியுள்ள சேதநரல்லாமையாலே அவற்றுக்கு உபாயத்வம் கொள்வது எம்பெருமானுடைய உபாயநைரபேக்ஷ்யத்திற்கு முரணாகாது. அவற்றுக்கு முன் உள்ள 'ஶ்ரீமத்' என்னும் பதத்தில் சொல்லப்படும் பிராட்டி தனியாகச்செயல்படத் தகுதியுள்ள சேதநையாகையாலே அவளுக்கு உபாயத்வம் கொள்வது எம்பெருமானுடைய உபாயநைரபேக்ஷ்யத்திற்கு முரணாகும். ஆகையால் அவளுக்குப் புருஷகாரத்வமே கொள்ளப்படுகிறது. பிராட்டிக்குப் பாஞ்சராத்ரத்தில் "உபாயத்வமில்லை. புருஷகாரத்வமே உள்ளது" என்று தெளிவாகச் சொல்லப்பட்டது.

அஹம் மத்ப்ராப்த்யுபாயோ வை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி: ஸ்வயம்
லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: |
மமாபி ச மதம் ஹி ஏதத் நாந்யதா லக்ஷணம் பவேத்

என்று பகவானுக்கு உபாயத்வமும் பிராட்டிக்குப் புருஷகாரத்வமும் அஸாதாரண தர்மம் என்று சொல்லப்பட்டது காண்க.

"அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷாத்" "மாமேகம் ஶரணம் வ்ரஜ" என்றவிடங்களில், 'ஸாக்ஷாத் ஏகபத'ங்களாலும் 'நாந்யதா லக்ஷணம் பவேத்' [வேறுலக்ஷணமில்லை] என்கையாலும் பிராட்டிக்கு உபாயத்வமில்லை என்பது தெளிவு. வேதாந்தாசார்யரும் ரஹஸ்யரத்நாவளியில் 'ஶ்ரீமானான நாராயணன் ஒருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் ஶரணம். இஜ்ஜீவன் அநாதிகாலம் அநுபவிக்கப் பெறாத ஶ்ரிய:பதியைப் பெறுகைக்கு ஹேதுவை ரஹஸ்யத்ரயமுகத்தாலே உபதேசித்து அவ்வழியாலே ஆசார்யன் இவனுக்கு ஶரணமாகிறான். ஸர்வஸ்வாமினியாய் ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிஶயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிஶயத்தாலும் புருஷகாரமாய்க்கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்" என்று அருளிச்செய்தார்.

பிராட்டிக்கு மோக்ஷப்ரதத்வமில்லை

"ஏஷ ஏவ ஹி ஆநந்தயாதி" என்று பரமபுருஷனுக்கே மோக்ஷப்ரதத்வம் அஸாதாரணம். எம்பெருமானார் "பலாதிகரண" பாஷ்யத்தில் "அத: பரம் உபாஸநம் விவக்ஷந் உபாஸிநாநாம் பரஸ்மாதேவ புருஷாத் தத்ப்ராப்திரூபம் அபவர்க்காக்யம் பலம்" என்று 'ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா அந்நாதோ வஸுதாந:, ஏஷ ஹி ஏவ ஆநந்தயாதி" என்னும் வேத வாக்யங்களை ப்ரமாணமாகக் கொண்டு போகாபவர்க்கப்பலங்களைப் பரப்ரஹ்மமான பரம புருஷனே தருகிறான் என்று அருளியுள்ளார். மோக்ஷம் தவிர்ந்த மற்ற பலனை அளிப்பதும்

acharya.org

அந்தந்த தேவதா சரீரகனான பரமாத்மாவே என்று 'பூர்வர் து பா3த3ராயணோ ஹேது வ்யபதே3சாத்' [ப்3ரஹ்ம-ஸூ 3-2-40] என்ற விடத்தில் விரிவாகக் கூறப்படுகிறது.

பிராட்டிக்குப் 'ப2லப்ரத3'த்வத்தை ஒப்புக்கொண்டால் பிராட்டியைப் பற்றிய ஞானம மோக்ஷஹேது என்று சொல்லவேண்டும். அது சரியில்லை. "தமேவம் வித்3வாந் அம்ருத இஹ ப4வதி நாந்ய: பந்தா2 அயநாய வித்3யதே" என்று பரமபுருஷனையொழிய மற்றவர்க்கு மோக்ஷோபாயத்வமில்லை என்று கூறப்பட்டுள்ளது.

'மோக்ஷப்ரத3த்வமுண்டானால் தன்னையொழிந்த மற்றவற்றுக்கு நியாமகத்வமுண்டு. அது இல்லையானால் அது இல்லை" என்றவ்யாப்தி ப3லத்தால் பிராட்டிக்கு ஸர்வநியந்த்ருத்வமும் ஏற்படும். "அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ; ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று பிராட்டி பகவானுக்குப்பத்னியாகையாலே நியாம்யை என்கிற ச்ருதி விரோதம் ஏற்படும்.

"ஸ்ரீமாந் ரக்ஷதி" என்று 'ஸ்ரீ விசிஷ்டன் ரக்ஷிக்கிறான்' என்றால் விசேஷணமான பிராட்டிக்கும் உபாயத்வமுண்டு என்று சொல்ல இயலாது. "ரதீ2 க3ச்ச2தி குண்ட3லீ க3ச்ச2தி" என்ற இடங்களில் 'ரத2 குண்ட3ல'ங்களுக்கு 'க3மநக்ரியை'யில் அசேதனமாகையாலே அந்வயமில்லை. பிராட்டி சேதனையாகையாலே ரக்ஷணக்ரியையில் அந்வயம் கூடும் என்றும் சொல்லமுடியாது.

'பதிபாரார்த்2ய கருணா' 'ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி'

என்கிற பராசரபட்டர் ஸ்ரீஸூக்திப்படியே பாரதந்த்ர்யமே வடிவாக உடையவளாகையாலும் முற்கூறிய ப்ரமாணபலத்தாலும், எம்பெருமானுடைய உபாயநைரபேக்ஷ்யத்திற்குக் கொத்தையாகுமாகையாலும் ரக்ஷணக்ரியையில் அந்வயமில்லை விரிக்கில் பெருகும். "பன்னியுரைக்குங்கால் பாரதமாம்."

பிராட்டிக்கு ப்ரமாணவிருத்தமுமாய்ஸ்வரூபஸ்வபாவங்களுக்குச் சேராததுமான தன்மைகளைச் சொல்லுவது பூஷணமாகாது; தூஷணமாகும். பதிவ்ரதையான ஒரு ஸ்த்ரீக்குக் கணவனுக்கு அடங்கியிருப்பவள் என்பது தானே பொருந்தும்? பிராட்டி விஷயமாக அருளிச்செய்யப்பட்ட நூல்களை (சுமார் 12 க்ரந்தங்கள்) பராமர்சித்து யதா சக்தி விண்ணப்பித்தேன். வித்வதக்ரேஸரர்கள் உகப்பார்கள் என நம்புகிறேன்.

ஆதலால், ப்ரத2மபக்ஷம் தென்னாசார்யர்களுடையது சதுர்த்த பக்ஷம் ஸ்ரீ தேசிகனுடையது எனத் தெளிவாக விளங்கும். இவ்விஷயத்தில் சர்ச்சையை விடுத்து ப்ரமாணசரணராக வாழ்வோம்.

acharya.org

10. நாலாவது பக்ஷமே ஸ்ரீதேசிகனின் பக்ஷம்

[ஸ்ரீ உ வே K கோதண்டராமன், (No 93, 11 வது வீதி டாடா பாட், கோயம்புத்தூர் —641012]

[இக்கட்டுரை ஆசிரியர் கும்பகோணத்தைச்சார்ந்த தேசிக ஸம்ப்ரதாயஸ்த ஆசார்யரான சுந்தரதாதாசார்யருடைய சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்.]

ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனத்தில் ஈஶ்வர ஆனி [595] இதழில் "விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?" என்னும் கட்டுரையைப் படித்தேன். அதுபற்றி அடியேனது கருத்துக்களைப் பணிவுடன் தெரிவிக்கிறேன்.

வேதம், புருஷஸூக்தம், விஷ்ணுஸூக்தம், ஸ்ரீமத் பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், இதிஹாஸ புராணங்கள், பரிபாடல்கள், திவ்ய ப்ரபந்தம், பெரும்பாணாற்றுப்படை, உபநிஷத்துகள், தைத்திரீய நாராயணவல்லி, ரகுவம்சம்(காளிதாஸர்), ரிஷிகள்வாக்கு, பழம் தமிழர்கள் வாக்கு, விஷ்ணுபுராணம், மனுஸ்மிருதி, பத்ம புராணம் முதலியவற்றால் ஸ்ரீமானான நாராயணனின் பரத்வம் நன்கு தெளிவாக முழங்கப்படுகிறது.

உலகில் உள்ள பொருள் அனைத்தையும் தனக்கு சரீரமாகக் கொண்டு, தான் அவற்றுக்கு அந்தர்யாமியாய் நின்று நியமிக்கை யாலே எல்லாம் நாராயணனுக்கு வசப்பட்டிருப்பதைத் தெரிவிக்கும் பகவத் கீதா ஶ்லோகங்கள் வருமாறு:—

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்த மூர்த்திநா ।
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி ந சாஹம் தேஷ்வவஸ்தித: ॥
ந ச மத்ஸ்தாநி பூதாநி பஶ்ய மே யோகமைஶ்வரம் ।
பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந: ॥

[கீதை 9—4,5]

[சேதநாசேதநாத்மகமான இவ்வுலகனைத்தும் வெளிப்படாத ஸ்வரூபத்தையுடைய அந்தர்யாமியான என்னால் வியாபிக்கப்பட்டுள்ளது. எல்லாப்பொருள்களும் (அந்தர்யாமியான) என்னிடம் உள்ளன. நான் (அவற்றால்) தாங்கப்படுபவன் அல்லன். பொருள்கள் (குடம் முதலானவற்றால் ஜலம் முதலானது போல் தாங்கப்பட்டு) என்னிடம் இருப்பதில்லை. (என் ஸங்கல்பத்தால் தரிக்கப்பட்டே என்னிடம் உள்ளன.) ஈஶ்வரனான எனக்கே உரியதான எனது

acharya.org

ஸங்கல்பத்தைப் பார்! (அது யாதெனில்) எல்லா பூதங்களையும் தரிப்பவன் நானே. (நான்) பூதங்களால் தாங்கப்படுபவனல்லன், எனது ஸங்கல்பமே பூதங்களுக்கு ஸத்தாகாரணமாகவும், தாரகமாகவும் நியமிப்பதாகவும் இருப்பது]

மேற்கண்ட ஶ்லோகங்களால் பிராட்டி உள்ளிட்ட எல்லாப் பொருள்களுடைய ஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகளும் நாராயணனுக்கு அடங்கியவை என்பது தெரிவிக்கப்பட்டதால் எம்பெருமானுடைய நிருபாதிக ஈஶ்வரத்வம் அறிவிக்கப்பட்டது.

இவ்வுலகம் நாராயணனால் தோற்றுவிக்கப்பட்டு. காக்கப்பட்டு அவனுள் அடங்குகின்றது. நாராயணோபநிஷத் பின்வருமாறு ஓதியது:—

" நாராயணாத்தேவ ஸமுத்பத்யந்தே
நாராயணாத் ப்ரவர்த்தந்தே
நாராயணே ப்ரலீயந்தே"

[நாராயணனிடமிருந்தே அனைவரும் உண்டாகிறார்கள் நாராயணனாலேயே காப்பாற்றப்படுகிறார்கள். நாராயணனிடமே லயத்தை அடைகிறார்கள்.]

திருமழிசைப்பிரான் தமது திருச்சந்த விருத்தத்தில் இவ்வர்த்தத்தினை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே.
[திருச்சந்த விருத்தம்-10]

[''தன்னிலே கிளர்ந்து எறிபா நின்றுள்ள அலைகளையுடைய வெண்ணிறமான சமுத்திரமானது தன்னிலே கிளர்ந்து அலையெறிந்து ஒடுங்குகின்ற தன்மைபோல், உன் ஸ்வரூபத்துக்குள்ளே தோன்றி அழிகிற ஸ்தாவரமென்ன, ஜங்கமமென்ன இவையடங்கிய உலகெல்லாம் உன்னிடம் ஒடுங்குகிற ஸ்வபாவம் உன்னிடமே உள்ளது] என்கிறார்.

இங்கு எம்பெருமானுடைய ஜகத்காரணத்வத்தை ஏவகாரத்தால் அறிவித்தது குறிப்பிடத்தக்கது அப்படிப்பட்ட ஜகத்காரணனை எம்பெருமானுக்கு ஸ்வரூப நிரூபகதர்மமாய் விளங்

acharya.org

குபவள் பிராட்டி என்பதையும், அவளுக்கும் ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கும் நாயகனும், ஸ்வாமியுமானவன் எம்பெருமான் என்பதையும் 'படைப்புக்குமுற்பட்டகாலம், படைப்பு நடக்கும் காலம் படைப்பின் முடிவில் பிரளயம் நடக்கும் காலம் ஆகிய எல்லாக்காலங்களிலும் நிர்வாஹகனாய் இருப்பவன் நாராயணன். பிரளயத்தால் சேதநருக்கு ஆபத்து வரும் காலத்து ஆலிலைக் கண்ணனாகத் தான் எல்லாம்வல்லவன் என்பது தோன்ற அனைவரையும் தன் சிறிய வயிற்றில் வைத்துப் பாதுகாத்து வெளியிட்டு பகவான் தானே உலகனைத்துக்கும் காரணப்பொருள் என்று விளங்கும்படி துயில் கொண்டவன்' என்பதையும் மற்றுமொரு பாசுரத்தின் வாயிலாக நமக்குத்தெரிவிக்கிறார்,

பண்டும் இன்றும் மேலுமாய் ஓர்பாலனாகி ஞாலமேழ்
உண்டு, மண்டி ஆலிலைத் துயில்ற ஆதி தேவனே!
வண்டு கிண்டு தண்துழாய் அலங்கலாய் கலந்த சீர்
புண்டரீக பாவை சேரும் மார்ப பூமி நாதனே.

[திருச்சந்த விருத்தப் - 22]

"ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இம்மூன்றையும் எவன் செய்கிறானே அவனே காரணன். ஜகத்ரக்ஷகன். அவனுக்கு மேம்பட்டவரோ இணையானவரோ கிடையாது. உலகம் படைப்பதை எம்பெருமான் செய்கிறான், பிராட்டி எம்பெருமான் செய்யும் லீலையில் ஆநந்தத்திலேயே பங்கு கொள்கிறாள்" என்ற சித்தாந்தம் பூர்வாசார்யர்களின் தெளிவுரைகள் மூலம் அறியப்படுகிறது,

மற்ற ஆழ்வார்களும் இவ்வண்ணமே பல பாடல்களில் காட்டியுள்ளனர்.

திருக்குறளிலும் வள்ளுவர் கடவுள் வாழ்த்தில்
" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்னும் முதற்பாடலில் "ஆதி பகவன்" என்று இறைவன் ஒருவனே உலகுக்குக் காரணமானவன் என்று காட்டினார். ஏழாவது குறளில்:—

" தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்று இறைவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்றும் அவனது திருவடிகளே உபாயம் என்றும் காட்டினார்.

கம்பராமாயணம் கடவுள் வாழ்த்தில் கம்பர் நாரணனே சரண்யன் என்பதைப் பின் வரும் பாடல்களில் தெளிவுபடுத்துகிறார்.

"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர்
அன்னவர்க்கே சரண் நாங்களே,
ஆதி, அந்தம் அரியென யாவையும்
ஓதினர் அலகில்லன உள்ளன
வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையன்
பாதமல்லது பற்றிலர் பற்றிலார்"

தம் ஈஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்
தம் தே₃வதாநாம் பரமஞ்ச தை₃வதம் [ஶ்வே 6-7]

[ஈஶ்வரர்களுக்கும் மேலான மஹேஶ்வரனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையும் ,ஆன அவனை] என்று வேதங்களும்,

ராஜாதி₄ ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர்
ப்₃ரஹ்ம மயோ மஹான் |
ஈஶ்வரம் தம் விஜாநீமஸ் ஸபிதா ஸ ப்ரஜாபதி: ||

[ப்ரஹ்ம மயராய், பெரியவரான விஷ்ணு அனைவர்க்கும் ராஜாதி ராஜராய் விளங்குகிறார், அவரை ஈஶ்வரராக அறிகிறோம். அவரே தந்தை, அவரே ப்ரஜாபதி] என்று மகாப₄ாரதமும்

ஏக: ஶாஸ்தா ந த்₃விதீயோऽஸ்தி ஶாஸ்தா

[ஒருவனே நியமிப்பவன். நியமிக்கும் இரண்டாவது பொருள் கிடையாது] என்பது போன்ற பிரமாணங்களும் எம்பெருமானுடைய ஸ்வதந்திரமான ஈஶ்வரத்தன்மையைக் காட்டுவன.

இனி பிராட்டியின் தன்மைகள்

ஸ்ரீமத்ராமாயணம்

"கிம்த்வா ऽமந்யத வைதே₃ஹ: பிதாமே மிதி₂லாதி₄ப: |
ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்₃ரஹம் ||"

ஸ்ரீராமன் தந்தை தசரதனின் கட்டளைப்படி காட்டுக்குப் புறப்படும் முன் சீதா பிராட்டியிடம் "திருவயோத்யைக்கு நான் மீண்டும் வரும் வரையில் மாமியார் மாமனார் முதலானவரை ரக்ஷித்திரு" என்று வேண்டிக்கொள்ள, அவ்வார்த்தை புண்ணில் புளிப்

acharya.org

பெய்தாற்போலே பிராட்டிக்குப் பொறுக்க வொண்ணுததாய், ப்ரணய கோபத்தில் அபிமானங்கள் முறைகெட்டிருக்குமாகையாலே பெருமாளைக் குறித்துக்கடும்சொற்களைப் பேசுவதாக இங்கு காட்டப் படுகிறது. இதன் கருத்து ஆசார்யர்களால் பின்வருமாறு விளக்கப் பட்டுள்ளது:—

''மனுமுதலிய ஸ்ம்ருதி கர்த்தாக்கள் சொன்ன பதிவ்ரதாலக்ஷணத்தையும் விஞ்சியிருப்பவள் என்று என் தந்தை சொன்னரே. கணவனிலும் வேறுபட்ட உடலும் உயிருமுள்ள அப்பதிவிரதைகளைப் போலன்றிக்கே இவளுக்கு உடலும் உயிரும் நீரே என்று உறுதி கொடுத்தாரே. 'எந்த மஹாத்மாவினுடைய தோள் நிழலைப்பற்றி உலகெல்லாம் விளங்குகிறதோ' என்கிறபடியே உலகெல்லாம் ஒதுங்கினும் தோள் நிழல் அதிகமாகவும் நிழலில் ஒதுங்குபவர் சிறியதாகவுமிருக்கும்படியானதாய், பராக்ரமத்தையுடையதான உம்முடைய திருத்தோளைக் கணிசித்து, பாணிநா (கையாலே) என்று விசேஷித்தாரே''

பிரிவு பொறுக்காமை, சொல்பொறுக்காமை, அத்யந்த பாரதந்த்ர்யம், தர்மானுஷ்டான ஸஹகாரித்வம், நிரந்தர போகார்ஹத்வம், போக்யதை முதலான இத்தன்மைகள் ஸ்ரீராமாயணத்தில் பிராட்டிக்கு விளங்குகின்றன.

''குழந்தையின் தொட்டிலேயும் பர்த்தாவின் படுக்கையையும் விடாதிருக்கும் மாதாவைப்போல பிராட்டியின் இருப்பு'' என்பது வைணவக் கொள்கை. ''அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணு பத்நீ'' என்ற வேதவாக்கு இதைக் காட்டுகிறது.

உலகமனைத்துக்கும் இறைவி என்ற முறையில் அவள் சேதநர்களிடம் கருணை மொழிந்தாயாகவும், பரமனின் பத்தினி என்ற முறையில் அவனிடம் சேதனர்களுக்காகப் பரிந்து பேசும் புருஷகார பலம் மிக்கவளாகவும் விளங்குகிறாள், புருஷகாரத்வமே பிராட்டியின் ஸ்வரூபம்.

இதையே ''கேவலக்ருபா நிர்வாஹ்ய வர்க்கேவயம் ஶேஷித்வே பரம: புமாந்''—''பிராட்டியே! உன் கருணையை மட்டுமேகொண்டு வாழ வேண்டிய வகுப்பில் நாங்கள் இருக்கிறோம். உனக்குத் தலைவனாகத் திகழ்பவன் பரம புருஷன்'' என்று (ஸ்ரீகுணரத்ன கோஶம்—22) பட்டர் தெளிவாக விளக்குகிறார். எனவே பிராட்டி பரமனுக்கு மட்டும் அடங்கியவளாகவும் மற்ற சேதனர்களுக்கு ஸ்வாமினியாகவும் திகழ்கிறாள் என்பது ஸகலபூர்வாசார்ய ஸம்மதம்.

acharya.org

ராமாயணத்தில் ராவணனது அசோகவனத்தில் சிறை இருந்த போது சீதை அவனுக்கு எத்தனையோ உபதேசங்கள் செய்தாள். தன் கற்பென்னும் நெருப்பினால் அவள் அவனை எரித்திருக்கக்கூடும். ஆயினும் "தான் ஸ்ரீராமனுக்கு அடங்கியவள். அவனது வீரமே விளங்கவேண்டும்" என்று எண்ணியவளாய்ச் சொல்லுகிறாள்— "ராவணா! ஸ்ரீராமனுடைய ஆணையில்லாமையாலும், நான் பாதிவ்ரத்ய (பதிபாரதந்திரிய) மாகிற தவத்தைக் கடைப்பிடிப்பதினாலும். நீ என்னால் சாம்பலாக்குவதற்கு உரியவனாயினும் உன்னைச் சாம்பலாக்காமல் இருக்கிறேன்." என்கிறாள். இது ஒரு எடுத்துக்காட்டு.

திருமங்கை ஆழ்வாரும் (7-4-1) பிராட்டிகள் பரமனின் அழகிய திருவடிகளைப் பிடிக்கும் சேஷத்வமே வடிவெடுத்தவர்கள் என்கிறார். "செங்கமலத்திருமகளும் புவியும் செம்பொன் திருவடியின் இணைவருட" (பெரிய திரு 7-4-1) "சந்தணி மென் முலை மலராள் தரணி மங்கை தாமிருவர் அடிவருடும் தன்மையானை" [பெரியதிரு 2-10-2] என்னும் பாசுரங்களைக் காண்க.

நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "வடிவிணையில்லா மலர் மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க நீ ஒரு நாள் கூவுதல் வருதல் செய்யாயே" என்கிறார். இத்தால் பிராட்டியினுடைய இயல்பான சேஷத்வம் அறிவிக்கப்பட்டது.

ஸ்வாமி தேசிகனும் பிராட்டியினுடைய இயல்பான சேஷத்வத்தைப் பின்வரும் ஸ்லோகங்களில் தெளிவாகக் காட்டியுள்ளார்.

வேலாதீத ச்ருதி பரிமளம் வேதஸாம் மௌளிஸேவ்யம்
ப்ராதுர்பூதம் கநகஸரித: ஸைகதே ஹம்ஸ ஜுஷ்டே
லக்ஷ்மீ பூம்யோ: கரஸரஸிஜைர் லாலிதம் ரங்க பர்த்து:
பாதாம்போஜம் ப்ரதிபலதி மே பாவநா தீர்க்கிகாயாம் ||
[ஸ்ரீபகவத் த்யாந ஸோபாநம்-ஸ்லோகம்-2]

விளக்கம்:- எல்லையைக்கடந்த வேதங்களின் மணம் வீசப்பெற்றதாய், பிரம தேவர்களின் முடிகளால் வணங்கப்பெற்றதாய், அன்னங்கள் விரும்பி உறைகின்ற காவேரியாற்றின் மணல் திட்டில் தோன்றியதாய், பெரியபிராட்டி-பூமிப்பிராட்டி இவர்களின் திருக்கைத்தாமரைகளால் வருடப்பெற்றதாய் உள்ள திருவரங்கப் பெருமானுடைய திருவடித் தாமரை அடியேனுடைய நினைவென்னும் பொய்கையில் உருக்காட்டுகின்றது.

acharya.org

பத்₃மாகராது₃பக₃தா பரிஷஸ்வஜே த்வாம்
வேக₃ஸரித்₃விஹரதீ கலஶாப்₃தி₄ கந்யா ।
ஆஹுஸ் தத₃ப்ரப்₄ருதி தீ₃பஸமாவபா₄ஸம்
ஆஜாநதோ மரகத ப்ரதிமம் வபுஸ்தே ॥
[ஸ்ரீசரணாகதி தீபிகை-ஶ்லோகம்-4]

விளக்கம்:— "திருப்பாற்கடலின் புதல்வியான பெரிய பிராட்டி தாமரைப் பொய்கையினின்று சேர்ந்து வேகவதியாற்றில் விளையாடு பவளாய் உன்னை இறுக அணைத்துக்கொண்டாள். இயற்கையாக மரகதமணிபோன்ற உன் திருமேனியை அது முதல் தீபம் போன்ற பிரகாசமுடையதாகக் கூறுகின்றனர்." பகவான் தீபமாக வும் பிராட்டி அதன் ஒளியாகவும் திகழ்கின்றார்கள் என்று கூறு வதன் மூலம் பெருமாள் தர்மியாகவும் பிராட்டி தர்மமாகவும் கூறப் பட்டனர்.

முடிவாக, பிராட்டி எம்பெருமானுக்குப் பத்னியாக இருப்பதால் பிராட்டியினுடைய ஈஶ்வரத்வம் பத்நீத்வ ப்ரயுக்தமே. பிராட்டியும் எம்பெருமானுக்குப் பாரதந்த்ரயமாயிருப்பவளே என்றே கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையிலும் கத்ய பாஷ்யத்திலும் ந்யாய ஸித்தாஞ் ஜனத்திலும் சது:ஶ்லோகீ பாஷ்யத்திலும் பல இடங்களில் நிலை நாட்டியிருக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

பிராட்டியின் சேஷத்வ பாரதந்த்ரியங்கள் ஸ்ரீராமாயணத்தில் குன்றுமேல் ஏற்றிய விளக்காகப் பிரகாசிப்பது அனைவராலும் மறுக்க முடியாதது. பிராட்டிக்குத் தன் இச்சையால் சேஷத்வம் என்பது ப்ரமாணிகமன்று. அருளிச்செயலில் இதற்கு ப்ரமாணம் தேடினாலும் கிடைக்காது.

ஸ்வாமி தேசிகனும் பிராட்டிக்குள்ள பகவத் பாரதந்த்ரியத்தை யும் பகவச்சரீரத்வத்தையும் தம நூல்களில் ஏற்றுக்கொண்டிருப்ப தால் இரண்டு ஈஶ்வரர்கள் இருக்க முடியாது. எல்லாப் ப்ரமா ணங்களும் ஒருவனையே நிருபாதிக ஈஶ்வரன் என்று சொல்லு வதால் இரண்டு ஈஶ்வரர்களுக்கு இடமில்லை.

மோக்ஷம் கொடுக்க வல்லமை நாராயணன் ஒருவனுக்கே உரியது.

இரண்டு ஈஶ்வரர்களைக் கொள்வது கைவத்தைப்போல் சாக்த மதம் உண்டாக ஸ்ரீ வகுத்துவிடும் விசிஷ்டாத்வைதத்திற்கு மிகவும் முரண்பட்டது ஆகையால் எம்பெருமானுக்குச் சமமான ஈஶ்வரத்வத்தைப் பிராட்டிக்குச் சொல்லும் ஐந்தாவது பக்ஷம் ப்ரமாணபலமுடையதன்று. எனவே நான்காவது பக்ஷமே ஸ்ரீதேசி கன் பக்ஷம்.

acharya.org

அன்பர்களின் கடிதங்கள்

1. ஸ்ரீ உ. வே. K. R. நாராயணன், 871, இராமசாமி சாலை, கே. கே. நகர், சென்னை-600078

ஸ்ரீ உ. வே. ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் ப்ரணாம புரஸ்ஸரமாகச் செய்துகொள்ளும் விஜ்ஞாபனம். உபயகுசலம்.

தேவரீர் திருமாலிருஞ்சோலையில் தேவதாந்தரக்கோயில் வழக்கில் பெருமுயற்சி எடுத்ததால் நமக்கு முதல் வெற்றி கிட்டியது. பகவத் விஷயம் மறுபதிப்பின் மூலம் ஒரு நல்ல கைங்கர்யம் செய்தாகிறது.

தற்போது தேவரீர் பிராட்டி தத்வ விஷயமாகச் செய்துவரும் கைங்கர்யம் மற்றெல்லாவற்றையும் விஞ்சியுள்ளது. இதனால் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹமே நலமடையப் போவது திண்ணம். எப்படி ஒரு யாதவப்ரகாசனின் அபார்த்தத்தின் விளைவால் நமக்கு ஒரு யதிராசர் கிட்டி, யாதாத்ம்ய ஜ்ஞானம் பிறக்க வழிவந்ததோ அதுபோல்தான் உம்முடைய கைங்கர்யமும். அடியேன் மனப்பூர்வமாக இதற்காக தேவரீருக்கு நன்றி செலுத்துகிறேன். ஆயிரம் கோடி வருஷம் காலக்ஷேபம் செய்தாலும் கிடைத்தற்கரிய விஷயங்களெல்லாம் கிடைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியாயுள்ளேன்.

சரண்யன் தேவரீருக்கு ஸகல க்ஷேமங்களையும் அளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

வேணும்,
நாராயணதாஸன்.

2. ஸ்ரீ உ. வே. J. பார்த்தஸாரதி, ஆசிரியர் "ஸ்ரீராமாநுஜவாணீ" 21, ராமாநுஜம் தெரு, சென்னை-17

விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா? என்பது பற்றிய விவாதத்தில் தேவரீர் சேகரித்துக் காட்டியுள்ள பிரமாணங்கள் ஆணித்தரமாயுள்ளன. ஸ்ரீ பாஷ்யகாரர் வேதார்த்த ஸங்க்ரஹ முடிவில்,

ஸாராஸார விவேகஜ்ஞா: கரீயாம்ஸோ விமத்ஸரா: ।
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி க்ருதோ வேதார்த்த ஸங்க்ரஹ: ॥

என்றபடி மாத்சரியமற்றுப் பிரமாணங்களுக்குக் கட்டுப்படும் பேரறிஞர்கள் தேவரீர் கூறியுள்ளவற்றை உவந்து ஆமோதிப்பர். — J. பார்த்தஸாரதி தாஸன்.

acharya.org

ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்

ப்ரியா-ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்

முன்னுரை

ஸ்ரீதத்வ விஷயத்தைப் பற்றி நாமும் மற்றும் பலரும் ஸ்ரீதத்வஸர்வஸ்வத்தில் காட்டியிருக்கும் நிருபணங்களுக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஈச்வர ஷு புரட்டாசி இதழிலிருந்து பதிலெழுத முற்பட்டுள்ளது. இது தென்கலை வடகலை ஸம்ப்ரதாய பேதத்தைப்பற்றிய சர்ச்சை அல்ல. சுமார் இரு நூறுவருடங்களுக்குள்ளாக தேசிக ஸம்ப்ரதாயத்திலுள்ள பல வித்வான்கள் ஆழ்வார்கள் திருவுள்ளத்திற்கும், எம் பெருமானார், எங்களாழ்வான், பட்டர், நஞ்ஜீயர், நம் பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர் ஆகிய பூர்வாசார்யர்களுடைய திருவுள்ளத்திற்கும் முரணாக "பெரிய பிராட்டியார் எம்பெருமானைப் போலவே இன்னொரு பரப் பிரம்மம்" என்றும், "எம்பெருமானுக்குத் துல்யமான ஈச்வரி" என்றும், "பிராட்டி பெருமானுக்குச் சரீரமல்ல" என்றும், "பிராட்டி எம்பெருமானுக்கு சேஷபூதையா யிருப்பது அவளது இஷ்டத்தாலேயே" என்றும், "அவள் ஸ்வாதந்த்ர்யமே வடிவெடுத்தவள்" என்றும், "அவள் எம்பெருமானைப் போலவே உலகிற்கு நிமித்த உபாதான ஸஹகாரி காரணங்களாக இருப்பவள்" என்றும் கூறி வருகிறார்கள். "இதை ஒப்புக்கொண்டால் விசிஷ்டாத்வை தமே விசிஷ்டத்வைதமாக மாறிவிடும்" என்றும், "வைஷ் ணவத்தில் சாக்தமதம் புகுர வழிவகுத்துவிடும்" என்றும் உபயஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த அறிவாளிகள் பலர் அஞ்சுகிறார்கள். ஆகையால் இது விசிஷ்டாத்வைதத்தை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்ட சர்ச்சையே தவிர, தென்கலை வட கலை ஸம்ப்ரதாயபேதச் சர்ச்சையல்ல என்பது தெளிவு. இவ்விஷயத்தில்தெளிவுஏற்படுத்துவதற்காகவே மூன்று வரு டங்களுக்கு முன்பாகவே "விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்" என்னும் கட்டுரையை எழுதி, அதில் வித்வான்களின் மனச் சாக்ஷியைக் குறித்து எட்டு கேள்விகளைக் கேட்டிருந்

தோம். பல தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களிடம் நேரிலும் கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டும், ஸ்ரீரங்கத்தி லும் மதுராந்தகத்திலும் நடந்த அஹோபிலமட மாலோல வித்வத் ஸதஸ்ஸில் கலந்து கொண்டும் வித்வான்களை இது விஷயத்தில் ஒரு நிர்ணயம்செய்ய வேண்டும் என்று ப்ரார்த்தித்தோம். வித்வான்கள் எவரும் நீண்ட நாட்கள் வரையில் நமது கேள்விகளுக்குப் பதிலெழுத முன்வரவில்லை. மூன்று வருடங்களுக்குப் பிறகு சமீபத்தில் "யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்தாஞ்ஜனம்" என்னும் தலைப்பில் ஒறு சிறு நூல் நம்முடைய கேள்விகளுக்குப் பதிலெழுதும் நோக்கத்துடன் வெளிவந்தது. அதற்குப் பின் இருதரப்பு வாதங்களையும் 26 பாராக்களில் குறிப்பிட்டு நடுநிலை யாளர்களின் தீர்ப்பை அண்மைக் காலத்தில் கோரியிருந் தோம், உபயஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்களும் அறிஞர்களும் இதுவரையில் பத்து தீர்ப்புகளை வழங்கி யுள்ளார்கள். அஹோபிலமட ஆஸ்தான வித்வான் ஒரு வர் நீங்கலாக மற்ற அனைவரும் "பிராட்டி எம்பெருமா னோடு துல்யமான ஸ்வதந்த்ரேச்வரீ" என்னும் பக்ஷத்தை ஆழ்வார்களோ தேசிகனுள்ளிட்ட ஆசார்யர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை" என்றே தீர்ப்பளித்துள்ளார்கள். இந்நிலை யில் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார விளக் கத்தின் நடுவே இந்தச்சர்ச்சையைப் புகுத்தியுள்ளது. ஸுதர் சனப் ஐப்பசி [599] இதழில் "ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா விளக்க வேண்டிய விஷயங்கள்" என்னும் தலைப்பில் பதினாறு விஷயங்களை ஆறு பக்கங்களில் குறிப்பிட்டு அவற்றை, நம் விலாசத்தையும் குறிப்பிட்டு அப்படியே அச்சிட்டு ப்ர மாணம் காட்டி ப்ரியா பதிலளிக்கவேண்டுமென்று ப்ரார்த் தித்திருந்தோம். ப்ரியா கார்த்திகை இதழில் நம்முடைய விலாசமும் கொடுக்கப்படவில்லை. நம் கேள்விகளும் அச்சிடப் படவில்லை. ரஹஸ்யத்ரயஸார விளக்கத்தில் நம் கட்டுரை களுக்கு மறுப்பாக 'ஸ்ரீ தத்வ தீபிகை' தொடங்கப்பெற்று எட்டு பக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதே இதழில்

acharya.org

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆசிரியர் ஸ்ரீ உ வே கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி 'ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம்' என்னும் தலைப்பில் பத்து பக்கங்கள் எழுதி அதில் "ச்ருதி முதலானவற்றில் உள்ள 'ஏக' ஶப்தத்திற்கு ப்ரஹ்மம் ஒன்றுதான் ப்ரளயகாலத்தில் இருந்தது என்று கொண்டு பிராட்டிக்கு ஜகத்காரணத்(வத்)?தில் ஸம்பந்தம் இல்லை என்று எழுதப்பட்டது நிரஸிக்கப்பட்டதாகிறது. இதனாலேயே மற்ற பல கேள்விகளுக்கும் பதில் சொன்னதாக ஆகிறது. அவைகளுக்குத் தனித்தனியாகப் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை" என்று எழுதியுள்ளார். இவையனைத்தையும் இனிவரும் ப்ரியா இதழ்களில் வரப்போகின்றவற்றையும், அவற்றுக்கு நம்முடைய பதில்களையும் வாசகர்கள் நன்கு புரிந்து கொள்வதற்காக ப்ரியாவிற்கும் ஸுதர்சனத்திற்கும் நடக்கும் ஸம்வாத ரூபமாக இக்கட்டுரையை எழுதுகிறோம். பரம ஸாத்விகமான வைஷ்ணவமதத்தை நாம் பின்பற்றியிருப்பவர்களாகையாலே, "ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்" என்று இதற்குப் பெயரிடப்பட்டது

ப்ரியா:— [ஈஶ்வர ஐப்பசி] "உங்கள் ஸித்தாந்தம் உங்களுக்குத்தெரியாது. இதுதான் உங்கள் ஸித்தாந்தம்" என்ற கலஹத்தை நீங்கள்விளைவிக்காமல் இருப்பது நன்று.

ஸுதர்சனம்:— "காஞ்சிப் பேரருளாளன்" பத்திரிகையில் "பிராட்டிக்கு ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபம்; அவளுக்கு எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்வம் உண்டு; பகவச்சரீரத்வம் கிடையாது" முதலான விசிஷ்டாத்வைதத்தையே தகர்க்கக் கூடிய கொள்கைகளை தேசிகன் மாத்திரமல்லாமல் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் பரமாசார்யர்களாகக்கொண்டாடும் பட்டர் நஞ்ஜீயர் முதலானோரும் நிலைநாட்டினார்கள்—என்று மூன்று வருடங்களுக்கு முன்னமே எழுதப்பட்டதாலேயே இச்சர்ச்சையைத் தொடங்க நேர்ந்தது. "பிராட்டிக்கு ஏகோந ஈஶ்வரத்வத்தையும்,

acharya.org

ஜக₃த்வ்யாபித்வத்தையும், ஜக₃ச்சே₂ஷித்வாதி₃களையும் அப்ரத₄ானமான ஜக₃த்காரணத்வத்தையும் ப₄க₃வச்ச₂ரீரத்வத்தையும் ஏற்றுக்கொண்டு 'அவள் ஈஶ்வர கோடியைச் சேர்ந்தவளே' என்னும் நாலாவது பக்ஷத்தையே ஸ்ரீ தேசிகன் தழுவியிருக்கமுடியுமேயொழிய, விசிஷ்டாத்வைதத்தையே தகர்க்கும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது'' என்று பல ப்ரமாணங்களைக் காட்டி ''விசிஷ்டாத்₃வைதமா? விசிஷ்டத்₃வைதமா?'' என்னும் கட்டுரையில் நிரூபித்து நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரியிருந்தோம். உப₄யஸம்ப்ரதா₃யத்தையும் சேர்ந்த பலர் நமது கருத்துக்கு ஸாதகமாகவே ப்ரமாணங்களைக் காட்டித் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

ப்ரியா:— [ஈஶ்வர — புரட்டாசி] ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் [1—8—35]''நாநயோர்வித்₃யதேபரம்'' [விஷ்ணு,லக்ஷ்மீ ஆகிய இருவரைக்காட்டிலும் மேலானது வேறொன்றில்லை] என்று பராசரமஹரிஷி கூறியிருக்கிறார். இங்கு 'அநயோ:' என்பது ஆறாவது வேற்றுமை. இதை ஐந்தாவது வேற்றுமையின் பொருளில் வழங்கியிருப்பதாகக்கொண்டு 'இவ்விருவரைக்காட்டிலும் மேலானதில்லை' என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியல்லாமல் ஆறாவது வேற்றுமையாகவே கொண்டு, 'இவ்விருவர்களுக்கிடையே ஒன்று உயர்ந்தது என்பது இல்லை. இருவரும் உயர்ந்தவர்களே' என்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருளில் ''பெருமாள் பிராட்டி ஆகிய இருவருமே பரதேவதை; அவர்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லை'' என்று கூறுவது விளங்கவில்லையா?

ஸுதர்சனம்:— இந்த இரண்டாவது பொருளின்படி இருவருமே பரதேவதை என்று கூறினால் விசிஷ்டாத்₃வைதம் விசிஷ்டத்₃வைதமாக மாறிவிடுமாகையாலே, ஆழ்வானை யொத்த மேதா₄விலாஸம் உடையவர் என்று எம்பெருமானாரால் அபிமானிக்கப்பட்டு அதனால் எங்களாழ்வான் என்று பெயர்பெற்ற ஸ்ரீ விஷ்ணுசித்தர் ''அநயோ:- ஆப்₄யாம்' என்று ஐந்தாவதுவேற்றுமைப் பொருளைமட்டுமே

acharya.org

அருளிச்செய்தார். வேற்றுமையை மாற்ருமல் தன்னடையே கிடைக்கக்கூடிய பொருளைக்கைவிட்டு வேற்றுமையை மாற்றி வலிந்து பொருள் கொண்டதினுல் ஆருவதுவேற்றுமையாகப் பொருள் கொள்வது அவர் திருவுள்ளம் உகந்தது அன்று என்று தெளிவாகிறது. இருவரைக் காட்டிலும் வேருென்று உயர்ந்ததன்று என்று கூறுவதினுல் பெருமாள் பிராட்டி இருவருக்கிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது என்று ஸித்திக்காது; "ஸ்ரீருபபூர்ஹணம் தஸ்மிந் ப்ரஹ்ம ஆஸ்தே" [கௌஷீதகீ உபநிஷத் பர்யங்க வித்யை] [ஸ்ரீதேவி ப்ரஹ்மத்தின் திருவடிக்கு அணையாக இருக்கிருள்; அதில் ப்ரஹ்மமான பரமாத்மா எழுந்தருளியிருக்கிருன்.] முதலான வடமொழி வேதவாக்கியங்களும்.

"வடிவிணையில்லா மலர் மகள் மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை" [திருவாய்9-2-10]

"சந்தணி மென்முலை மலராள் தரணிமங்கை
தாமிருவர் அடிவருடும் தன்மையானை
[பெரிய திரு2-10-2]

முதலான தமிழ் வேதவாக்கியங்களும் பெரியபிராட்டியார் புகுவச்சேஷத்வத்தையே இயல்வாகக் கொண்டவள் என்று முழங்கியிருப்பதோடு நீங்கள் சொல்லும் பொருள் முரண்படும். தேசிகனுள்ளிட்ட எந்தப் பூர்வாசார்யரும் பெருமாளுக்கும் பெரியபிராட்டியாருக்கும் இடையே ஏற்றத்தாழ்வில்லை என்று எங்கும் அருளிச்செய்யவில்லை. பெருமானை சேஷியாகவும் பிராட்டியை சேஷபூதையாகவுமே காட்டியிருக்கிருர்கள். இந்த விஷ்ணுபுராண ஶ்லோகத்தையே விவரிக்கும்போது தேசிகன் தமது அச்யுத ஶதகம் 14 வது ஶ்லோகத்தில்

புருஷர்ஸ் தவ விபூதி
அச்யுத லக்ஷ்ம்யா: ஸ்த்ரீ ஸம்ஜ்ஞா: ।
நாஸ்தி பரம் யுவயோ:
ஸாऽபி ஶ்ரீர்பவதி தவ கிம் புநரிதரத் ॥

[அடியவர்க்கு மெய்யனே! ஆண்கள் உனக்கும்; பெண் பாலர் பெரியபிராட்டியாருக்கும் உடைமையாகின்றனர். இருவரிலும் மேலானதொரு வஸ்து இல்லை. அத்தகைய பெரியபிராட்டியாரும் உன் உடைமையாகவே இருக்கின்றாள். மற்றவற்றைப் பற்றிச்சொல்லவேண்டுமா?] என்று பிராட்டியின் பகவச்சேஷத்வத்தைக் கல்வெட்டாகக் காட்டி உங்களுக்கு வாய்திறக்க வழியில்லாமல் செய்திருக்கிறாரே!.

ப்ரியா:— [ஈச்வர — புரட்டாசி]

"ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்
கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேனுன்
திருவடியே" [திருவாய்மொழி 4-9-10]

என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார், பெருமாளும் பிராட்டியுமாகிய இருவருமே சமமான ஈச்வரர்கள் என்று கூறியிருக்கிறாரே ?

ஸுதர்சனம்:— இங்கு இப்பாசுரத்தில் இருவரும் சேஷிகள் என்றுதான் நம்மாழ்வார் அருளியிருக்கிறாரேயொழிய, "உன்திரு" [திருவாய் 10-10-2] "திருவுக்கும் திரு" [பெரிய திரு 7-7-1] முதலான நூற்றுக்கணக்கான பாசுரங்களில் ஆழ்வார்கள் ஒருமிடறாக நிலைநாட்டிய 'பெருமாள் பிராட்டிக்கும் சேஷி' என்னும் உண்மையை இல்லை செய்யவில்லை. "தவைவோசிதராயிருந்த லக்ஷ்ம்யாதி திவ்ய மஹிஷீ ஜனங்களும்" என்று இவ்விடத்தில் ஆறுயிரப்படியில் பிள்ளான் இங்கு "லக்ஷ்மியைச் சொன்னது மற்ற பிராட்டிமார்களுக்கும் உபலக்ஷணம்" என்று கொண்டு, அவர்கள் எம்பிரானுக்கு சேஷபூதர்கள் என்று காட்டினார். நம்பிள்ளை ஈட்டிலும் "[திருமகளும் நீயுமே] இப்படியிருக்கிற பிராட்டியும், அவள் தானுங்கூட 'இறையும் அகலகில்லேன்' என்னும்படியிருக்கிற நீயுமே. [நீயும் நிலாநிற்ப] — உங்களிருவருடையவும் அபிமானத்துக்குள்ளே த்ரிபாத்விபூதியாக அடங்கிக்கிடக்

கும்'' என்று அருளிச்செய்யப்பட்டது ஈன்றும்சேர்ந்திருக்கும் பிராட்டியும் ''இறையும் அகல கில்லேன்'' என்று எப்போதும் அனுஸந்தித்திருக்கவேண்டும்படி எம்பெருமானுக்குள்ள ப்ராதாந்யத்தைக் காட்டி, நித்ய விபூதி இருவருக்கும் சேஷபூதமாயிருக்குமென்று விளக்கினர். இப்படி இருக்க ''நீயுமே'' என்னும் ஏகாரத்தாலே காட்டப்படும் எம்பெருமானுக்குப் பிராட்டியைக்காட்டிலும் உள்ள ப்ராதாந்யத்தை இல்லை செய்யப்பார்ப்பது அழகல்ல ஸகல பூர்வாசார்யர்களும் 'உபயவிபூதியும் மிதுனசேஷம்'என்று முழங்குவது போலவே ''பிராட்டி பகவச்சேஷபூதை'' என்று ஒருமிடருக முழங்குவதை ஏன் இல்லை செய்கிறீர்கள்?

ப்ரியா:— [ஈஶ்வர-புரட்டாசி-ஐப்பசி] தேசிகன் தமது ஸ்ரீஸ்துதியில்

த்வாமேவாऽऽஹு: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாதம்
கிம் தைரந்த:கலஹமலினை: கிஞ்சிதுத்தீர்யமக்னை: ।
த்வத்ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ ஸம்முகீநாம் ஶ்ருதீநாம்
பாவாரூடௌ பகவதி யுவாம் தம்பதீ தைவதம் ந: ॥
[ஸ்ரீஸ்துதி— 9]

[சிலர் உன்னையே லோகஸ்வாமினியாகவும், மற்றும் சிலர் உனக்கு இனியவனான எம்பெருமானையே உலகநாதனாகவும் கூறிச்சண்டையிடுகின்றனர். இப்படி ஒருவரோடொருவர் சண்டையிட்டு இருவரும் சிறிது கிளப்பி அமிழ்ந்துவிடுகிறார்கள். உன்னுடைய ஆனந்தத்துக்காகவே உலகைப் படைத்து எம்பெருமான் விளையாடுபவனாயிருக்கையில், இவ்வண்ணம் ஶ்ருதிகளில் முழங்கப்படும் நீங்கள் இருவருமே எங்களுக்கு தெய்வங்கள் ஆகிறீர்கள்] என்று தம்பதிகளான இருவருமே சேர்ந்துதான் எங்களுக்குப் பரதத்துவமான தைவதம்– தேவதை என்று அருளிச்செய்திருக்கிறாராகையால், அவருடைய திருவுள்ளப்படி இருவருமே பரதத்வம் என்று விளங்கவில்லையா?

ஸுதர்சனம்: - அதே ஸ்ரீஸ்துதியில் நாலாவது ஶ்லோகத்தில் தேசிகன்

யத் ஸங்கல்பாத் ப₄வதி கமலே யத்ர தே₃ஹிந்யமீஷாம்
ஜந்மஸ்தே₂மப்ரளய ரசநா ஜங்க₃மாஜங்க₃மாநாம் ।
தத்கல்யாணம் கிமபி யமிநாம் ஏகலக்ஷ்யம் ஸமாதௌ₄
பூர்ணம்தேஜ: ஸ்பு₂ரதி ப₄வதீபாத₃லாக்ஷாரஸாங்கம் ॥

[பெரிய பிராட்டியாரே! உலகனைத்தையும், ஶரீரமாகக் கொண்ட எந்த நாராயணனுகிற பரஞ்சோதியிடமிருந்து அவனுடையஸங்கல்பத்தாலே அசைவனவும் அசையாதனவும் அடங்கிய இவ்வுலகப் பொருள்களுக்கு ஸ்ருஷ்டி ஸ்தி₂தி ஸம்ஹாரங்கள் செய்யப்படுகின்றனவோ, அத்தகைய பரம மங்களமானதாய், யோகி₃களின் ஸமாதி₄நிலைக்கு ஒரே இலக்காயிருப்பதான பரஞ்சோதி தேவரீருடைய திருவடிச் செம் பஞ்சுக் குழம்பின் அடையாளம் பெற்றிருக்கிறது] என்று "எம்பெருமானே உலகனைத்தையும் சரீரமாகக்கொண்டவன்" என்றும் "அவனுடைய ஸங்கல்பத்தினலேயே ஜகத் ஸ்ருஷ்டி முதலானது உண்டாகிறது" என்றும் கூறுவதன் மூலம், 'உலகிற்கு நிமித்த உபாதாந காரணமானவன் எம்பெருமானே' என்றும் "அவனை அடையாளம் காட்டுபவளாகவே பிராட்டி இருக்கிருள்" என்றும் மிகத்தெளிவாக அருளிச்செய்தார். இத்துடன் சேர்த்துப் பார்க்கும்போது "த்வாமேவாஹு:" என்னும் ஶ்லோகம் — பிராட்டியையே பரமாத்மாவாகக் கூறும் சில சாக்தர்களுக்கும், உலகை ஒரு மிது₂ந சேஷமாக ஒப்புக்கொள்ளாமல எம்பெருமான் ஒருவனுக்கே ஶேஷமாகக் கொள்ளும் ஏகாயநர்களுக்கும் இடையே உள்ள சண்டையைக் குறிப்பிட்டு "நீங்கள் இருவருமே எங்களுக்கு சேஷிகளாகையாலே நாங்கள் மிது₂நாயனர்களே" என்று கூறியதேயாகுமாகையாலே 'எம்பெருமான் ஒருவனே ப்ரதா₄நமான ஜகத்காரணன்' என்று முன் ஶ்லோகத்தில் சொன்னதோடு முரண்படாது. இந்த ஶ்லோகத்திலும், "த்வத் ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ" என்று "உலகைப்படைப்பது முதலான லீலை

களை எம்பெருமானே செய்கிறான்'' என்றும், ''அதில் பிராட்டிக்கு அந்வயம் ஆனந்தமடைவதன் மூலமே'' என்றும் குறித்திருக்கையால் இந்த ஶ்லோகத்திலும் 'உலகிற்கு உபாதாந நிமித்தங்களாயிருக்கை எம்பெருமானுக்கே' என்றும், 'கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுகை அல்லது உலகை உடையவர்களாயிருக்கையாகிற சேஷித்வத்திலேயே இருவரும் சேர்ந்து அந்வயிக்கிறார்கள்' என்றும் தெளிவாகக் காட்டினார் தேசிகர். இவரே சதுஃச்லோகீ இரண்டாவது ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் ''கிஞ்ச யதா முக்தஸ்ய பூவதா பரமஸாம்யே ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி ஸித்தேऽபி 'ஜகத்வ்யாபார வர்ஜம்' இதி லக்ஷண பூதை: ஆகாரைர் வைஷம்யம் ஸ்தாப்யதே ததேஹாபி பவதி' [மேலும் முக்தாத்மாவுக்கு ஶ்ருதி ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்த போதிலும், 'ஜகத்வ்யாபாரவர்ஜம்' என்று ப்ரஹ்ம ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட லக்ஷணமாயிருக்கும் தன்மைகளில்வேறுபாடு எப்படி நிலைநிறுத்தப்படுகிறதோ அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு] என்று மிகத்தெளிவாக அருளிச்செய்திருக்கையாலே, உலகைப்படைப்பது முதலானவற்றை எம்பெருமானே செய்கிறான் என்றும், பிராட்டி அவன் செய்யும் விளையாட்டின் ஆனந்தத்திலேயே பங்குகொள்கிறாள் என்றும் தேசிகன் உள்ளிட்ட எல்லா ஆசார்யர்களுடையவும் ஒருமிடறான ஸித்தாந்தம் என்று விளங்குகிறது.

ப்ரியா:- ஈஶ்வர ஐப்பசி: ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தின் இறுதியில் ''ஆழ்வார்களுடைய பாட்டுக்களிலே பெருமாளும் பிராட்டியுமாகிற தம்பதிகளே ப்ராப்யரும் ஶரண்யரும் என்று நிகமிக்கப்பட்டது' என்று அருளிச்செய்து, இவ்வர்த்தத்துக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பராஶரமஹர்ஷியின் அங்கீகாரத்தையும், நம்மாழ்வாருடைய ஆதரவையும் விவரித்து, ''இவ்விஷயத்தில் வக்தவ்யமெல்லாம் சதுஃஶ்லோகீ வ்யாக்யானத்திலே பரபக்ஷப்ரதிக்ஷேப பூர்வகமாகப் பரக்கச்சொன்னோம். அங்கே கண்டுகொள்வது'' என்று அருளிச்செய்திருக்கிறார். பரதேவதா பாரமார்த்

யாதிகாரத்தில் தேசிகன் ஸாதித்துள்ள விஷயங்கள், சதுஃஶ்லோகீ வ்யாக்யானத்தில் அவர் காட்டியுள்ள ஐந்து பக்ஷங்களில் ஐந்தாவது பக்ஷத்தைச் சார்ந்தவைகளாகும். 'இதில் வரும் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் பதில் அங்கேயே சொல்லியுள்ளோம் அவற்றை அங்கேயே கண்டுகொள்வது'' என்று அருளியுள்ளதால் ஐந்தாவது பக்ஷமே ஸ்வாமி ஸ்ரீதேசிகன் உகந்த பக்ஷம் என்று விளங்கவில்லையா?

ஸுதர்சனம்:— ஸ்ரீதேசிகன் ஐந்து பக்ஷங்களையும் விவரிக்கும் சதுஃஶ்லோகீ நாலாவது ஶ்லோக வ்யாக்யானத்தில் முதல் நாலுபக்ஷங்களையும் மிக விரிவாக வர்ணித்துவிட்டு, அதில் நாலாவது பக்ஷத்தில், ''பிராட்டி ஈஶ்வர வகுப்பைச் சேர்ந்தவளே; உபயவிபூதிக்கும் சேஷியாயும், ப்ராப்யையாயும், சரண்யையாயும் இருப்பதுகொண்டே ஈஶ்வரலக்ஷணம் ஸித்திக்குமாகையால். அதில் அனைவர்க்கும் ப்ராப்யனாய், சேஷியாய், சரண்யனாயிருப்பவன் எம்பெருமான்; பிராட்டியோவெனில்; எம்பெருமானைத்தவிர மற்றவர்களுக்கு ப்ராப்யையாய், சேஷியாய். சரண்யையாய், இருக்கிறாள் என்பது வேறுபாடு. ஜகத்காரணத்வம் முதலான ப்ரஹ்மலக்ஷணம் எம்பெருமான் ஒருவனுக்கேயாகும். அதனாலேயே அவன் ஸர்வேஶ்வரனாகவும். ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாகவும் இருக்கிறான். இரண்டு மூன்று நாலாவது பக்ஷங்கள் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபடாதவை. ஜீவன் ஈஶ்வரன் முதலான பெயர்களை வைப்பதிலேயே விவாதம், முதல் நாலு பக்ஷங்களிலும் ஸ்வதந்த்ரனை எம்பெருமானுடைய நித்யேச்சையாலேயே பிராட்டியினுடைய பெருமைகளெல்லாம் ஸித்திக்கின்றன. 'ந தஸ்யேஶே கஶ்சந' முதலான வேதவாக்கியங்களில் எம்பெருமான் ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாகச் சொல்லப்பட்டிருக்கையாலே எம்பெருமானே ஸர்வேஶ்வரனாகிறான். அதனாலேயே பிராட்டி நாரஶப்தத்திற்குப் பொருளாயிருந்தபோதிலும் எம்பெருமானுக்குப்போலே அவனுடைய ஸங்கல்பத்தால் அவளுக்கு ஏற்பட்ட ப்ரதாந ப்ராப்யத்வம், சேஷித்வம், சரண்யத்வம் ஆகியவற்றோடு

acharya.org

முரண்படாது. இந்த ப்ரதா₄ந ப்ராப்யத்வம் முதலானவை எம்பெருமானோடு ஒத்திருந்தாலும் சில விஷயங்களில் செயல்பாடு வேறுபடுகிறது. உலகனைத்தையும் படைத்தல் முதலானவற்றைச் செய்யும் எம்பெருமான் தனக்கு இனியவளான அவளுடைய ப்ரீதியை உத்தேசித்தே ஜகத்வ்யாபார லீலைகளில் ஈடுபடுகிறானகையாலே பிராட்டிக்கும் ஜக₃த்₃வ்யாபாரத்தில் அந்வயம் கூறுவது முரண்படாது. இருவரும் சேர்ந்து தொடங்கும் ஜக₃த்₃வ்யாபாரமாகிற செயலில் உலகிற்காணும் பதியிடம்போலே பதிக்கு ப்ராதா₄ந்யம் கூறுவதும், 'பதியே செய்கிறான்' என்று கூறுவதும் பொருந்திவிடுகிறது. பதியினுடைய விருப்பத்தால் இவள் அவனுக்கு சேஷபூ₄தையாய் இருந்தபோதிலும் இருவரும் விரும்பியே ஶேஷஶேஷிகளாயிருக்கிறார்கள் என்று கூறுவதும், பதியின் விருப்பத்தையே இவள் பின் செல்கிறாள் என்னும் கருத்துடையது என்று கொண்டுவிடலாம்'' என்று பிராட்டிக்கும் ப்ராப்யத்வம், சரண்யத்வம் ஆகியவை உள்ளனென்றே கூறியிருக்கிறார். ஆனால் அது எம்பெருமானுடைய நிதயேச்சையால் பிராட்டிக்கு எப்போதும் இருப்பது என்று தேசிகன் கூறியிருக்கிறார்.

இதற்குமேல் ஐந்தாவதுபக்ஷத்தை விவரிக்கத்தொடங்கி, ''இவ்விஷயத்தில் (பெருமாள் பிராட்டி ஆகிய இருவர் விஷயத்திலும்) 'ஸர்வ பூ₄தேஶ்வரராயுள்ளவர்' முதலான வசனம் ஒத்திருக்கையால் பிராட்டி சேஷபூ₄தையாய் இருப்பது இருவர் விருப்பத்தாலும் விளைந்தது என்று (ஐந்தாவது பக்ஷத்தைச் சேர்ந்த) சிலர் கூறுகிறார்கள். ஒருவரோடொருவர் விருப்பத்தில் முரண்பாடு விளையாது என்னும் கருத்துடையவையாகையாலே எல்லா வேதவாக்கியங்களுக்கும் ஐககண்ட்யம் ஏற்படும்'' என்று அவர்கள் கூறுகிறார்கள்'' என்று மிகச் சுருக்கமாக ஐந்தாவது பக்ஷத்தை விவரித்திருக்கிறார் ஸ்ரீதேசிகன். நாலாவது பக்ஷத்தை மிக விரிவாக விவரித்தது போலே ஐந்தாவது பக்ஷத்தை விவரிக்கவில்லை என்பது குறிக்கொள்ளத்தக்கது. இறுதியாக ''இந்த ஐந்து பக்ஷங்களிலும் ஏதோவொன்றுதான் ப்ரமாணங்களுக்குப் பொருந்தியது. எல்லாப் பக்ஷங்களிலுமே பிராட்டியோடு கூடிய எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வம் நன்கு நிலை நிறுத்தப்பட்டது. இவ்விஷயத்தில் பேரறிவா

acharya.org

ளர்களிடையே இப்படிச் சிலவிஷயங்களில் ஐயம் இருந்த போதிலும், தேவையான அம்சங்கள் எல்லாம் தெளிவாக இருக்கையால் உபாயாநுஷ்டாநமும், பலப்ராப்தியும் ஏற்படக்குறையில்லை'' என்று இவ்விஷயத்தை நிறைவு படுத்தியிருக்கிறார் ஸ்ரீதேசிகன். உண்மைநிலை இப்படி யிருக்கும்போது 'ஸ்ரீதேசிகன் சது:ஶ்லோகீ வ்யாக்யானத்தில் ஐந்தாவது பக்ஷத்தையே ஸ்தாபித்துவிட்டார், மற்ற நாலுபக்ஷத்தையும் கண்டித்துவிட்டார்' என்றுநீங்கள் கூறுவது சிறிதும்பொருந்தாதே. உண்மையில் நாலாவதுபக்ஷமே தமக்கு உகந்தது என்று தேசிகன் சது:ஶ்லோகீ வ்யாக்யானத்திலேயே காட்டியிருப்பதை விளக்குகிறோம். சது:ஶ்லோகியில் இரண்டாவது ஶ்லோகத்தின்வ்யாக்யானத்தில் ' யாநி ச ப்₃ராஹ்மே புராணே 'ஸர்வாதிஶாயிநீ ப்ரீதி:' 'ஸர்வோத்க்ருஷ்டா ஸர்வகா' 'அநௌபம்யா நிர்விகல்பா' இத்யாதீ₃நி லக்ஷ்மீநாமாநி தாந்யபி. 'ந தத்ஸமம் சாப்₄யதி₄கம்ச த்₃ருஶ்யதே' 'யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்' 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' 'க்ஷராத்மாநாவீஶதே தே₃வ ஏக:', 'ஏக இத்₃ராஜா ஜக₃தோ ப₃பூ₄வ' 'ஶாஸ்தா சராசரஸ்யைக:', 'ஏக: ஶாஸ்தா ந த்₃விதீயோऽஸ்தி ஶாஸ்தா', 'ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய' இத்யாதி₃ ப்ரமாணக₃ணாநுஸாரேண ப₄க₃வத்₃ வ்யதிரிக்த ஸர்வாபேக்ஷயா தந்மஹிஷ்யா: ப்ரகர்ஷம் விவக்ஷந்தி |'' [ப்₃ராஹ்ம புராணத்தில் லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமத்தில் ''அனைவரிலும் மேம்பட்டவள்'', ''அனைவரிலும் உயர்ந்தவள்'' ''அனைவருமாயிருப்பவள்'', ''உபமானமற்றவள்'' என்னும் நாமங்கள் படிக்கப்படுகின்றன. ''பரமாத்மாவுக்கு ஸமமானதோ அல்லது மேம்பட்டதோ ஒன்றுமில்லை'' ''எவனைக் காட்டிலும் மேலானது எதுவும் இல்லையோ'', ''ஈஶ்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேஶ்வரனாய் இருக்கும் அவனை'' ''அசேதனப் பொருள்களையும் ஜீவர்களையும் நியமிக்கும் தேவன் ஒருவனே'', ''இவ்வுலகிற்கு ஒருவனே அரசன்'', ''அசைவனவும் அசையாதனவுமான எல்லாப் பொருள்களையும் நியமிப்பவன் ஒருவனே'' ''ஒருவனே நியமிப்பவன், நியமிக்கும் இரண்டாவது பொருள் கிடை

acharya.org

யாது'', ''அனைத்தையும் நியமிப்பவன் விஷ்ணுவே'' முதலான ச்ருதி ஸ்ம்ருதி வாக்கியங்களையொட்டி எம்பெருமானைத்தவிர மற்றவர்களைக்காட்டிலும் பிராட்டியின் பரத்வத்தை அந்த நாமங்கள் கூறுவன என்றே கொள்ளவேண்டும்] என்று ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளியிருப்பதிலிருந்து அவர் நாலாவது பக்ஷத்தையே உகந்திருந்தார் என்று மிகத் தெளிவாக விளங்குகிறது. இந்த இரண்டாவது ச்லோக வ்யாக்யானத்திலேயே, ''ஜகத்வ்யாபார வர்ஜம்-என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் சொல்லப்பட்ட தன்மைகளில் வேறுபாடு முக்தர்களுக்குப் போலே பிராட்டிக்கும் உண்டு'' என்று மிகத் தெளிவாக அருளியுள்ளதால் நாலாவது பக்ஷமே ஸ்ரீதேசிகன் உகந்த பக்ஷம் என்பது அசைக்கவொண்ணாதபடி வலியுறுத்தப்படுகிறது. இவ்விஷயத்தை ''விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்''த்திலும், ''விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?'' என்னும் கட்டுரையிலும் பல வருடங்களாக நாம் எடுத்துக்காட்டியுள்ளதைக் கண்டுகொள்ளாமல், ஆதாரம் ஏதும் காட்டாமல் திரும்பத் திரும்ப ஐந்தாவது பக்ஷ ஜபம்செய்வது ப்ராமாணிகமன்று.

ப்ரியா:— ஈச்வர கார்த்திகை: ஸ்ரீதேசிகன் சரம ச்லோகாதிகாரத்தின் ஆரம்பத்தில் உள்ள பாசுரத்தில் ''ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி ஒரு நினைவால் ஈன்ற உலகெல்லாம் உய்ய'' என்ற முதலடியால் 'பிராட்டி பெருமாள் இருவரும் சேர்ந்தேதான் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறார்கள், ஆகவே பிராட்டிக்கும் ஜகத் காரணத்வம் உண்டு' என்கிறார். எனவே பிராட்டிக்கு ப்ரதான ஜகத் காரணத்வத்தை இல்லை செய்யும் நாலாவது பக்ஷம் எப்படி தேசிகன் உகந்ததாயிருக்க முடியும்?

ஸுதர்சனம்:— இதே தேசிகன் ஸ்ரீஸ்துதி நாலாவது ச்லோகத்தில், ''எம்பெருமானை உலகனைத்தையும் சரீரமாகக்கொண்டவன்'' என்றும், அவனுடைய ஸங்கல்பத்தாலேயே ஜகத்ஸ்ருஷ்டி முதலானது உண்டாகிறது என்றும் கூறுவதன் மூலம் உலகிற்கு நிமித்த உபாதாந காரணமானவன் எம்பெருமானே என்றும் அவனை அடை

யாளம் காட்டுபவளாகவே பிராட்டி இருக்கிறுள் என்றும் மிகத் தெளிவாக அருளியுள்ளார் அவரே 9-வது ஶ்லோகத்தில் "த்வத் ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ" என்று 'பிராட்டியினுடைய உகப்பிற்காகவே எம்பெருமான ஜகத் ஸ்ருஷ்டி லீலையைச் செய்கிருன்" என்று அருளிச்செய்துள்ளார். என்பதை முன்னமே எடுத்துக்காட்டியிருக்கிறோம். ஓரிடத்திலாவது பிராட்டி எம்பெருமானைப்போலே உலகிற்கு நிமித்த உபாதான ஸஹகாரிகாரணமாகிருள் என்றுகுறித்ததில்லை. "ஸர்வகர்த்துர்வல்லப₄ா ப்ரீதயுத்₃தே₃ஶே ந தத்தல்லீலாப்ரவ்ருத்தே: தஸ்யா அபி தத₃ந்வயோக்தி: அவிருத்₃த₄ா' [உலகனைத்தையும் படைக்கும் எம்பெருமான் தனக்கு இனியவளான பிராட்டியின் ப்ரீதியைக் கருதியே அந்த விளையாட்டைச் செய்கிருனுகையாலே பிராட்டிக்கும் ஜக₃த்காரணத்வத்தில் அந்வயம் கொள்வதில் முரண்பாடில்லை] என்று நாலாவது பக்ஷத்திலேயே பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்தில் இத்தகைய அப்ரதா₄னமான அந்வயம் ஒப்புக்கொள்ளப்பட்டது ஆகையால் சரமஶ்லோகாதிகாரத்தின் ஆரம்பத்தில். "திருமகளும் தானுமாகி ஒரு நினைவால் ஈன்ற உலகு" என்றது நாலாவது பக்ஷத்தில் சொன்ன இத்தகைய அப்ரத₄ானமான அந்வயத்தைக்காட்டுமேயொழிய, "பிராட்டி உலகிற்கு நிமித்த உபாத₃ாந ஸஹகாரிகாரணமாகிருள்" என்று உணர்த்தாது. தேசிகன் உள்ளிட்ட எந்தப் பூர்வாசார்யரும் எங்கும் அப்படிக் கூறவில்லையே!

ப்ரியா:-ஈஶ்வரகார்த்திகை:ப்ரியா ஆசிரியரின் "ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம்" கட்டுரை:-''ஸதே₃வ ஸோம்யேத₃மக்₃ர ஆஸீத் ஏகமேவ அத்₃விதீயம்'' [இவ்வுலகமானது பிரளய காலத்தில் 'ஸத்'தாகவே (உள்ளதாகவே) இருந்தது ஒன்ருகவே இருந்தது. இரண்டற்றதாயிருந்தது] எனும் சாந்தோக்ய உபநிஷத்₃ வாக்யத்தில் ஜகத்காரணப்பொருளை ஒன்ருகவே சொல்லியிருக்கும்போது, ஒரு மிதுநம் ஜக₃த்காரணம் என்று சொல்லுவது சரியல்ல என்று நீங்கள் எங்களைக் கேட்கிறீர்கள். மற்ஞெரு வேதவாக்கியம் "மிதுநம் ஜகத்காரணம்"

என்று கூறுவதாலேயே நாங்கள் அப்படிக் கூறுகிறோம். "ஆநீத₃வாதம் ஸ்வத₄யா ததே₃கம்" என்பதே அந்த வாக்யம். "ஸ்வேந ப்₃ரஹ்மணா தீ₄யதே-உபபு₄ஜ்யத இதி ஸ்வத₄ா" என்னும் வ்யுத்பத்தியாலே 'ஸ்வ' ஶப்₃த₃த்தால் சொல்லப்படும் ப்ரஹ்மத்தால் அனுபவிக்கப்படும் லக்ஷ்மி இங்கு "ஸ்வத₄ா" ஶப்₃த₃த்தால் சொல்லப்படுகிறாள். இந்த ஶ்ருதியிலிருந்து லக்ஷ்மியும் ப்₃ரஹ்மமும் சேர்ந்தே ஜக₃த் காரணம் என்று விளங்குகிறது, இவ்விஷயத்தை வேத₃ார்த்த₂ ஸங்க்ரஹத்தில் ஸ்ரீபா₄ஷ்யகாரர் விவரித்திருக்கையாலே இது ராமானுஜ ஸித்தாந்தமேயாகும். தேசிக ஸித்தாந்தம் அல்ல, (?). ஸ்ரீராமானுஜர் வேதார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் "ஸதே₃வ" என்று தொடங்கும் வாக்கியத்தால் ப்ரளயகாலத்தில் பரமபதம் முதலானவை இல்லையென்று ஆகிவிடாது என்று நிரூபிப்பதற்காக. "ஏதேஷாம் பரிஜநஸ்த₂ாநாதீ₃நாம் 'ஸதே₃வ ஸோம்யேத₃மக்₃ர ஆஸீத்' இத்யத்ர ஜ்ஞாந ப₃லைஶ்வர்யாதி₃ கல்யாணகு₃ணக₃ணவத் பரப்₃ரஹ்ம ஸ்வரூபாந்தர்பூ₄தத்வாத் ஸதே₃வ, ஏகமேவாத்₃விதீயம் இதி ப்₃ரஹ்மாந்தர்பா₄வ: அவக₃ம்யதே" ["ஸதே₃வ" என்று தொடங்கும் வேதவாக்கியம் ஜகத் காரணமான ப்₃ரஹ்மத்துக்கு ஜ்ஞானம், ப₃லம், ஐஶ்வர்யம் முதலான கல்யாணகுணங்களை இல்லைசெய்யவில்லை என்று ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அவை ப்₃ரஹ்ம ஸ்வரூபத்தில் அடங்கியுள்ளது போலே பரிஜனங்கள், பரமபதம் முதலானவையும் காரணமான பர ப்₃ரஹ்ம ஸ்வரூபத்தில் அடங்கியுள்ளன என்றே கொள்ள வேண்டும்] என்று அருளிச்செய்துள்ளார். இதிலிருந்து 'நித்ய விபூ₄தியோடு கூடின ப்₃ரஹ்மமே ஜக₃த்காரணம் என்பதே ஸ்ரீராமானுஜஸித்தாந்தம்' என்று விளங்குகிறது. மேலும் 'ஆநீத₃வாதம்' என்னும் ஶ்ருதியிலே பிராட்டியோடு கூடிய ப்₃ரஹ்மமே ஜக₃த்காரணம் என்று சொல்லியிருக்கையாலே 'மிதுநம் ஜகத்காரணம்' என்று நாங்கள் கூறுவதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது.

acharya.org

ஸுதர்சனம்: நித்ய விபூதியோடு கூடிய ப்ரஹ்மம் ஜகத்காரணம் என்பது உண்மையே. ஆனால் ப்ரஹ்மத்தின் ப்ரகாரமான அந்த நித்ய விபூதி லீலாவிபூதியாகப் பரிணமிக்கவில்லையாகையால் நித்யவிபூதி லீலாவிபூதிக்கு உபாதாந காரணமல்ல. நித்யவிபூதி தன ஸங்கல்பத்தாலும் ஜ்ஞாநசக்திகளாலும் லீலாவிபூதியைப் படைக்கவில்லையாகையாலே நித்யவிபூதி நிமித்தகாரணமும் ஸஹகாரிகாரணமும் அல்ல. ஸூக்ஷ்மலீலாவிபூதி விசிஷ்டனான நாராயணனே ஸ்தூலலீலாவிபூதி விசிஷ்டனாகப் பரிணமிக்கிறானாகையாலே அவனே உபாதாந காரணமாகிறான். அவன் தன்னுடைய ஸங்கல்பத்தாலும் ஜ்ஞாநம் சக்தி முதலானவற்றாலும் லீலாவிபூதியைப் படைக்கிறானாகையாலே அவனே நிமித்த ஸஹகாரிகாரணங்களாகவும் ஆகிறான். ஆகையால் நித்யவிபூதிக்கு மூவகைக்காரணமாயிருக்கும் பெருமையில்லை. இருந்தபோதிலும "கார்யாணாம் காரணம் பூர்வம்-பரமம் தே பதம்" [ஜிதந்தே 7] என்னும் ஜிதந்தே ஸ்தோத்ர ச்லோகத்தின வியாக்யானத்தில் "அவனுக்கு ப்ரக்ருதி நித்ய விசேஷணமாகையாலே அத்தை ஜகத்காரணமென்றாப்போலே, பரமபதம் அவனுக்கு நித்ய விசேஷணமாகையாலே பூர்வக்ஷணவர்த்தியாய் பூர்வகாரணமெனலாம். இத்தால் பரமபதத்தினுடைய நித்யதை சொல்லுகிறது" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளியபடியே நித்யவிபூதிக்கு ஒரு அமுக்யமான ஜகத்காரணத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதுபோலவே "ஸ்வதயா ததேகம்" என்னும் வேதவாக்யத்திலும் "ஸ்வதயா" என்னும மூன்றும் வேற்றுமை அப்ராதாந்யத்தைக் காட்டுகையாலே "ஸ்வதா" சப்தத்தால் சொல்லப்படும் பிராட்டிக்கு அப்ரதாநமான ஜகத்காரணத்வமே சொல்லவேண்டும். ப்ரஹ்மத்தை ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்படி தூண்டுவதும், ஜகத் ஸ்ருஷ்டி லீலையின் ஆனந்தத்தை அனுபவிப்பதும் பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்தில் உள்ள அந்வயங்கள் என்பதை தேசிகன் உள்ளிட்ட ஸகல பூர்வாசார்யர்களும் காட்டியிருப்பதை முன்னமே விளக்கினேம். "ஸ்வ சப்தத்தால் சொல்லப்படும் ப்ரஹ்மத்தால் அனுபவிக்கப்படுபவள்" என்னும்

acharya.org

''ஸ்வதா₄'' ஶப்₃த₃வ்யுத்பத்தியும் பிராட்டி ப்₃ரஹ்மமல்ல என்றும், அவனுக்கு பே₄ாக₃ய பூ₄தையாய் இருப்பவள் என்றும் கூறுவதன் மூலம் பிராட்டியின் அப்ராதா₄ந்யத்தைக் காட்டுகிறது. ஆகையால் ப்ரஹ்மமான நாராயணனுக்குப் போலே ஜகத்துக்கு நிமித்த உபாதாந ஸஹகாரி காரணத்வம் பிராட்டிக்குக் கிடையாது; இப்படிகொள்வதே விசிஷ்டாத்வைதத்தோடு முரண்படாமலிருக்கும். 'இருவரும் துல்யமான நிமித்த உபாதாந ஸஹகாரிகளாயிருக்கும் ஜகத்காரணர்கள்'' என்று நீங்கள் சொல்வது விசிஷ்டத்வைதத்திற்குப் பொருந்துமேயொழிய விசிஷ்டாத்வைதத்திற்குப் பொருந்தாது.

ப்ரியா:—கார்த்திகைஇதழ் ஆசிரியர் கட்டுரை:- ''ஆநீத₃வாதம்'' என்னும் வேத₃வாக்யத்தாலே ''ஸ்வதா₄'' ஶப்₃த₃த்தாலே சொல்லப்படும் பிராட்டியாலேயே ஜக₃த்காரணமான ப்₃ரஹ்மம் உயிர்பெற்றுள்ளது என்று சொல்லப்படுகையால் இருவரும் சேர்ந்தே ஜக₃த்காரணம் என்று விளங்குகிறதே.

ஸுதர்சனம்:— தே₃சிகன் சது:ஶ்லோகியின் இரண்டாவது ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில் இந்த ''ஆநீத₃வாதம்'' ஶ்ருதியை எடுத்துக்கொண்டு விரிவாக விசாரம் செய்திருக்கிறார். ''பிராட்டியால்தான் ப்₃ரஹ்மம் உயிர் வாழ்கிறது'' என்னும் வாதம் தவறு என்பதைப் பல காரணங்கள் காட்டி நிரஸிக்கிறார். அவையாவன: (1) ''ஸ்வாதீ₄ந ஸர்வஸத்தாகஸ்ய தஸ்ய அந்யாதீ₄ந ப்ராணநத்வ அஸம்ப₄வாத்'' [தனக்கு அதீ₄னமான (வசப்பட்ட) எல்லாப் பொருள்களின் ஸத்தையையும் உடைய ப்ரஹ்மத்திற்கு பிராட்டியுள்ளிட்ட மற்றொருவருக்கு வசப்பட்ட வாழ்ச்சியை உடையதாயிருக்கை பொருந்தாதாகையால்]. இவ்வாக்யம் ''பிராட்டியின் ஸத்தை எம்பெருமானுக்கு அதீ₄நம். அவனுடைய ஸத்தை பிராட்டிக்கு அதீ₄நமல்ல'' என்னும் நாலாவது பக்ஷத்தையே தேசிகன் கைக்கொண்டவர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது, அப்படியிருக்கும்

acharya.org

போது நீங்கள் அவர் ஐந்தாவது பக்ஷத்தைக் கைக்கொண்டவர் என்று வாதிடுவது சிறிதும் பொருந்தாது. (2) "ஸ்வதா₄" ஶப்₃த₃த்தைப் புராணப்ரயோகத்தை மட்டும் கொண்டு லக்ஷ்மீவிஷயமாகக் கொள்ளுவதைக் காட்டிலும், "ஸ்வஸ்மிந் தீ₄யதே" என்னும் வ்யுத்பத்தியாலே "ஸ்வதா₄" ஶப்₃த₃ம்ப்₃ரஹ்மத்தின் ஸத்தையையே குறிப்பதாகவோ, அல்லது ப்₃ரஹ்மத்தின் ஸர்வதா₄ரண (அனைத்தையும் தா₄ரிக்கும) ஸாமர்த்₂யத்தையே குறிப்பதாகவோ கொள்ளுவதே பொருந்தும். அதனாலேயே ஸ்ரீபா₄ஷ்யகாரர் "ஶ்ரேஷ்ட₂ஶ்ச" [ப்₃ரஹ்மஸூத்ரம் 2–4–7] என்னும் ஸூத்ரத்தின் வியாக்யானத்தில் "ஆநீத₃வாதமிதி து .....பரஸ்ய ப்₃ரஹ்மண: ஏகஸ்யைவ வித்₃யமாநத்வ முச்யதே" ["ஆநீத₃வாதம்" என்று தொடங்கும் வேதவாக்யத்தாலே பர ப்₃ரஹ்மம் ஒன்றே பிரளயகாலத்தில் இருந்தது என்று சொல்லப்படுகிறது.] என்று அருளிச்செய்தார். [இதிலிருந்து இருவரும் ப்ரதா₄ன ஜக₃த்காரணம் என்று கொள்ளும் இவர்களுடைய பக்ஷம் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தமோ ஸ்ரீதேசிக ஸித்தாந்தமோ அல்ல என்று தெளிவாக விளங்குகிறது.] (3) "ஸ்வதா₄" ஶப்₃த₃த்திற்கு லக்ஷ்மியையே பொருளாகக்கொண்டாலும் 'அவள் ப்₃ரஹ்மத்தோடுகூட இருந்தாள்' என்றே ஸித்திக்கும். (4) 'பிராட்டியால் ப்₃ரஹ்மம் உயிர் வாழ்கிறது' என்று பொருள்கொண்டாலும் இதற்கு எம்பெருமானுடைய ப்ரேமபாரதந்த்ரியத்திலேயே தாத்பர்யமாகும். "ஶ்ரத்₃தயா தே₃வோ தே₃வத்வமஶ்நுதே" [ஶ்ரத்₃தா₄ எனப்படும் பிராட்டியாலே தே₃வனான எம்பெருமான் தேவத் தன்மையை அடைகிறான்.] என்னும் வேதவாக்யத்தாலும் எம்பெருமானுடைய பெருமை பிராட்டிக்கு அதீ₄நமானது என்று கொள்ளமுடியாது. (5) அப்படிக் கொண்டாலும் இயற்கையிலேயே பெருமை பெற்ற ஸூர்யனுக்கு (பா₄ஸ்கரனுக்கு) தன் ஒளியாலே பெருமை மேலும் கூடுகிறது என்பது போலே, எம்பெருமானுக்குத் தன் பத்நியால் ஒரு பெருமை உண்டாகிறது என்று சொல்வதிலும் குற்றமில்லை

தேசிகனுடைய இவ்வாக்யங்கள் பிராட்டியைப் பற்றிய நாலாவது பக்ஷத்தையே அவர் தழுவியவர் என்பதைக் கல்வெட்டாகக் காட்டுகின்றன என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

ப்ரியா:— கார்த்திகை [ஆசிரியர் கட்டுரை]:- லக்ஷ்மீ தந்த்ரத்தில் [5-35, 37]· ''என்னுடைய ஸங்கல்பம் மஹத் என்கிற தத்துவத்தை வ்யாபிக்கிறது. நான் உலகை ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்கிற ஆசையினால் மஹத் தத்துவத்தை ப்ரேரித்தேன். அந்த மஹத் தத்துவத்திலிருந்து 'அஹங்காரம்' என்னும் தத்துவம் பிறந்தது. அதையும் நான் ப்ரேரித்தேன். அது ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்னும் மூன்று அஹங்காரமாக ஆயிற்று'' என்று பிராட்டியே அருளிச்செய்ததாக உள்ளபடியால் பிராட்டியே உலகிற்கு நிமித்தம் முதலான காரணங்களாக ஆகிறாள் என்று விளங்குகிறதே. மேலும், லக்ஷ்மீ தந்த்ரம் [2-16]ல் ''லக்ஷ்மீ நாராயணாக்₂யம் தத் ப்₃ரஹ்ம ஸநாதநம்'' என்று லக்ஷ்மீநாராயணர்கள் இருவருமே ப்₃ரஹ்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம்.

ஸுதர்சனம்:— ' லக்ஷ்மீநாராயணாக்₂யம்'' என்னும் ஶ்லோகத்திற்குப் பக்கத்திலேயே பிராட்டி எம்பிரானை 'அஹமர்த்த₂ம்' என்று த₄ர்மியாகவும், தன்னை 'அஹந்தா' என்று த₄ர்மமாகவும் குறிப்பிட்டு ''அஹமர்த்த₂ம் விநாஹந்தா நிராத₄ாரா ந ஸித்₄யதி'' என்று ''அஹந்தையான தனக்கு ஆத₄ாரமாக அஹமர்த்த₂மான எம்பெருமான் இருக்கிறான்'' என்று சொல்லியிருக்கையால், பிராட்டி ப்₃ரஹ்மத்தால் தாங்கப்படும் தத்துவமேயொழிய ப்₃ரஹ்மமாக முடியாது. மேலும் அதே லக்ஷ்மீதந்த்ரத்தில் ''ஶரீரம் ச ஹரேரஸ்மி'' [50—80] என்று பிராட்டியே தன் சோதி வாய் திறந்து தன்னை எம்பெருமானுக்கு ஶரீரமென்று இசைந்திருக்கிறாள். எம்பெருமானும் ''மச்சே₂ஷபூ₄தா'' என்று பிராட்டியைத் தனக்கு சேஷபூ₄தையாக

acharya.org

அருளிச்செய்தான் என்னும் ப்ரமாணத்தையும், ''லக்ஷ்ம்யா: ஸமஸ்த சித₃சித் ப்ரபஞ்சோ வ்யாப்யஸ் தத₃ஶஸ்ய து ஸாபி ஸர்வம்'' [லக்ஷ்மியால் சேதநாசேதநங்கள் அடங்கிய எல்லா உலகங்களும் வியாபிக்கப்பட்டுள்ளன. அவளுடைய ஈசனை நாராயணனால் இந்த எல்லா உலகங்களோடும் அவளும் வியாபிக்கப்பட்டுள்ளாள்] என்னும் ப்ரமாணத்தையும் தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் அனைவரும் கையாண்டுள்ளார்கள். இவ்வண்ணமாக, பரப்ரஹ்மமான நாராயணனுக்கு ஶரீரமாகவும், த₄ர்மமாகவும், வ்யாப்யையாகவும் ப்ரமாணங்களில் முழங்கப்படும் பிராட்டி எப்படி ப்₃ரஹ்மமாக முடியும்? இதிலிருந்து உலகைத் தானே பிராட்டி படைத்ததாக அருளியது வாமதேவ ரிஷியும். (அதர்வஶிரஸ்ஸில்) சிவனும், மத்தஸ் ஸர்வம்' [வி பு] என்று ப்ரஹ்லாத₃னும்'கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்' [திருவாய் 5-6-1] என்று நம்மாழ்வாரும் பேசியது போலே ஶாஸ்த்ர த்₃ருஷ்டியாலே [ப்₃ரஹ்ம ஸூத்ரம் 1-1-31] அந்தர்யாமியான எம்பெருமானைத் திருவுள்ளத்திற்கொண்டு பேசியது என்றே கொள்ளவேண்டும். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலானவற்றில் ஸுதர்சனுழ்வானுக்கும் ஜகத்ஸ்ருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறது. அங்கும் இப்படியே கொள்ளவேண்டும். ஸ்ரீதேசிகனே சது:ஶ்லோகி 2 வது ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில் ''பிராட்டிக்கு எம்பெருமானோடு அந்த்யந்த ஸாம்யம் சொல்லுமிடங்களில் இப்படியே நிர்வஹிக்கவேண்டும்'' என்று, ''அத்யந்த ஸாம்யமப்யஸ்யாம் த்₃ருஷ்டாந்தஸ்வரஸாக₃தம் । ஸ்தூ₂ாப்யம் நியத நிர்பா₃த₄பத்நீத்வாத்₃யவிரோத₄த:॥'' [பிராட்டிக்கு எம்பெருமானை த்ருஷ்டாந்தமாகக் காட்டி அத்யந்த ஸாம்யம் வெளிப்படையாகச் சொல்லப்படும் இடங்களிலெல்லாம், எல்லாவிடங்களிலும் இவளுக்குச் சொல்லப்படும் தடையற்ற பத்நீத்வம் முதலானவற்றோடு முரண்படாமல் நிர்வஹிக்கப்படவேண்டும்.] என்று தெளிவாகப் பிராட்டிக்கு எம்பெருமானோடு அத்யந்த ஸாம்யம் இல்லை என்று காட்டியிருக்கிறார். எம்பெருமானார், ஸ்ரீரங்க₃க₃த்₃யத்தின் தொடக்

கத்தில் ''பரப்₃ரஹ்மபூ₄தம் புருஷோத்தமம்'' என்றும் ஸ்ரீபா₄ஷ்யத்தின் தொடக்கத்தில் ''ப்₃ரஹ்ம ஶப்₃தே₃ந புருஷோத்தம: அபி₄தீ₄யதே...ஸச ஸர்வேஶ்வர ஏவ'' என்றும், ஶரணாக₃தி க₃த்₃யத்தின் ஐந்தாவதுசூர்ணையில், ''பரப்₃ரஹ்ம பூ₄த: புருஷோத்தம:''என்றும், வேதா₃ர்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் 'ஸர்வேஶ்வரேஶ்வர: பரப்₃ரஹ்ம பூ₄த: புருஷோத்தமோ நாராயண:'' என்றும் புருஷோத்தமனே பரப்ரஹ்மம் என்று பலவிடங்களில் முழங்கியிருக்க, 'இருவரும் பரப்₃ரஹ்மம் என்பதே ராமானுஜ ஸித்தாந்தம்' என்று கூசா₂மல் எழுதுவது விதண்டாவாதம்தவிர வேறென்ன?

ப்ரியா: — கார்த்திகை: (ஆசிரியர் கட்டுரை):— ''ஶேஷித்வம் ஒரு மிதுநத்திடமே இருக்கிறது'' என்று எல்லாப்பூர்வாசார்யர்களுஞ் ஒப்புக்கொண்டுள்ளனர் ஒரேஶேஷித்வம் இருவரிடம் இருப்பதை 'வ்யாஸஜ்ய வ்ருத்தி' என்று வடமொழியில் கூறுகிறார்கள் என்று ஒப்புக்கொண்டிருப்பது போல் ப்₃ரஹ்மத்வமும் வ்யாஸஜ்ய வ்ருத்தியாக ஒப்புக்கொள்ளப் படுவதால் ஒரு மிதுநமே ப்₃ரஹ்ம ஶப்₃தத்தால் சொல்லப்படுகிறது என்பதே ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம் அல்லவா?

ஸு₂தர்சனம்: — 'ஐகா₃ச்ஶே₂ஷித்வம் வ்யாஸஜ்ய வ்ருத்தி' என்பதை ந்யாயஸித்₃தா₄ஞ்ஜநத்தில் ஸோமாசியாண்டானின் ஸ்ரீஸூக்தியைக்காட்டி, ''கணவனுக்கு உடைமையாயிருப்பது மனைவிக்கும் உடைமை என்னும் ந்யாயத்தாலே உலகைக்குறித்து தி₃வ்ய த₃ம்பதிகளின் ஶேஷித்வம் ஒன்றாகவே இருக்கிறது'' என்று நிரூபிக்கிறார் தேசிகன். இந்த நியாயத்தைக்கொண்டு ப்₃ரஹ்மத்வமும் வ்யாஸஜ்யவ்ருத்தி என்று எப்படி ஸாதிக்கமுடியும்? மேலும் அந்த சோமாசியாண்டானின் ஸ்ரீஸூக்தியிலேயே ''பிராட்டி எம்பெருமானுக்குச் சரீரம்'' என்று அருளிச்செய்திருக்கிறாரே! சரீரமான பிராட்டி எப்படி ப்₃ரஹ்மமாக முடியும்? ''விசிஷ்டாத்வைதமா? விசிஷ்டத்வைதமா?'' என்னும் நம்கட்டுரையில் 11 வது பாராவில் ஸோமாசியாண்டானின் இந்த ஸ்ரீஸூக்தி அர்த்தத்தோடு எடுத்துக் காட்டப்பட்டு, ''கணவனின் உடைமை மனைவிக்கும்

உடைமை" என்னும் நியாயம் ப்ரஹ்மத்வம் ஸர்வாந்தர்யாமித்வம் முதலானவற்றை ஸாதிக்கவல்லதல்ல் என்று காட்டப்பட்டுள்ளது. இதைக் கண்டிருந்தும் காணாததுபோல் எழுதுவது அப்ராமாணிகமான செயலேயாகும்.

ப்ரியா:- கார்த்திகையிதழ்: ஆசிரியர் கட்டுரை:- தேசிகன் ஸ்ரீஸ்துதியில் ''பஶ்யந்தீஷு'' [ஶ்லோகம்-7] என்னும் ஶ்லோகத்தில், "ஸ்ரீவைகுண்டத்தில் பெருமாளும்பிராட்டியும் சதுரங்கவிளையாட்டு விளையாடுகிறார்கள். அப்பொழுது பாச்சிகளையுருட்டி (தாயக்கட்டையை உருட்டிவிட்டு) அதிலுள்ளபடி காய்களைவைப்பதற்கு உரியஇடங்களில் பலவகையிலுள்ள கட்டங்களில் காய்களை வைப்பதுபோல் முக்குணமுடைய ப்ரக்ருதி மண்டலத்தில் ப்ரஹ்மா, சிவன் முதலியவர்களை அவரவர்கள் பண்ணிய புண்ய பாபரூப கர்மாவிற்கு ஏற்றவாறு அந்தந்த உலகங்களில் ஆட்சியில் நியமித்து எப்பொழுதும் லீலாரஸத்தை அனுபவிக்கிறார்கள். அவர்கள் விளையாடுவதை நித்யஸூரிகள் கூட்டம் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கின்றன" என்று அருளியிருக்கிறார். இதில் ''பஶ்யந்தீஷு ஶ்ருதிஷு பரித: ஸூரிப்ருந்தேந ஸார்த்தம்'' என் கையாலே, ''நித்யஸூரிகளுக்கும், ஶ்ருதிகளுக்கும் திவ்ய தம்பதிகள் செய்யும் ஜகத்ஸ்ருஷ்டியைக் கண்டு களிப்பதிலேயே அந்வயம்'' என்றும், ''திவ்யதம்பதிகளிருவரும் சேர்ந்தே ஜகத்ஸ்ருஷ்டியைச் செய்கிறார்கள்'' என்றும் விளங்குகிறது. நித்யஸூரிகளுக்கு, ஜகத்வ்யாபாரம் இல்லையென்பதையும், பிராட்டிக்கும் பெருமாளுக்கும் உண்டு என்பதையும் இது காட்டுகிறதல்லவா?

ஸுதர்சனம்:— இதே ஸ்ரீஸ்துதியில் ஸம்வாதம் 84வது பக்கத்தில் பொருளுடன் காட்டப்பெற்ற, "யத்ஸங்கல்பாத்'' என்று தொடங்கும் ஶ்லோகம் உள்ளது. அதில் ''எம்பெருமானே உலகனைத்தையும் ஶரீரமாகக் கொண்டவன்'' என்றும், 'அவனுடைய ஸங்கல்பத்தினாலேயே. உலகம் படைக்கப்படுகிறது' என்றும், 'உலகிற்கு நிமித்த உபாதாந ஸஹகாரி காரணமானவன் எம்பெருமானே' என்றும் தெளிவாக அருளியுள்ளார் தேசிகன். 'பிராட்டி அவனை அடையாளம்காட்டுபவளாகவே இருக்கிறாள்'என்றும்

acharya.org

அருளியிருக்கிறார். அவரே ஸ்ரீஸ்துதி 9வது ஶ்லோகத்தில் "த்வத்ஸப்ரீத்யை விஹரதி ஹரெள" என்று, 'பிராட்டிக்கு எம்பெருமானுடைய ஜகத்வ்யாபார லீலையில் ஆனந்த மடைவதிலேயே அந்வயம்' என்றும் காட்டியிருக்கிறார். [ஸம்வாதம் பக்கம் 83 காண்க] அவரே சது:ஶ்லோகி வ்யாக்யானத்தில், 'நித்யமுக்தர்களுக்குப்போலே பிராட்டிக்கும் 'ஜகத் வ்யாபார வர்ஜம்' முதலான ப்ரஹ்மஸூத்ரங்களின்படி நிமித்தத்வம், உபாதாநத்வம் முதலானவை கிடையாது என்று காட்டியிருக்கிறார். [ஸம்வாதம் பக்கம் 85 காண்க.] இவற்றையொட்டிப் பார்க்கும்போது ஸ்ரீஸ்துதி 7 வது ஶ்லோகத்திலிருந்து பிராட்டிக்குள்ள 'ஜகத் ஸ்ருஷ்டியைப் பிரார்த்திப்பது' 'அந்த லீலையின் ஆனந்தத்தில் பங்கு கொள்வது' ஆகிய அப்ரதான ஜகத் காரணத்வம் மட்டுமே பிராட்டிக்குத் தேறும் என்று தெளிவாக விளங்குகிறது. 'எம்பெருமான் உலகுக்கு நிமித்தோபாதாந ஸஹகாரி காரணமாகிறான். ஆகையாலே ப்ரதானமான அத்விதீயமான ஜகத்காரணனாகிறான். பிராட்டி அவனை உலகைப் படைக்கும்படி தூண்டுகையாலும், லீலையின் ஆனந்தத்தில் பங்கு கொள்வதாலும் ஜகத் காரணத்வத்தில் அப்ரதானமாக அந்வயிக்கிறாள். இந்த ஜகத்ஸ்ருஷ்டி லீலையைக்கண்டு களிப்பதையே நித்ய ஸூரிகள் செய்கிறார்கள்' என்னும் விஷயம் ஸ்ரீஸ்துதி 4, 7, 9 ஆகிய மூன்று ஶ்லோகங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது நடுநிலையாளர்களுக்கு நன்கு புரியும். இப்படிக் கொள்ளாவிடில் "ஸ்வஸங்கல்ப மாத்ர அவக்லுப்த ஜகஜ் ஜந்ம ஸ்திதி த்வம்ஸாதிகே ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே ந்யஸ்த- ஸமஸ்த - ஆத்மைஶ்வர்யம்" [ஸ்ரீவைகுண்டகத்யம் சூர்ணை 3] என்று எம்பெருமானார் 'விஷ்வக்ஸேநர் ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றைத் தம் ஸங்கல்பத்தாலேயே செய்கிறார்' என்று அருளியிருப்பதைக் கொண்டு விஷ்வக் ஸேநருக்கும் முக்ய ஜகத்காரணத்வம் சொல்ல வேண்டி வரும். இவ்விடத்தில் கத்ய பாஷ்யத்தில் ஸ்ரீதேசிகன் 'ஜகத் வ்யாபாரத்தில் அப்ரதானமான அந்வயத்தையே விஷ்வக்ஸேநருக்குக் கொள்ளவேண்டும்' என நிலைநாட்டியிருப்பதைக் காணலாம்.

acharya.org

ப்ரியா:— கார்த்திகையிதழ் - ஆசிரியர் கட்டுரை: ஜகத் காரணவாக்யத்தில் கூறப்பட்டுள்ள 'ஸதேவ' ஏகமேவ' 'அத்விதீயம்' இவைகளுடைய அர்த்தத்தை நன்கு பராமர்சிக்காததால் பல ஶ்ருதிகளிலும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளிலும் உள்ள 'ஏக' ஶப்தத்திற்கு ப்ரஹ்மம் ஒன்றுதான் ப்ரளயகாலத்தில் இருந்தது என்று கொண்டு பிராட்டிக்கு ஜகத்காரணத்தில் (?) ஸம்பந்தமில்லை என்று ஸுதர்சனத்தில் எழுதப்பட்டது நிரஸிக்கபட்டதாகிறது,இத ஞலே (ஸுதர்சனப்) கேட்கும் பலகேள்விகளுக்கும் பதில் சொன்னதாக ஆகிறது.

ஸுதர்சனம்:— 'ப்ரளயகாலத்தில் ப்ரஹ்மம் ஒன்றுதான் இருந்தது' என்ரே. 'பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்தில் ஸம் பந்தம்இல்லை' என்ரே நாம் எங்குமே கூறவில்லை. ''உல கிற்கு நிமித்த உபாதாந ஸஹகாரி காரணங்களாயிருக்கை யாலே முக்ய ஜகத்காரணமாக எம்பெருமான் ஆகிருன்'' என்றும், ''ஜகத்ஸ்ருஷ்டி செய்யும்படிஎம்பெருமானைத் தூண் டுகை, அவன் செய்யும் ஸ்ருஷ்டியின் ஆனந்தத்தில் பங்கு கொள்ளுகை ஆகிய அப்ரதாநமான அந்வயமேபிராட்டிக்கு உண்டு'' என்றும் பலப்ரமாணங்களைக்காட்டி நாம் நிரூபித் திருக்கிரேம். ஆகையால் ''ஸுதர்சனம் எழுதியது நிரஸிக் கப்பட்டதாகிறது'' என்று ப்ரியா கூறுவது பகற்கனவே. 'ப்ரியா' ஐப்பசி இதழைக் கண்டவுடன் 25-10-97 அன்று வெளியான ஐப்பசி [599] ஸுதர்சனத்தில் ''ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா விளக்கவேண்டிய விஷயங்கள்'' என்னும் தலைப்பில ஆறுபக்கங்கள் கொண்ட பதினறு கேள்விகளை அச்சிட்டு, 'அவற்றை நம் விலாசத்தோடு அப்படியே அச்சிட்டு ப்ரியா பதிலுரைக்கவேண்டும்' என்று பிரார்த்தித்திருந்தோம். அக் கேள்விகளை அச்சிட்டாலேயே ப்ரியாவைப் படிப்பவர்கள் 'பிராட்டி முக்யஜகத்காரணம்அல்ல' என்னும் உண்மையைப் புரிந்து கொண்டு விடுவார்கள் என்று அஞ்சியே, ப்ரியா— ஈச்வர கார்த்திகை—மார்கழி இதழ்களில் நம் பிரார்த்தனைப் படி அச்சிடவில்லை. ஒருவிஷயத்திற்கு விதண்டாவாதமாக பதிலெழுதிவிட்டு மற்றவற்றுக்குப் பதிலெழுதியதாக ஆகி விட்டது என்று ப்ரியாஎழுதுவது மநஸ்ஸாக்ஷியை அடியோடு துடைத்துவிட்டுப் பேசும்பேச்சாகும். இல்லையெனில் அடுத்து வரும் 'ப்ரியா' இதழிலாவது நம் விலாசத்தைக்கொடுத்து பதினறு கேள்விகளையும் அச்சிட்டு பதிலிறுக்கட்டும்.

acharya.org

ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்

இரண்டாம் அத்தியாயம்

முன்னுரை

இந்த ஸம்வாதத்தை இந்த இதழில் [601] அச்சிடும் போது ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஈச்வர மார்கழி இதழ் [17—12—97 அன்று] வந்தது. அதில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரக் கட்டுரையில் ஸ்ரீதத்வ விஷய விளக்கம் தொடர்கிறது. ப்ரியா ஆசிரியர் "எங்களாழ்வான் ஸித்தாந்தம்" என்னும் கட்டுரையும் எழுதியுள்ளார். இது தவிர "ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவின் அறிக்கை" என்னும் எட்டு பக்கங்கள் கொண்ட கட்டுரையிலும் சில விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் ஒன்றில் கூட 'ஸ்ரீவைஷ்ணவ' ஸுதர்சனம்' பத்திரிகையின் விலாசத்தைக் கொடுத்துப் பதிலெழுதப்படவில்லை. விலாசத்தைக் கொடுத்தால் ப்ரியா வாசகர்கள் நாம் நிலை நாட்டியுள்ள உண்மையைப் புரிந்து கொண்டு விடுவார்கள் என்று அஞ்சுகிறார்கள் என்று விளங்குகிறது. அறிக்கையில், "பிறர்களுடைய கேள்விகள் எவ்வளவு கீழ்த்தரமானவை. அஹங்காரத்தினால், பிடிவாதத்தினால், அஜ்ஞாநத்தினால் கேட்கப்பட்டவை........" "இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைப் போன்ற முட்டாள் தனம் மிகுந்த செயல் வேறு எதுவும் இருக்க முடியாது" "தம் இஷ்டப்படி ஏதோ பிதற்றி உலகத்தை ஏமாற்றுகிறார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. நாம் காட்டியிருக்கும் ஏராளமான ப்ரமாணங்களுக்குப் பதில் சொல்ல இயலாமையால் "பேஷம் கோபேந பூரயேத்" [நேர்மையுடன் பதில் சொல்ல இயலாதவன் கோபத்தினால் பதிலை நிறைவு படுத்துவான்] "அஶக்தா: தத்பதம் கந்தும் ததோ நிந்தாம் ப்ரகுர்வதே" [விவாதங்களில் ஸாத்விக முறையைக் கடைப்பிடிக்க இயலாதவர்கள் நிந்தையில் இறங்குகிறார்கள்] என்னும் வழியை இவர்கள் கடைப் பிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று விளங்குகிறது. இவர்கள் எவ்வளவு வசவு மாரிகளைப் பொழிந்தாலும் நாம் பதிலுக்கு வசவு மொழிகளைப் பயன் படுத்த மாட்டோம். "இவர்கள் எழுதுகின்றவை ப்ரமாணங்களோடு முரண்பட்டவை; மநஸ்ஸாக்ஷியை மீறியவை" என்பதை ப்ரமாணம் காட்டி நிரூபிப்போம்.

acharya.org

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் [ஈஶ்வர—மார்கழி] பகுதியில் "பிரமட்டி விஷயத்தில் பிறர்கேட்டுள்ள கேள்விகள் அனைத்துக்குமே காலக்ரமேண பதில்கள் கூறப்படும். ஆகையால் பிறர்கள் இதற்குள் நடுவே புகுந்து கேள்வி கேட்பதைத் தயவு செய்து நிறுத்தி வைக்கவேண்டும்." என்றும், "ஸ்ரீதத்த்வதீபிகை பூர்த்தி பெறும்வரை காத்திருக்கவும்; நடு நடுவே புகுந்து கிளர்ச்சி செய்ய வேண்டாம்" என்றும் நமக்குக் கோரிக்கை விடுக்கிறார்கள்.

இதற்கு நமது பதில் பின்வருமாறு:— "ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா விளக்க வேண்டும் விஷயங்கள்" என்னும் தலைப்பில் நாம் கேட்டிருக்கும் பதினறு கேள்விகளுக்கு இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளபடி பதில் எழுதினாலே போதுமானது; இதற்கு மேல் நாம் எந்தக் கேள்வியையும் இவர்களைக் குறித்துக் கேட்கப்போவ தில்லை ஆனால் இவர்கள் எழுதும் விஷயங்கள் ப்ரமாணங்களோடு முரண்பட்டவையென்பதை ஒவ்வொரு மாதமும் ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதத்தில் விளக்கிவருவோம். ப்ரியா மார்கழி இதழில் "ஆநீதுவாதப்" "ஶாந்த்ரத்யா தேவ:" என்று தொடங்கும் வேதவாக்கியங்கள் தங்களுக்கு ஸாதகம் என்று இவர்கள் காட்டியிருக் கிறார்கள். இவ்வாக்கியங்கள் இவர்களுக்கு ஸாதகமன்று என்று ஸ்ரீதேசிகனே நிருபித்திருப்பதை ஸுதர்சனம் மார்கழி [601] இதழில் ஸாத்விக ஸம்வாதத்தில் காட்டியிருக்கிறோம்.

இனி ப்ரியா ஈஶ்வர கார்த்திகை—மார்கழி இதழ்களில் ஸ்ரீதத்வ தீபிகையிலும், ப்ரியா மார்கழி இதழிலுள்ள மற்ற இரண்டு கட்டுரைகளிலும் இவர்கள் கூறியிருப்பவை ப்ரமாணங்களுக்குப் பொருந்தமாட்டா என்பதை "ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம் வாதம்" இரண்டாம்அத்தியாயத்தில் ஸுதர்சனம் தை மாத [602] இதழில் நிருபிப்போம் ஸுதர்சனம் விலாசத்தையும் ப்ரியாவில் கொடுத்தால் நாம் எழுதியிருப்பவை கீழ்த்தரமானவையா, பிதற்றலா, அஹங்காரத்தினலோ, பிடிவாதத்தாலோ, அஜ்ஞானத் தாலோ எழுதப்பட்டவையா என்பதை ப்ரியா வாசகர்களும் புரிந்து கொள்வதற்கு உதவியாயிருக்கும். இதைச் செய்யும்படி ப்ரியாவை மீண்டும் பிரார்த்திக்கிறோம்.

முன்னுரை முற்றிற்று.

acharya.org

ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்

ப்ரியா-ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்

இரண்டாம் அத்தியாயம்

ப்ரியா:— ஈச்வரமார்கழி— அறிக்கை:— உங்களுடைய கேள்விகள் மிகவும் கீழ்த்தரமானவை. அஹங்காரத்தினுல் பிடிவாதத்தினுல் அஜ்ஞானத்தினுல் கேட்கப்பட்டவை; உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதைப்போன்ற முட்டாள் தனம் மிகுந்த செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனுலும் ஆஸ்திகர்கள் பலருடைய ப்ரார்த்தனையினுல் பதில் கூறுகிருேம். மாதக்கணக்கில் காத்திருக்கவும்,

ஸுதர்சனம்:— பதில் கூறுவதற்கு மாதக்கணக்கில் ஆகட்டும். ஆனுல் ''மிகவும் கீழ்த்தரமானவை அஹங்காரத்தினுல் பிடிவாதத்தினுல் அஜ்ஞானத்தினுல் கேட்கப்பட்டவை'' என்பதை எமது கேள்விகளை அப்படியே அச்சிட்டு உடனே வாசகர்களுக்குப் புரியவைத்திருக்கலாமே? கேள்விகளை அச்சிடாமல், எமது பெயரையும் விலாசத்தையுங்கூடக் கொடுக்காமல் வசவுமாரியைப் பொழிவதிலிருந்தே கேள்விகளை அச்சிட்டால் அவை நியாயமான கேள்விகளேயொழிய நீங்கள் வர்ணிப்பவை போன்றவை அல்ல என்பதை வாசகர்கள் உடனே புரிந்துகொண்டு விடுவார்கள் என்னும் அச்சமே அச்சிடாமைக்குக் காரணம் என்று விளங்குகிறது. இல்லையெனில், அடுத்து வரும் இதழிலேயே எமது விலாசத்தையும் கொடுத்துக் கேள்விகளை அச்சிடும்படி கேட்டுக்கொள்கிருேம். நீங்கள் ஈச்வர புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாத இதழ்களில் எழுதியிருப்பவை தேசிகன் முதலான ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டவை என்பதை ஈச்வர மார்கழி [601] ஸுதர்சனம் இதழில் ஸம்வாதத்தில் (பக்கம் 77 முதல் 102 வரை) விளக்கியுள்ளோம். அதைப்போலவே

ப்ரியா கார்த்திகை-மார்கழி இதழ்களில் எழுதியுள்ளவை பொருந்தாதவையே என்பதை இந்தத் தைமாத இதழில் [602] விளக்கவுள்ளோம். இப்படியே ஒவ்வொருமாதமும் உங்கள் வாதங்கள் பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுடன் பொருந்தாதவை என்று விளக்கப்படும். ஆனால் புதிதாக எந்தக் கேள்வியும் கேட்கப்படமாட்டாது. உங்கள் வாதங்களின் பொருந்தாமையை விளக்குவதற்கு மாதக் கணக்கில் காத்திருக்க இயலாது. உடனுக்குடன் ப்ரமாணங்காட்டி உங்கள் வாதங்கள் மறுக்கப்படும்.

ப்ரியா:— ஈஸ்வர மார்கழி (அறிக்கை): — 'உங்களுடைய கேள்விகள் மிகவும் கீழ்த்தரமானவை. அஹங்காரத்தினால் பிடிவாதத்தினால் அஜ்ஞானத்தினால் கேட்கப்பட்டவை' என்பதற்கு ஒரு விஷயத்தை மட்டும் இப்போது விளக்க முற்படுகிறோம். உங்களுடைய 13—வது கேள்வியை எடுத்துக் கொள்வோம். [13வது கேள்வியில் ஆழ்வார்களின் பாசுரங்கள் தவிர மற்றவை ப்ரியாவில் அச்சிடப்பட்டுள்ளன.] நீங்கள் பிராட்டியை ப்₃ரஹ்மம் என்று சொல்லக்கூடாது என்பதற்குச் சேர ப்ரமாணம் கிடைக்குமா? என்று அலைகிறீர்கள். நீங்கள் ''ஶேஷஶாயியே ப்₃ரஹ்மம்' என்றும், 'அவன் திருவடிக்கு அணையாயிருக்கும் ஸ்ரீதேவி ஶேஷத்வமே வடிவெடுத்தவள்' என்றும் கௌஷீதகி உபநிஷத் காட்டிற்று'' என்று எழுதுகிறீர்கள். இதிலிருந்து ''ஶேஷஶாயியாய் இருப்பவர்களுக்கு ப்₃ரஹ்மத்வம் உண்டு'' என்று நீங்கள் ஒப்புக்கொண்டதாக ஆகிறது. பிராட்டியும் ஆதிசேஷனாயிருக்கிற படுக்கையில் சயனித்திருக்கிறாள் என்பதற்குப் பல ப்ரமாணங்கள் உள்ளன. ஆகையால் அவளுக்கும் ப்₃ரஹ்மத்வம் உண்டு என்பது உங்கள் வார்த்தையிலிருந்தே தேறுகிறது.

ஸுதர்சனம்:— இது அப்பட்டமான விதண்டாவாதமே. ''ஸ்ரீரூபபூர்ஹணம் தஸ்மிந் ப்₃ரஹ்ம ஆஸ்தே'' [ஸ்ரீதேவி

acharya.org

ப்₃ரஹ்மத்தின் திருவடிக்கு அணையாக இருக்கிருள்; அப் படுக்கையில் ப்₃ரஹ்மமான பரமாத்மா எழுந்தருளியிருக்கி ருன்] என்று உபநிஷத் வாக்யம் 'ப்₃ரஹ்மம் வேறு', 'ஸ்ரீதேவி வேறு' என்று தெளிவாகக் காட்டிற்று. 'ஶேஷ ஶயநத்தில் இருப்பவன் ப்₃ரஹ்மம். அவனுடைய திரு வடிக்கு அணையாக அந்த ஶேஷஶயனத்திலேயே பிராட் டியும் இருக்கிருள்' என்று இவ்வாக்கியம் தெளிவாகக் கூறுகிறது ஆழ்வார்களும் '' தாமிருவர் அடிவருடும் தன் மையானை'' [பெரிய திரு 2-10-2] முதலான பல பாசுரங் களில் ஸ்ரீ பூமிதேவிகளுக்கு ப₄க₃வச்சே₂ஷத்வமே ஸ்வரூபம் என்று காட்டியிருக்கிருர்கள். உண்மைநிலை இவ்வாறு இருக்க 'ஶேஷஶாயியே ப்₃ரஹ்மம்'' என்று நாம் பொருள் எழுதியதில் ஒருபகுதியை மட்டும் பிடித்துக்கொண்டு "பிராட்டியும் ஆதிசேஷன்மீது ஶயனித்திருக்கிருள்; ஆகை யால் உங்கள் வார்த்தைப்படியே பிராட்டிக்கும் ப்₃ரஹ்மத் வம் உண்டு'' என்று எழுதுவது விதண்டாவாதம் தவிர வேறு என்ன? நமது வார்த்தையிலும் ''ஶேஷஶாயியே ப்₃ரஹ்மம்'' என்று எழுதியிருக்கிருேமே யொழிய ''ஶேஷ ஶாயித்வம் உள்ளவர்கள் அனைவரும் ப்₃ரஹ்மம்'' என்று எழுதவில்லை. ''ஶாயீ'' என்கிற ஆண்பால் சொல்லையே வழங்கியிருக்கிருேம். இப்படி விதண்டாவாதம் செய்யப் புக்கால் ஆதிஶேஷஶயனத்தில் பெரியபிராட்டியோடு கூட இருக்கும் பூமிநீளாதேவிகளுக்கும் ப்₃ரஹ்மத்வம் சொல்ல வேண்டிவரும். பிராட்டியை ப்₃ரஹ்மம் என்று உபநிஷ த்தோ ஆழ்வார்களோ ஆசார்யர்களோ ஓரிடத்தில் கூடக் குறிப்பிடாமையாலும், பிராட்டி ப₄க₃வச்சே₂ஷத்வமே வடி வெடுத்தவள் என்று அனைவரும் முழங்குகையாலும் எமது வார்த்தையைப்பற்றிக்கொண்டு விதண்டாவாதம் செய்து நீங்கள் பிராட்டிக்கு ப்₃ரஹ்மத்வத்தை ஸாதிக்கமுயல்வது நகைப்பிற்கு இடமாகும். இத்தகைய வெளிப்படையான

acharya.org

விதண்டாவாதங்களை வாசகர்களுக்கு அவ்வப்போது எடுத்துக்காட்டாமல் நாம் மாதக்கணக்கில் காத்திருக்கவேண்டுமென்று எமக்கு நீங்கள் கட்டளையிடுவது எப்படி நியாயமாகும்? இப்படி விதண்டாவாதமாக நமது கேள்விகளுக்கு பதில் சொல்வதன் மூலம் அறிவாளிகளிடம் உங்களுக்கு முட்டாள் பட்டமே கிடைக்குமென்பதை உணர்ந்தே 'இந்தக் கேள்விகளுக்குப்பதில் சொல்வதைப் போன்ற முட்டாள் தனம் மிகுந்த செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது' என்று நீங்கள் எழுதியுள்ளீர்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. ''பிராட்டி ஶேஷஶயனத்தில் இருப்பவளல்ல என்று நாம் கூறுவதாகத் தாமே ஒருகற்பனையைச் செய்து கொண்டு 'பிராட்டியும் ஶேஷஶயனத்தில் இருப்பவளே' என்பதற்கு மூன்று பக்கங்கள் பிரமாணங்களைக் காட்டி, ''இத்தனை பிரமாணங்களையும் மறைத்துத் தம் இஷ்டப்படி ஏதோ பிதற்றி உலகத்தை ஏமாற்றுகிறார்கள் என்று ஏற்படுகிறது'' என்று நீங்கள் எழுதுவது உங்கள் வாசகர்களை மட்டுமல்லாமல் உங்களையும் நீங்களே ஏமாற்றிக்கொண்டுள்ளதைத்தான் காட்டுகிறது. ''விசிஷ்டாத்வைதமதத்தில் இரண்டு ப்ரஹ்மங்கள் உண்டா? ஒரேப்ரஹ்மமா?'' என்னும் முக்கியமான விஷயத்தை நிர்ணயிப்பதற்காக ஸ்ரீவைஷ்ணவர்களிடையே நடக்கும் சர்ச்சைஇது. அதனாலேயே இந்தச் சர்ச்சை பரமஸாத்விகமான முறையில் நடக்க வேண்டும் என்பதற்காக 'ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்' என்னும் தலைப்பிட்டு நாம் பதிலெழுதிவருகிறோம். அப்படியிருக்கும்போது ''பிதற்றல்,மிகவும்கீழ்த்தரமானவை, அஹங்காரத்தினால் பிடிவாதத்தினால் அஜ்ஞானத்தினால் கேட்கப்பட்டவை, இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது மிகவும் முட்டாள்தனமான செயல்'' என்று 16 கேள்விகளையும் அச்சிட்டு வாசகர்களுக்குக் காட்டாமலே 'ப்ரியா' வசவு மாரியில் இறங்கியுள்ளது. இவற்றை எழுதும், அல்

லது பிறர் எழுத அனுமதிக்கும் ஸ்ரீமதழகியசிங்கருடைய ஸ்தானத்திற்கு இச் செயல் மிகவும் தகாதது. இவ்விஷயத்தில் ப்ரஸக்தி நேர்ந்தமையால் முன் நடந்த விஷயம் ஒன்றைக் குறிப்பிடுகிறோம். சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன் கீர்த்திமூர்த்தியான D T தாத்தாசார்ய ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைப் பலவாறு தூஷித்து 'ஸஜ்ஜநாராதநம்' என்னும் ஒரு நூலை வெளியிட்டார். 'அவரது வாதங்களனைத்தும் பொருந்த மாட்டா' என்று நிரூபித்து 'தூஷணநிராஸம்' என்னும் நூல் நந்தன வருடம் சித்திரை [53] ஸுதர்சனம் இதழில் எந்தையாரால் வெளியிடப்பட்டது. இந்த நூலில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவைப்பற்றிய எந்தப்ரஸ்தாபமும் இல்லை. அப்படியிருக்க, ஸுதர்சனம் ஆசிரியரான எந்தையாரையும் ஸுதர்சனத்தையும் ''ஸம்ப்ரதாயக்ரந்தத்தையே அபலபிக்கிறவர்கள்'' ''அப்ராமாணிக ஆதுநிகபத்திரிகாசிரியர்கள்'' ''குருட்டுக்கோழிபோன்றவர்கள்'' ''வக்ரபுத்தியான ஆராய்ச்சிக்காரர்கள்'' ''ஆபாஸோக்திகளை எழுதியிருக்கிறார்'' என்று பலவிதமாக நிந்திக்கும் மூன்றரைப் பக்கமுள்ளதொரு வியாஸத்தை ந்ருஸிம்ஹப்ரியா வெளியிட்டது, இப்படி வசவுமாரிபொழிவது ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத்தகாது என்பதை எந்தையார் தம் பதில் கட்டுரைகளில் உணர்த்தி, 'குருட்டுக்கோழி போன்றவர்' என்று எழுதியதற்குப் பதிலாக

'' துர்வாதமதமத்தாஸத்வாதிவாரண பஞ்ஜக:|
ஸ்ரீகுக்குடபுராவாஸ: குக்குடோஹம் ந ஸம்சய: ||

acharya.org

[துர்வாதங்களாகிறமதம்பிடித்து அலையும் தீயவாதிகளாகிற யானைகளைப் பிளந்து அழிக்கின்றவனாய்,* கோழியூர்எனப் படும் உறையூரில் வஸிப்பவனான கோழியே யான். இதில் ஐயமில்லை.] என்னும் ச்லோகத்தை எழுதி 'அபயப்ரத ராஜவிஜயம்' என்னும் நூலை வெளியிட்டு, ப்ரியாவின் வாயைத் தம் நிரூபணங்களாலே அடக்கினார். அதற்குப் பிறகு பெரியவாச்சான் பிள்ளையை தூஷிப்பதையும் தூஷிப்பவர்களை ஆதரிப்பதையும் ப்ரியா கைவிட்டது. ஆனாலும் வாதங்களில் பதில் சொல்ல இயலாத போது வசவுமாரி பொழியும் வாஸனை இன்னும் விடவில்லை போலும்! இனி யாவது வசவுமாரியில் இறங்காமல் விஷய விமர்சத்தை மட்டும் செய்யுமாறு ப்ரியாவைக் கேட்டுக்கொள்கிறோம்.

ப்ரியா:— ஈச்வர மார்கழி—ஆசிரியர் கட்டுரை;—

நித்யைவைஷா ஜக₃ந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ ।

யதா₂ ஸர்வக₃தோ விஷ்ணுஸ் ததை₂வேயம் த்₃விஜோத்தம ॥

[வி-பு 1-8 17]

என்னும் ச்லோகத்தின் வ்யாக்₂யானத்தில் எங்களாழ்வான் "அநபாயிநீ" என்னும் சப்₃த₃த்திற்கு உரையிடும் போது "பரம் வ்யூஹம் முதலான ஐந்து நிலைகளிலும் உபாயத்வம் உபேயத்வம முதலானவற்றிலும், எல்லா உலகையும் ஸ்ருஷ்டிப்பது ரக்ஷிப்பது முதலான நிலைகளிலும் எப்போதும் கூடியிருப்பவள்" என்னும் பொருளுள்ள ஸ்ரீஸூக்திகளை அருளியிருக்கிறார். "யதா₂ ஸர்வக₃தோ விஷ்ணு: ததை₂வேயம் த்₃விஜோத்தம" என்னும் உத்தரார்த்த₄த்திற்கு வியாக்யானம் செய்யும்போது "ஸர்வவ்யாபியான

---

* இவ்வூரிலுள்ள கோழியொன்று யானையின் மத்தகத்தைப் பிளந்து அதைத்தோற்று ஓடவைத்ததைக் கண்டு கரிகால் சோழன் 'கோழியூர்' என்று பெயரிட்டு இவ்வுறையூரைத் தன் தலைநகரமாகக் கொண்டான் என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது.

acharya.org

விஷ்ணு எந்த ஸ்வபாவத்தையுடையவனே இவளும் அந்த ஸ்வபாவத்தை உடையவளே. இதனால் விஷ்ணுவைப் போல் ஸ்வரூபத்தால் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையும் ஸத்ய ஜ்ஞாநாதி ஸ்வரூப நிரூபக கல்யாணகுணம் முதலியனவும் பிராட்டிக்கும் உண்டு. அல்லது பகவான் விபுவாயிருப்பதால் எங்கும் வியாபித்திருக்கிறன், இவளும் ஸர்வ வ்யாபிநியாயிருக்கிறள்'' என்னும் பொருளுள்ள ஸ்ரீஸூக்திகளை அருளியிருக்கிறர். இதிலிருந்து எங்களாழ்வான் பிராட்டி ஸ்வரூபத்தால் எங்கும் வியாபித்திருப்பவள் என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிகிறது. 1910 ம் வருடத்தில் அச்சான க்ரந்தாக்ஷரப்புத்தகத்தில் உள்ளபடி வ்யாக்யானம் இப்படி உள்ளது. 1914 ம் வருடத்தில் அச்சான புத்தகத்தில் தொடக்கத்திலுள்ள சில வரிகளை நீக்கிவிட்டார்கள். கடைசியில் ஒரு பங்க்தியைச் சேர்த்துள்ளார்கள். இதுதான் உண்மை என்பதை மத்யஸ்த்தர்கள் அச்சான வருஷங்களைக் கொண்டு அறியலாம்.

ஸுதர்சனம்:— நாலு வருடம் முன்னல் அச்சிடப்பட்டது, நாலு வருடம் பின்னல் அச்சிடப்பட்டது என்பதைக்கொண்டு அச்சிட்டவர்களின் நேர்மையை நிர்ணயிக்கமுடியாது, அச்சிட்டவர் யார்? அவருக்கு இல்லாத பங்க்திகளைச் சேர்ப்பதிலோ, இருக்கும் பங்க்திகளை எடுப்பதிலோ அபிநிவேசத்திற்குக் காரணம் உண்டா? ப்ராசீனக்ரந்தங்களில் எந்தப்பாடம் ஆதரிக்கப்பட்டிருக்கிறது? முதலான பல காரணங்களைக் கொண்டுதான் எது சுத்த பாடம், எது திருத்தப்பட்ட பாடம் என்று நிர்ணயிக்க வேண்டும். ''அதவா பகவாந் விபுத்வேந ஸர்வகத:; அஸ்யாஸ்தச்சக்திவசாதனுத்வேபி தத்ர தத்ர ஸந்நிதாநாத் ஸர்வ கதத்வமுக்தம। இயம் ச ஸர்வகதா'' என்னும் வாக்யம் பம்பாய் ஸ்ரீவேங்கடேச்வர ஸ்டீம் பிரஸ்ஸில் சேட் ராஜ் ஸ்ரீகேசவதாஸ் என்னும் வடநாட்டவரால் அச்சிடப்பட்டபதிப்பிலுள்ளது இந்த அச்சகம் நூற்றுக்

கணக்கான இதிஹாஸம் புராணம் முதலான க்₃ரந்த₂ங்களை அச்சிட்டுள்ளது. மேலும் இந்த வாக்கியம் பெரிய வாச்சான் பிள்ளையின் சீடரான வாதி₃கேஸரி ஜீயரால் தம்முடைய ரஹஸ்யத்ரயகாரிகாவளியில் ''ஶக்த்யா ஸர்வத்ர ஸாந்நித்₄யாத் ஸர்வக₃த்வம் உதீ₃ரிதம் । இதி ஶ்ரீ விஷ்ணுசித்தார்யை: வ்யாக்₂யாநாத்து ந ஸாத₄நம் ॥''[47] ['சக்தியினாலே பிராட்டி எல்லாவிடத்திலும் இருக்கையாலே அவளுக்கு ஸர்வவ்யாபித்வம் சொல்லப்பட்டது' என்று ஸ்ரீவிஷ்ணு சித்தார்யர் வ்யாக்யாநம் செய்கையால் அவள் எம்பெருமானைப்போலே விபுஸ்வருபத்தால் வியாபித்திருப்பவள் என்பதை விஷ்ணு புராண ஶ்லோகம் ஸாதிக்கமாட்டாது] என்று எடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பூர்வாசார்யர்கள் காலத்திலேயே பாடம் இப்படியே இருந்தது என்று விளங்குகிறது. மேலும் அஹோபில மடத்தார் இன்றளவும் காலக்ஷேப க்ரந்தமாக வைத்துக்கொண்டிருக்கும் ஈடு [திருவாய் 5-6-11] வ்யாக்யானத்தின் அரும்பதவுரையிலும் இந்தப் பங்க்தி ஸ்டீம் ப்ரஸ் பதிப்பிலுள்ளபடியே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அந்த நாகராக்ஷரப்பதிப்பு அனைவருக்கும் கிடைக்க அரிதாயிருந்தமையால் காஞ்சீ மஹா வித்வான் ஸ்ரீ உ வே ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியிடம் நம்மிடமிருந்த அப்பதிப்பைக் கொடுத்து Dr R. சம்பத் (6 சூளைமேடு ஹைரோடு, சென்னை 94) அவர்களுடைய நிதியுதவியுடன் மறுபதிப்புச் செய்யும்படி செய்தோம். இப்போதும் அப்பதிப்பை அவரிடம் வாங்கிப்பார்த்துக் கொள்ளலாம். ஸ்டீம் ப்ரஸ் பதிப்பு அடியேனிடம் கையில் இல்லாமையால் ஸுதர்சனம் [591] இதழில் நம்முடைய நினைவைக்கொண்டு இது முந்திய பதிப்பு என்று எழுதினோம். இது தவறாயிருக்கலாம். ஆனால் நாலு வருடம் பிந்தியது என்பதனால் அது திருத்தப்பட்ட பதிப்பென்று எவரும் கூறிவிடமுடியாது என்பது பின்வரும் காரணங்களால் விளங்கும்:— (1) பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்யராய், திருவாய்மொழிக்குப் பன்னீ

acharya.org

ராயிரப்படி உரையருளியவரான வாதிகேஸரி ஜீயர் ரஹஸ்யத்ரயங்களின் பொருளை விளக்கி அருளிய 'ரஹஸ்யத்ரய காரிகாவளி' என்னும் வடமொழி ஶ்லோகரூபமான நூலிலும், ஈட்டின் 5-6-11 அரும்பதவுரைகளிலும் நாகராக்ஷரப்பதிப்பிலுள்ளபடியே விஷ்ணுசித்தீயவ்யாக்₂யான பங்க்தி உள்ளதிலிருந்து அதுவே உண்மையான பாடம் என விளங்கும். (2) அத்துடன் அந்த வாக்கியம் இல்லாத க்₃ரந்த₂லிபிப் பதிப்பில் ''அத₂வா ப₄க₃வான் விபு₄த்வேந ஸர்வக₃த: இயம் ச ஸர்வக₃தா'' என்னும் வாக்கியம் நீங்கள் கூறும் அர்த்தப்படி புநருக்தியாக உள்ளது. எப்படியெனில்; ''இயமபி தத₂ா—தத்ஸ்வப₄ாவேதி. விஷ்ணோ: ஸர்வக₃தத்வ ஸத்யஜ்ஞாநாதி₃ ஸ்வரூப கல்யாணகு₃ணாதீ₃நாம் அதிதே₃ஶ:'' என்ற வாக்கியத்தில் ''ஸ்வரூப கல்யாண கு₃ண'' என்பதை ''ஸ்வரூப நிரூபக கல்யாண கு₃ண'' என்று நீங்களே திருத்திக்கொண்டு, ''விஷ்ணுவைப்போல ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்திருக்கும் தன்மையும், ஸத்யஜ்ஞாநாதி₃ ஸ்வரூப நிரூபக கல்யாணகுணம் முதலியனவும் பிராட்டிக்கு உண்டு; அல்லது பகவான் விபுவாக இருப்பதால் எங்கும் வ்யாபித்திருக்கிருன். இவளும் ஸர்வ வ்யாபிநியாய் இருக்கிருள்'' என்று பொருள் எழுதியிருக்கிறீர்கள். இதில் ''ஸர்வக₃தத்வ'' என்னும் பதத்தால் ஒருமுறை ஸர்வவ்யாபித்வமும், 'ஸத்ய ஜ்ஞாநாதி₃' என்ற பதத்தில் ''ஆதி₃'' ஶப்₃த₃த்தாலே 'அநந்த' ஶப்₃த₃மும் சொல்லுவதாகக்கொள்ளப்படுகையாலே அதில் இரண்டாம் முறை ஸர்வ வ்யாபித்வமும், கடைசியில் ''இயம் ச ஸர்வக₃தா'' என்னும் தொடராலே மூன்ருவது முறை ஸர்வவ்யாபித்வமும் சொல்லப்படுவதாக நீங்கள் கூறுவதிலிருந்து தேறுகிறது. உங்களால் எடுத்தெறியப்பட்ட வாக்கியத்தைச் சேர்த்துக்கொண்டு, ''நிரூபக'' என்று நீங்களாக இடைச்செருகல் செய்துள்ள பதத்தை விட்டுவிட்டு, ''நாக₃ரலிபிப் பதிப்பில் உள்ளபடி எங்களாழ்வான் ஸ்ரீஸூக்திக்குப் பொருள் கொண்டால் புநருக்தி வராமல் அழகாகப் பொருள் பின்

வருமாறு அமைகிறது.— "அவளுக்கும் விஷ்ணுவுக்குப் போலே விக்₃ரஹத்தோடு தோன்றுவதும் மறைவதும் உண்டு. அவள் முதலில் ப்₄ருகு₃வின் பெண்ணாகத் தோன்றினாள். அதற்குப் பிறகு இந்திரனுக்கு ஏற்பட்ட து₃ர்வாஸருடைய சாபத்தாலே மறைந்து, அம்ருதம் கடைந்த பிறகு மறுபடியும் பாற்கடலில் தோன்றினாள்; ஆகையால் விரோதமில்லை" என்னும் பொருளுள்ள முதல் வாக்கியத்தில் பிராட்டிக்கு விக்₃ரஹவ்யாப்தி சொல்லப்படுகிறது என்பது தெளிவு, பாற்கடலில் தோன்றிய பிராட்டி ப்₄ருகு₃ குமாரியாக எப்படித் தோன்ற முடியும்? என்னும் மைத்ரேயரின் கேள்விக்கு இதுவே * நேரான பதில், இந்த விக்₃ரஹவ்யாப்தியையே "ஸர்வக₃தத்வ" என்னும் முதல் பதம் தெரிவிக்கிறது. "ஸத்ய ஜ்ஞாநாதி₃ ஸ்வரூப கல்யாணகு₃ணநாம்" என்பது விஷ்ணுவின் ஸத்ய ஜ்ஞாநாதி₃ ஸ்வரூபத்திலுள்ள கல்யாண கு₃ணங்களையும், சேஷ்டிதம் முதலானவற்றையும் குறிக்கிறது. ஆகையால் "அநந்த" ஶப்₃த₃த்தைப் பிராட்டிக்கும் உள்ளதாக நீங்கள் கொள்வதால் விளையும் இரண்டாவது புநருக்தியும் இல்லை. நீங்கள் எடுத்தெறிந்த வாக்கியத்தில் சொல்லப்பட்ட—ஶக்தியினால் உண்டாகும் ஸர்வ வ்யாபித்வத்தையே அநுவதிப்பதால், "இயம் ச ஸர்வக₃தா" என்றவிடத்தில் உங்கள் பொருளால் விளையும் மூன்றாவது புநருக்தியும் இல்லை, மேலும் "அத₂வா" என்னும் பதம் முன் வாக்கியத்தில் சொன்னதைக் காட்டிலும் வேறுபட்ட பொருளே அடுத்த வாக்கியத்தில் சொல்லப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. நீங்கள் கூறும் பொருளின்படி இரண்டு பொருளுமே ஸ்வரூபவ்யாப்தியையே சொல்லுகையாலே பொருள் வேறுபாடு இல்லை. எனவே "அத₂வா" என்னும் ஶப்₃தம்

* இப்பொருளே 1976 ல் கீ₃த₂ய வ்யாக்₂யான ப்ரமாணத் திரட்டில் நம்மால் எழுதப்பட்டது.

உங்களுக்கு ஒட்டாது. மேலும் ''விபுத்வேந ஸர்வகூ₃த:'' என்று ''ஸர்வகூ₃த'' ஶப்₃த₃த்தை விசேஷித்திருப்பதால் பிராட்டி வேறொருவகையிலேயே 'ஸர்வகூ₃தை'' என்பது தன்னடையே விளங்குகிறது. அது ''ஶக்தியினாலே ஸர்வ கூ₃தையாயிருக்கையே'' என்றும் கூறும் அடுத்த வாக்கியத்தை நீங்கள் எடுத்துவிட்டபடியால் உங்கள் பாடப்படி ''விபுத்வேந'' என்பது வ்யர்த்த₂ விசேஷணமாய் நிற்கிறது. இவையெல்லாவற்றையும் விட வாதிகேஸரி ஜீயராலும் ஈட்டின் அரும்பதவுரைகளிலும் உங்களால் எடுத்தெறிப் பட்ட வாக்கியம் மேற்கோளாக உதாஹரிக்கப்பட்டிருப்பது உங்களது க்₃ரந்த₂லிபிப்பதிப்பிலேயே எங்களாழ்வான் ஸ்ரீ ஸூக்தி நீக்கப்பட்டிருப்பதைக் கையும்களவுமாகப் பிடி பட்டதுபோல் காட்டுகிறது.(3) இப்படி உள்ள வாக்கியத்தை நீக்கியிருக்கும் க்ரந்தலிபிப்பதிப்புக்காரர்களே 'நித்யைவை ஷா' என்று தொடங்கும் முற்பாதியின் வ்யாக்யானத்தில் ''அநபாயிநீ'' என்னும்பதத்திற்குப் பிறகு(நாகூ₃ர்லிபிப்பதிப் பில் இல்லாத) ஒரு மஹாவாக்கியத்தைச் சேர்த்திருக்கி றார்கள். அது ''பரம் வ்யூஹம் முதலான ஐந்து நிலைகள், உபாயத்வம் உபேயத்வம் முதலானவை,அனைத்துலகையும் படைக்கை ரக்ஷிக்கை முதலான எல்லா நிலைகளிலும் எப்போதும் பிராட்டிகூட இருப்பவள்; ஜகன்மாதா, நித்யை;

பிதேவ த்வத் ப்ரேயாந் ஜநநி ! பரிபூர்ணாகூ₃ஸி ஜநே
ஹிதஸ்ரோதோவ்ருத்த்யா ப₄வதி சகதா₃சித் கலுஷதீ₄:
கிமேதந் நிர்தே₃ாஷ: க இஹ ஜகூ₃தீதி த்வமுசிதை:
உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத₃ஸி ந: ||

என்கிறபடியே தாயாயிருக்கையால் உண்டான வாத்ஸல் யத்தின் மிகுதி முதலானவற்றாலே ஜகன்மாதாவாய் இருப் பவள். 'நி ச தே₃வீம் மாதரம் ஶ்ரியம்' [ஸ்ரீஸூக்தம்] என்று ஶ்ருதியும் இவளை ஜகன்மாதாவாகக் கூறுகிறது'' என்

னும் பொருளுடையது. இந்த மஹா வாக்கியம் இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்டது என்பது பின்வரும் காரணங்களால் விளங்குகிறது—எங்களாழ்வான் எம்பெருமானாரால் நியமிக்கப்பெற்ற ஸிம்ஹாஸனாதிபதிசிஷ்யர்களில்ஒருவர். இவர் தம்காலத்திலிருந்த கூரத்தாழ்வான் போன்றவர்களின் ஸ்ரீஸூக்திகளையே அதிஸங்க்ரஹமான தம் விஷ்ணுசித்தீயவ்யாக்யானத்தில் மேற்கோளாக எடுக்கும் வழக்கமில்லாதவர். கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பட்டர் இவரைவிட மிகவும் இளையவர். அவருடைய ஸ்ரீகுணரத்நகோசத்தில் உள்ள "பிதேவ த்வத் ப்ரேயாந்" [52] என்று தொடங்கும் ஶ்லோகம் மேற்கோளாக இந்த மஹாவாக்யத்தில் காட்டப்பட்டிருப்பதிலிருந்தே இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது கையுங்களவுமாகப் பிடிபட்டாற்போலே விளங்கும். இது 'ப்ரியா' வாசகர்களுக்குத் தெரிந்துவிடப் போகிறதே என்னும் அச்சத்தினாலேயே இந்த ஶ்லோகத்தை ப்ரியாவில் அச்சிடாமல் .... குறியிடப்பட்டுள்ளது. (4) இந்த இரண்டு பதிப்புகளும் யாரால் அச்சிடப்பட்டவை என்பதைப்பார்த்தால் இடைச்செருகல் எறிதல்களைச் செய்தவர்கள் யார்? என்பது மிகத்தெளிவாகவிளங்குகிறது. தென்கலை வடகலைத் தகராறுகளில் எந்த வித ஈடுபாடுமில்லாத வடநாட்டுக்காரரும், பலநூல்களைப் பதிப்பித்திருப்பவருமான பம்பாய் ஸ்ரீவேங்கடேஶ்வரா ஸ்டீம் பிரஸ் உரிமையாளரால் பதிப்பிக்கப் பெற்றது நாகரலிபிப்பதிப்பு. க்ரந்தலிபியில் விஷ்ணுபுராண வ்யாக்யானத்தைப் பதிப்பித்தவர்கள் முகப்புப்பக்கத்தில், "ஶ்ரீமதஹோபில லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யாஸ்தாந துரந்தராணாம் ஶ்ரீ ஶ்ரீநிவாஸ ஶட கோப யதீந்த்ர மஹாதேஶிகாநாம் திவ்யநியமநேந ஸம்முத்ரித:" [ஸ்ரீமத் அஹோபில லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யாஸ்தானத்தை வகிப்பவரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஶடகோபயதீந்த்ர மஹாதேஶிகருடைய திவ்ய நியமனத்தால் அச்சிடப்பட்டது] என்று அச்சிட்டுள்ளனர்.

acharya.org

இவ்விடத்தில் அஹோபில மடத்தின் பூர்வீக ஸ்திதியையும் பிற்கால நிலையையும் பற்றி வாசகர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அஹோபில மடம் ஆதியில் சில பட்டங்கள் வரை தென்கலையாகவே இருந்தது என்னும் உண்மையை இன்றும் அஹோபில மடத்தின் சிஷ்யர்களே பலர் கூறி வருகிறார்கள். மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான கோயில் கந்தாடை அண்ணனின் திருக்குமாரரான கந்தாடை நாயன் அருளிய பெரியதிருமுடியடைவில் ''திருப்பதி கேசவாசார்யருக்குத் திருத்தகப்பனார் ஸ்ரீரங்காசார்யர். பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தார், சிஷ்யர் குமாரரான ஸ்ரீநிவாஸாசார்யர்; ஸ்ரீநிவாஸாசார்யருக்குத் திருப்பாட்டனார் ஸ்ரீரங்காசார்யர். பஞ்சஸம்ஸ்காரங்களும் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் சிறிய தகப்பனாரான கருடாசார்யர். சிஷ்யர் வண் சடகோப ஜீயர்'' என்று உள்ளது. இதிலிருந்து அஹோபில மடஸ்தாபகரான ஆதி வண் சடகோப ஜீயர் பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்ய பரம்பரையில் வந்தவர் என்று விளங்குகிறது. அண்மைக் காலத்தில் அச்சிடப்பட்ட ஸ்ரீஸந்நிதி குருபரம்பரையில் அவர் வடக்குத்திருவீதிப்பிள்ளையின் சிஷ்ய பரம்பரையில் வந்ததாகக் காட்டியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் ஆதிவண் சடகோபஜீயர் தென்னாசார்ய பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதை மறுக்க இயலாது. இன்றளவும் அஹோபில மடத்தில் நம்பிள்ளையீடு காலக்ஷேப க்ரந்தமாகக் கொள்ளப்பட்டிருப்பதும், ஸ்ரீஜயந்தி அனுஷ்டானமும் இதை வலியுறுத்துகிறது இந்த அஹோபில மட ஆஸ்தானத்தைச் சில நூற்றாண்டுகளுக்கு முன் அலங்கரித்த ஸ்ரீமந் நாராயணஜீயர் ''புருஷகாரமீமாம்ஸை'' என்னும் ஒரு நூல் ஸாதித்திருக்கிறார். அது இப்போதும் அச்சிடப்பட்டுள்ளது. ''அதிக₃ம்பீ₄ரஸந்த₃ர்ப்ப₄ம் ஸ்ரீமத்₃வசநபூ₄ஷணம்'' [மிகவும் ஆழ்ந்த சொல் தொடைகளையுடையது ஸ்ரீவசநபூ₄ஷணம்] என்று பிள்ளைலோகாசார்யர் அருளிய

ஸ்ரீவசந பூஷணத்தை அவர் மனமாரப்பாராட்டியிருக்கி ருர். இந்தப் புருஷகார மீமாம்ஸையில், 'பிராட்டிக்குப் புருஷ காரத்வம் உண்டேயொழிய உபாயத்வம் முதலானவை கிடையாது' என்னும் தென்ஞசார்யர்களின் ஸித்தாந்தம் நிலைநாட்டப்பட்டுள்ளது. சென்ற நூற்ருண்டிலிருந்த முனி த்ரயஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த 'ஸாக்ஷாத் ஸ்வாமி' என் பவர் இந்தப் புருஷகார மீமாம்ஸையைக் கண்டித்து எழுதிய நூலே இப்பொழுது நடைபெறும் விவாதத்திற்கு மூலகாரணமான 'ஸ்ரீதத்வஸித்தாஞ்ஜனம்' என்னும் நூலா கும். இதைக் கண்டித்து ஸ்ரீஸைலேசாசார்யர் என்பவர் புருஷகார மீமாம்ஸைக்கு ஒரு வ்யாக்யானம் எழுதினுர். இந்தப் புருஷகாரமீமாம்ஸை அதன் வ்யாக்யாநம ஆகிய வைபற்றி ஆராய்ச்சி செய்து கட்டுரை சமர்ப்பித்து, திருமதி சகுந்தலா என்னும் தேசிக ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த அம்மையார் சென்னைப்பல்கலைக்கழக வடமொழித் துறை யில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அவரது ஆராய்ச்சிக் கட்டுரையில் "இப்போது காணப்படும் புருஷகார மீமாம்ஸை பூர்வ பக்ஷம் மட்டுமே; ஸித்தாந்தத்தைச் சிலர் அழித்து விட்டார்கள்" என்று ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையில் காணப் படுவது பொருந்தாது என்று நிரூபித்துள்ளார். சென்ற நூற்ருண்டிலிருந்து அஹோபில மட ஜீயர்கள் "பிராட்டி க்கு ப்3ரஹ்மத்வம், உபாயத்வம், உபேயத்வம் முதலான எல்லாமே உண்டு" என்று கூறியும் எழுதியும் வருகிருர் கள். இந்தத் தம்முடைய கருத்தை எங்களாழ்வான்மேல் ஏறிடவேண்டுமென்றே அஹோபிலமட ஜீயர் ஒருவர் ஆஜ் ஞையிட்டு அச்சிட்ட க்ரந்தலிபிப்பதிப்பில் எங்களாழ்வானின் விஷ்ணுபுராண வ்யாக்யாநத்தில் இடைச்செருகல் எறிதல் களைச் செய்திருக்கிருர்கள் என்பது இவையனைத்தையும் காணும் நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும். ப்ரியா—மார்கழி—ஆசிரியர் கட்டுரையில், "ப்ராசீனமான ஸ்ரீகோசத்தில் உள்ள பங்க்திகளை பு3த்3தி4 பூர்வமாக நீக்கி யுள்ளார்கள். .... புத்தி பூர்வமாக இதரர்களை வஞ்சிப்

acharya.org

பதாகும்'' என்று நம்மைப்பற்றிக் கடுமையான குற்றச் சாட்டுகள் எழுதப்பட்டுள்ளன. நாம் பிறப்பதற்கு முன்பே நாகரலிபிப் பதிப்பை வெளியிட்டவர் தென்கலை வடகலைச் சர்ச்சைகளில் தொடர்பற்ற வடநாட்டுக்காரர். க்3ரந்த2லிபிப் பதிப்பை வெளியிட்டவர்கள் வடகலையாகமாறி, பிராட்டிக்கு ப்3ரஹ்மத்வம் கூறும் அஹோபில மடத்தைச் சேர்ந்தவர்கள். இந்த விபரங்கள் எதையும் குறிப்பிடாமல் நீங்களே பங்க்திகளை நீக்கிவிட்டீர்கள்' என்று நீங்கள் பொய்யாக எழுதுவது உங்கள் வாசகர்களை புத்தி பூர்வமாக வஞ்சிப்பதற்கேயாகும். எதிர்த்தலையில் வாதம் செய்பவர் யார்? என்பதையும் தெரிவிக்காமல், எவர்க்கும் எதுவும் புரியாதபடி அப்ராமாணிகமான வாதத்தைச்செய்து பிறரை ஏமாற்றுவது 'ப்ரியா'வேயொழிய ஸு'தர்சனமல்ல.

ப்ரியா — ஈஶ்வர-தைஇதழ்:— ஆசிரியர் கட்டுரை:— ''அஸ்யா: தச்ச2க்தி வஶாத் அணுத்வேऽபி தத்ரதத்ர ஸந்நித4ாநாத் ஸர்வ க3தத்வம் உக்தம்'' என்னும் வாக்யம் உண்மையென்று கொண்டாலும், ''தச்ச2க்திவஶாத் அணுத்வேऽபி'' என்று உள்ளபடியால் 'பிராட்டி தன்னுடைய சக்தியாலே அணுவாக இருக்கிருள் என்றே பொருள்படும். நீங்கள் சொல்லும் பொருள் தேருது. அந்த வாக்யம் ''அஸ்யா: அணுத்வேऽபி தச்ச2க்திவஶாத் தத்ரதத்ர ஸந்நித4ாநாத்ஸர்வ க3தத்வம் உக்தம்'' என்று இருந்தால்தான் நீங்கள் கூறும் பொருள் தேறும். ஆனல் வாக்கியம் அப்படியில்லை. ஆகையால் ''ஶக்திவஶாத் அணுத்வேऽபி தத்ரதத்ரஸந்நித4ாநாத்'' என்பது தவருனபாடம் என விளங்குகிறது. ''அணுஷ்வபி'' என்பதை, தவருக ''அணுத்வேऽபி'' என்று அச்சிட்டுள்ளார்கள் என்று தோன்றுகிறது. ''ப4க3வான் விபு4வாக இருக்கச் செய்தேயும் அணுவான ஜீவாத்மாக்களுக்குள் ஶக்திவஶாத் அந்தர்யாமியாக இருக்கிருன். பகவானைப்போல, பிராட்டியும் அந்தர்யாமியாய் இருக்கிருள்'' என்று இந்த நிர்வாஹத்தில் எங்களாழ்வான் திருவுள்ளம் பற்றியிருக்க வேண்டும்.

acharya.org

ஸாதர்சனம்:— "அணுத்வேऽபி தத்ரதத்ர ஸந்நிதா₄நாத்" [அணுவாயிருந்தபோதிலும் ஆங்காங்கு வியாபித்திருப்பதால்] என்பதே உண்மையான பாடம். இவ்விரண்டு பதங்களையும் சேர்த்துச் சொன்னால்தான் "அணுத்வேऽபி" (அணுவாயிருந்தபோதிலும்) என்ற 'அபி' ஶப்தம் ஸ்வரஸமாக அந்வயிக்கும். அதனாலேயே 'ஶக்திவஶாத்' என்னும் பதத்தை இத்தொடருக்கு முன்னால் இட்டார் எங்களாழ்வான். பொருள் கூறும் போது 'ஶக்திவஶாத் ஸந்நிதா₄நாத்' என்று கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். இதில் க்லேஶம் ஒன்றுமில்லை. சது:ச்லோகீ நாலாவது ச்லோகபா₄ஷ்யத்தில் இந்த நிர்வாஹத்ஸதயே "ஶக்தி காலவஶாத் அஸ்யா விபு₄த்வாத்₃யுபபாத₃கா:...... அக₃தீக்ருதா:" [சக்தி வசத்தாலும் காலவசத்தாலும் இப்பிராட்டிக்கு விபுத்வம் முதலானவற்றைச் சொல்லுகிறவர்கள்...தள்ளப்பட்டனர்.] என்று தேசிகன் மறுத்திருக்கிறார். இந்த நிர்வாஹத்தையே பெரியவாச்சான் பிள்ளை பரந்த ரஹஸ்யத்திலும், நாயனாராச்சான்பிள்ளை சது:ச்லோகீ வ்யாக்யானத்திலும் விரிவாக விளக்கியுள்ளார்கள். 'ஶக்த்யா ஸர்வத்ர ஸாந்நித்₄யாத் ஸர்வக₃த்வம் உதீ₃ரிதம் । இதி ஸ்ரீவிஷ்ணுசித்தார்யை: வ்யாக்₂யாதநாத்து ந ஸாத₄நம்" [47] [பொருள் 110 ம் பக்கம் பார்க்க] என்று எங்களாழ்வானுடைய இந்த ஸ்ரீஸூக்தியை ஸ்ரீவாதிகேஸரி ஜீயர் ரஹஸ்யத்ரய காரிகாவளியில் அந்வய க்ரமத்தையும் காட்டி மேற்கோளாக எடுத்திருக்கிறார். ஈட்டின் [5-6-11] அரும்பதவுரைகளிலும் பாடம் இப்படியே உள்ளது. இப்படியிருக்கும்போது அந்தப்பாடத்தை மாற்றுவதும், அதற்கு மனம் போனபடி விபரீதமாகப் பொருள் எழுதுவதும் அக்ரமமானது. இந்த வாக்யத்தை மூலத்திலிருந்தே எடுக்கும் திருப்பணியை அஹோபில மடத்தார் தங்கள் பதிப்பில் முன்பு செய்தார்கள். இவ்வாக்யத்தைத்திருத்தி அவப்பொருள்கூறும்பணியை நீங்கள் இப்போது செய்கிறீர்கள். இதை நடுநிலையாளர்கள் ஏற்கமாட்டார்கள்.

acharya.org

ப்ரியா:— தை ஆசிரியர் கட்டுரை;— ''தயோ: ஸர்வாத்மகத்வம் உபபாத₃யதி'' [பெருமாளும் பிராட்டியும் ஸர்வாத்மகர் என்பதை விளக்குகிறார்.] என்று வி-பு 1-8-18 தொடங்கி உள்ள ச்லோகங்களுக்கு எங்களாழ்வான் அவதாரிகையிட்டிருக்கையால் ஸ்த்ரீகளுக்கு அந்தர்யாமியாகப் பிராட்டி இருக்கிறாள் என்றும், புருஷர்களுக்கு அந்தர்யாமியாகப் பெருமாள் இருக்கிறார் என்றும் விளங்குகிறது. அந்தர்யாமியாக இருப்பதால்தானே அந்தந்த சப்தங்களால் சொல்லப்பட முடியும்?

ஸுதர்சனம்:— நீங்கள் இப்படிக் கூறுவதை ஒப்புக்கொண்டால், பெருமாள் பிராட்டி இருவருமே ஸர்வாந்தர்யாமியல்ல; இருவரும் முறையே புருஷர்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் அந்தர்யாமி என்று ஆகிவிடும். ''ஏஷஸர்வபூ₄தாந்தராத்மா......தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:'' [ஸு பா₃ல] [பரமபதத்திலிருக்கும் நாராயணன் ஒருவனே எல்லாத்தத்வங்களுக்கும் அந்தர்யாமி] முதலான பல வேத வாக்கியங்களில் நாராயணன் ஒருவனையே பிராட்டி உள்ளிட்ட எல்லாத்தத்துவங்களுக்கும் அந்தர்யாமி என்று முழங்குவதோடு முரண்படும். இந்த முரண்பாட்டைத் தவிர்க்கவே ஸ்ரீராமாநுஜசிஷ்யரான எங்களாழ்வான் தம் வி-பு 1-8-35 வ்யாக்யானத்தில் ''தத்ர தத்ர அபி₄முக்₂யாதிஶய விஶேஷாத் அர்த்த₂ வாண்யாதீ₃நாம் தத₃ாத்மகத்வம் உக்தம்'' [புருஷர்களிடம் எம்பெருமானுக்கு அபி₄மானம் அதிகமாகையாலும் ஸ்த்ரீகளிடம் பிராட்டிக்கு அபிமானம் அதிகமாகையாலும் அர்த்தம் வாணி முதலானவை முறையே எம்பெருமானாகவும் பிராட்டியாகவும் சொல்லப்பட்டன] என்றுஇங்கு புருஷர்களை எம்பெருமானாகவும் ஸ்த்ரீகளைப்பிராட்டியாகவும் கூறியிருப்பதற்குக் காரணம் ஶரீரஶரீரிபா₄வமல்ல, அபிமானமிகுதியே என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆகையால் இந்த ஸ்ரீஸூக்திகள் தி₃வ்யத₃ம்பதிகளின் அபி₄மானத்தைப் பற்றிப் பேசுகின்றனவேயொழிய அவர்கள் அந்தர்யாமியாய் இருப்பதைப்பற்றிப் பேசவில்லை என்பது நடு

acharya.org

நிலையாளருக்கு நன்கு விளங்கும். எங்களாழ்வான் வி-பு 1-8-35 ச்லோகத்தில் 'அநயோ:' என்னும் ஆறாவது வேற்றுமையை, ''ஆப்₄யாம்'' என்னும் ஐந்தாவது வேற்றுமையாக மாற்றிப் பொருள் கொள்வதன் மூலம் 'இவர்களுக்கிடையே எந்த வேறுபாடும் இல்லை' என்னும் உங்கள் மயக்கத்தைத் தீர்த்திருக்கிறார் என்பதை முன்னமே காட்டியிருக்கிறோம். அதையொட்டிவரும் 'ஸர்வஸ்ய உப₄யாத்மகத்வே(அ)பி தத்ரதத்ர ஆபி₄முக்₂ய அதிஶய விஶேஷாத் அர்த்த₂ வாண்யாதீ₃நாம் தது₃ாத்மகத்வம் உக்தம்'' என்னும் வாக்யத்தில் ''பெருமாள் பிராட்டி இருவருக்கும் எல்லாஜீவர்களிடமும் அபி₄மானம் இருந்தபோதிலும் பெருமானுக்குப் புருஷர்களிடமும், பிராட்டிக்கு ஸ்த்ரீகளிடமும் அபி₄மானம் அதிகமாயிருப்பதால் இப்படிச் சொல்லப்பட்டது'' என்று எங்களாழ்வான் அருளியிருப்பது தெளிவாக விளங்குகிறது. இருவரும் அனைத்துத்தத்துவங்களுக்கும் அந்தர்யாமி என்று சொல்லுவதற்கு இந்த ப்ரகரணத்தில் இடமேயில்லை.

ப்ரியா:— தை—ஆசிரியர் கட்டுரை:— பல நூறு வருஷங்களாக நடந்து வரும் விவாதந்தான் இது இப்பொழுது புதிதாக எழுதுவதைப் போல் எழுதுகிறீர்கள்.

ஸுதர்சனம்:— இந்தக்கூற்று தவறு. பலநூறு வருடங்களாகத் தென்னசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வான்கள், 'பிராட்டி அணுஸ்வரூபை- ஜீவகோடியில் சேர்ந்தவள்' என்னும் முதல் பக்ஷத்தை ப்ரமாணம் காட்டி ஸ்தாபித்து வந்தார்கள். சுமார் இருநூறு வருடங்களாக தேசிக ஸம்ப்ரதாயத்திலுள்ள வித்வான்கள் தேசிகன் தாம் காட்டிய ஐந்தாவது பக்ஷத்தையே தழுவியவர் என்பதற்குப் பல யுக்திகளைக் காட்டி எழுதிவந்தார்கள். நாம் தேசிகனுடைய திருவுள்ளத்தையும் தென்னசார்யர்களுடைய திருவுள்ளத்தையும். இரு ஸம்ப்ரதாயங்களும் எந்த வகையில் வேறுபட்டு நிற்கின்றன என்பதையும் கீதாவ்யாக்யானம் முதலானவற்றில் நீண்ட நாட்களாக எடுத்துக்காட்டி வருகிறோம். அந்தந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள்

acharya.org

அந்தந்த ஆசார்யர்களின் திருவுள்ளத்தையே பின்பற்றிக் கொண்டு மற்ற ஸம்ப்ரதாயத்தினருடன் சகிப்புத்தன்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் 'காஞ்சிப்பேரருளாளன்' பத்திரிகையில் மதுராந்தகஸ்வாமி ஜாமாதாவான ஸ்ரீ உ வே ந. வரதாசார்ய ஸ்வாமி மூன்று வருடங்களுக்கு முன், ''பெருமாளும் பிராட்டியும் எல்லாவகையிலும் துல்யமான ஈச்வரர்களே. பிராட்டி ஸ்வாதந்த்ரியமே வடிவெடுத்தவள், அவள் பரதந்த்ரையாக நடந்துகொள்வது வேஷம் போடுவதே. தேசிகன் திருவுள்ளம்பற்றிய இந்த ஐந்தாவதுபக்ஷத்தையே பட்டர் நஞ்ஜீயர் முதலான எல்லா ஆசார்யர்களும் சொல்லியிருக்கிறார்கள்'' என்று எழுதினர். அதற்குமேல் நாம் 'விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்' என்னும் கட்டுரையை எழுதி, தேசிகனுடைய பலபல ஸ்ரீஸூக்திகளை எடுத்துக் காட்டி ''அவர் தாம் காட்டிய நாலாவது பக்ஷத்தையே தழுவியவர். ஐந்தாவது பக்ஷத்தை உண்மையில் அவர் ஆதரிக்கவில்லை. மாறாக அதைக் கண்டித்திருக்கிறார்'' என்று நிரூபித்து ஸுதர்சனத்திலும் வெளியிட்டு, காஞ்சிப் பேரருளாளன் பத்திரிகைக்கும் பல தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களுக்கும் அதை அனுப்பினோம். இன்று வரை 'காஞ்சிப் பேரருளாளன்' பத்திரிகையிடமிருந்து எந்த பதிலுமில்லை. இந்த அடிப்படையில் இரு ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் திருவுள்ளங்களை நிஷ்கர்ஷித்து 'பட்டர், நஞ்ஜீயர் முதலான தென்னாசார்யர்களும் ஐந்தாவது பக்ஷத்தையே ஸாதித்தார்கள்' என்று வம்புக்கு இழுக்காமல் இருஸம்ப்ரதாயஸ்தர்களும் ஒற்றுமையுடன் வாழலாம் என்னும் நல்லெண்ணத்தாலேயே வர்த்தமான ஸ்ரீமதழகிய சிங்கரிடம் ஸ்ரீரங்கத்திலும் மதுராந்தகத்திலும் நடைபெற்ற வித்வத் ஸதஸ்களில் இது விஷயமாக நிர்ணயம் செய்யும்படி அவருடைய அனுமதியைப் பெற்றுப்பிரார்த்தித்தோம். ஸ்ரீரங்கம் ஸதஸ்ஸில் வித்வான்களை நிர்ணயிக்கும்படி நியமித்த ஸ்ரீமதழகியசிங்கர், மதுராந்தகம் ஸதஸ்ஸில் 'இவருக்கு சாஸ்திர ஞானம் கிடையாதாகையாலே வித்வான்கள் ஒருவ

ரும் இவருக்கு பதில் எழுதாதீர்கள்' என்று கடுஞ்சொற்களைப்பேசி, 'இத்தகைய விவாத விஷயங்களை இனி ஸதஸ்ஸில் பேசக்கூடாது' என்று அடியேனையும் நியமித்தார். அடியேனும் 'பேசுவதில்லை' எனஒப்புக்கொண்டேன். ஆயினும் விசிஷ்டாத்வைதத்தை ரக்ஷிப்பதற்கு இதில் நிர்ணயம் அவசியமாகையாலே ஸுதர்சனர்-பதில்— பன்னிரண்டாவது சதகத்தின் முன்னுரையில் இதுபற்றி விளக்கிக் குறிப்பிட்டோம். அதற்கு மேல் நா. வரதாசார்யர் 'யதார்த்த விசிஷ்டாத்வைத ஸித்₃த₄ாஞ்ஜனம்' என்னும் நூலை வெளியிட்டு நமக்கும் அனுப்பினார். அதன் மேல் நாம் 26 விஷயங்களைக் குறிப்பிட்டு நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரியிருந்தோம், தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் உள்ளிட்ட பலர் தீர்ப்புகளை வழங்கினர்; இந்நிலையில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இந்த விவாதத்தில் நுழைந்தது. 'ஸ்ரீமதழகிய சிங்கரே ஸ்ரீதத்வதீபிகையில் பதிலெழுதப்போகிறார்' என்று அறிவித்தது. ஆகையால் நாமாக எவரையும் இந்த விவாதத்தில் வம்புக்கு இழுக்கவில்லை. தேசிகன் நாலாவது பக்ஷத்தையே ஏற்றுக்கொண்டார் என்னும் நமது நிரூபணத்தை தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த அறிவாளிகள் பலர் ஏற்றுக்கொண்டு ப்ரமாணங்களைக் காட்டிக் கட்டுரைகளை எழுதி வருவதைக்கண்டு இவ்விஷயத்தில் ஸம்ப்ரதாய ஒற்றுமைக்கு வழிபிறந்தது என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் உவகையடைந்தார்கள். காட்டப்பட்ட பலபல தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கு எந்த பதிலையும் எழுதாமல் வசவுமாரியிலும் விதண்டாவாதங்களிலும் இழிந்துவிட்டீர்கள் நீங்கள். இது உங்களது படுதோல்வியையும், 'உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் இவ்விஷயத்தில் சகிப்புத்தன்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழக்கூடாது' என்னும் உங்கள் எண்ணத்தையும் வெளிப்படையாகக் காட்டுகிறது.

acharya.org

ப்ரியா:— ஈச்வர—கார்த்திகை—மார்கழி—ஸ்ரீதத்வ தீபிகை:-(1) யுக்திகளைக்காட்டாமல், விளக்கமும் இல்லாமல் "ஸ்ரீகீதையின் அவதாரிகாபாஷ்யத்தின் தாத்பர்யசந்த்ரிகையில் ஐந்தாவது பக்ஷத்தை ஸ்வாமிஸ்ரீதேசிகன்கண்டித்திருக்கிறார்" என்று நீங்கள் எழுதுவதுதவறு. தாத்பர்யசந்த்ரிகையில் உள்ள ஸ்ரீஸூக்திகள் இந்த ஐந்தாவது பக்ஷத்திற்கே அனுகூலங்கள் என்பதை எட்டு பக்கங்களில் ஸ்ரீதத்வ தீபிகையில் விளக்கியிருக்கிறோம்.

(2) இந்த ஐந்தாவது பக்ஷம் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் உகந்தது என்பது மட்டுமன்று; பட்டரும் உகந்ததாகும். அதாவது—

அநந்யாதீ,ந கல்யாணப அந்ய மங்களகாரணம் ।
ஜகந்நிதாநம் அத்வந்த்வம் த்வந்த்வம் வந்தாமஹே மஹ:॥

என்னும் ச்லோகத்தில் பட்டர் பெருமாள் பிராட்டி இருவரும் துல்யமான ஜகத்காரணபூதர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

(3) "ஆநீதவாதம் ஸ்வதயா ததேகம்" என்ற ச்ருதியில் பிராட்டிக்கும் ஜகத்காரணத்வம் உண்டு என்று கூறப்படுகிறது.

(4) "ச்ரத்தயா தேவோ தேவத்வம் அச்நுதே" என்னும் ச்ருதி "பிராட்டியுடன் கூட இருந்துகொண்டு எம்பெருமான் ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் ரக்ஷித்தல் ஸம்ஹரித்தல் முதலான விளையாடல்களைச் செய்கிறான்" என்று கூறுகிறது.

(5) அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் எட்டாவது அத்தியாயத்தில்

ஏகதா ச த்விதா சைவ தைஸ்தை: ச்ருத்யபதி, பாரகை:।
வ்யபதிச்யாவஹே சாஸ்த்ரே தாவாவாம் ஸர்வகாரணம்॥

acharya.org

[கடல்போல் விரிந்து கிடக்கும் ஶ்ருதிகளின் கரையைக் கண்ட மஹான்கள் — அதாவது பலவகைப்பட்ட ஶ்ருதிகளின் பொருள்களை நன்கு அறிந்துள்ள மஹான்கள், என்னையும் (எம்பெருமானையும்), பிராட்டியையும் ஒன்றாகவும் கூறு வார்கள். பிரித்தும் தனித்தனியே கூறுவார்கள். இப்படி ஒன்றாகவும் வேறாகவும் கூறப்படும் நாங்கள் இருவருமே ஸர்வ ஜகத்துக்கும் காரணம் ஆகிறோம்] என்று இருவ ருக்கும் ஜக₃த்காரணத்வம் கூறப்படுகிறது.

ஸுதர்சனம்:— (1) கீ₃தையின் அவதாரிகா பா₄ஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையில் தே₃சிகன் ஐந்தாவது பக்ஷத்தைக் கண்டித்திருக்கிறார் என்பதற்கு நாம் யுக்திகளைக் காட்டா மல் விளக்கமும் இல்லாமல் எழுதியிருக்கிறோம் என்று நீங்கள் எழுதியுள்ளது முழுப்பொய். இந்த விவாதம் தொடங்கும்போது நாம் வித்வான்களின் மநஸ்ஸாக்ஷி யைக் குறித்துக் கேட்ட எட்டு கேள்விகளில் முதல் கேள்வி யிலேயே ஒரு பக்கத்திற்கு மேல் அச்சிட்டு இதை விளக்கி யிருக்கிறோம். சமீபகாலத்தில் ''விசிஷ்டாத்₃வைதமா? விசிஷ்டத்₃வைதமா?'' என்னும் தலைப்பில் நடுநிலையாளர் களின் தீர்ப்பைக்கோரி 26 விஷயங்களைக் குறித்து நாம் எழுதியிருந்த கட்டுரையில் பதினைந்தாவது பாராவில் இதை மேலும் விரிவாக விளக்கியிருக்கிறோம். உண்மை யில் நீங்களே நாலாவது பக்ஷம் என்ன? ஐந்தாவது பக்ஷம் என்ன? இவ்விரு பக்ஷங்களுக்குமுள்ள வேறுபாடு கள் என்ன? என்பதைத் தெளிவாகக் காட்டாமல் உங்கள் பதிலில் 'ஐந்தாவது பக்ஷத்தையே தேசிகன் தழுவியிருக்கி றார்' என்று திருப்பித்திருப்பி எழுதியிருக்கிறீர்கள். தேசி கன் நாலாவது பக்ஷத்திலேயே, ''அதஏவ நரஸம்ப₃ந்தி₄நோ நாரா இதி நாரஶப்₃த₃ார்த்த₂த்வேऽப்யஸ்யா: பதிவத் ததி₃ச்சா₂ யத்தம் ப்ரதா₄ந ப்ராப்யத்வாதி₃கம் அவிருத்₃த₄ம்'' [அத னாலேயே, ''நரஸம்ப₃ந்தி₄நோ நாரா:'' என்னும் வ்யுத்பத்தி யாலே பரமபுருஷனுடைய ப்ரகாரங்களைக்குறிக்கும். ''நார''

acharya.org

ஶப்₃த₃த்திற்கு இப்பிராட்டி பொருளாயிருந்தபோதி லும், பதியின் இச்சையினுல் இவளுக்கும் ப்ரத₄ாநப்ராப் யத்வம் ஶேஷித்வம் ஶரண்யத்வம் முதலானவற்றை ஒப்புக்கொள்வதில் முரண்பாடில்லே.] என்று பிராட்டிக்கு ப்ரத₄ாநப்ராப்யத்வ ஶேஷித்வ ஶரண்யத்வங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதைக் காட்டுகிருர். ஆனுல் அது பரம புருஷனின் நித்யஸங்கல்பத்தாலே ஏற்பட்டது என்று நாலா வது பக்ஷத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும் காட்டு கிருர். ஐந்தாவது பக்ஷத்தில் "பெருமாள் ஸர்வ பூ₄தங் களுக்கும் ஈஶ்வரன் என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருப் பதுபோலே பிராட்டியும் ஸர்வபூ₄தங்களுக்கும் ஈஶ்வரி என்று சொல்லப்பட்டிருக்கையால் பிராட்டி பெருமாளுக்கு ஶேஷபூ₄தையாயிருப்பது இருவர் விருப்பத்தாலும் விளேந் தது" என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறுகிருர். ஆகையால், இரண்டுபக்ஷங்களுக்கும் வித்தியாசம் இவ் வளவே:— "இயல்பாகவே எம்பெருமானுக்கு ஶேஷபூ₄தை யான பிராட்டிக்கு எம்பெருமானுடைய நித்யஸங்கல்பத் தாலேயே ப்ரத₄ாந ப்ராப்யத்வ ஶேஷித்வ ஶரண்யத்வங்கள் உண்டு" என்பது நாலாவது பக்ஷம். "வேதம் இருவரை யுமே ஸர்வபூ₄தங்களேயும நியமிப்பவர்களாகக் கூறுகை யால் இருவருமே ப்ரத₄ாந ப்ராப்யத்வாதிகளே உடைய முக்யேஶ்வரர்கள். பிராட்டி பெருமாளுக்கு ஶேஷபூதை யாக இருப்பது இருவர் விருப்பத்தாலும் விளேந்தது; எம பெருமான் ஒருவனுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டதன்று" என்பதே ஐந்தாவது பக்ஷம். இதைப் புரிந்துகொண்டு கீ₃தாப₄ாஷ்ய தாத்பர்யசந்த்₃ரிகையைப் பார்க்கவேண்டும். "அநவதி₄காதிஶயத்வ ஸௌந்த₃ர்ய ஈஶ்வரைவ்யதிரிக்த—அஶேஷ கே₃ாசரஸ்யாபி ததை₃ஶ்வர்யஸ்ய ஈஶ்வராபி₄மதத்வாத் ந தீ₃வைராஜ்யாதி₃தே₃ாஷ:|" [பிராட்டியின் கல்யாணகு₃ணங்கள் எல்லேயற்ற மேன்மையை உடையவை என்று கூறியதால், ஈஶ்வரனேத் தவிர்ந்த மற்ற அனேவரையும் நியமிக்கவல்ல

acharya.org

இவளுடைய நியமன ஸாமர்த்₂யம் ஈஶ்வரனுக்கு இஷ்டமா கையாலே 'இரண்டு ஈஶ்வரர்கள்' முதலான தோஷமில்லை;] என்பது தாத்பர்ய சந்த்₃ரிகையில் முதல் வாக்யம். ''ஈஶ்வரன் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல இவளுடைய நியமன ஸாமர்த்யம் ஈஶ்வரனுக்கு இஷ்டமாகையால் இரண்டு ஈஶ்வரர்கள் முதலான தோஷமில்லை. ஈஶ்வரன் விருப்பத்தாலேயே இவளுக்கு ஸர்வசேதந நியமன ஸாமர்த்₂யம் ஏற்பட்டது'' என்னும் நாலாவது பக்ஷத்திற்கே இது பொருந்தும். ஐந்தாவது பக்ஷத்தை தேஶிகன் தழுவியிருந்தால், ''இருவரையும் ஶ்ருதி ஸர்வபூ₄தேஶ்வரராக ஒக்கக்கூறுகையால் இவளுடைய நியமன ஸாமர்த்₂யம்உப₄ய இச்சா₂ ஸித்₃த₄மாகையாலே (இருவருடைய விருப்பத்தாலும் ஏற்பட்டதாகையாலே) இரண்டு ஈஶ்வரர்கள் என்னும் தோஷமில்லை'' என்றே அவர் அருளியிருக்கவேண்டும். 'ஈஶ்வரனுடைய பத்தினியாயிருப்பதாலேயே இவளுக்கு ஸர்வ ஜக₃ந்நியமனம் விளைந்தது' என்பதை அடுத்த வாக்கியத்தில் ''அஸ்யேஶானா ஜக₃தோ விஷ்ணு பத்நீ இதி விஷ்ணு பத்நீத்வ வேஷேண ஹி ஸர்வஸ்ய ஜக₃த இயம் ஈஷ்டே'' [''விஷ்ணுவுக்குப் பத்நியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈஶ்வரியாயிருக்கிறாள்'' என்னும் வேதவாக்கியத்தின்படி விஷ்ணுவுக்குப் பத்னியாயிருப்பதாலன்றோ இவள் அனைத்துலகையும் நியமிக்கிறாள்.] என்று வேதத்தை ப்ரமாணமாகக்காட்டி தேசிகன் நிரூபிக்கிறார். இனிமேல் ஐந்தாவது பக்ஷக்காரர்களுடைய வாதத்தை அடுத்த வாக்கியத்தில் கண்டிக்கிறார் தேசிகன்- ஐந்தாவது பக்ஷக்காரர்கள் சொல்லுவதாவது:— '' 'ஈஶ்வர: ஸர்வபூ₄தாநாம்' என்று எம்பெருமானைச் சொல்லுவதுபோலே 'ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்' என்று பிராட்டியையும் ஶ்ருதி சொல்லுகையாலே இருவரும் துல்யமான ஈஶ்வரத்வம் உடையவர்களே. ஸ்ரீ ஸூக்தத்தில் 'ஸர்வபூ₄தாநாம்ஈஶ்வரீ' என்றுவ்யஸ்தபத₃மாகவே உள்ளது. 'ஸர்வபூ₄தேஶ்வரீ' என்று ஸமஸ்த

acharya.org

பதமாக இல்லை; அப்படி ஸமஸ்தபதமாயிருந்திருந்தால், 'ஸர்வபூதேஶ்வரனுடைய பத்தினி இவள்' என்று பொருள் கொண்டு, 'இவளுடைய ஈஶ்வரத்வம் ஈஶ்வர பத்தினியாயிருப்பதால் உண்டானதேயொழிய இயல்வானதல்ல' என்று கொண்டு விடலாம். ஸர்வபூ,தங்களுக்கும் ஈஶ்வரீ என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச் சொல்லியிருப்பதால் 'ஈஶ்வர பத்நீ' என்று பொருள் கொள்ளமுடியாது. ஆகையால் 'ஈஶ்வர: ஸர்வபூ,தாநாம்', 'ஈஶ்வரீம் ஸர்வபூ,தாநாம்' என்னும் இரு வாக்கியங்களிலிருந்தும் 'இருவரும் துல்யமான ஈஶ்வரத்வம் உடையவர்களே' என்று தேறுகிறது. இருவரும் சேர்ந்து தங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு எம்பெருமான் சேஷியாகவும், பிராட்டி சேஷபூ,தையாகவும் நடந்துகொள்கிறார்கள்'' என்பது ஐந்தாவது பக்ஷம். இந்தப்பக்ஷத்தவர்களுடைய முக்கியமான வாதப்— ''ஸர்வபூ,தாநாம் ஈஶ்வரீ' என்று வ்யஸ்தபதங்களாலே பிரித்துச் சொல்லியிருக்கையால், ஸர்வபூதேஶ்வர பத்நீ என்று பொருள்கொள்ள முடியாதாகையால் இருவரும் துல்யமான ஈஶ்வரத்வம் உடையவர்களே'' என்பது. இந்த ஐந்தாம் பக்ஷத்தையே ஸ்ரீ தேசிகன் ''ஈஶ்வரீம் ஸர்வபூ,தாநாம் இத்யத்ர து யத்₃யபி ஸர்வபூ,தாநாம் இதி ப்ரதிஸம்ப₃ந்தி₄ நிர்தே₃ஶாத் ஸ்த்ரீ ப்ரத்யயாநுஸாரேண ஈஶ்வர பத்நீதி விவக்ஷா ந ஶக்யா தத₂ாऽபி வாக்யாந்தர ப₃லாத் அர்த்த₂ஸ்ய தத₂ாத்வ ஸித்₃தி₄:'' [''ஸர்வ பூ₄தங்களுக்கும் ஈஶ்வரி'' என்னும் ஸ்ரீஸூக்த வாக்கியத்தில் (யாருக்கு ஈஶ்வரி என்னும் கேள்வியெழ) ஸர்வ பூ₄தங்களுக்கும் என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச்சொல்லியிருப்பதால், ஈஶ்வரபத்நீ என்று பொருள் கொள்ள முடியாது என்பது உண்மையானாலும், ''முன் எடுத்த (அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணு பத்நீ எனும்) வாக்கியத்தின் ப₃லத்தாலே இவ்வாக்யத்திலும் விஷ்ணுபத்நியாயிருப்பதாலேயே இவள் ஈஶ்வரியாகிறாள் என்றுகொள்ளவேண்டும்]

acharya.org

என்னும் கடைசிவாக்கியத்தில் கண்டித்திருக்கிறார் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. 'தேசிகன் ஐந்தாவது பக்ஷத்தையே தழுவியவர்' என்று நீங்கள் ஸாதிக்க விரும்பினால் 'ஸர்வபூ₄தேஶ்வரத்வம் ஶ்ருதியில் இருவருக்கும் சொல்லப்பட்டிருப்பதால் இருவரும் துல்யமான ஈஶ்வரர்களே' என்று அவர் தம் நூல்களில் ஸாதித்திருப்பதைக் காட்டவேண்டும். 'பிராட்டியின் ஶேஷத்வம் உபா₄ய இச்சா₂ஸித்₃த₄மே' என்று தம் நூல்களில் அவர் ஸாதித்திருப்பதையும் காட்டவேண்டும். உண்மையில் இவ்விரண்டு விஷயங்களையும் தேசிகன் எங்குமே ஸாதிக்கவில்லையாகையால் உங்களால் அப்படிக்காட்டமுடியாது. நேர் மாருக ஸம்வாதம் 88, 89 பக்கங்களில் காட்டியுள்ள சது:ஶ்லோகீ பா₄ஷ்யபங்க்திகளிலும், 81, 82 பக்கங்களில் உள்ள அச்யுத சதக ச்லோகத்திலும் நாலாவது பக்ஷத்தை அனுஸரித்து 'பிராட்டி எம்பெருமானுக்கு உடைமை' என்றும், 'ஏகோ ந ஈஶ்வரத்வமே அவனுக்கு உள்ளது' என்றுமே தம் ஸித்தாந்தத்தைக் காட்டியுள்ளார் ஸ்ரீதேசிகன் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

தீபிகையில் தாத்பர்ய சந்த்₃ரிகா வாக்கியங்களை விளக்கும்போது இரண்டாவது வாக்கியத்தில் "விஷ்ணு பத்நீத்வ வேஷேண" [பக்கம் 151] என்று முதலில் எடுத்துவிட்டு, பிறகு 153, 154 பக்கங்களில் பலமுறை "பத்நீத்வ விஶிஷ்ட வேஷேண" என்று "விஶிஷ்ட" பதத்தைச் சேர்த்து எடுக்கப்பட்டுள்ளது. இது தேவையற்ற சேர்க்கை; "விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருப்பதால் அன்றோ பிராட்டி அனைத்துலகையும் நியமிக்கிருள்" என்று நாம் கூறும் பொருளையே ஏற்றுக்கொண்டு, இது ஐந்தாவது பக்ஷத்திற்கு பூ₃ாத₄கமாகாது என்று எழுதுகிறீர்கள். "ஐந்தாவதுபக்ஷம் என்ன? நான்காவது பக்ஷம் என்ன? இரண்டுக்கும் வித்தியாசமென்ன" என்பதைத் தெளிவாக விளக்காமலே இப்படி எழுதுவது முறையற்றது. இரு பக்ஷங்களையும்

acharya.org

தெளிவாக விளக்கி, இந்த தேசிக ஸ்ரீஸூக்தி ஐந்தாவது பக்ஷத்திற்குக் கண்டனமே என்று மிகத்தெளிவாக விளக்கி விட்டோம். மேலும் தீபிகையில் (பக்கம் 155, 156) ''விஷ்ணு பத்னியாக அதாவது விஷ்ணுவுக்குப் பரதந்த்ரையாக. அதீநையாக இருந்துகொண்டேதான் 'அஸ்ய ஜகத: ஈஶாநா' இந்த உலகுக்கு ஈஶ்வரீ ஆகிருள்'' என்று பிராட்டிக்கு ப்ரகாஶவத்பாரதந்த்ரியத்தை ஒப்புக்கொண்டுள்ளீர்கள். பாரதந்த்ர்யத்தை ஒப்புக்கொண்டால் 'நிரதிஶய ப்ருஹத்தவம்' (தனக்குமேல்ஒன்றில்லாமை) ஆகிறபரப்ரஹ்மத்வம் பிராட்டிக்கு எப்படி ஸித்திக்கும்? ஆகையால் உங்கள் வார்த்தைப்படியே பிராட்டிக்கு பரப்ரஹ்மத்வமோ எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்வமோ கிடையாது என்றும், எம்பெருமானுடைய நித்ய ஸங்கல்பத்தால் உண்டான ஏகோந ஈஶ்வரத்வமே உண்டென்றும்தெளிவாகவிளங்குகிறதே; பிராட்டிக்குப் பாரதந்த்ர்யத்தை நீங்கள் இசைவதானுல், இந்த விவாதத்தை மேலே தொடராமல் நிறுத்தி விடலாமே.

மேலும், உடையவர் ஶரணாகதிகத்யத்தில் முதல் சூர்ணையில்''அநவதிகாதிஶய அஸங்க்யேயகல்யாணகுணகண'' என்று பிராட்டியின் கல்யாண குணங்கள் 'அநவதிகாதிஶயம்' (தனக்கு மேலில்லாதது) என்று அருளிவிட்டு, ஐந்தாவது சூர்ணையில் ''ஸ்வாபாவிக அநவதிகாதிஶய ஜ்ஞாந பல ஐஶ்வர்ய'' என்று எம்பெருமானுடைய குணங்களைச் சொல்லும்போது 'அநவதிகாதிஶய' என்னும் விசேஷணத்தோடு 'ஸ்வாபாவிக' என்னும் விசேஷணத்தையும் சேர்த்து அருளியிருக்கையால், 'எம்பெருமானுடைய குணங்கள் அநவதிகாதிஶயமாய் இருப்பது ஸ்வாபாவிகமானது (இயல்வானது); பிராட்டியின் குணங்கள் அநவதிகாதிஶயமாயிருப்பது எம்பெருமானுடைய நித்ய ஸங்கல்பத்தால் ஏற்பட்டது' என்று தெளிவாக விளங்குகிறதே.. ''இருவருக்கும் 'அநவதிகாதிஶய' என்னும்

acharya.org

விசேஷணத்தை ஒக்க இட்டிருக்கையாலும், பெரியவாச்சான் பிள்ளையும் இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியாக உரையிட்டிருக்கையாலும் இருவருக்கும் துல்யமான ஈஶ்வரத்வம் உண்டு'' என்று வாதம் செய்கிறீர்கள். இப்படிப் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அத்யந்தஸாம்யம் போலே சொல்லுமிடங்களில், இவளுடைய பத்நீத்வம் முதலானவற்றோடு முரண்படாதபடி அந்த ஸாம்யத்தைக் குறுக்கிக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீதேசிகனே சது:ச்லோகீ இரண்டாவது ஶ்லோகபாஷ்யத்தில் ஶ்லோகமிட்டு நிர்ணயித்திருப்பதை ஸம்வாதம் 96 ம் பக்கத்தில் காட்டியிருக்கிறோம். இந்த பாஷ்யத்திலேயே முக்தர்களுக்கு முக்ய ஜகத்காரணத்வம் இல்லாததுபோலே, பிராட்டி விஷயத்திலும் கிடையாது என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்திருப்பதை ஸம்வாதம் 85 ம் பக்கத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். அதுபோலவே கத்ய பாஷ்யத்திலும்—''அநவதிகாதிஶய'' என்று எம்பெருமானார் பிராட்டியின் கல்யாண குணங்களுக்கு விசேஷணமிடுமிடத்தில்,

''ஜ்ஞாநபோகஸமாநத்வே நித்யமுக்தேஶ்வரேஷு ச ।
யதா வைஷம்ய நியதிஸ் ததைவாத்ரேத்யநாவிலம் ॥''

[நித்ய முக்தர்களுக்கும் ஈஶ்வரனுக்கும் ஜ்ஞானமும் போகமும் ஒத்தவை என்று ப்ரமாணங்கள் முழங்கிய போதிலும், உலகிற்கு மூவகைக்காரணமாயிருக்கைமுதலானவை ஈஶ்வரனுக்கே உண்டு என்று (ப்ரஹ்மஸூத்ரத்தில்) எப்படி நிலைநிறுத்தப்படுகிறதோ, அப்படியே பெருமாள் பிராட்டி விஷயத்திலும் வேறுபாடு நிலைநிறுத்தப்படவேண்டுமாகையாலே குறையில்லை] என்று இவ்விஷயத்தை மிகத்தெளிவாகக் காட்டியுள்ளார் தேசிகன். ஆகையால் 'அநவதிகாதிஶய' என்னும் விசேஷணம் ஒத்திருப்பதைக்கொண்டு இருவரும் துல்யமான ஈஶ்வரர்கள் என்று நீங்கள் வாதம்செய்வது அடியோடு பொருந்தாது. தேஶிகனின் திருவுள்ளத்திற்கே உங்களுடைய வாதம் அத்யந்த விருத்தமாகும்.

acharya.org

(2) 'மேலும் இந்த ஐந்தாவது பக்ஷம் ஸ்ரீதேசிகன் உகந்தது என்பது மட்டுமன்று. பட்டரும் உகந்ததாகும்' என்று தொடங்கி, 'அநந்யாதீ₄ந கல்யாணம்' என்று தொடங்கும் ப₄ட்டருடைய லக்ஷ்மீகல்யாண மங்க₃ள ச்லோகத்தை ப்ரமாணமாக எடுக்கிறீர்கள். ''விசிஷ்டாத்₃வைதமா? விசிஷ்டத்₃வைதமா?'' என்னும் எமது கட்டுரையில் 23ம் பக்கம் 19வது பாராவில் இந்த ச்லோகம் அச்சிடப் பெற்று, 'இது பிராட்டிக்கு முக்₂ய ஜக₃த்காரணத்வத்தை நிரூபிக்காது; அப்ரதா₄ந ஜக₃த்காரணத்வத்தையேகாட்டும்' என்று அசைக்கமுடியாதபடி நிர்ணயித்துள்ளோம். இந்த ச்லோகத்தைக்கொண்டு பிராட்டிக்கு முக்₂ய ஜக₃த்காரணத்வத்தை ஸாதிக்க எண்ணினீர்களேயானால், ப₄ட்டருடைய 'ப்ரளய ஸமய ஸுப்தம்' என்னும் ஸ்ரீரங்கராஜஸ்தவ [2-44] ச்லோகத்திற்கும் ''ஶ்ரியை ஸமஸ்த'' என்று தொடங்கும் ஸ்ரீகுணரத்னகோஶ ப்ரதம ச்லோகத்திற்கும் முரண்பாடு விளையும் என்பதை அக்கட்டுரையில் 9, 10 பக்கங்களில் 10வது பாராவில் நிரூபித்திருக்கிறோம். பல மாதங்களுக்கு முன் வெளிவந்த இவையனைத்தையும் கண்டிருந்தும் அவற்றுக்கு எந்தஸமாதானமும் சொல்ல இயலாமல், அடிபட்டுப்போன வாதத்தைத் திருப்பித்திருப்பி எழுதுவது மநஸ்ஸாக்ஷியை மீறிய, அப்ராமாணிகமான செயலாகும். மேலும் 'தேசிகன் தழுவியது நாலாவது பக்ஷமே' என்று அவருடைய பல ஸூக்திகளைக் கொண்டே நாம் நிலைநாட்டுவதைக்கண்டு, ''உங்கள் ஸித்தாந்தம் உங்களுக்குத் தெரியாது. இதுதான் உங்கள் ஸித்தாந்தம்'' என்று நாம் கலஹத்தை விளைப்பதாகக் குற்றம் கூறும் நீங்கள் ''ப₄ட்டர் நஞ்ஜீயர் நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை முதலான ஆசார்யர்கள் எங்கள் ஸித்தாந்தத்தையே ஆதரித்துள்ளார்கள், உங்கள் ஸித்தாந்தத்தையல்ல'' என்று எங்களைக் குறித்து நெடுங்காலமாகச் சொல்லிவருவது எப்படி நியாயமாகும்? ஸூப₄க₃ா பி₄க்ஷுகந்யாயமும், 'மாமியார் உடைத்

தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்' என்னும் தமிழ்ப்பழமொழியும் இங்கு நினைவு கூரத்தக்கது.

(3, 4) "ஆநீத₃வாதம்" "ஶரத்₃த₄யாதே₃வ:" என்னும் வேதவாக்கியங்களை ப்ரமாணமாகக் காட்டி நீங்கள் செய்யும் வாதங்கள் மிகவும் பொருந்தாதவையென்றும், தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கே முரண்பட்டவையென்றும் ஸம்வாதம் பக்கம் 91 முதல் 95 ஈருக [ஸுதர்சனம் 601] மிக விரிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

(5) அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் எட்டாவது அத்தியாயத்தில் உள்ளதாக நீங்கள் குறிப்பிட்டுள்ள ச்லோகம் அதில் இல்லவே இல்லை. 1916 ல் அடையார் லைப்ரரி வெளியிட்ட பதிப்பில் பார்த்துக் கொள்ளலாம். இங்கு ஒரு விஷயத்தை அனைவரும் குறிக்கொள்ளவேண்டும். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் பிராட்டியை எம்பெருமானுடைய இச்சாஶக்தியாகவும், ஸுதர்சனத்தை எம்பெருமானுடைய க்ரியாஶக்தியாகவும் குறிப்பிட்டு இருவருக்கும் ஜக₃த் காரணத்வம் முதலான பரமாத்மாவின் பெருமைகள் சொல்லப்பட்டுள்ளன. இது மாதிரி ஸாத்வதம் முதலான பல ஸம்ஹிதைகளில் வசனங்கள் உள்ளன. இந்த வசனங்களை எப்படி நிர்வஹிக்கவேண்டுமென்று தேசிகன் சது:ச்லோகீ பா₄ஷ்யத்தில் அருளியுள்ளதைப் பலமுறை காட்டியுள்ளோம். மீண்டும் ஒருமுறை இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.—

"'அத்ர ஶக்தித்₃வயம் தாத்₃ருக₃மிஶ்ரம் பி₄ந்ந லக்ஷணம்' இதி ஸாத்வதோக்தம் தே₃வ்யாஸ்தாத்₃ருக்த்வமபி ஶ்ருதி ஸ்ம்ருதி பூர்வாபராதி₃ ப்ரஸித்₃த₄ பத்நீத்வாத்₃யநுகு₃ணம் யோஜ்யம்" ["ஒன்றோடொன்று கலவாததும், தனித்தனி லக்ஷணங்களை உடையதும், பரமாத்மாவைப் போன்றதுமேயான இரண்டு சக்திகள் அந்தப் பரமாத்மாவிற்கு உண்டு" என்று ஸாத்வத ஸம்ஹிதையில் பிராட்டியை எம்பெருமானைப் போன்றவள் என்று சொல்லியிருப்பதற்கும் ஶ்ருதிகள், ஸ்ம்ருதிகள் முன்

acharya.org

பின் வாக்கியங்கள் முதலியவற்றில் சொல்லப்பட்டுள்ள பிராட்டிக்குள்ள பத்தினியாயிருக்கும் தன்மை முதலானவற்றை அனுஸரித்துப் பொருள் கொள்ளவேண்டும்] என்று தொடங்கி "இஞ்ச யதா.. ததேஹாபி பவதி" என்று ஸம்வாதம் 85 ம் பக்கத்தில் காட்டப்பட்ட வாக்கியத்தை அருளியிருப்பதிலிருந்து பிராட்டிக்கு 'த்ரிவித' காரணமாயிருக்கையாகிற ப்ராதாந ஜகத்காரணத்வம் இல்லையென்று மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிருர் தேசிகன். அவருடைய ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டுவதாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள் "பிராட்டிக்கு ப்ரஹ்மத்வம் உண்டு. ப்ரதாந ஜகத்காரணத்வம் உண்டு. பிராட்டி ஸ்வாதந்த்ரியமே வடிவெடுத்தவள், அவளுடைய பாரதந்த்ர்யம் அவளுடைய இச்சையினுல் ஏற்பட்டது" என்று கூறும் ஐந்தாவது பக்ஷமே அவருடைய பக்ஷம் என்று பிடிவாதமாகக் கூறிக் கொண்டு, இப்படி அவரோ அல்லது வேறு பூர்வாசார்யர்களோ சொல்லியிருக்கும் ஒரு வசனத்தைக்கூடக் காட்டாமல் இருவரையும் சேர்த்துப் பொதுவாக ஜகத்காரணர்கள் என்று கூறும் ஸஹிதாவசனங்களையும் "அநந்யாதீநகயாணம்" என்னும் பட்டர் ச்லோகத்தையும் காட்டிக் கொண்டிருக்கிறீர்களே! இது தேசிகனுக்கும் இதர பூர்வாசார்யர்களுக்கும் நீங்கள் செய்யும் உபசாரமா? அல்லது அபசாரமா? என்பதை நடுநிலையாளர்களே நிர்ணயிக்க வேண்டும். இந்த விஷயத்தை ஆகமங்களைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சிசெய்து, அவ்வாகமங்களில்பலவற்றைவெளியிட்டு, அவற்றின் கருத்தைப் பல நூல்களில் வெளியிட்டிருக்கும் Dr. R. OTTO SCHRADER, JOHN BRAISTED CARMAN முதலான மேல்நாட்டு அறிஞர்கள் "ராமாநுஜரும் அவருடைய சிஷ்யபரம்பரையில் வரும் எல்லாப்பூர்வாசார்யர்களும் 'லக்ஷ்மீதேவி பரமபுருஷனுக்கு அடங்கியவள் என்பதே ஆகமங்களின் கருத்து' என்பதை நிலைநாட்டியிருக்கிருர்கள்" என்று எழுதியிருப்பதை ஸ்ரீதத்வ ஸர்

acharya.org

வஸ்வம் பக்கம் 29 முதல் 38 வரையில் உள்ள தீர்ப்புகளில் விரிவாகக் காணலாம். நடுநிலையாளர்களான மேல் நாட்டவர்களுக்கும் மிகத்தெளிவாக விளங்கியுள்ள விஷயத்தை நீங்கள் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறீர்கள்?

ப்ரியா:— தைஇதழ்—ஸ்ரீதத்வ தீபிகை:— அஹிர்பு₃த்₄ந்ய ஸம்ஹிதை வசனத்தைக்கொண்டு "ஆநீத் அவாதம் ஸ்வத₄யா ததே₃கம்". "ஶ்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வம் அஶ்நுதே" என்ற ஶ்ருதிகளின் வாக்யார்த்தத்தை நன்கு அறியவேண்டும். அப்போதுதான் 'எம்பெருமானைப்போலவே பிராட்டியும் ஸர்வஜகத்துக்கும் காரணம் ஆகிருள்' என்பது நன்கு விளங்கும். "ஆநீத் அவாதம் ஸ்வத₄யா" என்ற ஶ்ருதியில் உள்ள 'ஸ்வத₄ா' ஶப்₃த₃ம், 'ஸ்வத₄ா த்வம் லோக பாவநீ (ப₄ாவிநீ) உலகத்தைப்படைத்துக் காக்கும் அவளான மஹாலக்ஷ்மீ எனப்படுபவள் நீயே 'ஸ்வத₄ா' என்று கூறப்படுகிருய் என்று ஸ்ரீபராஶரர் தாம் அருளிய புராணரத்நமாகிய ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அருளிச்செய்திருப்பதை ஸ்வாமி ஸ்ரீதேசிகன் சது:ச்லோகீ ப₄ாஷ்யத்தில் நன்கு அருளியுள்ளார்.

ஸுதர்சனம்:— 'ஸுதர்சனம்' ஈஶ்வர மார்கழி [601] 26-12-97 இதழில் ஸாத்விகஸம்வாதம் பக்கம் 90 முதல் 95 வரை தேசிகன் "ஆநீத₃வாதம்" "ஶ்ரத்₃த₄யா தே₃வ:" என்னும் இரண்டு வேதவாக்கியங்களையும் விரிவாக விசாரித்து அவற்ருல் பிராட்டிக்கு முக்₂ய ஜக₃த் காரணத்வம் ஸித்₃தி₄க்காது. எம்பெருமான் ஸ்ருஷ்ட்யாதி₃களைப் பண்ணும்போது பிராட்டிக்கு 'ஸஹயோக₃ம்' (கூட இருத்தல்) மாத்திரமே உண்டு என்றே தேறும் என்று மிகத் தெளிவாகச் சது: ச்லோகீ இரண்டாவது ச்லோக ப₄ாஷ்யத்தில் அருளியிருப்பதை விரிவாக எடுத்துக் காட்டியிருக்கிருேம். அவ்விதழை நேரே ஸ்ரீமதழகிய சிங்கருக்கு மும்பை விலாசத்திற்கு அனுப்பினேம். அதைப் பார்த்த பின்பும் இருபது நாட்கள் கழித்து வந்த ப்ரியா—தை இதழில் தேசிகன்

acharya.org

தமக்கு ஸாதகமாக அருளியிருப்பது போலே எழுதியிருப்பது வியப்பையளிக்கிறது. தேசிகன் மற்ற ப்ரமாணங்களுக்கு அநுகுணமாக ஸம்ஹிதையில் தாம்பதிகளுக்கு ஸாம்யம் கூறுவதைக் குறுக்கிக்கொள்ள வேண்டுமென்று ஸாதித்திருக்கிறார். ஆனால் நீங்கள் ஸம்ஹிதா வசனத்தைக் கொண்டு ச்ருதியின் அர்த்தத்தை அறிய வேண்டும் என்கிறீர்கள். சது:ச்லோகீ பாஷ்யவாக்யங்களை நன்கு படித்திருந்தால் 'ஸ்வதா' சப்தத்தை இதிஹாஸபுராண ப்ரயோகத்தைக் கொண்டுலக்ஷ்மீவிஷயமாகக் கொள்வதைக் காட்டிலும் வேறுபொருள் கொள்வதே உசிதம் என்று கூறி, அதற்கு ஆதாரமாக தேசிகன் ஸ்ரீபாஷ்யம் 2-4-7ல் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸூக்திகளைக் காட்டியிருப்பதை உணர்ந்திருப்பீர்கள். 'நன்கு அருளியுள்ளார்' என்று முடியும் வாக்கியத்தை எழுதியிருக்கமாட்டீர்கள். தேசிகன் நாலாவது பக்ஷத்தையே தழுவியவர் என்று இவ்விடத்தில் தேசிக ஸ்ரீஸூக்திகள் மிகத் தெளிவாகக்காட்டுகின்றன. இவ்வுண்மையை மறைப்பதற்காகவே நேர்மாறாக இப்படியெல்லாம் எழுதுகிறீர்கள் போலும்!

ப்ரியா:— ஈச்வர தைஇதழ்—தீபிகை:— லக்ஷ்மீதந்த்ரம் 5 வது **அத்தியாயத்தில்** பிராட்டி தன் திருவாக்காலேயே எம்பெருமானுக்குப் போலவே அவனுடன் கூடியிருக்கும் தனக்கும் ஜகத்காரணத்வம் உண்டு என்று ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கிறாள். ஆகையால் அவளுக்கும் துல்யமான ஜகத்காரணத்வம் உண்டு என்று தெரியவருகிறதே.

ஸுதர்சனம்:— ஈச்வர—மார்கழி [601] ஸுதர்சனம் இதழிலேயே ப்ரியா ஆசிரியர் கட்டுரைக்கு பதிலுரைக்கும் போது ஸாத்விகஸம்வாதம் பக்கம் 95 முதல் 97 வரை இதே லக்ஷ்மீதந்த்ர வாக்கியத்தை எடுத்து, லக்ஷ்மீதந்த்ரத்தில் உள்ள மற்ற வாக்கியங்களுக்கும் எம்பெருமானார், தேசிகன் முதலானோர் ஸ்ரீஸூக்திகளுக்கும் விரோதமில்லாத

acharya.org

படி பொருள் கொள்ளவேண்டுகையாலே. வாமதேவரையும் சிவனையும் ப்ரஹ்லாதனையும் நம்மாழ்வாரையும் போலே பிராட்டி இங்கு பரமாத்ம த்ருஷ்டியாலே இப்படிப்பேசியிருக் கிருள் என்று நிர்ணயித்திருக்கிறேம். இதுவெளிவந்து 20 நாட் களுக்குப் பிறகு வெளிவந்த ப்ரியாவில் நாம் காட்டியுள்ள நிர்ணயத்திற்கு எந்த சமாதானத்தையும் சொல்லாமல் கிளிப் பிள்ளைபோலே அடிபட்டுப்போன பழைய வாதங்களையே திருப்பித் திருப்பி எழுதுவது ப்ரியாவிலேயே அடிக்கடி காணப்படும் விசித்ரமாகும்.

ப்ரியா:— ஈஶ்வர—தை இதழ்—தீபிகை: — நாயனாராச் சான்பிள்ளை தம்முடைய சது:ச்லோகீ வ்யாக்யானத்தில். "இப்படி ஜகத்காரணத்வத்தில் இவளுக்கு (பிராட்டிக்கு) அந்வயம் உண்டோ? என்று ப்ரஶ்நம் பண்ணிய நடாதூர் அம்மாளைக் குறித்துப்பிள்ளான் அருளிச்செய்தவார்த்தையை அநுஸந்திப்பது. அதாவது— இவ்வர்த்தத்தில் ஸந்தேஹம் உண்டோ? 'ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி ப்ரஜாஶ்ச உத்பாதயிதவ்யா:' என்று ப்ரமாணம் சொல்லுகையாலே ஸஹதர்மசாரிணியான இவளுக்கும் அந்வயம் உண்டு என்று அருளிச்செய்தது" என்னும் ஐதிஹ்யத்தைக் காட்டி யிருக்கிருர். பெரியவாச்சான் பிள்ளையும் தம் சது:ச்லோகீ வ்யாக்யானத்தில் இதே ஐதிஹ்யத்தைக் காட்டியிருக்கிருர். இதிலிருந்து பெருமாளுக்குப்போலே பிராட்டிக்கும் துல்ய மான ஜகத்காரணத்வம் உண்டென விளங்குகிறதே.

ஸுதர்சனம்:— இந்த ஐதிஹ்யத்தை எடுத்திருக்கும் நாயனாராச்சான்பிள்ளை தம் வ்யாக்யானத்தில், "பிராட்டிக்கு ஜீவத்வமே உண்டு. அவளை ஈஶ்வரகோடியில் சேர்க்கக் கூடாது" என்று பல ப்ரமாணங்களைக் காட்டி விரிவாக நிரூபிக்கிருர் இங்கு ஜகத்காரணத்வத்தில் அந்வயத்தைப் பற்றிப் பேச்சு உள்ளதேயொழிய அது துல்யமான அந்

வயமா வாசியுண்டா என்பதைப்பற்றிய பேச்சு இல்லை. ஆனால் ஒருவிஷயம் நிச்சயம். பிராட்டி ஈச்வரகோடியில் சேர்ந்தவள் அல்லளென்று நிரூபிக்கும் நாயனாராச்சான் பிள்ளையும், அவருடைய திருத்தகப்பனாரும் ஆசார்யரு மான பெரியவாச்சான் பிள்ளையும் பிராட்டிக்கு ஜகத்கார ணத்வத்தில் பெருமாளோடு துல்யமான அந்வயத்தைக் கருதியிருக்க இடமே இல்லை அப்படிக் கருதியிருந்தால் அவளை ஈச்வரகோடியிலன்றோ சேர்த்திருக்கவேண்டும். நாயனாராச்சான் பிள்ளையோடு சர்ச்சைசெய்து சது:ச்லோகீ பாஷ்யம் எழுதிய தேசிகனும் ஜகத்காரணத்வத்தில் பிராட் டிக்கு எம்பெருமானோடு துல்யமான அந்வயம் இல்லை என்று கருதியிருப்பதைப் பல பல தேசிக ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு நாம கல்வெட்டாகக் காட்டியிருக்கிறோம். அதற்கு எந்த ஸமாதானமும் சொல்லாமல், நீங்கள் திருப்புட்குழி அப்பாஸ்வாமி என்பவரின் வாக்கியங்களை விரிவாகக் காட்டு வதனால் அப்பாஸ்வாமி ஸம்ப்ரதாயத்தைக் காட்டியதாகுமே யொழிய தேசிக ஸம்ப்ரதாயத்தைக் காட்டியதாக ஆகாது. ''ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி ப்ரஜாச்ச உத்பாத யிதவ்யா:'' [நம் இருவராலும் கர்மங்கள் செய்யப்பட வேண்டும். குழந்தைகள் பிறப்பிக்கப்படவேண்டும்] என்று விவாஹ ப்ரகரணத்தில் உள்ள வசனம் இருவருக்கும் துல் யமான அந்வயத்தைக் கருதியிருக்கமுடியுமா என்பதை முதலில் ஆலோசிப்போம். நம்முடைய நாட்டுப்பண்பாட் டின்படி புருஷனே அலைந்துதிரிந்து பாடுபட்டு திரவியங்களை ஸம்பாதித்து வருகிறான். மனைவி வீட்டில் அவனுக்கு அடங் கியிருந்து அவன் கொண்டுவரும் பொருள்களைக் கொண்டு அவனையும் குடும்பத்தையும் ரக்ஷித்து வருகிறாள். குடும்பரக்ஷ ணத்தில்பதியினுடைய அந்வயம்ப்ரதாநமாகவும் பத்நியினு டைய அந்வயம் அப்ரதாநமாகவும் இருப்பது வெளிப்படை. இந்த அப்ராதாந்யம் தோற்றவே பத்நீ 'ஸஹதர்மசாரிணீ' என்று வழங்கப்படுகிறாள். ''பத்யுர்நோ யஜ்ஞ ஸம்யோகே''

acharya.org

[பாணினி ஸூத்ரம் 4-1-33] ''ஸஹயுக்தே அப்ரதா₄நே'' [ஷி 2-3-19] என்னும் ஸூத்ரங்கள் காணலாம். வைதிக கார்யங்களாகிற யஜ்ஞங்களிலும் புருஷனே யஜ்ஞங்களைச் செய்கிறான் என்பதையும், பத்னி அவனுக்கு உதவியாகவே இருக்கிறாள் என்பதையும் காண்கிறோம். க்₃ருஹங்களில் ஶ்ராத்₃தா₄தி₃களைச் செய்யும்போது புருஷனே அவற்றைச் செய்கிறான் என்பதையும், பத்தினி அவனைப் புல்லாலே தொட்டுக்கொண்டு பக்கத்தில் நிற்கிறாள் என்பதையும் அனைவரும் காண்கிறோம். இவையெல்லாம் பத்நிக்குக் கர்மங்களைச் செய்வதில் அப்ரதா₄நமான அந்வயமே என்பதைக் காட்டுகின்றன. ''அம்ருதத்வஸ்ய ஈஶாந:'' என்று மோக்ஷஸாம்ராஜ்யத்துக்கு உரிமையுள்ளவனாகப் புகழப்படும் பரமபுருஷனுக்கும், 'விஷ்ணுபத்நீ' என்றும் 'ஸஹத₄ர்மசரீ' என்றும் பேசப்படும் பிராட்டிக்கும் இவ்வண்ணமே சேதந ஸம்ரக்ஷணத்தில் ப்ரதா₄நமான மோக்ஷ ப₂லப்ரத₃த்வத்தை எம்பெருமானுக்கும், அப்ரதா₄நமான புருஷகாரத்வத்தைப் பிராட்டிக்கும் பூர்வாசார்யர்கள் நிர்ணயித்தார்கள். தேசிகன் இதில் சிறிது கருத்து வேறுபாடு கொண்டு 'மோக்ஷப₂ல ப்ரத₃ாந ஸங்கல்பத்தை இருவரும் சேர்ந்தே செய்கிறார்கள்; ஆகையால் எம்பெருமான் பதியாக இருக்கையாலே ப்ரதா₄ந மோக்ஷோபாயமாகவும், பிராட்டி பத்நியாயிருக்கையாலே அப்ரதா₄ந மோக்ஷோபாயமாகவும் இருக்கிறார்கள்' என்று திருவுள்ளம்பற்றி அவளை ஈஶ்வரவகுப்பில் சேர்க்கும் நாலாவது பக்ஷத்தைத் தழுவினார். அவருடைய ப்ரதா₄ந ஶதகம் பதினொலாவது வாக்யத்தில் 'ஏகமான இச்சேஷித்வம் உப₄யாதி₄ஷ்டா₂னமானாலும் தம் பதிகளில் பதி ப்ராதா₄ந்யம் லௌகிகவைதி₃க மர்யாதையின் படியே, நித்ய நியதமாகையாலே 'பதிகளுக்கும் பரமனை பதி' என்னும்படி நின்ற 'நாராயணனே ஸர்வப்ரதா₄னனும்' என்று அருளியிருப்பது இதைக் கல்வெட்டாகக் காட்டித் தருகிறது.

இனி, குழந்தைகளைப் பிறப்பிக்கும் விஷயத்திற்கு வருவோம். உலகத்தில் ஜீவனை முதலில் தன் விந்துவில் தரித்து நின்று அதைப் பத்தினியின் வயிற்றில் பத்து மாதம் தரிக்கச்

acharya.org

செய்வதன் மூலமே குழந்தைகள் உண்டாவதால் இருவருக்கும் சமமான அந்வயம் என்றுதோன்றும். ஆனால் பூர்வாசார்யர்களால் எடுக்கப்பட்டப்ரமாண வசனம் "மாதா பஸ்த்ரா, பிது: புத்ர: யஸ்யாம் ஜாத: ஸ ஏவ ஸ:" [தாய்குழந்தையைச் சில மாதங்கள் இட்டு வைக்கும் பை போன்றவளே. புத்ரன் தந்தைக்கே உரிமையானவன். பத்நியிடமிருந்து பிறந்தவனாயினும் புத்ரன் புருஷனின் மறு உருவமேயாவான்.] என்று குழந்தைகளைப் பிறப்பிப்பதிலும் கணவனுக்கே ப்ராதாந்யத்தை முழங்கிற்று. எம்பெருமான் வயிற்றில் தரிக்கையாகிற இந்தப் பெருமையையும் பிராட்டிக்குக் கொடுத்தால் அவளே ஜகத் காரணம் என்று சிலர் மயங்கி வாதம் செய்யக்கூடும் என்பதைத் திருவுள்ளம் பற்றியே, சேதநாசேதநங்கள் அடங்கிய உலகைத் தாயிருக்கும் வண்ணமே தன் வயிற்றிருத்தி ப்ரளயகாலத்தில் தன் வாயாலே உண்டும், ஸ்ருஷ்டிகாலத்தில் தன் வாயாலே உமிழ்ந்தும் தான் ஒருவனே ஜகத்காரணன் என்று எவரும் மறுக்கவொண்ணாதபடி காட்டுகிறான். இவ்விஷயத்தை முழங்கும் இதிஹாஸ புராண வசனங்களும், ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளும் எண்ணிறந்தவை. தன் வயிற்றில் தரித்தல் உலகமுண்டு உமிழ்தல் ஆகியவற்றைப் பிராட்டி செய்வதாக ஒரு ப்ரமாணம்கூடக் கிடையாது. சேதனர்களை எம்பெருமானோடு சேரவிடும் புருஷகார பூதையாயிருப்பதாலும், ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்யும்படி தூண்டுகையாலும், எம்பெருமானின் ஜகத்வ்யாபாரத்தால் உண்டான ஆனந்தத்தில் பங்கு கொள்கையாலுமே பிராட்டி தாயாகிறாள். ஆகையால் இந்த விவாஹ மந்திரத்தைக் கொண்டு எம்பெருமான் பிராட்டி இருவருக்கும் ஜகத் ஸ்ருஷ்டியில் துல்யமான அந்வயம் என்று நீங்கள் ஸாதிக்க எண்ணுவது பகற்கனவேயாகும்.

ப்ரியா – ஈஶ்வர—தை – அறிக்கை:– ஈஶ்வர கார்த்திகை மீ (600) ஸுதர்சனம் இதழில் 'இனி பிராட்டி விஷயமான இந்தச் சர்ச்சையைவிடுத்து ப்ரமாணஶரணராகவாழ்வோம்" என்று ஒரு மூலையில் எழுதியிருந்தீர்கள். இந்த ஸாத்விக பூர்வம் ஒரு மாதம் கூட நிலைக்கவில்லை.

acharya.org

ஸுதர்சனம்:- ஸ்ரீரங்கம்வித்வான் ஸ்ரீ உ'வே R. நரஸிம்ஹா சார்ய ஸ்வாமி ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தில் ''ஸ்ரீதத்வ விமர்சம்'' என்னும் தலைப்பில் எழுதிய 9வது தீர்ப்பின் இறுதியில், 'சதுர்த்தபக்ஷம் ஸ்ரீதேசிகனுடையது என்று தெளிவாக விளங்கும்' என்று நிரூபித்து, அதை மறுக்கும் உங்களைக்குறித்து, 'இவ்விஷயத்தில் சர்ச்சையை விடுத்து ப்ரமாண ஶரணராக வாழ்வோம்' என்று உபதேசித்திருக் கிறார். இது நீங்கள் குறிப்பிடுவதுபோல் ஸுதர்சனம் ஆசிரி யரின் வாக்கியம் அல்ல. இதைக் கூடப் புரிந்து கொள்ளா மல் சர்ச்சை செய்யும் உங்களுடைய மேதா விலாஸத்தை என்னென்பது!

ப்ரியா—ஈஶ்வர—தை—அறிக்கை:—'ஸுதர்சனம் கேட் டிருந்த 13 வது கேள்வி மிக மிக அபத்தமானது' என்பதை ப்ரியா மார்கழி இதழில் விவரித்திருந்தும் அதற்கு எவ்வித பதிலுமில்லை.

ஸுதர்சனம்:— 'உங்களுடைய அறிக்கை வெளிவந்த ப்ரியா மார்கழி இதழ் 17-12-1997 அன்று எமக்கு வந்தது' என்றும், 'அவ்விதழில் வெளிவந்திருக்கும் அறிக்கை உள்ளிட்ட மூன்று கட்டுரைகளுக்கும் ஸுதர்சனம் [602] தை மாத இதழில் பதிலளிப்போம்' என்றும் ஸாத்விக ஸம்வாதம் 102 ம் பக்கத்தில் எழுதி 26—12—97 ல் ஸுதர் சனம் மார்கழி [601] இதழ் வெளியிடப்பட்டுள்ளது. அதன் படியே நம்முடைய 13 வது கேள்விக்கு நீங்கள் எழுதியுள்ள பதில் மிக மிக அபத்தமானது என்பதை இந்தத் தை மாத இதழில் ஸாத்விக ஸம்வாதம் பக்கம் 104 முதல் 106 வரை யில் நிரூபித்திக்கிறோம். தை இதழில் பதிலளிக்கப்போகி றோம் என்று மார்கழி [601] இதழில் எழுதியிருப்பதைப் பார்த்த பின்பும், ''அதற்கு எவ்வித பதிலுமில்லை'' என்று நீங்கள் எழுதுவது உங்கள் வாசகர்களை ஏமாற்றுவதற்கே என்று விளங்குகிறது. இத்தகைய உங்களுடைய ஏமாற்று வேலைகளை உங்கள் வாசகர்கள் புரிந்துகொண்டு விடுவார் கள் என்று அஞ்சியே எமது பெயர் விலாசத்தை ப்ரியாவில் குறிப்பிட மறுக்கிறீர்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக விளங்குகிறது. உங்கள் வாசகர்களில் ஒரு

சிலரே ஸுதர்சனத்தைப் படிப்பவர்கள். பெரும்பாலானவர்கள் ஸுதர்சனம் வாசகர்களல்லர் என்னும் உண்மை உங்களுக்கே தெரியும்.

முடிவுரை

ந வாத₃ம்ந்நாபி ஸங்கர்ஷாத் நாதி₄க்யாத் ந ச காமத: |
இத₃முக்தம் மஹாப்ராஜ்ஞா:யதா₂ர்த்த₂ம் கு₃ருகௌ₃ரவாத் ||

[பேரறிவாளர்களே! வாதம் செய்யவேண்டுமென்றல்ல; பொறுமையாலுமல்ல; பெருமைபெறவேண்டுமென்றல்ல; மனம்போனபடியுமல்ல. ஆழ்வார்கள், தேசிகன், மாமுனிகளிருன ஆசார்யர்களிடமுள்ள கௌரவபுத்தியாலேயே இதுவரையில் உண்மையான வார்த்தை (அடியேனால்) எழுதப்பட்டது]

"ஸ்ரீதத்வ விஷயமாக ஐந்துவிதமான கருத்துக்கள் பேரறிவாளர்களிடையே தம் காலத்தில் நிலவிவந்தன" என்று ஸ்ரீதேசிகன் தம் சதுஃஸ்லோகீ பாஷ்யத்தில் குறித்துள்ளார். அவர் காலத்தில் ஸ்ரீராமானுஜ ஶிஷ்ய பரம்பரையினரிடையே நிலவிவந்த கருத்துக்களே இவை. பா₃ஹ்யகுத்₃ருஷ்டி மதத்தினரிடையே நிலவிவந்த கருத்துக்களல்ல இவை. இவற்றில் ஐந்தாவது பக்ஷத்தை அவர் மிகச்சுருக்கமாகவே விவரித்துள்ளார். அதை மிகவும் விரிவுபடுத்தி, இருநூறு வருடங்களுக்குள்ளிருந்த தேசிக ஸம்ப்ரதாயஸ்த₂வித்வான்கள் "பெருமாளும் பிராட்டியுமாகிற இருவரும் ப்₃ரஹ்மங்களே" என்று சிலரும், "பிராட்டி ப்₃ரஹ்மமல்லாவிடிலும் எல்லாவிதத்திலும் துல்யமானவரியே" என்று சிலரும், "தேசிகன் இந்த ஐந்தாவது பக்ஷத்தையே தழுவியவர்" என்றும் தம் நூல்களில் எழுதினர். 'காஞ்சீ போராளன்' என்னும் பத்திரிகையில் பட்டர், நஞ்ஜீயர், தேசிகன் முதலான எல்லாப் பூர்வாசார்யர்களும் இந்த ஐந்தாவது பக்ஷத்தையே தழுவியவர்கள்' என்று கூறும் நூலொன்று வெளிவந்ததாலேயே நடுநிலையாளர்களின் தீர்ப்பைக் கோரினோம், உபய ஸம்ப்ரதாயத்தையும் சேர்ந்த அறிஞர் பலர் நம் நிலையே சரியானது என்று தீர்ப்புகள் எழுதினர். இத்தருணத்தில் ஸ்ரீ தேசிக

ஸிம்ஹப்ரியா இச்சர்ச்சையில் புகுந்து அதை விரும்பத் தகாத முறையில் வளர்த்து வருகிறது. ஏற்கனவே பிளவு பட்டுக்கிடக்கும் வைணவஸமூஹம் நம்மால் மேலும் பிளவு படுவதை நாம் விரும்புகின்றிலோம். நாம் சொல்லவேண்டியதெல்லாம் தினவுகெடச் சொல்லிவிட்டோம். இனி எது சொன்னாலும் அது புநருக்தியாகவே அமையும். ப்ரியாவும் ஸாக்ஷாத் ஸ்வாமி, கரூர் ஸ்வாமி, திருப்புட்குழி அப்பா ஸ்வாமி, இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகிய சிங்கர் முதலான ஸமீப காலத்திலிருந்தவர்கள் சொன்னதைத் தான் கைவிடாது என்று தெளிவாகவே காட்டிவிட்டது. ''இந்தச் சர்ச்சையை வீணாகத்தொடர்வதைவிட, சது:ச்லோகிக்குப் பெரியவாச்சான்பிள்ளை, நாயனாராச்சான்பிள்ளை, வேதாந்ததேசிகர் ஆகிய மூன்று ஆசார்ய ரத்னங்கள் அருளியுள்ள வியாக்யானங்களை விளக்கி, தேசிகருக்கும் மற்ற இருவருக்கும் உள்ள கருத்து வேற்றுமைகளையும் விளக்கி, தேவரீர் ஓர் வியாக்யானம் எழுதினால் அது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் பரமோபகாரமாயிருக்கும்'' என்று நம் அன்பர்கள் பலர் கருத்துத்தெரிவிக்கிறார்கள் அவர்கள் கருத்தின்படியே நாம் ஸ்ரீதத்வ ஸர்வஸ்வத்தை இத்துடன் நிறைவுபடுத்தி நமது சது:ச்லோகீ உரையை விரைவில் தொடங்கவிருக்கிறோம்.

'ப்ரியா' ஆசிரியரும் ''இதற்குமேல் வாதப்ரதிவாதங்களுக்குப் பதில் எழுதப்போவதில்லை'' என்று தை இதழில் எழுதியிருக்கிறார். ப்ரியாவும் ஸ்ரீதத்வ தீபிகையை விரைவில் முடித்துக்கொள்ளும் என்று நம்புகிறோம். தீபிகையில் நாம் பதில் சொல்ல வேண்டிய புது விஷயங்கள் ஏதாவது வெளிவந்தால், அவற்றுக்கு நம் சது:ச்லோகிஉரையில் உரிய இடங்களில் பதில் அளிக்கப்படும்.

இத்தகைய விவாதங்களில் தவிர்க்கமுடியாதபடி ஏற்பட்டிருக்கும் அபசாரங்களை க்ஷமித்தருளவேண்டும் என்று ஸ்ரீமதழகியசிங்கரையும், 'ப்ரியா' ஆசிரியர் ஸ்வாமியையும் ப்ரார்த்தித்து நிறைவுபடுத்திக்கொள்கிறேன்.

ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம் நிறைவுற்றது.

acharya.org